கதா-ரதம்

அல்லது

பெரியசாமி படையாச்சி

முதலிய

புதிய கதைகள்

ஆசிரியர்

'தேவேந்திரன்' எழுதியது.

௧௯௯0

ஜம்புநாதன் புஸ்தகசாலை,

14, பள்ளியப்பன் தெருவு,

சாவுகார்ப்பேட்டை, மதராஸ்.

கதா - ரதம்

அல்லது

பெரியசாமி படையாச்சி

முதலிய கதைகள்.

எச்சரிக்கை!

தமிழர்களே!

கதா - ரதம் என்னும் இந்நூலில் புதிய நினைவு நிறைந்த கக கதைகளைக் காணலாம். இக்கதைகளைப் படித்தால், 'தண்டா பாநி' என சொல்லப்படும் நீங்கள், 'கரம் பாநி' என கண்ணியமுடன் அழைக்கப்படுவீர்கள். உங்கள் சலம் இந்நூலைப் படித்து சூடாகவில்லையானால் நீங்கள், 'கைக்குதவாத செல்லாக் காசு' என, வரும் இளந் தமிழர்கள் சொல்வார்கள். நீங்கள் ஒருபொழுதும் இந்த 'இலேசான மொழிகளுக்கு' இடமளிக்க வேண்டாம்.

தேவேந்திரன்.

பொருள் அடக்கம்

தேவேந்திரன்

கதா-ரதம்

க. பெரியசாமி படையாச்சி

வைகுண்டத்தின் ராய்டரான சஞ்சயன் எனக்கு சொன்ன கதையே இது.

1932-ம் வருஷம் ஏப்ரல் மாதம் மூன்றும் தேதி திங்கள் கிழமை காலை வைகுண்டத்திலே, திருச்சோதி மலையில் நடந்த கோர சம்பவ மொன்றை முன்னிட்டு ஸ்பெஷல் ஸெஷன்ஸ் கோர்ட்டு ஒன்று இரவு 3-மணிக்கு நடைபெற்றது. கருத்த விஷ்ணு சிவந்த ஆடையோடு நியாயாசனத்தில் அமர்ந் திருந்தார். அங்கு பெரியசாமி, அவன் மனைவி, இரு பெண்கள், இருபிள்ளைகள், ஒரு குழந்தை முதலியவர்களை எமன் பாசக் கயிற்றினால் கட்டி காவல் புரிந்துகொண்டிருந்தான். இதைத் தவிர விநாயகர், நடராஜர், பழனியாண்டவன், திருக்கோயி லூரான், விருத்தாசலம், சோதிமலை, சீகாழியான் முதலிய சிவவடிவங்கள், சந்தேக நிலையில் துக்கக்குறியுடன் கருடன் காவலுடன் நின்றது எனக்கு வருத்தத்தை யளித்தது. கண் சாடை காண்பித்து 'தீவட்டியிலே நெய்யை நன்றாய் விட்டு சுடர் விட்டெரியும்படி செய்யவும்' என விஷ்ணு சுடர்கோல் தாங்கும் சங்கரன், ராமானுஜன், மத்துவரை எச்சரிக்கை செய் தது என்னையும் சற்று சாக்கிரதையுடனாகச் செய்தது. மனு, போதாயனர், ஆசுவலாயனர், முதலிய பெரிய வக்கீல்கள் கட்டு கட்டாய் புஸ்தகங்களை திருப்பிக்கொண்டிருந்தார்கள்.

மூன்று அடித்தவுடன் சித்திரகுப்தன் எழுந்து கேஸ் சம்பந்தமான பெரிய கட்டொன்றை ' மை லார்டு '' எனச் சொல்லி விஷ்ணுவினிடம் கொடுத்தான். அவர் அவசர அவசரமாய் அதை இங்குமங்கும் அடியிலிருந்து திருப்பி திருப்பிப் பார்த்தார். அப்பொழுது அவர் கண்களில் கண்டவைகளை அப்படியே இங்கு சொல்லுகிறேன்.

சர்க்கார் கேஸ்

இது சர்க்கார் கேசாகும். குற்றவாளிகள்—பெரியசாமி படையாச்சி, வயது 45; இரண்டாவது குற்றவாளி அவன் மனைவி விசாலாட்சி யம்மாள், வயது 40; மூன்று நாலாவது குற்றவாளிகள் மைனர்கள்; 5-வது 6-வது சிறு பெண்கள்; ஏழாவது குற்றவாளி சிறிய குழந்தை. பெரியசாமி படையாச்சி என்பவன் 23உ மார்ச்சுமீ' தன் வீட்டை விட்டுப் புறப்பட்டு சிதம்பரம் நடராஜன், பழனியாண்டவன் முதலியவர்களை நாடி மனச்சோர்வடைந்து கடைசியிலே சோதிமலையை அடைந்து தன் மனைவி ஐந்து குடும்பங்களை கொடுவாளால் கொலைபுரிந்து தன்னையும் தூக்கிவிட்டுக் கொண்டான். இது ஏப்ரல் மூன்றாந்தேதி காலை 2—59 மணிக்கு நடந்தது. இது பிரமனின் பினல் கோர்ட்டில் பெரிய குற்றமாகையால் தக்க தண்டனை விதிக்க வேண்டுமென சர்க்கார் தரப்பில் கேட்கப்படுகிறது. படையாச்சி சாகுங்கால் ஒரு டைரி அவனிடமிருந்தது. இதையும் இத்துடன் சேர்த்திருக்கிறது.

டைரி

கொச்சினப்பள்ளி ஜில்லா தடையார்பாளையத்தைச் சேர்ந்த பாளையம் பெரியசாமி படையாச்சியின் டைரி............

23-3-1932 வியாழன்: நம்பவீடு ஏலமாச்சு. சாமான்களையெல்லாம் அமீனா எடுத்துப்போய்விட்டான். இனி என்ன

செய்வது? கையிலிருப்பது ரூ. 25. சரி, பகவானையே நம்பி இருக்கேன். அவர் கைவிடமாட்டார். சிதம்பர யாத்திரை.

24-3-1932 வெள்ளிக்கிழமை: சிதம்பரம் நடராஜ தரிசனம். தீட்சதருக்கு ரூ. 2 தட்சணை. சாமி! என் வீடுவாசல் போயிற்று. கையிலிருப்பது ரூ. ஒன்பது. நீர்தான் காப்பாற்ற வேண்டும்.

25-3-32 சனிக்கிழமையிலிருந்து 1-4-33 வரை பழனி, திருக்கோயிலூர், சீயாளி, விருத்தாசலம், சோதிமலை முதலியவைகளைச் சுற்றினேன். ஒரு சாமியாவது என்னையும் என் குழந்தைகளையும் காப்பாற்றுமா எனப் பார்த்தேன். ஒரு பக்தனாவது என்னை காப்பானா என எண்ணினேன். ஒருவருமில்லை. என் மனைவிக்கு சுரம். பெரிய பையன் உண்ணாமல் துடிக்கிறான். அருமைப் பெண்ணிற்கு உடையில்லை. சின்னப் பெண்ணோ தவிக்கிறாள். கைக் குழந்தைக்கு என்ன தெரியும்? சிரிக்கிறது! "அப்பா! நாளையாவது கஞ்சி கிடைக்குமா" என அழுகிறான். மடத்து அய்யரைத் தண்ணீர் வேண்டுமென்றேன். "போடா! சூத்திரப் பயலே!" எனச்சொல்லி விட்டார். மற்றவரோ என்னை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. இனி என்ன செய்வது? நான் கட்டிய தாலியை விற்றேன். அதற்கு தேங்காய் பழம் வாங்கினேன். விநாயகரை உட்காரச்சொல்லி தேங்காயுடைத்து 'நீயே சாட்சி' என நான் துரிதமாய் தரணி நீங்கப் போகிறேன். நானே குற்றவாளி. ஆகையால் ஒருவரையும் ஒன்றும் செய்யலாகாது.

இதைப் படித்துப் பார்த்துவிட்டு சர்க்கார் வக்கிலான மனுவைப் பார்த்து "இன்னம் ஏதேனும் சொல்ல வேண்டுமா?" என்றார் விஷ்ணு.

மனு—வாதம்

மனு :—நான் சொல்ல வேண்டியது அதிகமில்லை. சத்துருவைத்தவிர மற்றவர்களை கொல்லுபவர்கள் கொடுங்

குற்றம் செய்பவர்கள். சமூக நன்மைக்காக, துரியோதனுதி களைப்போல் உற்ருர் உறவினர்களாயிருந்தாலும் வதைத்தால் தோஷமில்லை. ஆனல் அப்பேர்ப்பட்ட கொலையில்லை இது. ஏதோ உணவு அகப்படாமல் இவன் மனைவி குழந்தைகளை கொலை செய்தான். தனக்கும் தன் குடும்பத்திற்கும் உண வில்லையானல் எதையும் செய்ய வேண்டுமேன கவிகள் மூல மாய் தெய்வீக சர்க்கார் சொல்லியிருந்தும், இவன் காது கொடுத்து கேட்கவில்லை. இது ஒரு குற்றம். தன்னையே தான் கொன்று கொண்டது இரண்டாவது குற்றமாகும். மற்ற குற்றவாளிகள் படையாச்சி சுபாவத்தைத் தெரிந்திருந் தும் அவனுக்குக் கீழ்ப்படிந்து அவனை எதிர்க்காமல் மாண் டது பெருங்குற்றமாகும். கண் மூடித்தனமாய் கீழ்ப்படி வதாலுண்டாகும் கோர பயனைப்பற்றி நான் கூற வேண்டிய தில்லை. உலகத்திலுள்ள அநியாயங்களுக்கெல்லாம் ஆதி காரணம் கீழ்ப்படிதலே. கிழ்ப்படிவதால் இன்னம் அநியாயம் சாசுவதமாகு மென்பதை இந்த ஸ்திரீயும் குழந்தைகளும் அறியவில்லை. தன்னை கொலை செய்யப் போகும் தகப்பனை அந்த கொடு அரிவாளைக் கொண்டு வெட்டித் துண்டம் துண்ட மாக்கிருக்கவேண்டும். இச்சின்னக் குழந்தை 1½ வயதாகி யும் ஓவென்று அலறிக் கதறி அழவில்லை. குற்றம் செய்பவர் களைவிட குற்றத்தை சகிப்பவர்களே பெருங் குற்றவாளிகள். ஆதலால் இவர்களுக்கு முதன்மையான ஆதர்ச தண்டனை யளிக்க வேண்டும். எதிரிகள் அனதைகளாகையால் அவர் கள் தரப்பில் போதாயனர் கட்சியாடுவார் எனச்சொல்லி மனுதர்ம வக்கீல் உட்கார்ந்தார்.

எதிர் தரப்பு வாதம்

போதாயனர் :—மகாவிஷ்ணுவே! நியாயப் பிரபுவே! மனுதர்மர் சொல்லிய சம்பவங்கள் எல்லாம் உண்மையே.

ஆனால் அச்சம்பவங்களுக்கு எதிரிகள் எப்படி குற்றவாளி யாவார்கள் என்பதை அவர் சொல்லவில்லை. கத்தியால் ஒரு வனை மற்றொருவன் கொன்றால், கொன்றவனைப் பிடியாமல் கத்தியை விசாரணை செய்து அதற்கு தண்டனையளிக்கும் நியாயம்போலவே, இப்படையாச்சி முதலியவர்களுக்கு தண்டனையளிக்க வேண்டுமென அறிஞரான மனுதர்மர் கூறுவது இருக்கிறது. படையாச்சி செய்தவையெல்லாம் காரியமானால் இவைகளுக்குக் காரணமான ஒரு பொருளுண்டு. அந்தப் பொருளை ஒன்று திரட்டி அதற்கு ஒரு வடிவம் அளித்தால் அதுதான் இந்து சமூகமாகும். இது சின்ன பின்னமாகி சுயநலத்துடன் வாழ்வதே இதற்குக் காரணம்! ஆதலால் காரணனான அவனையே, அதையே, முதல் குற்றவாளிகளாக நீங்கள் எண்ணவேண்டும். உண்ண உணவில்லாமல், உடுத்த உடையில்லாமல், படுக்க நிலமில்லாமல் ஒருகுடும்பம் திணறி தவித்து சிதம்பரம் நடராஜன், பழனி ஆண்டவன், திருக்கோயிலூரான், சீகாழிவாசன், விருத்தாசலத்தான் முதலியவர்களை அணுகி சரண கதி அடைந்தும், தாங்களே நன்றாய் புசித்து தரித்து ஆனந்தமாகி இக்குடும்பத்திற்கு உதவி செய்யாததினாலேயே இக் கஷ்டம் நேர்ந்தது. ஈசா! உணவில்லையானால் கொலை புரிந்து தற்கொலை செய்வேன் என பெரியசாமி படையாச்சி மனதார நினைத்து அழுதான். அதை அறிந்தும் தடுக்க இந்தக் கடவுள்கள் யாதொரு பிரயத்தினமும் செய்யவில்லையாதலால், இரண்டாவது கட்சியில் இந்த ஐவருமே சமகாரண குற்றவாளிகளென அறியவேண்டும். மூன்றாவதாக ஜோதி மலையையும் அகண்ட பிள்ளையாரையும் குற்றவாளிகளெனச் சொல்லுகிறேன். மலைமேலிருந்து சோதி அளிக்கும் சோதிமலை ஏன் அவனுக்கு இருள் நீக்கவில்லை? பெரிய வயிறு படைத்த பிள்ளையார், கடைசிலே தன் பங்கு தேங்காயையும் வாங்கிக் கொண்டு சும்மா பார்த்திருந்தானே! படுபாவி! இவர்

கள்தான் மூன்றுவகைக் குற்றவாளிகளாகும். படையாச்சி முதலியவர்களை குற்றவாளிகள் எனக் கருதினுல் நான்காவது குற்றவாளிகளெனவே அவர்களை எண்ணவேண்டும். தண்டனை அளித்தால் நான் சொன்ன முறையிலேயே தண்டனையளிக்கவேண்டும்.

தேவர்கள் கட்சி

தேவர்கள் கட்சிக்கு யார் பேசப் போகிறுர்களென விஷ்ணு புருவத்தைத் தூக்கவே, நியாயவாதி கௌதமர் கூறியதாவது :—நான் தேவர்களின் வக்கீல். இப் படையாச்சி சிதம்பரம் வந்தது உண்மையே. ஆனுல் என் கட்சிக்காரன் நடராஜன், சிதம்பரம் நீங்கி வெகு நாளாய் விட்டது. சும்மா யிருப்பதே சுகம் என்னும் வேதாந்தம் வந்தவுடன் "இனி இந்துக்கள் லாயக்கில்லை. நான் வெள்ளை நாடு சென்று சதா காலமும் செயல் என்னும் சாஸ்திரத்தில் தாண்டவமாடும் நாட்டிலே சுதந்தர நடனம் செய்கிறேன்" எனச்சொல்லி நடராஜன் ஐரோப்பா சென்று விட்டான். இப் பெயரை வைத்துக் கொண்டு சிலர் சிதம்பரத்தில் பெரிய கோபுரங்களைக் கட்டி சூன்யத்தைக் காண்பித்து தாங்களே உண்டு உறங்கி உல்லாசமா யிருக்கிறுர்களே யன்னியில் என் நடராஜன் அங்கு இல்லை. ஆயிரக் கணக்கான வருஷங்களாக சூன்யத்தை நடராஜன் என்று அழைத்ததினுல் என்னுடைய நடராஜனை அது எப்படி குறிக்கும்? ஆதலால் இவ்விஷயத்தைக் குறித்து என் 'கிளையண்டு" (கட்சிக்காரனு)க்கு ஒன்றுமே தெரியாது. என் பழனியாண்டவனைக் குறித்து ஒரு வார்த்தை. ஓடுபவனை துரத்துவது அவன் சுபாவம். இளித்த வாயனுயிருந்தால், அவனுக்கு வயிற்று நோயை உண்டுபண்ணி, தான் பால் வாங்கி சாப்பிடுவது உண்மையே. பஞ்சாமிருதத்திற்காக ஜனங்களை பயமுறுத்தி அவன் செய்யாத செயலே இல்லை. அவனுக்கு வேறு எதையும் செய்ய சாமர்த்தியமில்லை. அவனிடம் வந்து ஒருவன் துக்கத்தை சொல்வதில் பயனென்ன? அவன் கண்ணிருந்தும் காண்ப

தில்லை. காதிருந்தும் கேட்பதில்லை. மூக்கிருந்தும் மூகருவதில்லை. சுவாசமும் விடுவதில்லை. இப் பேர்ப்பட்டவனிடம் சென்று ஆறு அறிவு படைத்த படையாச்சி துக்கத்தை முறையிடுவதைவிட முட்டாள்தன முண்டோ? அதற்கு பழனியாண்டவனா ஜவாப்தாரி? இப்படியே திருக்கோயிலூரான், சீகாழியான், விருத்தாசலன் முதலியவர்கள் குற்றவாளிகளில்லை என நான் நிரூபணம் செய்கிறேன்.

உடனே மகா விஷ்ணுவானவர் இங்கு மங்கும் பார்த்து, "சரி நான் இந்து சமூகத்திற்காக யார் பேசுகிறார் எனக்கேட்க மறந்து விட்டேன்:" எனச் சொன்னவுடன் ஒருவன் "என்னை அவர்களுக்காகப் பேச அநுமதிக்க வேண்டு" மென்றான். "சரி" என விஷ்ணு தலையை அசைக்கவே ஆபஸ்தம்பன் வாதித்ததாவது :—

இந்துக்கள் வாதம்

"விதி யாரைத்தான் விட்டது? சுவாமியான உங்களையும் அது விடுவதில்லை. நீங்களே அடிக்கடி செத்து மறுபடியும் பிழைக்கிறதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்களும் தலை விதியைப் பொறுக்காமல் செத்தால் நாஸ்திகர்களையா நான் நிந்தனை செய்வது? அப்படி நிந்தனை செய்தால் பௌத்தரான உங்களை அவமதித்தது போலாகும். படையாச்சி கொலை புரிந்து இறந்தால் அதற்கு இந்து சமூகமா பொறுப்பாகும்? அவனவன் தலை எழுத்து. தலை எழுத்தை யாரால் ஜெயிக்க முடியும்? அதற்கான தண்டனைகளை யனுபவிக்க வேண்டியவர்கள் படையாச்சியும் அவன் குடும்பமுமே! என் நண்பர்கள் குற்றவாளிகள் இல்லை."

உடனே மகாவிஷ்ணுவானவர் இந்து சமூகன், நடராஜன் முதலியவர்கள், படையாச்சி, அவன் குடும்பத்தார், ஆகியவர்களை ஏற இறங்கப் பார்த்து அடியிற்கண்ட ஜட்ஜ் மென்டை யளித்தார்.

ஜட்ஜ்மெண்ட்

இந்து சமூகமே! நீயே முதல் குற்றவாளி. உலகமெல்லாமிருந்த உன்னை நான் அழித்து வந்தும் உனக்கு புத்தி வரவில்லை. காஷ்மீரிலே உன்னை ஒடுக்கி விட்டேன். சிந்துவிலே நூற்றில் பதினைந்திற்கு குறைவாக்கிவிட்டேன். திருவாங்கூரிலே தினந்தோறும் உன்னை அழித்து வருகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் உன்னை ஒழிக்க நான் வேலை செய்துவருகிறேன். இப்பொழுதாவது உன் குற்றமறிந்து பரஸ்பரம் உதவியுடனுகி மேலுக்குவா. இல்லையேல் நீ நிர்மூலமாகி இருந்தவிடம் தெரியாமல் அழிந்து விடுவாய் என சபிக்கிறேன். ஜாக்கிரதை! சிதம்பரம் நடராஜா! உன்பேரில் குற்றமில்லை. ஆனுல் உன் பெயரால் வேலை செய்பவர்களே அவன் கொலைபுரிந்து செத்ததற்கு காரணம். அக்காரண புருஷர்களும் அவர்கள் சந்ததிகளும் கல்விக்குப் பதிலாக மொழி உபாசனை செய்து, தூல சங்கீதத்தில் சாய்ந்து, கலாசாலை யந்திரமெனப் பெரும் மெஷின்களில் மனுேகொலை செய்யப்படுவார்கள். அப்பால் சோற்றுக்குப் பறந்து ஊர் ஊராய்த் திரிந்து சாவார்கள். நடராஜனை விடுதலை செய்கிறேன்.

பழனியாண்டவனே, உஷார்! எளியவனை வலியானடித்தால் அவனை தெய்வமடிக்கும். திப்பு சுல்தானை விட்டு எத்தனையோ உன்னைப்போலுள்ளவர்களை சுக்குத் தூளாக்கி பொடிப் பொடியாக்கியதை மறந்து விடாதே. நீ செய்த காருண்யமற்ற செய்கையால் உன் பேரில் எனக்கு நம்பிக்கையில்லை. நரர்கள் உன் கணக்குவழக்குகளை பார்த்து வருகிறுர்கள். இந்த தண்டனையே உனக்குப்போதும்.

திருக்கோவிலான் சிவலிங்கம் முதலியவர்களே, உங்கள் வீடுகளில் வௌவால் பறக்கும். இருட்டறையிலே வசியுங்

கள். நீங்கள் ஓடிப்போகாமலிருக்க இரவிலே தனித்தனியாய் அறைகளில் அடைத்துப் பூட்ட ஆக்ஞாபிக்கிறேன். நீங்கள் குடிக்கும் தண்ணீரில் பாசியுண்டாகும். உங்களை நாடுபவர்களும் கண்ணிருந்தும் காணுர்கள். காதிருந்தும் கேட்க மாட்டார்கள். தலையிருந்தும் மூளை இராது. உங்களுக்கும் உங்களை நாடுபவர்களுக்கும் இத்தண்டனை போதுமென எண்ணுகிறேன்.

கணபதியே! உனக்கு எத்தனை சொல்லியும் புத்தியில்லை. இனி சதாகாலமும் கல்லாகவேண்டும். சகத்திலே நீ சடப்பொருளாவாய். சோதி மலையே! நீ நரனுடன் நெருப்பாய் கலந்து விடுவாய்.”

(படையாச்சி குடும்பத்தை நோக்கினுர். அவன் மனைவி மக்களைப் பார்த்து) “கண்மூடியாய் கீழ்ப்படிந்ததற்கு நீங்கள் கொல்லப்பட்டது நியாயமே! சகத்திலிருந்து நிர்மூலமாய் போனதே நான் உங்களுக்கு அளித்த தண்டனை. பெரியசாமியே! நான் சொல்லுவதை கேட்பதாயிருந்தால் உன்னை மன்னித்து மறுஜன்ம மளிப்பேன்.”

படையாச்சி ‘சரி’ என்று சொன்னுன்.

மகாவிஷ்ணு அவன் காதில் ஏதோ ரகசியமாய் உபதேசம் செய்தார்.

அடுத்த நிமிஷத்தில் “ஐயோ! ஐயோ!” என ஒரு சத்தம் காதில் விழுந்தது. உற்று நோக்கினேன். சோதிமலை உடனே சுடர் விட்டெரிந்து ருத்திரனுகி பெரியசாமி படையாச்சியுடன் கலந்து வானமளாவி “தனி யொருவனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் அழித்திடுவோம் என சத்தம் செய்து அனலாய் எங்குமழிக்கலானுர்.

உ. குதர்க்க சாமியார்!

காஞ்சீபுரம் கருட உற்சவ தினத்தன்று என்னுடன் கடைத் தெருவில் நீ சுற்றியிருந்தால் குதர்க்க சாமியார் எவர் என நான் உனக்குச் சொல்ல வேண்டிய தில்லை. கஸ்தூரி! நீ நன்ருய் அதை அறிவதற்கே நான் இதை விளக்கமாய்க் கூறுவது என பெருமாள் சொன்ன கதையே இது.

'கூச்சல், கூட்டம், சிரிப்பு, கனைப்பு, ஓட்டம், கந்தல், மூட்டை, அடியிடா, உதைடா, கல்லெங்கே, சலமெங்கே, பிடியிடா, போலீஸ் எங்கே' என்பவைகளே தேரடிப் பக்கத்தில் என்னை கவனிக்கும்படி செய்தது.

'பைத்தியக்காரன் இதென்ன வேடிக்கையா' என ஒரு கிழவர் கூறிக்கொண்டே சென்ருர்.

'எம். எ. பரீட்சை பாஸ் செய்து பெரிய அந்தஸ்த்தில் இருந்தவன் இவன். காலத்தின் கோலம்' என மாணுக்கனொருவன் என்னிடம் கூறினுன்.

'எனக்கு இவரை நன்ருகத் தெரியும். திருநெல்வேலியிலே பெரிய ஜமீன்தாராயிருந்தவர். பழுத்த சைவர். மதாபிமானி. சைவக்களஞ்சியம். தமிழ்ப்பண்டிதர். திலகர் நிதிக்கு ரூ. 10,000 அளித்தவர். மனைவி மக்கள் இவரைத் தேடிய வண்ணமாகவே யுளார். இது சாதாரண பைத்தியமில்லை, ஏதோ மனப் புரட்சி' என ஒரு பெரியார் கூறிக்கொண்டே அவரைக் கூட்டத்தின் கொதிப்பினின்று, பிரித்து பருகுவதற்கு சற்று ஜலமளித்தார்.

'உனக்குத்தான் தெரியுமே. அரசன் பவனி, வந்தபோதிலும் நான் செல்வதில்லை; ஆனுல் ஆண்டி திட்டின போதி

லும் நான் அவனை அண்டுவேன். கஸ்தூரி! நான் பைத்தியக்காரனை அவனை அணுகி, அருகிலிருந்தவரை 'இவர் யார்' என வினவினேன்.

'நான் என்ன சொல்வது! இவரை குதர்க்க சாமியார் எனத்தான் கூற வேண்டும்' என்றார்.

அதற்குள்ளே சாமியார் சித்தந் தெளிந்து என்னை நோக்கி நீ பி. ஏ. படிக்கிறாயோ?' என்று கேட்டார். ஆமாம் எனத் தலையாட்டினேன். பிறகு, 'சாமியாரே எனக்கொரு சந்தேகம்?' 'கேட்கவும்?'

'போரை புனிதம் என எண்ணும் பாவிகளுக்கு அன்பைப்பற்றி.'

'அன்பைப்பற்றி என்னவேண்டும்?'

'மதம், சமூகம், தர்மம், நூல், ஆச்சாரியர் முதலியவர்களெல்லாம் அன்பே பெரிதென்பார்கள். அன்பினால் சமூகம் சிறந்து சமாதானம் செம்மை யாகுமாம். அன்பன்னியில் சமூகமே இல்லை. அன்பினால் அமைதி வளர்ச்சியாகி கல்வி முதலியவைகளெல்லாம் பெருகுமாம். அன்பு அவதாரமான அசோகன் காலத்திலேயே அமைதி அகிலமெல்லாம் நிறைந்ததாம். அன்பிலே தோய்ந்தவர்கள் அழியாமல் நிலைப்பார்கள். அன்பு பெருகினால் அகிலம் செழிக்கும். நீதி பெருகி சத்தியம் சிறக்கும் என செவியுற்றுளேன். நீங்கள் அன்பின் மகிமையை விஸ்தாரமாய் எனக்கு அறிவிப்பீர்களா?'

அறிவிலிக் குழந்தையே!, நீ கனவு காணாதே; போரை புனிதம் எனச் சொல்லுபவர்களை பாவி எனச் சொல்லாதே! ஆவேசத்தால் அறிவை அமிழ்த்தி விடாதே. அன்பினாலில்லை. அரும் போர்க்களத்திலேயே சமூகம் தோன்றும், போர்புரிவது புனிதமில்லை என நான் அறிந்த போதிலும், சகோதரத்துவத்தை ஸ்தாபிதஞ் செய்ய அதுவே பெருந்

துணை. ஒரு நாட்டிலே திடீரெனப் புலியொன்று தோன்றி விட்டால் நாட்டு ஜனங்களெல்லாம் சகோதரர்கள்போல் ஒன்றுகி அதைக் கொல்வார்கள். அடிக்கடி புலி தோன்றினுல் நாட்டிலே ஜனங்கள் ஒற்றுமை யுடனும் அனுபவத்தால் ஒழுங்கையும் பற்றி, புலியைக் கண்டு அஞ்சுவதன்னியில், வீரம் வன்மைகளில் சிறந்து விளங்குவார்கள். அங்கு விடா முயற்சி, ஊக்கம், சகிக்கும் குணம், பெருமை முதலியவைகளில் அடிக்கடி சண்டை செய்வதால் பயிற்சியாகி சகோதரத்துவம் செம்மையாய் விளங்கும்.

அடிக்கடி போர்புரியும் நாட்டில்தான் இக்குணங்களெல்லாம் பெருகி எல்லாப் புவியின் பெருமைகளையும் அடைவார்கள்.

வைத்தியத்தின் புதிய முறைகளெல்லாம் போர்செய்யுங் காலத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டது. சண்டை செய்வதென்பது ஒன்றில்லையே யானுல், நவீனமாய் நிலவும் விமானம் சப்மாரியன்கள் தோன்றிராது. இவைகளை எல்லாம் உற்று நோக்கினுல் சண்டை செய்வது என்னும் சித்தமே கல்வி அறிவுக்கு பொக்கிஷம் எனப்புலனுகும்.

எந்த நாடு யுத்தத்திற்கு எப்பொழுதும் தயாராக வுள்ளதோ, அங்கு கல்வி தொழில் அபரிமிதமாய் வளர்ச்சியாகி ஒரே மனதுடன் ஜனங்கள் செழிப்பார்கள்.

‘நீ ஜப்பானை நோக்கவும். போர்புரியும் வன்மை அதனிடம் அதிகமாயிருப்பதால் அந்நாடு ஆசியா நாட்டிலேயே முன்னணி நிற்கும்!’

‘பொன்,பொருள், கல்வி, நாகரீகம், வளர்ச்சி, மேன்மை, கப்பல்கள், விமானங்கள் எல்லாம் சிறப்பதற்குக் காரணம்—ஒற்றுமையுடன் போர் புரிவதற்கு எப்பொழுதும் ஜனங்கள் தயாராயிப்பதே.’

'போர்புரிவதால் அழிவதென்பது கானல் சலமே. இது வரை போர்புரிவதில் வன்மையுள்ளவர்களே காட்டு ஈசல் போல் வளர்கிறார்கள்.'

'அன்பின் அவதாரமெனச் சொல்லும் அசோகச் சக்கரவர்த்தியினிடம் போர்புரியும் சைன்னியங்கள் இல்லாமலிருந்தால் அவர் அன்பின் பிரசாரமோ தலையெடுத்திராது. அன்பு அதிகமாய் நிலவுமானால் சோம்பேறிகள் பெருகி, அவர்களுக்குப் பொழுது போகாமல் கொள்ளையடிக்கத் தோன்றி விடுவார்கள். பிண்டாரிகளும், தக்குக்களும் தோன்றியது இவ்வமைதியான காலத்திலேயே! அன்பில் தோய்ந்தவர் அழியாமல் நிலைப்பவர்கள் என்பது வாழ்க்கைக்கு விரோதமாகும். ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாவை நோக்கினால் அங்குள்ள சுதேசிகளெல்லாம் புதியதாய் குடியேறுபவர்களிடம் அன்புடனேயே ஒழுகுகின்றார்கள். ஆனால் அவர்கள் அழிவதை உன் கண்ணினாலேயே காணலாம். உலகத்திலுள்ள எல்லா சமயங்களையும் அன்புடன் நோக்கும் ஹிந்து சமூகம் அழிவதைப்பற்றி நானுரைக்க வேண்டியதில்லை. காட்டிலேயுள்ள தோடர்களும், பில்லுக்களும் அன்புடன் நகரஜனங்களை நோக்குகின்றார்கள். ஆனால் அவர்களே அதிக அவசரமாய் அழிக்கப்படுகின்றார்கள். அன்பினாலில்லை, அழிக்கும் வன்மையுள்ளவனிடையே வளர்ச்சி விளங்கும். நிலையாயுமுளான்.'

அன்பினால் அமைதி ஒருபொழுதும் ஏற்படுவதில்லை. போரில் சென்று தம்மையே தாம் அரசுபுரிந்து கொள்ளும் ஜனங்களில் பரஸ்பரம் அமைதி நிலவுவதுபோல் போர்புரியத் தெரியாத ஜனங்களுள் அமைதி நிலவாது. அங்கு உட்சண்டை சச்சரவே அதிகமாகும். உட்சண்டை சச்சரவு இருந்தால் கல்வி சூன்யமாய்விடும். அதிக அமைதியும், அன்பும் நிறைந்த இடத்திலேயே ஜனசமூகம் சீரழியும்.

அன்பினால் வழங்கும் நீதி அழியாதென்பது அத்திப் பூவாகும். மொழியால் எத்தனை நீதியை யுரைத்த போதி

லும் அதைச் செவியுறுபவர்கள் ஒருவருமிரார்கள். ஆனால் போரில் ஜயித்துவிட்டால் யாவரும் உன் நீதியில் அடங்கி விடுவார்கள். தோற்றவர்களெல்லாம் ஈசனின் சங்கற்பமென ஜயித்தவனை நாடுவார்கள். நீ செய்யும் சிறிய நீதியையும் வானமளாவிப் புகழுவார்கள்.

'மொழியிலேயே பொழுதை யெல்லாம் கழிக்க எண்ணும் பண்டிதனும், ஞானத்திலே சாப்பாட்டு இராமனுயுள்ள அறிஞனும், பொன்னையே கதியென எண்ணும் பிணமான பிரபுவும், வாதாடுவதே அறமென எண்ணும் பிராமணனும், தங்கள் சுயநலத்திற்காக ஜயித்தவனையே நாடுவார்கள். இவர்களைக் கண்டு பாமரர்களும் அவர்களையே பற்றுவார்கள்.'

ஆனால் அன்பனை நாடுபவர் எவர்?

'நிரந்தரமாக நிலவும் நீதியையும், எவராலும் ஆட்சேபனையன்றியில் ஒப்பப்படும் சத்தியத்தையும் ஸ்தாபிக்கும் போர்க்களத்தில் நிற்க அஞ்சியோ, அன்பினால் பொய்யர்களையும் பாதகர்களையும் அழித்துவிடலாமென பிரசாரஞ் செய்வது.'

'சண்டையினாலேயே சகமெல்லாம் இதுவரை சிறப்பானதென்பதை அறிந்து அதற்கேற்ற அஞ்சாநெஞ்சம் ஆன்ம வன்மை சூன்யமாயிருப்பதென்பதை மறைக்கவோ அன்பினால் அகிலமனைத்தையும் அடையலாமென்பது.'

'அநியாயத்தை அழித்து, சைதானை சிதைப்பவனே சத்தியத்தை அறிவான் என அறிந்திருந்தும், இரத்தம், உடல் இவைகளுக்கு நடுங்கி சும்மாயிருக்கும் சோம்பேறி நிலையை ஸ்தாபிக்கும் அன்பினால் அவனருள் விளங்குமென ஓதுவது.'

'அடிக்கடி நிலையறிந்து போர் பயிற்சியாகி சண்டையே ஆண்மையை அளிக்கும் என அனைவரும் அறிந்துள்ளபோதிலும், தங்களின் பேடிக் குணத்தை மறைப்பதற்கோ ஒருவன் தன்னை அடிக்கடி வீராதிவீரன், சூராதிசூரன், ராஜாதி

ராஜன் என அழைத்துக் கொண்டு அன்பினால் பகைஞனையும் வெல்லலா மென்பது.'

'புவியிலே பெருமைப் படுவதெல்லாம் போர்புரிவதனால் என நன்றாய் புலனாகியும், பேடியான சுபாவத்தைப் பெருமைப் படுத்தவோ அன்பினால் ஆகாத செயலே இல்லை என்பது.'

'அன்பே தாய், தந்தை, மகன், தானே என்பதும் மாயை. அதன்னியில் ஒருவன் தற்கொலை செய்துகொள்வான் என்பது சூரியனை இருள் மலை என்பதாகும்.'

ஆதலால் அன்பை மறந்து விடு.

"நகத்தினின்று தலையுச்சி வரையுள்ள தேகத்தின் ஒவ்வொரு அங்கத்தையும், மனத்தையும் அசைத்து பயிற்சியளித்து போர்புரிந்து பெருமையை யடைபவனே தன்னையே தான் கண்டதீரன் எனலாம். அழாமல் மற்றவர்களை ஜெயித்து சந்தோஷமுடன் திரும்பும் மகனையே தந்தை விரும்புவான். அழுது வரும் குழந்தையை தந்தையும் தொந்தரவு செய்வான். அன்னியர்கள் ஏசி இலகுவாய் பேசப்படும் குழந்தைகளை தாயும் விரும்புவதில்லை. அர்ச்சுனன், அல்லியைப் போலவே குழந்தையிருக்க வேண்டுமென பெற்றோர்கள் விரும்புவார்கள். பூனை, நாய் குட்டி போட்டால் பலமும், வீரமும் குறைந்த குட்டிகளைப் புசித்துவிடும். பறவைகளும் அங்ஙனமே போர் புரிந்து தம்மைக் காத்துக் கொள்ளும். வன்மையில்லை எனவே ராஜ புத்திரர்கள் கடைக்காலத்தில் பெண்களை யெல்லாம் கொன்று பிறகு தாமும் மரித்தார்கள்."

இப்படி போரே பெருஞ் சட்டமாயுள்ள சகத்தில்

"எல்லா ஜனங்களிடமும் அன்பைக் காட்டுபவன், புவியிலுள்ள பொருள்களை யெல்லாம் விரும்பும் நிலம், முட்கள், சப்பாத்தியை தாங்குவதுபோல், வெறுப்பு விபரீதங்களுக்கு ஆதரவாகி உலகத்திற்கே பயனில்லாமலாய் விடுவான்."

" அன்பினால் அகில சகோதரத்துவம் நிலவு மென்பது, பிராண வாயுவை பிணத்தில் செலுத்துவதால் பிராணன் புலனு கும் என்பது போலவே யாகும்."

" அன்பே கடவுள் என சிலர் உரைப்பது, அரக்கனுக்கு ஈசன் விடுதலை என உரைப்பது போலாகும்."

"அன்பினால் கல் நெஞ்சு உருகுமென்பது கருங் கல்லில் விதை விதைத்து துளிர்க்கு மென்பதாகும்."

" அன்பென்னும் பிடியில் அகப்படும் மலையெனக் கூறு வது, அணுவிலே அவனை அமிழ்த்துவதாகும். "

" அன்பென்னும் வலையில் அவன் அகப்படுவான் என் பது, துளி ஜலத்தால் கடலைக் கைப்பற்றுவது போலாகும்."

" பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளை அன்பினால் அழிப்பேன் என்பது சூரியன், மழை, புசல், இடி, புலி, எமன், திருடனை வென்று விட்டேன் என ஒளிந்து இருண்ட குடிசையில் வசிப்பது போலாகும்."

'அன்பு சூன்யமான சண்டை செய்வதை பெரியதென எண்ணுபவன், புவியிலுள்ள முட்கள், சப்பாத்தி, எருக்கலை இவைகளை எல்லாம் பிடுங்கி, இனி நிலம் தானியம் விதைக்கத் தயாராயுள்ளது எனச் சொல்லும் குடியானவனாகும்.'

'பீரங்கி, குண்டு, புத்தி, கல்நெஞ்சு, வீரம் நிறைந்தவர் களே சமாதானத்தை சகத்திலே நிலைநாட்ட முடியும். சகோ தரத்துவம் அவர்களாலேயே ஸ்தாபிதமாகும்.

சோனி, எலும்பு, நாக்கு, மொழி, ஆமை, ஆடு, அட்டை, நாய் இவைகளால் எப்பொழுதாவது எக்காலத்திலாவது அமைதியும், அறிவும், அரசும் நிலவியதுண்டா ?

கொலை செய்யும் வன்மை, துஷ்டநிக்ரஹம் செய்வதனு லல்லவோ விஷ்ணுவும், சிவபெருமானும் உபாசிக்கப்படுகின் றனர். பிள்ளைகளைப் பெறும் பிரமாவை கவனிப்பவன் எவன் ?

'போரினால் இதுவரை பற்றிராத நாடுமுண்டோ? பெருமையுமுண்டோ?'

பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளை நித்தியமாக அழிக்க வல்லவன் போரில் ஜயிப்பவனே. மற்றவர்களெல்லாம் இவர்களின் அடிமைகளே.

நான் உனக்கு இனி அதிகம் உரைக்கவேண்டியதில்லை. போர்மறைந்துள்ள அடியிற் கண்ட நவீன அன்பைப்பற்றி நீ நன்றாயறிவாய்.

'அன்பெனப்படுவது புலி நகம் மறைந்துள்ள பனாரஸ் பட்டு எனவே புகலவேண்டும்.'

'பிராமணன் அன்பு பிரசாரஞ் செய்வது சாதிவேற்றுமையால் முளையும் அநீதியை மற்றவர்கள் மறக்கவேண்டுமென்பதற்கோ!'

'பிரபுக்கள் அன்பு அன்பு என்பது எளியவர்கள் கண்டதில் திருப்தியாகி புன்மை நிறைந்த அவர்களை கருணையுடன் கருதவேண்டுமென்பதற்கோ.'

'புலி அன்பு உபதேசஞ் செய்வது தன் கிழத்தன்மையிலும் நர மாமிசம் புசிப்பதற்கோ.'

எனச் சொல்லிக்கொண்டே மூச்சுவிடாமல் அவர் போகும்பொழுது திரள் திரளாய் இருள் கூட்டம் ஒன்று திரண்டு, கண்ணை காட்சியாகாமல் செய்து 'நான் சூரியனையே கடலில் சாய்த்துவிட்டேன். நீங்கள் இனி இங்கிருக்கலாகாது' எனச் சொல்வதுபோலிருந்தது.

நூற்றுக்கணக்கான கொசுக்கள் கிளம்பி 'நாங்கள் அற்பப்பிராணிகளே. ஆனால் இலட்சக்கணக்காய் ஒன்றுசேர்ந்து மனித சமூகத்தையே அழித்துவிடுவோம். நாங்கள் ஒற்றுமையாக உலகத்தை அழித்து களிப்புடனிருப்போம். நீங்கள் இங்கிருந்து செல்லவில்லையேல், உங்களை நாசஞ்

செய்துவிடுவோம்' என சொல்வதுபோல் ரீங்காரஞ்செய்து கொண்டு எங்களைக் கிளம்பும்படி செய்துவிட்டது.

திடீரென குதர்க்க சாமியார் ஓடி கண்ணில் காணுமல் மறைந்துவிட்டார்.

நானும் மனதில் புரட்சியை யடைந்து, இது உண்மை தானு என உன்னைக் கேட்கிறேன் என கஸ்தூரி பெருமாளிடம் புகன்றுன்.

குதர்க்க சாமியாரை மறுபடியும் அடைந்து கேட்க வேண்டுமென இருவரும் தீர்மானித்தார்கள்.

குதர்க்க சாமியாரையோ இன்னம் காணவில்லை.

ந. 'மீண்டும் குதர்க்க சாமியார்!'

'மீண்டும் குதர்க்க சாமியார்!' மனங் கலங்கி மறுபடியும் குதர்க்க சாமியாரை நாடி

'பண்டிதர்களெல்லாம் அன்பைப்பற்றி வானமளாவிப் புகழ்ந்துளார்களே, வாழ்நாட்களெல்லாம் கற்றவர்கள் அஃதே பெரிது என்றுர்களே, கோவில் குருக்கள்களும் அன்பில் அதிகமானதில்லை, அன்பே உலகம், அன்பே அமுதம், என உரைக்குங்கால்,

நீர் ஏன் அதை வெறுக்கவேண்டுமென, வினவினேம்.

அதற்கவர் அவர்களை அடித்து நோக்கி:—

'பண்டிதர்களும் பூஜாரிகளும் புகல்கிறுர்கள் என என்னிடம் உரைக்காதே. படாடோபமும் பளபளப்பான பேச்சுக்களே அவர்களிடமுண்டு. உதிரம் பருகும் அரக்கர் உலகில் உண்டானுல், அவர்களே இவர்களாகும். பண்டிதர்கள்

பூவுலகில் எக்காலத்திலாவது நீதியை ஸ்தாபிக்க முயன்ற துண்டோ? இராவணனுக்கு பட்டாபிஷேகம் நடைபெற்ற காலத்தில் ஜய விஜயீபவ என வாழ்த்தியவர்கள் பண்டிதர்களே.'

மனித சமூகத்திலே புத்திசென்று ஒருவேளை புலன்கள் புனிதமாய்விடுமோ என்னும் எண்ணத்தால் புத்தங்களிலும், பஞ்சாதி சொல்வதிலும் பண்டிதர்கள் காலத்தைக் கழிக்கிறார்கள் போலும்?

புழுதி, எண்ணெ, குப்பை, கூளம் நிறைந்த மண்டபத்தில் சதாகாலமும் காலங்கழிப்பவர்களுக்கு புனித புவியைப்பற்றி என்ன புரியும்?

குரங்கு பழிப்பதுபோல் பழையபுராணங்களைப் புலனுக்கும் இவர்கள் அன்பைப்பற்றி புகன்றார்கள் என்பதானது, குருடன் கதிரவன் கீர்த்தியை கானஞ்செய்வது போலாகும்.

மொழி குறைந்து, புஸ்தகம் பிரிந்து பத்துவேளையாவது உணவன்னியில் பட்டினி இருந்தவனிடமே நீங்கள் உண்மையை அறியலாம்.

நிர்மால்யத்தால் நாற்றம் நிறைந்து துர்க்கந்தம் வீசும் கற் கட்டத்தின் காரிருளில் கடவுளைக் காணும் பூஜாரிகள் தங்கள் கருத்து வானமளாவி பாயுமோ, எனப் பாய்ந்து கோபுரத்தால் கீழ் தாக்கியுள்ள குகையே கதியென இருக்குங்கால், அவர்களிடம் சென்று அன்பைக் கேட்பதை விட நாடகமேடையிலே சாவித்திரி வேஷமணிந்த விபசாரியிடம் கற்பின் கீர்த்தியை அறியலாம்.

கோவில் இடிந்து கதிரவன் ஒளி உள்ளே வீசி, அங்குள்ள கருங்கல் உடைந்து, புற்கள் முளைக்குங் காலத்திலேயே அங்கு வாசஞ் செய்பவனிடம் நீங்கள் உண்மையை அறியலாம்.

குருக்கள் தங்களின் கோழைத்தனத்தை ஜனங்கள் காணமலிருக்கவேண்டுமெனவே விசுவேசுவரர் மிலேச்சர்களுக்குப் பயந்து கிணத்தில் மூழ்கிவிட்டார் என விக்ரகத்தை சலத்தில் எறிந்து, மாயமாய் விட்டவர்கள் தமக்குப் பசிப்பதென புகலாமல், பரமனுக்கு நிவேத்தியம் வேண்டுமென பயமுறுத்தி, கொள்ளை கொள்ளும் பூஜாரிகளின் மொழிகளாலா அன்பு அமுதம் என நீ உளறுகிருய்?

அன்பைப்பற்றி நான் இன்னம் உரைப்பதை விவரமாய்க் கேட்கவும்.

அனைத்திலும் அன்புள்ளவன் அநியாயத்தின் நண்பனுவன். அன்பில் அமைந்தவனுக்கு அறிவில்லை. நமது குறைகளை மூடுவது அன்பே. அன்பு அழுக்கு. அன்பு அமைதியாயுள்ள சோம்பலாகும். அன்பு என்பது ஆபத்தின் தந்தை. விபத்துகளின் ஊற்று அன்பே. அடிமை என்பவன் அன்பிலே அமிழ்ந்தவன். பேடி அன்பிலே ஆழ்ந்தவன். எளிமை என்பதுஅன்பின் அவதாரமே. அறியாமை என்பதற்கு வேறு மொழி அன்பே. அன்பிலே விளைவது அழிவு. உன்னை அநாதியாக்கிவிடும். அன்பனுக்கு இவ்வுலகமில்லை. அவ்வுலகமுமில்லை. அன்பு வடிவான ஆடு கோழிகளை அந்தணர்களும் புசிப்பார்கள். அன்பினல் சட்டம் நிலைப்பதில்லை. அன்பினல் அமைதியும் நிலவாது. அன்பினல் அச்சம் வளரும், அச்சத்தால் பிணியாகும், பிணியால் மரணமே. அன்பினல் பொய் புகலுவான். பிச்சை எடுப்பான். பல்லை இளிப்பான். களவைக் கைக்கொள்வான். முகஸ்துதி செய்வான். பாடுவான், கூத்தாடுவான், பெண்டு பிள்ளைகளையும் விட்டுவிடுவான். புறம்பேசுவான். குற்றம் புரிவான். கழுவிலேற்றுவான். கானகஞ் செல்லுவான். குடியைக் கெடுப்பான்.

இனி அன்பைக் கனவிலும் கருதாதே! சத்துருவினிடம் அன்புடனிரு என்பது திருடனுக்கு கடப்பாரை தானஞ் செய் என்பதாகும்.

கொடுமையுள்ள தலைவனிடம் அடிமை அன்புடனிருப்பதே கடமை என்பவன், புலி வாயில் செல்லும் ஆட்டிற்கு அன்புடனிரு என சொல்வதாகும், குழந்தைகளுக்கு அன்பைக் காட்டுவது கல்விக்கு விடுமுறை அளிப்பதாகும்.

அடிமையை அன்புடனிரு என்பது குடிகாரனுக்கு 'ஜார்ஜ 4-ஐ' தானஞ் செய்வதாகும். பெண்களுக்கு அன்பு உபதேசம் செய்பவன், வனிதைகளுக்கு எட்டிக்காயை யளிப்பவனாவன்.

பாமரனுக்கு அன்பு உபதேசஞ் செய்பவன் வண்டிக் குதிரைக்கு லகான் கட்டுபவனாவன்.

அன்பை விட அற்புதமான பொருள் ஒன்றே உலகிலுண்டு. அது—சமர். போர், சண்டை. மண்ணுடன் கலந்த தங்கத்தை நெருப்பு சுத்தி செய்வது போல், போர் செய்வதே மனிதனை மனிதனாகச் செய்யும். சமூகத்தையும் ஜகத்தையும் ஸ்தாபிப்பது போர்க்குணங்களே.

போரில் நிரந்தரமாக வெற்றி பெறுபவனின் நீதியே நித்தியமாய் நிலைக்கும். எளியவன் பேடியின் நீதியெல்லாம் நிழலே யாகும்.

புவியிலே பெருமை யடைபவர்கள் போரில் வன்மையுள்ளவர்களாவர். வன்மையுள்ள வீரர்களிடமே ஈசனின் அருள் விளங்கும். நட்சத்திரத்தினின்று நான் திடீரென தரணியில் குதித்தால் பிரிட்டனையே நாடுவேன் என சாஸ்திரியார் சொல்வது வெள்ளைக்காரர்கள் சிங்கங்களா யிருப்பதனாலல்லவா? கப்பல்களையும், ஈட்டிகளையும் புவியிலேயே அதிகமாய் பிரிட்டன் பற்றியதனா லல்லவா? பிரிட்டனும் பாரதமும் பரமன் அருளால் இணைக்கப்பட்டுளது என கனம் வலங்கிமான் ஐயர் கூறுவது? புராதனத்தில் சிலர் கத்தி கழிகளைக் கொண்டு சர்க்காருக்கு உதவி புரிந்ததனா லல்லவா, இன்னம் அந்தப் பரம்பரையிலுள்ளவர்கள் இராஜா எனவும், மகாராஜா எனவும் அழைக்கப்படுவது? தேசத்திலே உட்

சண்டையும், கலகமும் குழப்பமும் தோன்றி விபத்து ஏற்பட்டால் போர் வீரனல்லவா மறுபடியும் நாட்டிற்கு பெருமையை அளிப்பான்? போர்க்குணமில்லையேல் புவியில் புகழ்பவருண்டோ ?

யுத்தம் காண்டமில்லையேல் இராமாயண, பாரதத்தின் மகிமை யாது? யுத்தத்தில் ஜயிக்க வில்லையேல் சுகவாழ்க்கையை அடைவது கஷ்டம். சமரன்னியில் பொன் பொருளை யடைவது என்பது கனவு. சதா காலமும் சமர் செய்யாத சிறுவர்களுக்குக் கல்வியும் குணமும் வருவதில்லை. கீர்த்தியும் சூன்யமாகும். வளர்ச்சி என்பதும் வையகத்தவர்களிடம் சமரன்னியில் சிறப்பாகாது. சமர் சித்தமில்லையேல் ஜீவன் ஒரே நிமிஷத்தில் மறைந்து விடுவான். போரினால் எந்தக் குற்றத்தையும் மறைத்துவிடலாம். ஒரு கொலை செய்பவன் கொலைபாதகன். கோடானுகோடி கொலை செய்பவன் மகா விஷ்ணுவின் அவதாரமாகும். கிளைவ், வாரன்ஹேஸ்டிங்ஸ் முதலியவர்களின் குற்றங்களை யெல்லாம் மறந்து அவர்களை குணக்குன்று என நாம் ஏன் வானமளாவப் புகழுகின்றோம்?

"சமரும் சிவனும் இரண்டேன்பர் அறிவிலார், சமரே சிவமென யாருமறிகிலார்" எனத் திருமூலரும் அறியவில்லை. சமர்செய்யும் சக்தியே அழகு. சீதை இராமனிடம் இந்த அழகையே கண்டாள். ஆண்மையுள்ள புருடனையே பெண், அழகேனப் போற்றுவாள். அவனே அவளுக்குத் தேய்வமாகும். இச்சக்திவாய்ந்த சமர் குணமே அருளாகும். இச்சமர்க்குணமில்லையேல் அருளில்லை."

மனிதனை மானமுடன் வாழச்செய்வது சமரே. மனித நோக்கத்தை பூர்த்திசெய்வதும் அதுவே.

மனிதன் பிறப்பது மரிப்பதற்கேயாகும். ஆனால் சிலர் சீக்கிரமாயும் சிலர் தாமதமாகவும் சாகிறார்கள். ஆனால் சரியான காலத்தில் சாவதே ஜகத்தில் சிறப்பு. நோயினால் மடி

வது துரித மரிப்பு. வயதால் மறைவது தாமதச் சாவாகும். போர்புரிந்து சண்டையில் சாவதே சரியான புனித சாவென லாம்.

இச்சீவனின் நோக்கத்தை நிறைவேற்றும் பாக்கியம் சமர் செய்பவனுக்கே சிறப்பாகும்.

சமர் செய்வதைவிட சிறப்பு ஜகத்திலே இல்லை. ஜய கோஷம் அளித்து சாந்த நிலையை யளிக்கும் சர்வேசன் சமர் செய்பவனிடமே சாசுவதமாவன்.

கத்தியும் கைத் துப்பாக்கியுமுள்ளவனே குணக்குன்று வன். அறம் அன்பைவிட வீரமும், சண்டையுமே சகத்தில் சிறப்பான செயல்களை யெல்லாம் அளிக்கும்.

போர்புரிவதே தர்மம். அன்பே தர்மம் என கனவிலும் எண்ணுதே. பீரங்கியும் வெடி குண்டும் பக்க பலமாக இல்லாம லிருந்தால் கிறிஸ்தவ தர்மம் புவியெல்லாம் பரவியிருக்குமோ?

பீரங்கியும், வெடிகுண்டும் பக்கபலமாக இல்லையேல் களத் தூர் கோவிலில், மன்னருக்கு இலட்சார்ச்சனையும், கற்பூர ஆரா தனையையும் அய்யர் ஏன் செய்வார்?

தென்னுட்டிலே பல கோவில்களில் குடியுள்ள கடவுள் களுக்கு நித்தியமாய் உணவு கிடைக்க வேண்டுமென பட்டா ளங்களை யடைந்துள்ள பிரிட்டிஷ் சர்க்காரிடமல்லவா பொருளை பத்திரமாக வைத்துள்ளார்கள்

எனப் பலவாருகச் சொல்லிக் கொண்டே குதர்க்க சாமி யார் கீழே விழுந்தார்.

தேகம் வன்மையற்றதாய் விட்டது. பல்கள் விழுந்தன. இரத்தமில்லை. இனி இவனிடமிருந்து எனக்குப் பய னென்ன என சொல்லி ஆன்மா ஓடுவதுபோல், பெருமூச்சு திரண்டு உருண்டு கூறி மறைந்தது.

குதர்க் சாமியார் குதர்க்க சாமியாரே எனக் கதறினேன். அவர் கண்ணைத் திறக்கவில்லை. திறக்கவே இல்லை.

ச. புரோகிதன் கதை

காலை 6 மணி. ரெட்டியார் மகன், ' என்ன மாமா! இன்னம் எழுந்திருக்க வில்லையா! என்றான்.

' நீ எங்கே இவ்வளவு தூரம்?' ' என்ன விசேஷம்?'

' ஒன்றுமில்லை மாமா—'

' சும்மா தான் வந்தேன், ' என்றான்.

' சமாசாரத்தைச் சொல்லு ' என்றேன். ' நான் எதைச் சொல்வது— புரோகிதனே என் தந்தையைப்பற்றி விட்டான்—உங்களுடன் என்ன பிரியமாயிருந்த போதிலும்— புரோகிதனையே பரம குருவாகவும், பெரும் நண்பனாகவும் கருதியுளார். அவன் செய்வது தான் சட்டம். எனக்கு தினம் கொடுக்கும் காலணாவிற்கும் அவன் சொன்னால்தான் எனக்குக் கிடைக்கும். நான் இதற்கு விடுதலை இல்லை எனவே எண்ணியிருந்தேன். ஆனால் இன்று நடந்த சம்பவமொன்று எனக்கு தைரியத்தை யளித்துவிட்டது. அதையே நான் சொல்ல வந்திருக்கிறேன்!'' எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் '' என்றான்.

' சரி! சொல்லப்பா !'

' தினந்தோறும் காலையிலும் பகலிலும் புரோகிதன், வீட்டிற்கு வருவது வழக்கம். தோட்டத்தில் இங்குமங்கும் இருவரும் உலாவுவார்கள்.' நேற்று தந்தை உலாவுங்கால் அவர் கையிலிருந்த டவல் கீழே விழுந்தது. அதைப் புரோகிதன் உடனே எடுத்துக் கொடுத்தான். என் தந்தை அவனுக்கு வந்தனமளித்தார். உடனே மறுபடியும் வந்தனம் என்றார். அப்பால் ' என்னுடைய வந்தனம் உனக்கு ' என்

ளுர். பிறகு ஒரு குட்டித் திண்ணையில்போய் உட்கார்ந்து 'நீ டவல் எடுத்துக்கொடுத்ததற்கு மறுபடியும் வந்தனம்' என்ளுர். புரோகிதன் பிரமித்துவிட்டான். என் தந்தையை யணுகி—' இந்த அற்ப கார்யத்திற்கு ஏன் இவ்வளவு வந்த தனங்கள்' என மெதுவாய் சொன்ளுன்.

தந்தை மறுபடியும் வந்தன முரைத்து—'இவ்வுலகிலே இந்த டவல் ஒன்றிலேயே நான் என்னிஷ்டம்போல் வாயை வைக்கலாம். அத்தகைய டவலை நீ எடுத்துத் தந்தாயே அதற்குத் தான் வந்தன' மென்ளுர். இந்தப் புரோகிதனின் பழைய கதையை கூறுகிறேன். கேட்கவும்.

ஒருநாள் தந்தை அப்பொழுதுதான் காபி குடித்து விட்டு வந்த சமயம். அன்று காபி உண்மையாகவே நன்ளு யிருந்திருக்கலாம். புரோகிதனைப் பார்த்து காபியை எவன் கண்டு பிடித்தானே? அதன் சுவையே சுவை. என்ன களிப்பை யளிக்கவல்லது! என்ளுர்.

புரோகிதன் 'ஆமாம் காப்பியின் கீர்த்தியை நான் என்ன வென்று கூறுவேன். யமுனு நதி சலத்தின் நிறமான அது ஸ்ரீ கிருஷ்ணனே ஊடுருவிப்பாய்வது போலுள்ள கருமேனியை யடைந்துள்ளதாகும். கம, கம, வென மணக்கும் அம் மணத்தை நான் என்னவென் றுரைப்பேன்!' 'காபி யன்னியில் சிராத்த காரியங்களையும் நான் செய்வதில்லை. காபி யன்னியில் காலைக் கடன் முடியாது. அதில் சத்து உண்டு. சக்தியும் சிறப்புமுண்டு. அதை எவ்வளவு சாப்பிட்டபோதிலும் தோஷமில்லை' என்ளுன்.

இதைக்கேட்டவுடன் தந்தை மறுபடியும் காபிதயார் செய்து வரச்சொன்ளுர். நானும் அவர்களுடன் பருகினேன்.

தந்தை அன்று முதல் நினைத்த பொழுதெல்லாம் காபியைப் பருக ஆரம்பித்து விட்டார். சில நாட்களிலேயே காபியை அதிகமாகப் பருகியபடியால் இரத்தங் குறைந்து,

பலஹீனமாகி, படபடப்பு அதிகரித்து, பசி குன்றி, தந்தை பரிதவித்து புரோகிதனைப் பார்த்து

'இந்த கெட்ட காபியை விட்டு விடவேண்டும்—இத ஞல்தான் நான் அவஸ்தைப்படுகிறேன். நஞ்சை விட விஷம் நிறைந்ததே காபியாகும்' என்று சொன்னார்.

உடனே புரோகிதன்—'நான் சொல்ல வேண்டுவதை நீங்கள் சொல்லி விட்டீர். எமதூதனைப்போல் கருமையாயுள்ள அந் நீரை நம்மைப் போலுள்ளவர்கள் பருகலாகாது. அது கசப்புடன் இருந்தபோதிலும் கயவர்கள் அதை கவனிக்காமல் குடிப்பது தான் விந்தை! அதன் நாற்றத்தையும் மணமென உரைக்கிறார்கள். கள்ளைக் குடித்தபோதிலும் குடிக்கலாம், காபியை குடிக்கலாகாது. காபி கழலாதவன் எக்காரியத்திற்கும் யோக்கியதை இல்லை' என்றார்.

உடனே எனக்குச் சிரிப்பாய் விட்டது. அன்று அப்படிச் சொன்னவன் இன்று இப்படிச் சொல்லுவானேன் என மனதில் நினைத்துக் கொண்டு, அவனைப் பார்த்து, 'காலத்திற்கேற்ற கல்வி யடைந்துள்ள இத்தகைய புரோகிதனைப் பார்த்ததில்லை. இதுதான் படிப்பிற்கடையாள, மென்றேன்.

'ஆமாம்! நான் நேரிடையாகப் பேசுபவன். வஞ்சகம் கபடம் என்பது என்னிடமில்லை. அதனுல் தான் என்னைக் கண்டால் யாவரும் விரும்புவது' என்றார்.

பிறகு என்னைப் பார்த்து வெகு பழகியவர்போல் சகஜமாக ஊர் சமாசாரங்களெல்லாம் பேசினார். அவர் கடுகிவிருந்து கானகம் வரையிலுள்ள எல்லா விஷயங்களையும் கூறினார். ஆனால் அதையெல்லாம் நான் மறந்துவிட்டேன். அதில் ஒன்று மாத்திரம் என் மனதில் பதிந்து விட்டது. அதை அவர் சொன்னது போலவே இங்கு சொல்லுகிறேன்.

* * * *

இந்த ஊரிலே ஒரு பஞ்சம னிருந்தான். அவன் பணக்காரன். அவன் வீட்டிற்கு அடிக்கடி சென்று நான்

புரோகிதஞ் செய்வதுண்டு. ஆனால் ஒருவருக்கும் தெரியாது. ஒரு நாள் அப்பஞ்சமப் பிரபு இறந்துவிட்டார். நான் சென்று கிரியைகளெல்லாம் செய்தேன். இது வேறு புரோகிதர் எவருக்கும் பிடிக்கவில்லை. ஆதலால் எல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்து ஆச்சாரி புருடனிடத்தில் சென்று சொல்லிவிட்டார்கள். உடனே ஊரெல்லாம் வெட்ட வெளிச்சமாய் விட்டது. நான் ஆச்சாரியினிடம் செல்லவேண்டுமென ஆக்ஞை. மறுதினம் குண்டோதரன் போலுள்ள நாலு பிராமணர்கள் என்னிடம் வந்து என்னை அழைத்துச் சென்றார்கள். ருத்திராட்சம், வில்வம், விபூதி, தேங்காய், பழம், பால், விளக்கு, நெய், கர்ப்பூரம், பீடம், இரு கண்கள், மூக்கு, இரு கைகள் முதலியவைகளையே நான் முதன் முதலில் கண்டேன். எல்லோரும் என்னைப் பிடித்து, இருகைகளையும் கூப்பி நமஸ்காரஞ் செய் என்றார்கள். நமஸ்கரித்து நான் எழுந்தவுடன் கண்கள் என்னை நோக்கி

பிரஷ்டா! பஞ்சமனுக்குச் சென்று கிரியைகள் செய்யலாமா? பிராமண குலத்திற்கும் தர்மத்திற்கும் பெரும் பாதகத்தை விளைவித்து விட்டாய். இதற்கு ஏற்ற மறுமொழி யளிக்கவில்லையாயில் சன்னிதானத்தில் சிட்சையாய்விடும்!!

என்று ஆச்சாரி சொன்னார்.

எனக்கோ ஒன்றும் புரியவில்லை. என்ன செய்வது. நான் பிராமணனில்லை என்று சொல்லிவிட்டால் பிராமணர்கள் என்னிடமிருந்து பிரிவது ஒருபுறமிருக்க, பிராமணரல்லாதவர்களும் பஞ்சமர்களும் என்னைப் புறக்கணிப்பார்கள். இதற்கு ஏதாவது ஒரு யுக்தி செய்யவேண்டும். இல்லையேல் பிழைப்பே போய்விடுமென பலவாறு நினைத்துத் தீரமாய்

சன்னிதானத்தில் சாயங்காலம் தோன்றி மறுமொழி யளிக்க யனுமதிக்கவும் என்றேன்.

மாலை ஆறுமணி. ஆச்சாரியர் பூஜையில். சிஷ்யகோடிகள் எல்லாம் பக்திமயந்தான். சாஷ்டாங்கமாக கால்களில் விழுந்தேன்.

ஆச்சாரியர் என்னை நோக்கினர். உடனே கையிலிருந்த கனமான சம்படமொன்றை யளித்து—'பஞ்சமன் வீட்டில் பரமனுலகம் பிரிந்த கிழவன் இதைத் தங்களிடம் அளிக்கவும் எனச்சொல்லி இச்சகம் நீங்கினர்' என மெல்லிய குரலில் மொழிந்தேன்.

சன்னிதானம் கைகளில் பற்றி தங்கமென்பதை உணர்ந்து என்னை நோக்கி 'இத்தடவை மன்னித்து விட்டோம். இனி இக்காரியத்தைச் செய்யாதே' என்று சொல்லி கையில் விபூதியை யளித்தார். உடனே நானும் பெற்றுக்கொண்டு நமஸ்காரஞ் செய்தேன்.

என்னை யாவரும் அன்புடன் நோக்கி பிரசாதமளித்தார்கள். அதிலிருந்து நான் என்ன செய்தபோதிலும் அவர்கள் ஒன்றும் சொல்வதில்லை என்றான்.

'நீ ஆச்சாரியர் பொன்னால் உன்னை மன்னித்துவிடுவார் என எங்ஙன மறிந்தாய்?'

உனக்கு இன்னம் பொன் மகிமை தெரியவில்லை. சிருட்டி செய்யுங்கால் புவியிலே நீ தான் பெருமையுள்ளவன் என்று பரமன் புகன்ற அடுத்த நிமிஷத்தில், 'நீ செல்லுமிடமெல்லாம், புத்தியும்,புலனாராய்ச்சியும் உன்னிடமிருந்து பிரிந்து விடுமென' சைதான் சாபமிட்டான். அதனாலேயே ரெட்டியார் ஒருவரைத்தவிர பொன் பொருள் ஏராளமா யிருப்பவர்களிடம் புத்தி என்பதில்லை.

பொன்னுள்ளவர்களிடம் பிடிவாதமுண்டு. தாமே புத்தியில் பெருமையுள்ளவர்கள் என எண்ணுவார்கள். நாமும் சத்தியத்தில் பிடிவாதமாய் அவர்களுடன் பழகினால் நமக்கு அதனால் லாபமில்லை. நம்மை வெறுத்து புறக்கணிப்பதால்

அவர்களுடன் பழகி, அங்குள்ள பொன்னை நாம் எப்படி அபகரிப்பது ?

குபேரன் பொன்னை அவர்களுக்கு அளிக்குங்கால் ஒரு உடன்படிக்கை செய்துளான். அதில் முக்கியமான சரத்துக்கள் யாதெனில் 'சோம்பலை விடாதே, சத்தியத்தை நாடாதே.'

'இந்த சரத்துக்களை நான் அறிவேன். இதனால் நான் எச் செயல்களை அவர்கள் செய்யவேண்டுமென விரும்புவேனோ அது சோம்பேரி வேலையா என்பதையே கவனிப்பேன்.

'கடவுளைக் கருத்தில் குணமாக்க தியானஞ் செய்யவும் என்றால் நானென்ன' சன்னியாசியா என செல்வ புருஷன் சொல்வான். 'அதற்காக சோம்பலான கண்களுக்கு சுக வடிவமாய் சிறப்பாகும் அழகுவடிவத்தையே ஆதியென்பேன்.'

'சும்மாயிருப்பதையே விரும்பும் செவிக்குச் சொகுசாக ஒலிக்கும் சங்கீதத்தையே சாமகான சிவன் என்பேன்.'

'அறுசுவையுண்டி, பாயசம், பொங்கல், பழம் முதலிய சுவைகளே பரமனுக்குப் பிரியமென்றால், அவனுடைய நாவை நான் நேர்மையாக நாட்டினேன் என எண்ணுவான். சுருங்கச் சொல்லில், சுகம், சோம்பல், சுவை முதலியவைகள் எங்கு தங்குகின்றதோ அதையே நான் சிறப்பு என சொல்லவில்லையானால் அவன் எழுதிக்கொடுத்த சரத்துக்களுக்கு விரோதமாகிறபடியால் என்னைப் போலுள்ளவர்களைப் புறக்கணிப்பான்.'

'இதை நான் அதிகம் விளக்கவேண்டுவதில்லை.'

'அவர்கள் பொன்னுடன், அசீர்ணம், அகம்பாவம், சோம்பல், சண்டித்தனம் முதலியவைகளெல்லாம் தங்களுடன் தோயவேண்டுமென வரம்பெற்றிருக்கிறார்கள்.'

ஆனால் நமது ரெட்டியார் ஒருவரே அக் கூட்டத்தில் அத்திப் பூவாகும் என்றான்.

புராதனத்தில் புரோகிதர்கள் அற்புதம் முதலியவை களை யெல்லாம் செய்தார்களே ? என்று கேட்டேன்.

நம்பிக்கை, சிரத்தையுள்ளவர்களிடமே அவர்கள் செய் தார்கள்.

'உமக்கு ஏதாவது தெரியுமா ?'

'எனக்கு எழுத்து வாசனையே தெரியாது ?'

'நான் அதைப்பற்றி கேட்கவில்லை.'

'அற்புதங்கள் ஏதாவது செய்வீர்களா ?'

'செய்வேன்.'

'ஏதாவது செய்யவும்.'

'ஏழும் எட்டுஞ் சேர்த்தால் பதினைந்தாகவும், சதுரத் தைப் பூஜ்யமாகவும், சுண்ணும்பு மஞ்சள் கலந்து சிகப்பாக வும் செய்வேன். ஆனால் உம்மைப்போலுள்ளவர்களிடம் என் னால் முடியாது ?' ஏன் ?

'இதெல்லாம் நம்பிக்கையாகும்.'

ஆனால் உம்மைப் பார்த்தால் உண்மையைச் சொல்ல வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. நான் ஆதலால் உம்மிடம் யாவற்றையும் சொல்லுகிறேன். ஆனால் பாமரர் களுக்கு நீரும் இதைச் சொல்லலாகாது. அந்த உறுதிமொழி யளித்தால் நான் மொழிவேன்' என்றான்.

நான் 'சரி' என்றேன்.

'அற்புதத்தின் மகிமையை ஆதிசேஷனே உரைக்கவேண் டும். அற்புதமே தேவர்கள், பூதங்கள், பிசாசுகள், அவதாரங்கள், ஜோசியர்கள், கவிகள், தீர்க்கதரிசிகளைச் செய்தது. சுவர்கத் திற்கும் சின்னமும் சிறப்பையு மளித்து காரண காரியங்களை சரியாக்கி தர்ம சரிதைகள் யெல்லாம் அற்புதம் அதிசயத்தால் நிறைந்தன. ஆச்சாரி, குருக்கள், புரோகிதன், முதலிய வர்கள் தோன்றியதும் இம்மாதிரி அற்புதங்களாலேயே! கல்

கட்டை, மாடு, மீன், சர்ப்பம் முதலியவைகளை உபாசிக்கச்செய்து பொன் பொருளை யெல்லாம் பறித்து, குழந்தை, இரத்தங்களை யும் பலியிடச் செய்வது அற்புத மன்னியில் வேறு யாது?

கோவில் கோபுரம் உயர்த்தி ஸ்தாபித்து இரட்சைகளை இக மெல்லாம் இலக்கியமாக்கி மூர்த்தி பிம்பத்தை, நாடெல்லாம் நில வச் செய்து இலட்சக்கணக்கான என்போலுள்ளவர்களை திண் டாட்ட மில்லாமல் செய்வது அற்புதமன்னியில் வேறு யாது?'

'சைதானை சன்னியாசியாகவும், பேத்தலை ஆப்த மொழி யாகவும் செய்வது அற்புதங்களே!'

'வாய் முணு முணுத்து, சிராத்தஞ் செய்து, அடிமையாகி கைகட்டி வாய்அடைத்து, சாஷ்டாங்க தண்டனிட்டு, தன்னையே தான் வெறுத்து, சித்திரவதை செய்துகொண்டு, பெண் பிள்ளைகளைத் துறக்கச்செய்து நாம் சகத்தில் நாய் என்றும், அடி யேன் என்றும் இன்னம் பலவித செயல்களை செய்வது அற்புத மில்லையானல் வேறு யாது?'

'மேற்கண்டவைகளுக்கெல்லாம் அடியிலே ஏதாவது ஒரு அற்புதமிருக்கும். அவ் வற்புதங்கள் இந்நாட்டில் இல் லாமலிருந்தால் இப்பொழுது கிருதயுகமாக மாறி விடுமே! ஆனல் கலியுகமாகவே இருக்கவேண்டுவது விதியாயிற்றே.'

'சத்திய யுகமாக மாறினல் என்ன?' 'நாமெல்லாம் கலி யுகத்தில் அழியவேண்டுமென்பது சாஸ்திரம். பிரளயம் தோன்றும். பிறகு சத்திய யுகம்' என்றான்.

'நீங்கள் அற்புதத்தை விரும்புகிறீர்களா?'

நான் விரும்பவில்லை. நீ ஆப்த நண்பனுனபடியால் உன் னிடம் எதையோ நினைத்து எதையோ சொன்னேன். மாங் கொட்டையிலிருந்து ஒரு வினடியில் மாஞ்செடியை முளைக்கச் செய்த ஜாலவித்தைக்காரனைக்கண்டு களிப்பாகி பணமளிப்பது போல், நான் ஏதாவது விபரீத வார்த்தை சொன்னலொழிய எனக்குப் பிழைப்புக் கிடைப்பதில்லை—அதற்காகவே நான் அதை நம்பி இதில் ஈடுபட்டுள்ளேன்,

எனக்கு வேறு உத்தியோகம் கிடைத்தால் இப்பொழுதே விட்டு விட்டு சமூக ஊழியத்தில் ஈடுபட்டு கலியைக் கழித்து சத்திய யுகத்தை ஸ்தாபனஞ் செய்வேன்! என்ருன்.

' நான் பிரமித்தேன். ஆனுல்அவனுக்குப் பிழைப்பளிக்க என்னிடம் வேலையொன்றுமில்லை. தந்தைக்கும் அவனிடம் பற்றில்லை. நீங்கள் ஒரு வேலையளிக்கும் பட்சத்தில் புரோகிதனை இங்கே வரச் சொல்லுகிறேன்.'

ரு. பிச்சிமுத்து

எங்கள் குட்டி சபைக்குத் தலைவன் பிச்சிமுத்து. ஏகமனதாய் அவனே வருஷா வருஷம் சபையின் பெரியவனும் எலக்ஷன் செய்யப்படுகிருன். ஒருவனும் அவனுக்குப் போட்டியாய் நிற்பதில்லை. ஏன்? அது எப்படி என நான் ஒரு முறை அவனைக் கேட்டதற்கு "எனக்கு எழுத்துப் படிப்பு தெரியாது. ஆனுல் மனுஷன் என்ருல் பார்வை வேண்டாமா? என் தொந்தி, தொப்பை, துப்பட்டா, தடித்தனமே, நான் தலைவனுனதற்குக் காரணங்கள். நீயும் தொந்தி தொப்பையுடனுகவும். நீ உப்பி பெருப்பாய். என் மாதிரி ஊதிப் பெருக்கவேண்டுமானுல்—அதுவே தலைவனுக வழி—தேவேந்திரா, என்னிடம் சற்று தெரிந்துகொள்ளும் விதத்தை அறியவும்" என்ருன். பிறகு அவனிடம் ஒரு தினம் இருந்து நான் அறிந்தவைகளையே இங்கு எழுதுகிறேன்.

நான் காலை ஐந்து மணிக்கு அவனிடம் சென்றேன். அப்பொழுது ஆனந்தமாய் மணி என்னும் பையன் காபி தயாராய் வைத்திருந்தான்.

காபி குடித்தவுடன் மணி பிச்சிமுத்துவின் காலைப் பிடித்துக் கொண்டான். 'நான் வந்து ஆறு மாத மாச்சு; ஊருக்குப்போகவேண்டும். ஒரு மாதச் சம்பளமாவது அளிக்கவும்' என மணி கதறினன்.



"என்னடா அவசரம் தறுதலைப் பயலே?" என அதட்டி விரட்டியதும், வீடு பெருக்கும் வேப்பிலை வந்து "நான் ஒன்பது மாதமாய் வேலை செய்கிறேன். இன்னம் மூன்று மாதத்திலே எனக்கு கூலிக்குப் பதிலாக ஒரு புடவை எடுத்துக் கொடுக்கவும்" என கெஞ்சினள்.



"அதற்கென்ன வெளுத்து வாங்கி விடுகிறேன். நீ இன்னம் நன்ருய் வேலை செய்யவேண்டு" மெனச் சொல்லுவதுபோல் தலையை யாட்டினன்.

பால்கார கோவிந்தன் உடனே வந்தான்.


"என்னடா! கோவிந்தா? எங்கடா வந்தே" என பிச்சி முத்து அதட்டியவுடன் அவன் பிடித்தான் ஓட்டம். தயிர்க்காரி யசோதை வந்தாள். நின்று பார்த்தாள். கூடையைத் தொப்பென்று



வைத்தாள். "பிச்சுமுத்தும் மணியும் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்களே, இன்று எப்படி கேட்பது. நாளைக்குக் கேட்கலாம்" எனப் பேசாமல் அவள் திரும்பிப் போய் விட்டாள். அதற்குள்ளே அம்பட்டன் கேசவன் வந்தான். உடனே முத்துப் பிள்ளைவாள் நாற்காலியிலே உட்கார்ந்தார். பாதி க்ஷவரமாச்சு.



"மணியா, நீ மடையண்டா? நேற்றையே போய் 100-ரூ. நோட்டுக்கு சில்லரை மாற்றிவா எனச்சொன்னேன். நீ இன்னம் வரவில்லை. அம்பட்டனுக்கு மூன்றுமாசமாச்சு.



எத்தனை நாளடா அவன் பொறுப்பான்?" எனப் பொத்தப் பூஷணி போல் உடைந்து உதறிக் கதறினான்.

"என்ன சாமி அவசரம். ஆகட்டுமே; அப்புறம் வரேன்" என கேசவன் க்ஷவரத்தை நன்றாய் செய்து மறைந்தான்.



வண்ணான் ஏழுமலை வந்தான். "ஏண்டா ஏழுமலை, வேஷ்டியை யெல்லாம் கிழித்து விடுகிறாய். இரண்டு டவலைக் காணோம். எனது கைக்குட்டை இல்லை. என்ன சும்மா வெளுக்கிறேன் என எண்ணுகிறாயா? நாளைக்குப் பணத்திற்கு ஓடி வருவாயே" என்றார். வண்ணானும் ஒழிந்தான். உடனே என்னைப் பார்த்து,





தேவேந்திரா “ஒரு நாலு சிப்ஸ்” என கண்ணை அடித்து விரலைத் தட்டினூர். “ஐந்து ரூபாய் நோட்டா யிருக்கிறதே” என்றேன். பரவாயில்லை. “ஐந்தை இங்கே கொடுக்கவும்” என்ருன்.

* * *

“கோமுட்டி! என்னடா வேஷ நமஸ்காரம் செய்கிருய்? உன் அரிசியைத் தின்று எனக்கு வயிற்று வலி போகவில்லையே?”




“சாமி, நாளைக்கு நல்ல அரிசி யனுப்புகிறேன். எனக்குப் பணத்திற்குக் கொஞ்சம் கசாலா”

“இப்பொழுது காக்காசுகூட இல்லை. போடா பிற்பாடாகட்டும்”

“சரி! சாமி!! அடுத்த அமாவாசைக்காவது கொடுக்க வேண்டும்.”

“பேசாதே. இன்னம் இரண்டு மாதம். எனக்கு உடம்பு சரியாயில்லை.” கோமுட்டி நடுநடுங்கி “ரூ. 400 ஆய்விட்டதே, நான் என்ன செய்வது. இவனுக்கு சாமான்போடவில்லையானல் இப்பணம் கொடுக்கமாட்டான்” என எண்ணி “உங்கள் பணம் எங்கே போகிறது” எனச்சொல்லி, என்ன என்ன சாமான் வேணும் எனக் கேட்டுகொண்டு சாமான் எடுத்துவரச் சென்ருன். அப்பொழுது புருஷனிழந்த அபலை

யொருவள் வந்து ' எனது ஜீவனும்ச சொத்தப்பா ! இதில்லை யானல் நான் முச் சந்தியிலே நிற்க வேண்டியது தான். ஏதாவது நீ கொடுத்துத்தானுக வேண்டும் " என தாரை தாரையாய் கண்ணீரை வடித்தாள். "உனக்குத் தெரியாதா? கலம் 12-அணு விற்கிறது. நான் யாரை மோசம் செய்தாலும் உன்னைச் செய்யமாட்டேன் அம்மா! அந்த பாங்கிலே ஒரு சீட்டு முடிகிறது. அது விழுந்தவுடன் உனக்குத் தகவல் சொல்லி யனுப்புகிறேன். நீ இங்கே வரவேண்டாம்."



" சரி எந்த பாங்கிலே, எப்பொழுது சீட்டு குலுக்கப் போகிறார்கள் ?"

" எனக்கு அது ஞாபகமில்லை. எங்கள் அக்கா புருஷனுக்குத் தெரியும். அவன் இப்பொழுது திருச்சி போயிருக்கிறான். அவன் இருப்பிடம் மலைக்கோட்டை. அங்குபோய் விசாரித்துவா. நான் அப்பால் ஆனதைச் செய்கிறேன்." அபலையும் சென்றுவிட்டாள். அதற்குள் நாட்டுக்கோட்டை செட்டி யொருவன், பட்டாணிய துலுக்கனெருத்தன், ஒரு பஞ்சாங்கப் பார்ப்பான், இன்னம் முதலிய பல கடன்கொடுத்தவர்கள் வந்தார்கள். " நீ கோர்ட்டுக்கு வேண்டுமானாலும் போடா, மாதம் ஒரு ரூபாய். நான் 2000 மாதம் கட்ட ஆர்டர் வாங்குவேன். செட்டியே ஜாக்கிரதை! பட்டாணி

யனே உஷார். இது கள்ளக் கிராமம். இனி அப்படி பேசினு



யானல் உதை கொடுத்தனுப்பு வேன். பஞ்சாங் கப் பார்ப்பானே நான் யார் தெரி யுமா? சுய மரி யாதைக்காரன். பணம் வாங்கி விட்டால் தான் என்ன? இப்ப டியா பேசுகிற து. அதிகம் பேசாதே. பல்லே உடைத்து கையிலே கொடுப் பேன்."

இன்னம் பலவாருய்ப்பேசி எல்லாரையும் அனுப்பி விட்டு, "மணியே, இலேயைப்போடு. எனக்கும் தேவேந் திரனுக்கும் முதலில் சேமியா பாயசத்தைக் கொண்டுவா" என ஆர்டர் செய்தான்.

நான் கொல்லென உடனே சிரித்தேன்.

ஏன் சிரிக்கிருய்?

"கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினன் இலங்கை வேந்தன்" என கம்பர் கூறியதற்கு மாருக, ஊரெல்லாம் உனக்குக் கடனிருந்தும் நெஞ்சு கலங்காமல் சேமியா பாய சத்திற்கு அலேகிருயே! இதுவும் ஒரு விசித்திரம் எனச் சிரித்தேன்!!"

"கம்பனுக்கு என்னடா தெரியும்? தேன்போல் பேசு வான். திணையளவும் நிஜமில்லே. கடன்பட்ட எனக்கு கலக் கமே இல்லே. எத்தனைக் கெத்தனை கடன் அதிகரிக்கின் றதோ அத்தனை குதூகலமாய் நானிருக்கிறேன். நான் சாகாம

விருக்க மனப்பூர்வமாய் பால்காரன் தபிர்காரன் வண்ணான் முதலியவர்கள் தினந் தோறும் பிள்ளை யாருக்குத் தேங்கா யுடைத்துக் கொண்டு வருகிறார்கள். எனக்கு வருமான மதிகரிக்க வேணும் என



செட்டியார் தினம் பஞ்சாமிருதம் நிவேதனம் செய்கிறார். நான் திடகாத்திரமுடனிருந்தால் கூலி வேலை செய்தாவது பணத்தைத் திருப்பியளிப்பேன் என பட்டாணியன் 5 காலமும் துவா செய்கிறான். எனக்குப் புதையல் எப்பொழுது கிடைக்குமென பார்ப்பான் சதாகாலம் ஜோஸியம் பார்த்துவருகிறான். பணம் கொடுத்தவனில் ஒருவன் திருப்பிக் கொடு என கும்பிடு போடுவான். சிரித்துக் கேட்பான். வேறொருவன் அழுது கெஞ்சுவான். காபி உணவு அளித்து வண்டியிலே மற்றொருவன் கூட்டிச் செல்லுவான். சில்லரைச் செலவிற்குப் பணம் தருவான் கோமுட்டி. மஞ்சக் காகிதம் கொடுப்பேன் என்ப்பயந்து, கொஞ்சம் பணம் தருகிறேன், வியாபாரம் செய்யவும், என மார்வாடி சொல்லுவான். இவ்வளவு உபசாரமும் குதூகலமும் கடன்பட்டதனாலல்லவா ?''

“இத்தனை குதூகலத்துடனிருப்பவனை கலங்குபவன் என கம்பன் கூறியது அனுபவமில்லாத வார்த்தையாகும். கம்பனுக்கு பாடுவதைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாது. நீ குதூகலமாயிருக்க வேண்டுமானால் எவ்வளவு கடன் வாங்க முடியுமோ அவ்வளவு கடன் வாங்கு. என்று கடன் அன்னியிலாகிறா

யோ அன்றே நீ குப்பைத்தொட்டியில் விழுவாய். ஏதோ நாம் கடன்பட்டிருக்கிறோம் என்பதனால்தான் ஜாக்கிரதையாய் பூமி தன் நிலையிலிருக்கிறாள். குஷ்டரோகியான சந்திரன் சூரியனிடம் கடன் வாங்கவில்லையானால் சாவான். புவி வெயிலை கடன் வாங்கவில்லையேல் புழுத்துச் சாவாள். மழையை கடன் வாங்கவில்லையானால் புல் பூண்டுகள் சாகும். நதிகள் தோன்றா. நெருப்பு, காற்றின் கடனில்லையேல் எரியாது. ஆகாசக் கடனில்லையேல் காற்று அசையாது. உலகத்திலே ஒன்றுமே நடைபெறாது. எங்கும் இருள் மயமாகும். சைத்தான் தாண்டவமாடுவான். கடனில்லாத நீ செத்தாலும் ஒன்றுதான், ஜீவித்தாலும் ஒன்றுதான். நீ வாழ்ந்தாலும் விழுந்தாலுமொன்றே என ஒருவரும் உன்னை லட்சியம் செய்யப்போவதில்லை. கடனுக்கு வழியில்லையேல் திருடனாவாய், கள்ளனாவாய், கொலை புரிவாய், பொய்சொல்லுவாய், அநியாயம் செய்வாய், அக்கிரமங்களுக்கு அதிபதியாவாய். கண்களிடம் நான் கடன் வாங்கப்போவதில்லை என்றால் கால் நடக்காது. கைகால்களின் கடன்வேண்டாமென்றால் தேகம் முண்டமாகும். எனக்கு செவி வேண்டாமென்றால் ஒன்றையு மறியாத மடையனாவாய். நாக்கு, பற்களின் கடன் வேண்டாமென்றால் வயிறு சாப்பிடாமல் பட்டினி கிடந்து சாகும். இருதயத்தின் உதிரக்கடன் எனக்கு அவசியமில்லையென்றால் மூளைபதறும். கடனில்லையேல் காயமில்லை, பெண்ணில்லை, பெண்டு பிள்ளையில்லை. தந்தை யார்? தாய் எவள்? உலகம் எது? ஆதலால் எத்தனை கடன் வாங்க முடியுமோ அத்தனை கடன் வாங்கவும். அப்பொழுதுதான் குஷியோடிருப்பாய். தொப்பைக் கூண்டுபோல் பெருகுவாய்.

“தேவேந்திரா, சூரியனிடம் கடன்வாங்க வில்லையானால் கண்தெரியாது. அப்படியே காது முதலியவைகள் தங்கள் வேலைகளைச் செய்யா. கடன் இல்லையேல் செல்வமில்லை, ராஜாவுமில்லை. பெரிய கடன்காரனே சக்கரவர்த்தியாகும். பூமண்டலாதிபதியாவான்.

" ஆதலால் நீ எவ்வளவு கடன்வாங்க முடியுமோ அவ்வளவு வாங்கவும். ஆனால் அன்னியர்களுக்கு அளிக்காமல் நீயே புசித்தால் என்னைப்போல் குண்டனுவாய் தலைவனுவாய்" எனச்சொல்லி என் சேபியைப் பார்த்து "எத்தனை சில்லரை இருக்கும்" என்றார். நான் உடனே 3 ரூபாய் என்றதும் "இதோதருகிறேன் தா" எனச்சொல்லி பிச்சிமுத்து எங்கேயோ போய்விட்டான். எங்குபோனான் என இன்னும் தெரியவில்லை.

உங்கள் யாருக்காவது அவன் எங்கு இருக்கிறான் எனத் தெரியுமா ?

சா. சொல்வது சுலபம்! செய்வது கடினம்!

மாலை ஐந்துமணி. பொழுது போகவில்லை. புஸ்தகத்திலும் புத்தி செல்லவில்லை. படுத்தும் முயன்றேன். அதுவும் பிடிக்கவில்லை. கடற்கரை செல்லக் கருதினேன். நண்பர்கள் பேச வருவார்கள் என எண்ணி அங்கு செல்லவும் நடுங்கினேன். கோவிலுக்குச் செல்ல நினைத்தேன். ஆனால் அங்கு அவ்வளவு சீக்கிரம் சென்றும் பயனில்லை. சரி மோட்டார் வண்டியில் ஏறி சென்னையினின்று செங்கல்பட்டு ரஸ்தாவில் சென்று அமைதியாகலாமென புறப்பட்டுசென்றுவிட்டேன்.

சூரியன் சாய்ந்தான். டோல்கேட் கடந்தேன். இருள் என்னை நோக்கிற்று. கண் கலங்கினேன். யாரோ என்னையறியாமல் என் வண்டியை நிறுத்தி யென்னைப்பற்றி அழைத்துச் செல்லுவது போலிருந்தது. ஆனால் கனவுதானே எனக் கருதினேன். சில நிமிஷத்தில் ஏதோ புதிய ஒரு நாட்டிலிருப்பதாகக் கண்டேன்.

உடனே என்னை அழைத்து வந்தவர் என்னை உற்று நோக்கி—“நானே! நான் ஒரு தேவன். உனக்கு சில சூட்சமங்களை அறிவிக்கவே இங்கு உன்னை அழைத்து வந்தேன். நீ இந்நாட்டைச் சுற்றிப் பார்க்கவும்; தேவர்களான இருநூறு ஜனங்கள் இரண்டு லட்சமான இந்த அடிமைகளை அரசு புரியும் உண்மையை கவனிக்கவும்” எனச்சொல்லி மறைந்து விட்டார்.

நான் இங்கு கண்ட காட்சியைக் கூறுகிறேன்.

நான் இந்த நகரத்தை உடனே சுற்றிப்பார்த்தபொழுது பெரிய புத்தகசாலை யொன்று இருப்பதைக்கண்டு அங்கு நுழைந்து சர்க்கார் கெஜட் முதலியவைகளை யெல்லாம் நோக்கினேன்.

அங்குள்ள கெஜட், அகராதி முதலியவைகளிலிருந்து தேச பக்தர்கள், சமூக ஊழியர்கள், ஆச்சாரி புருஷர்கள், பெரும் வியாபாரிகள், ஆழ்ந்த அறிஞர்கள், தத்துவதரிசிகள் முதலியவர்களைக் கண்டு பிடித்து அவர்கள் மூலம் அறிந்து கொள்ளலாமென ஒவ்வொருவரையும் நாடினேன்.

விடுதலையோ வேண்டும். ஆனால் எங்களுக்குள் ஒற்றுமையில்லை. பொறாமையும், போட்டியுமே அதிகம். நான் எவ்வளவோ தியாகஞ்செய்தேன். ஆனால் தேசமோ தலையோங்குவதில்லை; சொல்வது சுலபம் செய்வது கடினமென தேசபக்தர் கூறினர்.

நம்மை அரசு புரிபவர்கள் அன்னியர்கள். அன்யோன்யம் குறைவதற்கே அவர்கள் முயற்சிப்பார்கள். சமூக ஊழியம் செய்வதால் சமூகம் செம்மையாகி நமக்குள் சமத்துவம் ஓங்கி அப்பால் விடுதலையைக் காண்போம். ஆனால் சொல்பவர்கள் அதிகம்; செய்பவர்கள் குறைவு. ஏனெனில் சொல்வது சுலபம், செய்வது கடினமென சமூக ஊழியன் கூறினர்.

'நாஸ்திகம் நிறைந்துவிட்டது. பக்தி குறைவு. ஏழை பணக்காரன் என்பது பிறவிப்பயனேயாகும். அறம் குன்றி விட்டது. இவைகளெல்லாம் அதிகமாய் விட்டபடியால், பெரும் வியாபாரிகள் ஏராளமான பணத்தை செலவழித்து உபகாரஞ் செய்யவேண்டும். ஆனால் சொல்வது சுலபம் செய்வது கடினம் என ஆச்சாரிகள் கூறினார்கள்.

'சொல்வது சுலபம் செய்வது கடினம். நாட்டினர்களுக்கு' அரையணா ஆஸ்தியில்லை; உழைப்புமில்லை, பெண் பிள்ளை—சட்டி பானைகள்; அடிமைகளுக்கும் அடிமைகளுண்டு; விதவைகள் கண்ணீரோ விரிகடல்போல் பரந்துள. குழந்தைகள் கல்வியில்லாமல் கலங்குகின்றார்கள். கோவிலில் தட்டிசாத்தான்கள். அயோக்கியர்களே தெய்வ உதவியை நாடுகிறார்கள். வயிற்றுப் பிழைப்புக்கே திண்டாடும்பொழுது தேச ஊழியம் எங்கே! சொல்வது சுலபம் செய்வது கடினம் என அறிஞர் உறுமினார்.

எதிரிகள் இருநூறு பெயர்கள்தான். ஆனால் எங்கள் 50,000 ஜனங்களை தங்களுக்குத் துணையாக அடைந்துள்ளார்கள்.

எங்களைக் காட்டிக் கொடுப்பதே அவர்கள் பிழைப்பு. இல்லையேல் அவர் பெண்டு பிள்ளைகள் தவிப்பார்கள். அதுவுமன்னியில் அவர்களிடம் பீரங்கி குண்டு, துப்பாக்கி, வெடிகுண்டு முதலியவைகள் இன்னம் ஏராளமான இயமனின் கருவிகளுண்டு. நாங்கள் கிளம்பினால் ஒரு நிமிஷத்தில் எங்களைக் கொன்றுவிடுவார்கள். எங்ஙனம் விடுதலையை அடைவது. சொல்வது சுலபம் செய்வது கடினம் என தத்துவ தரிசி கூறினார்.

படித்தவர்களெல்லாம்—சர்க்கார் ஊழியம்; மதத்தலைவர்களெல்லாம் சர்க்காரில் சாய்ந்தவர்கள், தேச பக்தர்களெல்லாம் காட்டிக் கொடுப்பதில் அஞ்சுவதில்லை. தேசத்

திற்கு உழைப்பேன் என வேஷம் போட்டு சமயம் வரும் பொழுது காட்டிக்கொடுக்கிறார்கள். நம்மை நம்புவதில் பயனே இல்லை; சமூகம் அதோகதியாய் விட்டது. வகுப்பு வாதிகள் தாண்டவமாடுகிறார்கள். அதனால் எமக்கு விடுதலை வழி புரியவில்லை! சொல்வது சுலபம் செய்வது கடினம் என மறுபடியும் கூறி விசனமுற்றார்.

பணக்காரர்களுக்கோ இதில் புத்தியேயில்லை. உண்டு உறங்கி உல்லாசமாக இருப்பதையே எண்ணுகிறார்கள். படித்தவர்களோ 30, 40 வருடங்கள் படிப்பதிலேயே நாங்கள் காலந் தள்ளிவிட்டோம், இனி எங்களால் வேலைசெய்வதென்பதோ கடினமென்றும், பாமரர்கள் நாங்கள் என்னசெய்வோம் எங்கள் தலைவிதி இங்ஙனமே காலந் தள்ளவேண்டும், சொல்வது சுலபம் செய்வது கடினம் என கதறினார்கள்.

பெரியோர் சிறியோர், ஆண் பெண், அறிஞன் அறிவிலி, ஆஸ்திகன் நாஸ்திகன், குழந்தை மாணவன், வியாபாரி உழைப்பாளி, தத்துவதரிசி சோம்பேறி, தேசபக்தன் சமூக ஊழியன், எவரைப் பார்த்தபோதிலும், சொல்வது சுலபம் செய்வது கடினம் எனச் சொல்வதுபோலவே இருந்தது.

அந்நாட்டின் அதிகாரிகளைக் கண்டு சர்வ ஜனங்களின் பொதுப்படை தர்மமான சமத்துவத்தை ஸ்தாபனஞ்செய்து, அதிகாரிவர்க்கம் அடிமை ஜனம் என வேற்றுமை பாராமல் சரி சமமாக ஏழை பணக்காரர் அன்னியில் ஏன் இராஜாங்கம் செய்தல் கூடாது என நான் சிலரைக் கண்டு கேட்டதற்கு அவர்களும் சொல்வது சுலபம் செய்வது கடினம் என்றார்கள்.

அன்னிய நாட்டு நண்பர்களான பலர் அங்கு யாத்திரை செய்வதைக் காணவும் அவர்கள் சர்க்கார் விருந்தினராக இருந்து வயிறு புடைக்கத்தின்று விட்டு எல்லாம் சொல்வது சுலபம் செய்வது கடினம் என்றார்கள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நகரங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டேன். இனி கிராமங்களை எல்லாம் சுற்றிப் பார்க்கலாமென, நகரத்தை விட்டு வெளி சென்றேன்.

நீங்கள் எப்பொழுதேனும் 'மெடிகல் ஸ்கூல்' போன துண்டா? போயிருப்பீர்களேயானால் மனிதர்களின் எலும்புக் கூட்டைப் பார்த்திருப்பீர்கள்; அத்தகைய எலும்புக் கூடு நூற்றுக் கணக்காய் ஒன்றுகூடி தெருவின் ஒரு பக்கத்தில் செல்லுமேயானால் எங்ஙனம் உங்கள் கருத்தில் குண மாகுமோ அங்ஙனமே பெருந்திரளான கூட்டமொன்றைக் கண்டேன்.

பட்டினி கிடந்து உயிரை விடுவதைவிட, தேசத்திற் குழைத்து என் உயிர்த்தியாகஞ் செய்யலாகாது என நீங்கள் சுலபமாக சொல்லிவிடலாம். செய்வதோ கடினம்.

பசியால் வருந்தி பரதவிக்கும்பொழுது அண்ணன், தம்பி, தாய், தகப்பன் முதலிய உறவையே நாங்கள் கவனியாதிருக் கும்பொழுது விடுதலைக்கு நாங்கள் எங்ஙனம் போராடுவோம்? சொல்வது சுலபம் செய்வது கடினம் என அவர்கள் கதறினார் கள்.

நான் செவியுற்றதும், என்னையறியாமல் மூர்ச்சையாகி கீழே விழுந்து விட்டேன். ஆனால் இன்னம் யாரோ சொல் வது சுலபம் செய்வது கடினம் எனகூறுவது போலிருந்தது.

சொல்வது சுலபம் செய்வது கடினம்; நான் கீழே சாய்ந்துளேன். ஒருவரும் என்னை எழுப்பவேண்டாம் என அவர் கண்களின் இமைகள் கூறுவதுபோல் அசைந்தன.

சொல்வது சுலபம் செய்வது கடினம் என காற்று வீசின வண்ணமாகவே எங்கும் செல்லுவதுபோல் நான் உணர்ந் தேன். அவர் உதடுகளும் சொல்வது சுலபம் செய்வது கடினம் என அசைவதுபோல் விளங்கிற்று.

சொல்வது சுலபம் செய்வது கடினம்; அவர் கீழே சாய்ந்துள்ளார்.

எ. செய்வது சுலபம்! சொல்வது கடினம்!

'நான் நிலையை அடைந்து கண்களை விழித்தபொழுது, நான் இதுவரை காணாத ஒரு அற்புதக் காட்சியைக் கண்டேன்.'

எங்கும் வாழைமரம், தோரணம், பஞ்சவர்ணக் கொடி, மாவிலை, பூப்பந்தல், விளக்கு, ஆரவாரம், குதூகலம், மேளம் தாளம். "விடுதலைக்கு ஜே, சுதந்திரத்திற்கு ஜே, இனி அச்சமில்லையே, அடிமை இல்லை, நாமே அரசுபுரியப் போகிறோம். பெருமையான புற அரசைவிட சிறுமையான சுய அரசே பொன்னரசாகும், சட்டத்தின் முன் ஜனங்களெல்லாம் ஒன்றே" என்னும் கூக்குரல்களை என் காதில் விழுந்தன.

"சம்பளமில்லாமல், வேண்டுமானால் என் சக்திக்கேற்றவாறு படிக்கலாம்; நானும் துப்பாக்கி எடுத்து நடுத்தெருவில் செல்லலாம். ஆகாயவிமானப்படையில் சேர்ந்து நான் விமான யாத்திரை செய்யலாம். நான் யோக்கியதையை அடைந்தால் இந்நாட்டின் அதிபதியாகவும் நான் வரலாம். பூவுலகம் எங்கும் மரியாதையுடன் சென்று வியாபாரஞ் செய்யலாம். என்னிஷ்டம்போல் சிந்தனை செய்யலாம். நான் விரும்பும் நூல்களைப் படிக்கலாம். நாட்டிலே சாதி, வகுப்பு முதலியவைகளெல்லா மொழிந்துவிட்டன" என்னும் பெருங்கூச்சல் என் காதைத் துளைத்து, கருங்கல் சிலைபோல் பதிந்து என் காயத்தில் என்றும் காணாத ஒரு உற்சாகத்தை அடைந்தது.

'இதென்ன கனவா, கானல் ஜலமா, மழையா, பழுதா, பாம்பா, ஒன்றுமே புரியவில்லையே.'

'நடமாடும் பிணங்களான இச் சனங்களை நான் நேற்று அடிமை, அச்சம், அகங்காரம் முதலியவைகளுடன் கண் டேன். ஒரே தினத்தில் என்ன புரட்சி! நான் பார்ப்பது நிசந்தானா? சரி! இந்நாட்டுத் தலைவர்களுடன் பேசலாம்' என சடேரென்று ஒவ்வொருவரையும் நாடினேன்.

உண்மைதான். நாங்கள் நேற்று அடிமையாயிருந் தோம். இன்று எங்கள் நாட்டின் தலைவராக நாங்களாய் விட்டோம். நேற்று, சொல்வது சுலபம், செய்வது கடினம், என நாங்கள் ஒவ்வோருவரும் எண்ணி கலங்கி யிருந்தோம். ஆனால் செய்வது சுலபம், சொல்வது கடினம் என்பதை அறிந்து செயலில் சாய்ந்த இன்றே, சுதந்திர தேவியின் சக்தியை அடைந்தவுடன் அதிகாரிகள் எம்மிடம் அரசை அளித்து விட்டு அவர்கள் தங்கள் நாடு சேன்றுவிட்டார்கள் என அவர் கள் உரைத்தார்கள். அடுத்த வினாடியில் நான் முன்னால் கண்ட பெரியார் மறுபடியும் தோன்றி சொன்னதாவது :—

செய்வது சுலபம் சொல்வது கடினம் என்னும் தத்து வத்தின் இரகசியத்தைக் கேட்கவும்.

உணவு எப்படி உண்ணப்பட்டு உதிரமாக மாறுகின்ற தென்பதை சொல்வதும் கடினம். உணவு வாயில் நுழைந்த வுடன் வயிற்றிற்கு ஏற்றதா, சீரணமாகுமா என்பதை அறிய நாவினால் அது பரீட்சை செய்யப்படவேண்டும். உரிய உணவா னால் உட்செல்லும். இல்லையேல் அது வெளியாக்கப்படும். உரிய உணவானால் நாக்கு எச்சிலுடன் இணைந்து பற்களால் மெல் லப்பட்டு, நயமாகி நாவின் முனையால் தொண்டை வழியாய் வயிற்றில் செல்லும். வயிறு தனக்கு வேண்டிய உணவை அடைந்தவுடன் மூளைக்கு 'அது உடனே நரம்பு என்னும் தந்தி யால் தெரிவிக்கும். அப்பொழுது உடனே உண்பவன் புசிப் பதை நிறுத்துவான். இல்லையேல் அவன் நோயை அடைவான். பிறகு பல யந்திரங்களின் முயற்சிகளால் அது இரத்தமாக மாறும்.

இச் சூட்சமங்களை யெல்லாம் சொல்வது கடினம் செய்வது சுலபம்.

கடந்த ஜர்மன் யுத்தத்தின் ஆதியில் ஜர்மனிக்கு உணவு போகாமலிருக்க நேசகட்சியினர்கள் பெரிய இடையூறுகளை விளைவித்து விட்டார்கள். உணவன்னியில் ஜர்மனியர்கள் ஒன்று சாகவேண்டும், அல்லது கீழ்ப்படியவேண்டும். ஜர்மனியர்கள் பட்டபாட்டை நான் சொல்லமுடியாது. நாட்டிலுள்ள உணவை யெல்லாம் ஒன்றுசேர்த்து ஒவ்வொருவருக்கும் சரி சமமான உணவு கிடைக்கும் வண்ணம் ஒரு நிர்மாண திட்டஞ் செய்தார்கள். காலியாயிருந்த நிலங்களிலெல்லாம் தானியங்களை விதைத்து பிறகு ஏராளமான உணவு ஜர்மனியர்களுக்குக் கிட்டி எத்தனை வருஷங்களானபோதிலும் இனி ஆகாரத்திற்குக் குறைவில்லை என்பதாய்விட்டது.

செய்வது சுலபம்! சொல்வது கடினம்!!

நான் இன்னும் சுலபமான உதாரணம் சொல்லுவேன், கேட்கவும்.

நமது நகரங்களிலுள்ள பெருங் கட்டடங்களைப் பார்க்கவும். கட்டடம் கட்டுவதற்கு முன்னால் அதைப்போல் படம் எழுதி கணக்கிட்டு பிறகு கட்டுவார்கள். படம் எழுதி கணக்கிடுவதே அறிவு அல்லது சொல்வது எனலாம். இதை பூரணமாய் செய்தவுடன் சாதாரண கூலிகளால் கட்டடம் கட்டப்படும். கூலிகள் கட்டுவதே செய்வதாகும்.

'எல்லா விசித்திர வேலைகளையும் நாங்கள் செய்துவிடுவோம். ஆனால் எங்ஙனம் செய்யவேண்டுமென்பதை சொல்லிவிட்டால், நாங்கள் சுலபமாய் செய்துவிடுவோம் என கூலிகளும் சொல்வார்கள். செய்வது சுலபம், சொல்வது கடினம்.'

உடனே என் மனதிலும் பல ஞாபகங்கள் தோன்றிற்று. சந்தர்ப்பமும் சேருமேயானால், செயல்கள் இன்னும் சுலபம். ககூ0எ-ம் வருடம் யுத்தக் கப்பல் ஒன்றை செய்ய குறைந்தது

6-மாதமாவது வேண்டுமென்றார்கள். ஆனால் யுத்தகாலத்தில் பெருங் கப்பல்களையெல்லாம் 10 தினங்களிலேயே செய்துவிட்டார்கள். யுத்தகளத்தில் சுமார் 20,000 மைல்கள்வரை நீளமான குழிகள் சில மாதத்திலேயே தோண்டிவிட்டார்கள். சில ஐரோப்பிய தளகர்த்தர்கள் இலட்சக்கணக்கான துருப்புக்களை இஷ்டம்போல் செலுத்தி எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்தார்கள். எவ்வளவோ தீரச்செயல்களும் செய்தார்கள்.

'செய்வது சுலபம் சொல்வது கடினம்' என இன்னும் இத்தகைய நினைவுகளை யெல்லாம் எண்ணிக்கொண்டே யிருக்குங்கால், செய்வது சுலபம் சொல்வது கடினம் என என்னுடன் பேசியவர்களும் மறைந்து விட்டார்கள்.

'என்னைப் பல வருடங்களுக்கு முன் மின்னல் இடி முழக்கமான ஐராவத வாகனமுடைய தேவேந்திரன் எனப் பலவாறு ஒவ்வொரு நிமிஷமும் புகழ்ந்து பூசைசெய்துவந்தார்கள். ஆனால் இப்பொழுதோ நான் மின்சாரமான வேலைக்காரனாக வண்டியோட்டுவது, விறகு வெட்டுவது, வெந்நீர்க் காய்ச்சுவது இன்னும் எல்லாவித வேலை செய்பவனாய்விட்டேன். இருளை நீக்கி சோதியை அளிப்பவனாக நான் மின்னுகின்றேன். என்னைப்பற்றி அறிபவன், சொல்லுபவன் ஒருவன் இருவனே. ஆனால் யாவரும் என்னைக்கொண்டு செய்யாத வேலையேயில்லை. "செய்வது சுலபம் சொல்வது கடினம்" என அங்குள்ள மின்சார விளக்குகளெல்லாம் சொல்வதுபோல் ஒளிவீசின.

இரு கடற்களையும் சேர்க்கும் 'சூயஸ்' கால்வாயை வெட்டின விசித்திரத்தை அறிவாயா? 1850 வருடம்வரை அசாத்தியம் எனவே எண்ணப்பட்டது. பெர்டினண்டு டிவெஸ்லிப்ஸ் சாத்தியம் என சொல்லி நிர்மாணத்திட்டம் தயாரித்தார். ஆங்கிலேயர்கள் சிரித்தார்கள். ஆனால் ஜனங்கள் அதைச் சுலபமாய் செய்துவிட்டார்கள் என நடுத்தெருவில் சிறு பையனாக ஒரு மாணவன் கத்திக்கொண்டே சென்றான். 'செய்வது சுலபம் சொல்வது கடினம்'

ஜனங்கள் வழிதெரியாமல் விழிக்கிறார்கள். வழியைக் காண்பித்துவிட்டால் இமயமலையையும் தூக்கிவிடுவார்கள், சமுத்திரத்தையும் நிரைப்பார்கள். வழி தெரிந்தால் புவியிலுள்ள சனங்கள்மாத்திரமில்லை, பஞ்சபூதங்களும் நமக்குத் துணையாயிருந்து காரியங் கைகூடும் வண்ணம் உதவிபுரியும். செய்வது சுலபம் சொல்வது கடினம்.

அமெரிக்கா நாட்டைப்பற்றி அறிவாயோ ? 30 இலட்சம் நிறைந்த ஜனங்களே எவ்வளவுபெரிய சுதந்திரச் செயல்களை சகஜமாகச் செய்தார்கள். நாட்டிலுள்ள சுதேசிகளும், அவர்களுக்கு எதிரியாயிருந்த போதிலும், எதிர்க் கட்சி வன்மை அதிகமாயிருந்தும், நாடு பரந்த நாடாயிருந்தபோதிலும், எட்டு வருஷகாலம் போர்புரிந்து அன்னிய அதிகாரியினிடமிருந்து விடுதலையைப் பெற்றார்கள். இப்பொழுது அமெரிக்காவின் நிலையை நோக்கவும். பூவுலகத்திலேயே அது பெரிய நாடாகும்.

செய்வது சுலபம் சொல்வது கடினம்.

ஜப்பானை நோக்கவும். அறியாமை, எளிமை, ஒற்றுமையின்மை, முதலியவைகளெல்லாம் தாண்டவமாடிக்கொண்டிருந்தன. எத்தனை சீக்கிரமாக பழைய அறியாமையை யெல்லாம் பாழாக்கி, புதிய சைன்னியம், புதிய படைகள், புதிய நோக்கத்துடன் பூவுலகமே பிரமிக்கத்தக்க அவ்வளவு பெருஞ் செயல்களைச் செய்துளார்கள். ஆதியில் நிர்மாணத்திட்டம் என்னும் சொல் கடினமாயிருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதோ எவ்வளவு சுலபமாய் இன்னும் பெரிய செயல்களையே செய்து கொண்டு போகிறார்கள்.

செய்வது சுலபம் சொல்வது கடினம் !

பர்மாவிற்கும் இண்டோ சைனாவிற்கும் நடுவிலுள்ள சையாம் நாட்டைக் கவனிக்கவும். ஒரு காலத்தில் சீனத்தேசத்து ஜனங்களையே அதிகமாக அடைந்து சீனாவால் அதிகாரஞ் செய்யப்பட்டது. உள்ளூர் ஜனங்களுக்கும் நாகரீகம் என்பதேஇல்லை, ஆனால், இருபது வருஷகாலத்தில் சுதந்திர நாடாயிற்று.

அறிந்து விடுதலை வழியைச் சொல்லுவதோ கஷ்டம். அதை அடையும் வழியைச் செய்வதோ சுலபம். செய்வது சுலபம் சொல்வது கஷ்டம்! சொல்வது கடினம் செய்வது சுலபம், என மறுபடியும் அவன் சொல்லி நான் சொல்லுவதைப்போல் நீ செய்யவும் எனச் சொன்னான்.

மறுபடியும் செயலைப்பற்றி ஒரு வார்த்தை.

'தமிழ் நாட்டுக் கட்டடத்தில் தேவலோகத்தினின்று இரு சிறகுகளுடன் ஒரு தேவன் வந்து உட்கார்ந்துளான் என்று பகிரங்கத் துண்டுப் பிரசுரம் சென்னையில் வழங்கினால், ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் ஆயிரக்கணக்கான ஜனம் அங்கு கூடும். இச்செயல் சிந்தனையன்னியில் செய்யும் செயலாகும். இத்தகைய செயலைப்பற்றி நான் சொல்லவில்லை. இது சோம்பேறிச் செயல். பயனற்றதாகும். இங்ஙனம் செயல்கள் செய்யும்வரை தேசபக்த வேஷமணிந்த தேசத்துரோகிகள் அதிகமாவார்கள். பட்டந் தரித்த பேய்கள் பெரிய மனிதர்களாக பச்சை சிகப்பு நீல நிறத்துடன் நிலவுவார்கள். உன் நிலை இதுவே யாகும்.

செய்வதற்கு முன்னால் அதிக சிந்தனை செய்வதும் சீரழிவே. அதிக சிந்தனை செய்யுங் காலத்திலேயே, 'செய்வது கஷ்டம் சொல்வது சுலபம்' என உன் மனதிலாகும். அப்பொழுது ஜனங்கள் செய்யாமல் சொல்வது என்னும் குட்டி வேதாந்தம் பேசுவார்கள். அணுவான செயலும் அவர்களிடம் அத்திப் பூவாகும். நீ இந்த நிலையிலேயே இன்னம் வாழ்கின்றாய். இந்த இருநிலைகளிலிருந்து நீ தாண்டவும். அவன் பேசுபவன்; அவன் செய்பவன் என எண்ணாதே. பேசுபவன் அதிகம், செய்பவன் குறைவு, எனவும் கருதாதே.

நமது நாட்டிலுள்ள மலைகளை உடைத்து குகைகளைத் துளைத்து காவேரியில் அகண்ட பாலங்களைக்கட்டி, ரயில்பாதைகளை செய்தவர்களெல்லாம் நீங்களே. ஆனால் இதற்கு நிர்மாண திட்டஞ் செய்து முதலில் இதைப்பற்றிப் புகன்றவர்கள் சில

அறிஞர்கள். இதை எல்லாம் வெகு சுலபமாய் செய்து முடித்த வர்கள் நீங்களே! செய்வது சுலபம் சொல்வது கஷ்டம்.

செய்வது சுலபம் சொல்வது கடினம் எனச்சொல்லி, "நான், மறுபடியும் சமயம் வாய்க்குமானால் உன்னை நான் வந்து காண்பேன்" என மறைந்து விட்டார்.

நான், 'இவர் யார், இவர் சொல்வதும் உண்மைதான்' என நினைத்துக் கொண்டே மோட்டாரில் என்னை அறியாமல் வீடு வந்து சேர்ந்தேன். அப்பொழுது இரவு பத்துமணி. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் உண்மையாக ஒரு வனைக் கண்டு ஒரு நாட்டை அடைந்தேனா? நான் பார்த்த தெல்லாம் உண்மைதானா? நான் அவனுடன் சென்றது சத்தியமோ? கனவா, அல்லது சித்தங் கலங்கினேனா? சொல்வது கடினம் செய்வது சுலபம் என்பது சத்தியமாய் விட்டதே என நான் பலவாறு நினைக்குங்கால் எனது அன்னை உணவு புசிக்கக் கூப்பிட்டாள். பதிலும் உரைக்க முடியாமல் செய்வது சுலபம் சொல்வது கடினம் என உண்ணச் சென் றேன். செய்வது சுலபம் சொல்வது கடினம் என சோறும் உள்ளே சென்றது. செய்வதுசுலபம் சொல்வதுகடினம் அவர் உணவு புசிக்கின்றார். செய்வது சுலபம் சொல்வது கடினம்.

அ. கல்கி

I

எனக்குப் பொழுது போகவில்லை. என்ன செய்வதென்பதும் தெரியவில்லை. புஸ்தகம் எடுத்தால் தூக்கம். தூங்கவோ மனஞ் செல்லவில்லை.

சரி, கோதாவரி கரையிலோரம் நடந்துசெல்வேன் எனச் சென்றேன். பௌர்ணமி இரவு ஒன்பது மணி. மாரீசன் பொன்

மாஞக வந்த தண்டகாரண்யத்தினருகே உற்றுநோக்கி இங்கு தான் இராமர் அம்மானைக் கொன்ருர் என நினைத்தேன்.

அதற்குள்ளே குண்டோதரனைப்போலுள்ள ஒருவன் மாய மாய் என்முன் தோன்றினுன். குண்டனுக்கெல்லாம் கடுகளவும் புத்தி இராது என எண்ணினேன்.

அதற்குள்ளே நான் நினைப்பதை அறிந்ததுபோல் அவன் என்னை நோக்கி 'ஞானப்பைத்தியமே நான் யாரென அறிவா யோ?' என்ருன். இல்லை.

'என்னை கல்கி என அறியவும்.' 'கல்கி எவனே?'

'மகாவிஷ்ணு கலியுகத்திலே அவதாரம் எடுக்கப்போகிருர் என உனக்குத் தெரியாதோ?'

'ஆம் அறிவேன்.'

நான்தான் மகாவிஷ்ணுவின் அவதாரமான கல்கி எனப் படுபவன். 'இப்பொழுது இராட்சதர்கள் ஒருவருமில்லையே. நீ எதற்காக அவதாரமெடுத்தாய்?'

அரக்கர்கள் ஞானத்தை வற்புறுத்தி நாடெல்லாம் நிலவு கின்றபடியால் அதை ஒழிப்பதற்கே நான் வந்துளேன்.

ஆதிகாலத்திலே ஞானமே மோட்சமெனக் கூறி சங்கரர் சித்தாந்தஞ் செய்தாரே, அந்த ஞானத்தையா அரக்கன் என நாம் சொல்வது?

உனக்கு இன்னம் புராணங்களைப் பற்றியே ஒன்றும் தெரியவில்லை. சங்கரர் ஞானம் என்னும் மாயையால் இந்து அரசர்களையும் கைப்பற்றி மன்னர்களின் உதவி பெற்ருர். ஞானம் மறுபடியும் தலை விரித்தாடி மொழி சோம்பேறிகள் அதிகரித்து எந்தப் பாவங்களுக்கும் ஞானத்தின் போர் வையால் எதையும் செய்வார்கள் என எண்ணித்தான் அவர் களை ஒழித்தேன். என்னுடைய அருளில்லையேல் ஞான சூன்யர்களான டார்டார்கள் இம் மேதாவிகளை எப்படி ஜெயிக்க முடியும்!

நீ ஏன் அவர்களை அழித்தாய்?

ஞானமதிகரித்தவனுக்கு இரக்கமிராது. பசியோடு பத்து நாட்களாக ஒருவன் வருந்தினாலும், எல்லாம் பூர்வ சன்மாந்திர பயன். தலை விதி; ஈசனே பார்த்து அவன் பசியோடு வருந்தட்டுமென இருக்குங்கால், நாம் ஏன் அவனைப் பற்றி கவலைப்படவேண்டுமென்பான். இவனைக் காட்டிலும் கஷ்டப்படுவோர்களுண்டு. ஆதலால் உபகாரஞ்செய்ய இயலாது என்பான்.

ஞானமுள்ளவர்களெல்லாம் அயோக்கியர்களென உன் எண்ணமோ?

நான் பார்க்கும் அயோக்கியர்களெல்லாம் ஞானிகளே.

இரக்கமன்னியிலிருப்பதனாலேயே அயோக்கியர்கள் என அழைத்து அரக்கர்கள் என அழிக்கலாமோ?

அது மாத்திரமில்லை. வஞ்சகம் வாசஞ் செய்யும் ஸ்தலங்களெல்லாம் ஞானிகள் நிலயமே. எழுத்து வாசனையறியாத கானகவாசிகள் பொய் புகல அஞ்சுவார்கள். வஞ்சகம் என்பதே அவர்களிடமில்லை. ஞானிகளே உள்ளம் ஒன்று, புறம் வேறு புகலுவது. தன்னிஷ்டம் போல் மனிதர் மயங்கப் பேசி, நான் சுதந்திரமாய் வேறு நினைப்பதற்கு எனக்குச் சுவாதினமில்லையோ என்பான். புன்மைகளுக்கு பெருமை பெயர்களை அளித்துவிட்டால் நன்மையாகவே ஜனங்கள் எண்ணுவார்கள் என்பதை நன்றாய் அறிவதால் எந்த வஞ்சகச் செயலுக்கும் அவன் அஞ்சுவதில்லை. பொய் புகல்வது அவனுக்கு விரதமாய் விட்டதால் நானே மகாபாரத யுத்தத்தில் பொய்யுரைக்கக் காரணமானேன் என இன்னம் பகிரங்கஞ் செய்கிறான். வஞ்சகமென்பது பெரியாரின் சுபாவமென காட்ட என்னை வஞ்சக மகாசிகாமணி என எங்கும் பறைசாற்றுகிறான்.

வஞ்சக சுபாவமிருப்பதனால் தான் அவன் பணமுள்ளவர்களையும், புவியின் மன்னர்களையுமே நாடுவான். எப்படி

யாவது தான் சுகமாயிருக்கவேண்டு மென்பதே அவன் நோக்கம். வால்மீகி, கம்பன், அரசனையும் பொன் பொருள் களைப்பற்றியும், தங்களைப் பற்றி வானமளாவப் புகழ்ந்து எழுதினார்களே யொழிய, கஞ்சிக்கில்லாமல் பரிதவித்து பல கஷ்டங்களை அனுபவித்த ஏழை எளியவர்களைப்பற்றி விளக்கமா யொன்றுமே எழுதவில்லை.

ஏதோ சந்தர்ப்ப மில்லாமல் அவர்கள் மறந்திருக்கலாம். அதற்காக அவர்களைக் குற்றஞ் சொல்லலாமோ ?

சந்தர்ப்பமென நீ சொல்ல வேண்டாம். அவர்கள் சுய நலவாதிகளும் தற்புகழ்ச்சியுமுள்ளவர் களானபடியால் அவர் கள் சுபாவமாய் விட்டது.

நீ இன்னம்அறியவில்லை. நாட்டிலே சாதாரணமாய் வாழும் ஜனங்களின் நிலைமைக்கதிகமாய் நாம் உண்பதும் உடை தரிப் பதும் மற்றவர்களைக் கொள்ளையடிப்பதாகும். இதை உத் தேசித்துத்தான் மகாத்மா அவர்கள் ஒரு சிறிய துணியை தரித்து சொற்ப ஆகாரம் கொள்ளுகிறார். ஆனல் தாகூர் விலை பெற்ற போர்வையை தரித்து உயர்ந்த உடைகளுடன் விளங்கு வது தற்புகழ்ச்சி யன்னியில் வேறு யாது? தன்னுடைய திறமை யைத் தவிர மற்றவர்களைப்பற்றி அவருக்கு அக்கரையே இல்லை. தன்னையும் தன் தந்தையும் புகழ்வதைத் தவிர வேறு புகழ்ச்சி அவர்களிடம் காண்பதரிது.

கல் நெஞ்சுள்ள மானிட வர்க்கங்களைக் காணவேண்டு மாஞல் ஞானிகளை அணுகவும்.

பல நாட்கள் புசிக்காமல் யதீந்திரன் தன் தேகத்தையே உண்டுமரித்தான். சத்தியத்தில் சாய்ந்த பெரியார் கள்ளனைப் போல் இரவு பன்னிரண்டு மணிக்கு கொலைக்குற்றம் புரிந்தவர் போல் பிடிக்கப்பட்டார், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அவஸ் தைக்குள்ளானுர்கள்,

உண்ண உணவன்னியில் நூற்றுக் கணக்கானவர்கள் மரிக்கின்றனர். நிற்க நிழலற்று நாட்டு ஜனங்கள் எல்லாம்

நாடோடிகளாகின்றனர். சூரியன் உதயமாய் விட்டானே நான் பிழைப்பிற்கு எங்கு செல்வேன் என ஏங்கி சீதையும் சாவித்திரியும் நடுத்தெருவிலே அலேகின்றனர். பச்சிளங் குழந்தைகள் மதுபானம் பருகவேண்டாம் என குடிகாரர் காலில் விழுந்தற்கு, பெருங்கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஆனால் பொய் கையெழுத்திட்ட கிளேவ் நாட்டில் ஞானோபதேசஞ் செய்யச்சென்ற பங்காள பிரமஞானியொருவர் 'ஈசாவாஸ்ய மிதம் சர்வம்' என்னும் உபநிஷத மொழியைப் புகன்று இந்திய விஷயங்களே அறிய எனக்குச் சாவகாசமில்லே. நான் சித்திரம் எழுதுகிறேன் எனப் புகன்றதொன்றை நீ கவனித் திருப்பாயானால் உனக்கு இந்தச் சந்தேகம் தோன்றிராது.

ஞானிகளாலேயே உலகம் முன்னேற்றமாயிற்று. அவர்களன்னியில் உலகமில்லே. இவர் ஏன் இங்ஙனம் கூறவேண்டுமென எண்ணினேன்.

நீ நினேப்பதை நான் அறிவேன். மாயை என இவ்வுலகில் ஒன்று இருக்குமேயானால் இதுவே பெரும் மாயையாகும். ஞானியால் ஒன்றுமே யாகாது. பெருந்திருடனே, பகற் கொள்ளேக் காரனே, பொருள் படைத்த பிசாசே, நிலம் அபகரித்த மன்னனே, பெண்களே பாதகஞ்செய்யும் பேதையோ, இவர்கள் எல்லாம் புகழ்பெற்று பெருமையுடன் வாழ்ந்து சகஜமாய் எங்கும் அவர்களேக் காண்பது ஞானிகள் அவர்களுக் குதவிசெய்ததனாலே யாகும். நான் முன் செல்லுகிறேனென எண்ண வேண்டாம். ஞானிகளுக்கு மதிப்பும் செல்வாக்கும் இருக்கும் வரை மாநிலத்திற்கு இன்பம் இல்லே. ஞானிகள் இவர்கள் உதவியைக்கொண்டு ஏதாவது உதவியைப் புரிந்தார்கள் என்றால், அநியாயமும் அக்கிரமும் நீடிப்பதற்கே யாகும்.

நீங்கள் இப்படி கூறுவதை நான் ஒப்புக்கொள்ள என்மனம் இசையவில்லே. ஞானிகள் எல்லாம் வறுமை விரதம் எடுத்தவர்களாயிற்றே.

ஞானிகள் தாங்கள் சிறிய வாழ்க்கையை நடத்துவதாக ஒரு வஸ்திரமே தரிப்பார்கள். ஆனால் பத்து உடைகளின் மதிப்புள்ள பட்டாடை அணிந்து எல்லாம் துறந்தவர்கள்போல் பாதி நிர்வாணமா யிருப்பார்கள். எனக்குப் பணம்வேண்டாம். ஆனால் தங்கங்கட்டிய உருத்திராட்சம் போதுமென மின்னுவார்கள். நான் புசிப்பதில்லை. ஆனால் பச்சைக் கற்பூரம் கலந்த பசும்பாலும், தேனுடன் தோய்ந்த பழங்களையே புசித்து பட்டினியா யிருப்பேன் என்பார்கள். புவியிலே உட்கார தங்கப் பலகை வேண்டும். பூஜைபுரிய வெள்ளிசாமான் வேண்டும். நைவேத்தியத்திற்குச் சர்க்கரைப் பொங்கல். கல்நெஞ்சுடனுகை கருங்கற்களிலுள்ள கனியாத கடவுளையே பூஜை செய்வார்கள். ஞானிகள் இந்த வறுமை விருதத்தை படாடோபஞ் செய்வதனாலேயே பொன் பொருள் பெண்களைப் பற்றலாமென அனுபவ பூர்வமாய் அறிந்துள்ளபடியால், அவர்கள் வறுமையுடன் விளங்குகிறார் என ஏமாரவேண்டாம். அதற்காகவே நான் ஞானிகளை அழிக்கவேண்டுமென்பது. இதை உத்தேசித்துத் தான் ஆதாம் ஏவாளைச் சிருட்டித்த பொழுது ஞானத்தை பற்ற வேண்டாம்; சைத்தான் சர்ப்பவடிவமாகி உங்களை ஏமாற்றுவான் எனச் சொல்லியும் ஜனங்கள் தெரிந்துகொள்ளவில்லை. சைத்தான் எந்த வடிவமும் எடுப்பான் என நான் சொல்லியும் அவர்கள் கேட்காதபடியால் நான் அடிக்கடி அவதாரம் எடுக்க வேண்டியதாயிற்று. ஞான மதிகரித்தால் கர்வம் குணமாகும். சுயநலமும் பெருகும். இப்பொழுது ஞானியின் கொடுமையை யறிந்தாயோ?

நீ என்னுடன் சற்று தியானமாகவும், நான் சொல்வதை சிந்தனையிலாக்கவும்.

ஞானங் குறைந்தவன் சிறந்தவன், ஏனெனில் அத்தகையவர்கள் துரிதமாய் ஒற்றுமையுடனுவார்கள்.

ஞானமற்றவன் எவ்விஷயத்திலும் பிடிவாதமுடனிருப்பான். அதனால் செயலில் ஜயமடைவான்.

விபத்துக் காலத்தில் ஞான சூன்யன், எவர் சொல்வதை யும் செவியுற்று விவாத மன்னியில் எதையும் செய்வதால் வெற்றி பெறுவான்.

ஞான சூன்யன் தன்னைவிட தாழ்ந்தவன் இல்லை என எண்ணி எவரிடமும் அன்பு ஆசையுடன் சிறப்பதால் ஞலம் பெறுவான். ஞான மிழந்தவர்களே துன்பத்திற் குள்ளாகி ருர்கள். அதனுல் தூயமான பொருள் அவர்களுக்குத் தெளி வாகும்.

ஞானமற்றவன் இல்லையேல் சண்டையும் சச்சரவும் எங்கும் நிலவும். எப்பொழுதும் மாந்தர்களின் உதிரமே மேதினியில் பாயும்.

ஞானமற்றவன், அவன் உள்ளத்தை களங்கமன்னியில் புறத்தில் புலனுக்குவான். அதனுல் கபடமென்னும் மாசு அவ னைப் பற்றுவதில்லை.

ஞான விருத்திக்கு அடிமைகள் அவசியமாகும். மனித வாகனமும் அதற்கு வேண்டும். ஞான சூன்யன் மற்றவர்களை அடிமையாக்குவதில்லையாதலால் உலகத்திற்கு சாந்தம் புரிபவ னுவன்.

ஞானி மலடான வனிதை யாகையால் தனக்கும் மற்றவ னுக்கும் புனிதமான பயனை புலனுக்கச் சக்தியற்று உலகில் இயல்பற்ற செயல்களுக்குக் காரணமாகின்ருன். ஞான சூன் யன் இயல்பாய் இயங்குவதால் அவனுக்கும் அன்னியனுக்கும் இன்பமாகும்.

வர்ண சங்கரமென்னும் புவியில் புலனுகும் குழப்பங்களுக் கெல்லாம் ஞானியே காரணமாவதால் ஞானசூன்யன் நன்மை யைச் செய்யாதபோதிலும் தீமை, செய்வதில்லையாதலால் அவன் தீரனுவான்.

ஈசன் நாமத்தைச் சொல்லி இகத்தில் சண்டைகளைச் சாசு வதமாக்கியவன் ஞானியாகையால், செயலே சிறந்ததென சாந்தமாய் கர்மத்திலேயே ஞான சூன்யன் சாய்ந்துள்ளதால் சீலமுள்ளவனுவன்.

அதிக எளிமையை அபிவிருத்திசெய்து, பெரும் பொருளை ஒரு நிலையில் திரட்டி, பெரும் போகமும் சோகமும் புலனுக்கு பவன் ஞானியாகையால் ஞான சூன்யன் சமத்துவத்தை பங்கம் செய்யாதவனுவன்.

எனக்கு வேறு வேலையிருப்பதால் நான் சென்று விடு கிறேன். பிறகு இதைப்பற்றி விளக்கி யுரைக்கிறேன் என கல்கி அருகிலிருந்த காக்கையிலேறி மறைந்துவிட்டான்.

II

கல்கியே! நீ எங்கு சென்று விட்டாய்? நான் காடெல் லாம் உனக்காகச் சுற்றுகிறேனே. உனக்குக் கருணையுமில் லையே. நான் பறக்கும் எல்லா காக்கைகளை வினவிய போதி லும் ஒன்றுமே உன்னைப்பற்றிக் கூறுவதைக் காணும்.

அண்டங்காக்கையும் நான் அறியேன், பறைக்காக்கையும் எனக்குப் புலனுக வில்லையே எனக் கத்துகின்றதே. ஒரு வேளை சனீஸ்வரன் அறிவான் என நாசிக்கிலுள்ள பண்டா வையும் வினவினேன். ஒன்றிலும் பயனுக வில்லையே. நான் 15 வருடம் கலாசாலையில் கற்ற கல்வியெல்லாம் கடும்நஞ்சு எனக் கூறிவிட்டு என்னைக் கலக்கி விட்டாய். கல்வி வேண் டும் ஞானம் வேண்டும் என பெரியார்களெல்லாம் உரைக்கி ருர்கள். கல்வி, ஞான மில்லையேல் கடுங் கஷ்டங்களுக் குள்ளாவோம் எனகதறி ஏங்குகிருர்கள். உன்னிடம் மறு படியும் பேசவேண்டுமென விரும்புகிறேன் என நினைத்துக் கொண்டு காடெல்லாம் சுற்றி சித்திரகூட பர்வத முனையிலே காக்கை கூட்டமிருப்பதைக் கண்டு, அங்கு சென்று கல்கியை நோக்கி வணங்கினேன்.

நண்பனே! நீ ஏன் இங்கு? உனக்கு அதிகம் கூறுவது பயனில்லை எனவே நான் இங்குவந்து விட்டேன்.

வெள்ளைத்துணியில் சடேரென எந்தச் சாயமும் ஏறுவது போல் ஞானமற்றவன் சத்தியத்தின் புதிய தோற்றங்களை யெல்

லாம் பற்றுவான். கற்றவனுக்கு உபதேசம் செய்வதைக்காட்டி லும் கருப்புத் துணியைச் சிகப்பு நிறமாக்கலாம்.

காலியான நிலத்தில் விதைவிதைக்கலாம். கட்டாந்தரையி லும் செடிகள் புலனுகும். மலையினுச்சியிலும் கமலம் மலரும். ஆனல் சப்பாத்திப்புதரில் பயிர் செய்வதுபோல் ஞானிக்கு அமுதமளிப்பதாகும்.

ஆனல் உனக்கு ஊக்கம் இருப்பதை நான் காண்பதால் ஞானத்தின் விபரீதத்தைச் சொல்லுகிறேன்.

நான் ஞானி என ஒருவன் சொன்னல் உடனே நீ 18 முழம் புடவை உடுத்தும் ஸ்திரீ எனச் சொல்லிவிடவும். பின் ஸ்திரீ ஜாதியை ஏதோ தாழ்மை என கூறுவதாகக் கருதாதே. ஸ்திரீ பெண்ணுகவே இருந்தால் அதைக்காட்டிலும் ஆனந்த மில்லை. ஆனல் ஆண் பெண் போலானல் அது பேடித்தனமே.

ஞானி எனச் சொல்லும் ஆண்களெல்லாம் செயற்கைப் பெண்களே.

பெண்கள் மற்றவர் உதவியன்னியில் மக்கள் ஐசுவரியத் தைப் பெருததுபோல் ஞானிகளும் மற்றவர் உதவி யன்னியில் பெருமையாவதில்லையென அவர்களையும் பெண்கள் எனக் கூறி னேன்.

பெண்களுக்கு உடை அலங்காரமும், புறத்தோற்றமும் மினுமினுப்பும் பிரியமதிகம். ஞானிகளுக்கு சொல்லலங்கார மும், நடையழகும், புகழ்மொழியும் ஆபரணங்களாகும்.

அபலைகளுக்கு நாணமுண்டு. அச்சம் அதிகம். கோபம் துரி தம். அடிமைக்குணம் முதன்மையாகும். ஞானிகளுக்கு வெட்க மதிகம். ஐயோ நாம் போரில் மடிந்தால் என்மனைவி எதுசெய் வாள் என முன்செல்ல அஞ்சுவான். வன்மையற்றவனுக்கு கோபம் அதிகரிப்பதுபோல் இலேசாய் எவர்களையும் மொழிந்து விடுவான். ஞானி எப்பொழுதும் ஒருவனின் அடிமையாகவே இருப்பான். இராமராண்டாலும் இராட்சதன் அரசு புரிந்தாலும் ஞானி இருவர்களிடமும் அடிமைபுரிவான். எனக்கு புசிக்க

உணவும், இரமிக்க வனிதையும், உறங்க புவியுமிருந்தால் போதுமென எந்த அரசர்களையும் வேண்டுவான்.

அடிமையா யிருப்பவனே அடிமையையும் விரும்புவான். கைக்கட்டி வாய் மூடி என்னிடம் அணுகவும் என ஞானி உரைத்து, நான் பல்லக்கிலே செல்லுவேன் நீங்கள் என்னைத் தூக்கவும் என ஏவுவான்.

ஞானிகள் அதிகரித்த காலத்திலேயே அடிமைகள் எனப் படும் சூத்திரர்கள் என ஒரு வகுப்பு சிறந்தது.

நாங்கள் படிப்போம், நாங்கள் கற்போம் உங்களுக்கு பணி செய்து கிடப்பதே கடன் என பிராமணர்கள் ஆதிகாலத்தில் நியமித்தது ஞானத்தாலுண்டான குறைவேயாகும்.

ஞானமென்னும் பெண்ணை நாடாதே. அவளிடஞ் சொல்லுவது நேராக கசாப்புக்கடைக்குக் செல்லும் எருதுபோலாகும். வலையிலே சிக்கப்போகும் பட்சியைப்போலாவாய். நடுத்தெருவிலே நிற்கும் அவள் அழகு மொழிகளுக்கிரையாகாதே. பலர் நோயுடனுளர்கள். இன்னஞ் சிலர் இறந்தார்கள். நரகத்திற்குச் செல்ல சுருக்குவழி வேண்டுமானால் அவளை அணுகி யமபுரி செல்லவும்.

கல்கியே நீ வெகு கோபமுடன் கூறுகிறாய்? நீ ஏன் ஞானத்தை அங்ஙனம் குறை கூறவேண்டும். நாட்டிலுள்ள நாகரிகங்கள், புதிய பேரின்பங்களுக்கெல்லாம் ஞானமே காரணம். ஞானத்தை நீ ஏன் பெண்களுக்குச் சமானமாய்க் கூற வேண்டும்.

குழந்தையே! நான் திரிகாலத்தையும் அறிவேன். ஞானத்தாலுண்டான படுமோசங்களை யெல்லாம் நான் அறிவேன். இதுவரை நமது நாட்டிற்கு அதனாலுண்டான உண்மைகளை யெல்லாம் உரைக்கிறேன். சற்று கவனமாகக் கேள்.

ஞானியெல்லாம் பொய் சொல்ல அஞ்சுவதில்லை. ஏனெனில் ஞானத்தால் பொய் சொல்வதும் அவசியந்தான் எனக்

கூறுவார்கள். மனேசுதந்திரம் ஒவ்வொருவனுக்குமுண்டு. நான் ஒன்று நினைத்து வேறுமொழிய எனக்கு அதிகாரமுண்டு என கர்ச்சனை செய்து இதுவரை எண்ணிலாதவர் ஏமாற்றியுளார்கள்.

நான் அன்று பேசும்பொழுது அந்நிலைக்கேற்றவாறு மொழிந்தேன். இன்று நான் வேறு நிலையிலிருப்பதால் இன்று வேறு புருடனுக இருப்பதாக எண்ணவேண்டும் என நழுவிடுவான்.

நான் ஐந்து மணிக்கு வருவேன் எனக் கூறியது உண்மையே; ஆனுல், திடீரென எனக்கு வயிற்றுநோய் வருமென நான் எண்ணவில்லை; மன்னிக்கவும் என பல்லைக் காட்டுவான்.

அவனும் நல்லவன்; இவனும் சிறந்தவன்; அதுவும் உண்மையே; இதுவும் நியாயமே. நான் எப்பொழுதும் நீங்கள் சொல்வதையே செயலில் சிறப்பிப்பவன். நாஸ்திகமும் நன்மையே; ஆஸ்திகம் அவசியமாகும் என எல்லா ஜனங்களிடமும் சாது என பெயர்வாங்க விரும்புவான். எங்ஙனமாவது எல்லோரிடமும் நற்பெயரை வாங்கி நாம் பிழைக்க வேண்டுவதையே நோக்க வேண்டும் என ஆப்த நண்பர்களுடனுரைப்பான்.

ஞானியின் மொழிகளில் தேன் ஒழுகும்; முகமோ மலர்ந்த கமலமாகும். அவன் நெஞ்சு ஆலகால விஷம். படாடோபஞ் செய்வான்; நடுத் தெருவிலும், கோவில் குளங்களிலும், சபைகளிலும், மகாநாட்டிலும் உயரமாய் உட்கார்ந்து உன் கவனத்தை அபகரிப்பான்; நீ மயங்கி விடுவாய். ஜே சப்தம் செய்வாய்; நரகத்தில் விழுந்து நாசமாவாய்.

குழந்தையே! அவனை இனி நாடாதே! உன்னை சஞ்சலமாக்கி விடுவான். நீ சித்திரகூடத்திலுள்ள 'பில்'களை பார்த்திருப்பாய். எதையாவது குறிவைக்க வேண்டுமானுல் திட்டமாய் அம்பை அடிப்பார்கள். ஞானமுள்ளவனிடம் வில்லை அளிக்கவும் குறியை நோக்குவான்; வலது இடது பார்ப்பான். இதற்கு நடுவிலே குறிவைக்க வேண்டுமெனக் கருதி கடைசியில்

தவறி விடுவான். யாவற்றையும் நினைத்து சஞ்சலமாவான். ஞானமற்றவன் இதையும் அதையும் அறியாமல் செயலை செய்து விடுவான்.

தோல்வி அடைந்தால் திணறுவோமெனத் தயங்குவான். ஜயித்தால் லாபந்தான் என்னே என ஆயாசமடைவான்.

ஞான சூன்யன் எதையாவது செய்துகொண்டே சிறப்பாவான்; ஞானி சந்தேகக் கடலில் மூழ்கி சீரழிவான்.

நான் சொல்லுவதைச் செவியுறுவதனுலேயே உனக்கு ஒன்றும் தோன்றிவிடாது. என்னுடன் வா என்று சொல்லி உடனே என்னையும் மாயமாய் ஒரு கிராமத்திற்கு அழைத்துச்சென்முன்.

கல்கி வந்துவிட்டான் என எங்கும் கொண்டாட்டம். இனி நமக்குக்கவலை இல்லையென கல்கியை வரவேற்ருர்கள்.

கூரைவீடு, கயிற்றுக்கட்டில், கந்தைத்துணி, சட்டி பானை, துர்க்கந்தம், இருண்ட அறை, அரை டஜன் குழந்தைகள், நோயுடன் என் தந்தை படுக்கையிலேயே பத்து தினங்களாய் விட்டன. அவதார புருஷரே! நீங்கள் என் தந்தையின் நோயை நீக்கவேண்டும் என சிறிய பையன் ஒருவன் புகன்ருன்.

சின்னக்குழந்தைகளே! அவருக்கு நோய் ஒன்றும் மில்லை. உணவு சரியாய் அளித்திருந்தால் இச்சிக்கில்லை. உங்ளிடம் உணவுக்காகவும் பொருளில்லையேல் கொள்ளையடித்தாவது மனிதன் உயிரை காத்துக் கொள்ளவேண்டும். கொலையால் மிருகங்கள்பிழைக்கும். நீதியான முறையில் உணவு கிடைக்க வில்லையேல் உலகத்தில் அநீதி இருப்பது வெகுளீடைமலே. அநீதியான அகிலத்தை கொள்ளை அடிப்பது அநியாயமாகாது. எந்த விதத்திலாவது உணவை சம்பாதித்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவும்.

என் உயிர் நீங்குகின்றது. ஆனுல் நான் இதுவரை ஒரு பிழையும் செய்யவில்லையென நீ மரிக்கும் பொழுது தேறுதலாய் சொல்லிக் கொள்ளவோ இக்கஷ்டங்களை யெல்லாம் அனுபவிக்கிருய். அதனுல் உனக்கு லாபமென்ன?

ஞானத்தினுல் விளையும் இத்துன்பங்களை இங்ஙனம் சகித்துக் கொண்டே இருந்தால் நாசமாய் விடுவாய்.

கானகவாசிகள் உயிரைக் காப்பாற்ற மனிதனையும் கொன்று தின்பார்கள். ஏனெனில் உயிர் உனக்கு உலகத்தை விட பெரியது. உடனே நோயுள்ளவன் எழுந்துவிட்டான். எனக்கு அப்பொழுதே தெரிந்திருந்தால் நான் எத்தனையோ செல்வமுடன் இருந்திருப்பேன் என உற்சாகமாகி அங்கு கூடியிருப்பவர்களை பிரமிக்கச் செய்துவிட்டான்.

கொள்ளையடிக்கலாமோ, களவுபுரியலாமோ என புரோகிதன் ஒருவன் படாடோபமாய் ஐயோ கலியுகம் எனக் கதறினுன்.

கொள்ளை யடிப்பதும் களவு புரிவதும் தீமையே. ஆனுல் உயிருக்கு உணவன்னியில் விபத்து நேர்ந்தால் கொள்ளை அடித்து களவுசெய்து காப்பாற்றுவதில் குறைவொன்று மில்லை. ஏழை எளியவர்கள் விதவைகள் அனுதைகள் விபசாரிகள் சிறுவர்கள் ஞானமற்றவர்கள் எல்லோரும் ஒன்று கூடி கல்கியை நமஸ்கரிக்குங்கால், பணக்காரன் பிராமணன் படித்தவன் செல்வாக்குள்ளவன் பெரும் பெரியார், படாடோப புரோகிதன், நீதி நியாயவாதி, முதலியவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கல்கி வேஷதாரியாகும், நாஸ்திகனுகும், ஜாலவித்தைக்காரன், பெரும் மாயாவி சனங்களை ஏமாற்ற வந்தவன் என்று கல்கியை இலேசாய் பேசினுர்கள்.

நோயுள்ளவனுக்கு சிகித்ஸை செய்ய வந்துளேன். நோயற்றவன் என்னிடம் வரவேண்டாம்.

நான் கடவுளைப் பூஜை செய்வதில்லை. பூஜை செய்வதாயும் வேஷம் புரியவில்லை. கடவுள் பூஜையெல்லாம் வீடு வாசல் பொருள்களிருப்பவனுக்கே யாகும். நன்ருய்ப் புசிப்பவனுக்கு பொடி புகையிலை, வெற்றிலை பாக்கு, வேண்டுவதுபோல், பெண்ணும் பொன்னுமிருந்தால் பொழுதுபோக கடவுள் வேண்டும். தினந்தோறும் வருடக் கணக்காய் குடிப்பதற்கு கஞ்சியன்னியில் ஒருவன் தவித்தால் கடவுளை எப்படி எண்ணுவான். நீ பத்து நாள் உபவாசமிருந்து கடவுளைப்பற்றி நினைக்க முடியுமோ என்பதை எண்ணவும். புரோகிதனே உனக்குக் கடவுளில் நம்பிக்கையிருந்தால் நீ சம்பாதிக்கும் பொருள்களை எல்லாம் ஏழைகளுக்கு அளித்துவிட்டு நீ பக்தியுடனிருக்கவும்.

எங்கள் பிழைப்பைக் கெடுக்க கல்கி வந்துவிட்டான். இவனை எங்ஙனமாவது ஒழித்துவிட வேண்டும். விதண்டா வாதம் பேசுகிறவன். இவன் ஒருவேளை பிசாசாயிருக்கலாம். அல்லது துஷ்ட தேவதையை வசியஞ் செய்தவனுயிருக்கலாம் என எல்லோரும் ஒன்றுகூடி கலவரஞ் செய்தார்கள்.

அங்கு சட்டக் கலாசாலையில் படிக்கும் சாமினுதன் வருகிருன்.

நீங்கள் பெரியவர் போல் தோன்றுகிறதே? நான் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். நான் சட்டக் கலாசாலை மாணவன். அநியாயத்தை எல்லாம் அகிலத்தினின்று அழிக்கவே நான் கலாசாலையில் கற்று நியாயவாதியாக விரும்புகிறேன். சட்டத்தின் சிறப்பை ஜகமெல்லாம் ஸ்தாபனஞ்செய்து நீதியை நிலைக்கச் செய்யும் ஞான வாழ்க்கையான நியாயவாதியைக் காட்டிலும் நேர்மையான நெறியுண்டோ எனக் கருதியே நான் இக்கல்வி கற்கிறேன் என சாமிநாதன் வினயமாய்ச் சொன்ஞன்.

சட்டம் கற்பதைக்காட்டிலும் சிறிது கன்னக்கோலுடன் காரிருளிலே கொள்ளையடிக்கலாம். நான் முரட்டு மதியுடன் மொழிகிறேன் என மதிக்காதே.

நான் சொல்லும் ஒவ்வொன்றையும் நன்ருய்ச் சிந்தனை செய்யவும். பல வீடுகளுக்குச் சொந்தமான பணக்காரன் ஒருவன் வாடகை சில மாதங்களாய் அளிக்கவில்லை என ஒரு ஏழையை காலி செய்ய நீதிமன்றத்தை நாடுகிருன். சட்டப்படி நோக்கினுல் அவன் செய்வது நியாயமே. ஏனெனில் அவன் வாடகை அளிக்க முடியவில்லை. ஆதலால் வீட்டினின்று விலகவேண்டுவ தவசியமே. இங்கு நடந்த சம்பவங்களையெல்லாம் நீ நன்ருய் உற்று நோக்கவேண்டும்.

வீட்டுக்காரன் இதுவரை வாடகை எல்லாம் பெற்று உற்சாகமாய்ச் செலவு செய்து விட்டான். வாடகைக்கு இருப்பவனே இன்னம் நாளெல்லாம் உழைத்து வருகிருன். வீட்டை எந்த விதத்திலும் சொந்தக்காரன் அபிவிருத்தி செய்யவில்லை. நகர அமைப்பு, பெரும் ரஸ்தா, புதிய வண்டித்தொடர் முதலியவைகளால் வீட்டின் மதிப்பு சில வருடங்களுக்குள் அதிகமாய் விட்டது. ஆனுல் வீட்டை விஸ்தாரமாகவும், அதிக உபயோகமுள்ளதாகவும் வீட்டுக்காரன் செய்யவில்லையானுலும் வீடு இடிந்து விழாமல் நன்ருய் காப்பாற்றி உறுதியுடன் வைத்திருந்தது வாடகைக்கு வசிப்பவனுலேயாகும்.

வீட்டை இங்ஙனம் நன்ருய் காப்பாற்றியவன் அதோகதியிலாகி வீட்டைவிட்டு விலகவேண்டும். குடித்தனக்காரன் கஷ்டத்திற்குள்ளாகி, உழைப்பிலே உழன்று கடன்காரனுகி புசிப்பதற்கு இல்லாமலிருக்குங்கால் வாடகை எங்ஙன மளிப்பான்?

சொத்துள்ளவன் பக்கமே சட்டம் சாய்ந்து உதவியளிக்கும். வாடகைக்காரனே நியாயத்தில் உளான் என தெளிவாய்த் தெரிகின்றது. சட்டமெனப்படும் அரக்கனுல் சிதைபடாமலுள்ள நீதி நிலவும் நினைவுள்ளவனே உன்னுல் என்ன செய்ய முடியும்?

குடித்தனக்காரன் நடுத்தெருவிலே சென்றுவிட வேண்டுமென சொல்வாயா? செய்வேன் எனச்சொல்வதே சட்டம் அல்லது குடித்தனக்காரனுல் குணமான வீட்டின் மிகுதியான மதிப்பின் தொகையை அவனுக்கு அளித்துவிட வேண்டுமெனச் சொல்வாயா? ஆனுல் இது நியாயமாய் குடித்தனக்காரனின் உழைப்பினுல் தோன்றியதால் இது நியாயமுமாகும்.

வக்கீலே நீ எக்கட்சியில் சேர்வாய்? நீதிக்கு மாறுன சட்டமுடனு அல்லது சட்டத்திற்கு விரோதமான நியாயத்துடனு?

நோட்டீஸ் அளிக்காமல் வேலை நிறுத்தம் செய்ததற்காக ஒரு தொழிலாளி தண்டிக்கப்படுகிறுன். நீ எந்தக் கட்சியில் சேர்வாய்? ஏராளமாய் இலாபஞ் சம்பாதிக்குங்கால் வேலைக்காரன் கூலி அதிகமாகவில்லை. அவன் அப்பொழுது வேலை அதிகரித்திருந்ததால் குழந்தைகள் நோயுடனுகி மனைவியும் மரித்தாள். பொருளுள்ளவன் நன்றுய் புசித்து பேரின்பத்திலுளான். ஒருவன் உணவிற்காக உழைக்கிறுன். ஒருவன் வன்மையுள்ளவன். மற்றவன் எளியவன். எளியவனுக்கும் வன்மையுள்ளவனுக்குள்ள ஒப்பந்தம் உண்மையான ஒப்பந்தமாகுமோ? இங்கும் சட்டம் ஒன்று, நீதி வேறு.

நான் புசித்து பத்து நாளாய் விட்டது. கைக்குழந்தை பாலன்னியில் காலனிடம் சென்றுவிட்டான். என் மனைவியோ உணவன்னியில் உணர்வற்றுளாள். என்ன செய்வேன் என பரிதவித்து வேறு வழியின்றி களவு செய்தேன் எனக் கருப்பன் நீதிமன்றத்தில் கதறுவான். ஆனுல் ஆறுமாத தண்டனை. பிண்டத்திற்கில்லாமல் திண்டாடி திருடச் செய்யும் சமூக நிலையில் உன் சட்ட ஞானம் எந்த நீதியை அளிக்கும்?

நமது சமூகத்திலே நல்ல சந்தர்ப்பமன்னியில் எத்தனையோ குழந்தைகளுக்கு நற்குணம் கற்பிக்க முடிவதில்லை. அவர்கள் குடியன் கொலை பாதகனேடு சேர்ந்து களவு முத

லிய தீமைகளையெல்லாம் கற்று, மகா பாதகச் செயல்களிலே வளர்ந்து சிறு குற்றங்கள் செய்து புசித்து ஒரு வேளை குடி மயக்கத்திலே எட்டணாவிற்காக கொலை செய்துவிட்டால், சமூகத்தின் சீரழிந்த நிலைமையே அவர்கள் குற்றத்திற்குக் காரணமென நீ அறிந்திருந்தபோதிலும், அவனைத் தூக்கிலிட வேண்டும், அல்லது தீவாந்திர சிட்சை அளிக்கவேண்டும் என நீ சட்ட மன்றத்திலே வாதஞ் செய்யாயோ ?

இளம் வனிதை ஒருவளிடம் நீ இனி விவாகஞ் செய்தல் கூடாது. உனக்கு 5 வயதில் கலியாணமாகி 8 வயதில் விதவையானாய். இப்பொழுது யௌவன திசை. நீ நன்றாய்ப் புசிக்கலாகாது. இனி புருஷனையும் எண்ண வேண்டாம். இல்லையேல் தண்டனை என சமூகம் பெண்களுக்கு விதித்து, புருடர்கள் 60 வயதில் 17 வயது மங்கையர்களையும் மணக்கலாம் என மொழிவதால், அவள் மனோ துக்கத்தில் தோய்ந்து, அவள் இயல்பு இன்பத்தினின்று நீங்க வழிகாணமல் தேக சம்பந்தஞ்செய்து கர்ப்பமானாலும் குற்றமில்லை ; குழந்தையுடன் இருக்கலாகாது என வற்புறுத்துவதால், அவள் மானத்துடன் வாழ, தனக்குப் பிறந்த குழந்தையைக் கொலை செய்வதால், நீ அவளை கொலை சிட்சை அளிப்பதே சட்டமெனப் புகன்று நீதியை மறப்பதில்லையோ ?

வக்கீலே ! இன்னுமொன்று. பத்து ஜனங்கள் ஒன்று சேர்ந்தால் அதற்கு கூட்டமெனப் பெயர். ஆயிரக்கணக்காகவுள்ள ஜனம் சேர்ந்தால் பெருங்கூட்டம் எனப்படும். கூட்டங்களுக்கு புத்தி இல்லை என்பது உனக்குத் தெரியும். பெருமாள் கோவிலுக்குச் சென்று 'நமஃபார்வதி பதயே' என்றால் சற்றுகூட சிந்தனை செய்யாமல் அங்குள்ள யாவரும் 'ஹரஹர மஹாதேவா' என கூச்சலிடுவார்கள். வேலையில்லாமல் உணவிற்கு திண்டாடும் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஒன்று சேர்ந்தால் அங்கு 'மடையன்' ஒருவன் ஆவேசமாகி ஏதாவது ஒரு கல்லையொன்று எறிந்தால்,

உடனே அவர்கள் சுடப்படுகிறார்கள். பலர் பிடிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவார்கள். உன்னுடைய சட்ட ஞானம் நீதியை நிலைநாட்ட முடியுமோ ?

சட்டமென்றால் என்ன? ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ஏழைகளையும் அறியாதவர்களையும் அதோ கதியாக்கி அழிப்பதற் கேற்பட்ட ஒரு படு கொலை பண்டாரமாகும். சட்டத்தின் பெயரால் எத்தனை அநியாயங்கள் மனு தர்ம காலத்தினின்று நடைபெறுகின்றன. நிலவும் சட்டங்களுக்கு தாசனாவது நினைவிலேயுள்ள நீதியை நாசஞ் செய்வதாகும். இந்த நீதியை நினைவிலே நாசஞ் செய்தவுடன் சட்டமெனும் அநீதியின் அதிபதியாகவும் நீ மாறுவாய். நீ தினந்தோறும் மறுபடியும் நினைவிலும் நீதி என்பதை நாசஞ் செய்து விட்டால் நீ ஈவிரக்க மற்ற 'கஜபோக்கிரி'யாக வேண்டும்.

தேவேந்திரா! நான் சட்டம் படிக்கும் சாமிநாதனுக் குரைத்ததை சிந்திக்கவும். இந்த சட்ட ஞானத்திற்குள்ள மதிப்பை சீரழிப்பதற்காக நான் அவதாரஞ் செய்துளேன்.

'நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு திகிலை அளித்துவிட்டது. சட்ட நிபுணர்களைப்பற்றி எனக்கு சிறந்த அபிப்பிராயமில்லை,' என சாமிநாதன் சொல்லி ஒன்றும் புரியாமல் பேதை போல் நிற்கிறான். 'திகைப்பதால் தினையளவு பயனுமில்லை' உனக்குத் துக்கம் தோன்றுகிறதென நான் உண்மையை மறைக்கலாகாது.

பொய் சொல்லலாம்; பித்தலாட்டஞ் செய்யலாம்; அன்னியனை ஏமாற்றலாம்; கன்னக்கோல் வைக்கலாம்; களவு செய்யலாம்; கொலை புரியலாம்; கிராமத்தை அழிக்கலாம். ஆனால் சட்டமே சிறப்பு எனச் சொல்லி, சட்டத்திலே சாய்ந்துள்ளவன் மகாபாதகங்கள் செய்யும் கொடியவனைக் காட்டிலும் கொடுமையுள்ளவனாகும்.

நான் உனக்கு அதிகமுரைக்கப்போவதில்லை. இனி நீ என்னைக் காண்பதரிது. உனக்குப் பிறகு இவ் விஷயத்தில்

சந்தேகம் தோன்றினுல் ஒருபொழுதும் பட்டதாரிகளிடஞ் செல்லாதே! சாமிஞதா! கலாசாலையினின்றும் வெளி வரும் அச்சுப் பிள்ளையார்களேயும் அணுகாதே. அறிஞர் என பகிரங்கமானவனேயும் கனவில் கருதாதே. கற்காதவனுக்கு ஒரு வேளை மின்னல் மின்னும். அருள் சுரக்கும்.

வேண்டுமானுல் மிருகங்களிடஞ் சென்று சட்டத்தினுல் விளேயும் சீரழிவைக்கற்கலாம். பாயும் புலியினிடம் கற்கவும். பதுங்கும் பூனேயைப்பார்க்கவும். நிலேயான நிலேயுள்ள நாயையும் நாடலாம். கூட்டமாய்ச் செல்லும் ஓநாயும் உள்ளத்தை அறிவிக்கும். கானகத்திலே வாசஞ் செய்யும் காட்டுப் பன்றியும் கூறும். துள்ளிக் குதித்து சடேரென சென்றுவிடும் புள்ளிமானும் புத்தியைப் புலனுக்கும். மரமேலே மதுவைப் பருகும் கரடியும் மஞ்சளோடு மஞ்சளாய் மறைவினின்று குதிக்கும் சிறுத்தையும், குழி எங்கு எனக்காண மரத்தை தூக்கி செல்லும் யானேயும், எங்குசென்ற போதிலும் வழியைக் காணும் குதிரையும், அடித்தாலும் உதைத்தாலும் காகிதமே தின்னும் கழுதையும், சட்டங்களே ஒருபொழுதும் நம்பாதே என உனக்குத் திட்டமாய்க் கூறிவிடும் எனச் சொல்லி என்னே மாத்திரம் அழைத்துக்கொண்டு பிரயாகை போகலாமென புறப்பட்டார்.

அதற்குள்ளே கையில் கலசம் எந்தி, மருந்து சாடிகளே தூக்கிக்கொண்டு பற்பல பச்சிலே வன ஔஷதங்களுடன் தன்வந்திரியைக் கண்டதும் அவர் உடனே கல்கிக்கு வணக்கம் புரிந்து, அவசரம், அவசரம், அவசரம்! எங்கும் கால்ரா நோய், இன்புளுயன்ஸாவால் பலர் மரிக்கிருர்கள். எங்கும் நோய், நான் துரிதமாய்ச் சென்று மருந்து அளிக்கவில்லேயேல், பலர் இறந்துவிடுவார்கள் என மூச்சுத் திணறிப் புகன்று ஓட ஆரம்பித்தார்.

நோயினுல் மரிப்பதை நானுமறிவேன். சற்று நின்று நான் சொல்வதைச் செவி கொடுக்கவும் என்று கல்கி கூறி,

மூலக்கொத்தளப் பறைச்சேரியிலுள்ள ஆண்டிமுத்துக்கு பன்னிரண்டு பிள்ளைகள். வீட்டினருகில் சுடுகாடு. முனிசி பாலிடியின் குப்பைக்குவியலும் அங்கே. சேரியிலே எப் பொழுதும் சலமும் சேறுமேயாகும். இருண்ட ஏழு அடி உயரமாயுள்ள சிறிய தென்னோலை குடிசையிலே இப்பெருங் குடும்பம் வசித்து வருகின்றது. அறையின் நிலம் எப்பொழு தும் சதுசதுப்பு; வைக்கோல் படுக்கையிலே கிழவி யொரு வள் கந்தையினுல் கால் காணுமல் பெருமூச்சு விடுகிருள்; இரத்தமில்லை; எலும்புக் கூடுகள். குழிக் கண்களுடன் குளிர்ந்து நடுங்கும் தேகத்துடன் விழித்து உன்னை நோக்கு கிருள். ஆண்டிமுத்து பஞ்சாலையில் பஞ்சை அடிப்பவனு வன். அவன் இன்னம் இளங்குழந்தை. ஐந்து வருஷ வேலையி ஞல் மானிட இன்பமும் அனுபவிக்காமல் க்ஷயரோகியாய் விட்டான். பக்கத்தில் நிற்கும் அந்த ஸ்திரீயையும் நோக்கவும். 60 வயது கிழவிபோல தென்படுகிருள். அவ ளுக்கு இன்னம் 30 வயதாகவில்லை. சீயக்காயும், மிளகாயும் ஐயர் வீடுகளுக்கு நாளெல்லாம் இடித்து அவள் நிரந்தர கபத்தால் அவஸ்தைப்பட்டு அங்கமெல்லாம் குலுங்கிவிட் டது.

இவர்கள் ஏன் கால்ராவிலும் இன்புளுயன்ஸாவிலும் திடீரென சாகாமலிருப்பார்கள்?

தன்வந்திரியே இவர்களுக்கு மருந்தா வேண்டும்.

நீ இவர்களைப் பார்த்துவிட்டு தங்க பஸ்பம் சாப்பிடவும் எனச்சொல்லிவிட்டு ஒருவேளை இரக்கமாகி 'நானென்ன செய்வேன் என திரும்பிவிடுவாய்.'

நகரத்திலே கோவிந்தப்ப நாய்க்கன் தெருவிலேயுள்ள வீரப்ப செட்டியாரை நோக்கவும்.

நாளெல்லாம் வேலையில்லாமல் உல்லாசமாய் உட்கார்ந் திருந்து செட்டியாருக்கு தேகமெல்லாம் நீர். எழுந்திருக்கவும்

முடியவில்லை. அஜீர்ணம், அஜீர்ணம்; மருந்து வேண்டும்; தேகத்திற்கு உழைப்பு வேண்டும். சற்று நடமாட வேண்டும். புசிப்பதைநிறுத்தி பட்டினியுடனிருக்க வேண்டும் என அவனுக்குச் சொல்லுகிறாய். இவைதான் காணும் காட்சியாகும், எங்கு சென்றபோதிலும் நோய்களின் இவ்விரண்டுநிலைகளையே காணலாம்.

உணவன்னியில் ஒருவன் நோயில் விழுகிறான். உணவதிகரித்து ஒருவன் திண்டாடுகிறான்.

நோய்க்கு சிகித்சை செய்வதைக் காட்டிலும், நோய் வராமல் தடுக்க ஒரு வழியைக் காண்பிக்கவே நான் வந்துள்ளேன்.

புருஷன் தினம் பன்னிரண்டு மணிக்கதிகமாய் பத்து வருடமுழைத்து வேலையில்லாமல் மூன்று மாதமாயுள்ளான். அவன் அடிக்கடி வேலையில்லாமல் உட்காருவது சகஜ கஷ்டமாய்விட்டது.

வேலையில்லை; வீட்டுக்குப் போ என மேஸ்திரி சொல்லி விட்டான் என்று ரத்தக் கண்ணீருடன் மாதத்தில் இப்படி சிலநாட்கள் வீடுதிரும்பி புலம்புவான்.

செல்லாய் என்னும் கிழவி ஐயர் வீட்டில் மாதம் ஒத்தை ரூபாய்க்கு வேலை செய்துவந்தாள். நாளெல்லாம் ஈரத்தில் வேலைசெய்து உடம்பெல்லாம் வாதப்பிடிப்பு; எழுந்திருக்கவோ முடியவில்லை. இரண்டு மாதமாய் படுத்த படுக்கையிலேயுளாள்.

புருஷன் வேலையன்னியிலிருக்கும்பொழுதெல்லாம் அவள் ஐயர் வீட்டில் வேலைசெய்திருந்த காலத்தில் பழைய அமுதும் ஊசக்குழம்பும் கொணர்ந்து புசித்தோம் என உருசி பார்ப்பார்கள்.

ஆனால் இப்பொழுது புருஷனுக்கு வேலையில்லை; அவனும் படுக்கை; குழந்தைகளெல்லாம் எலும்புக்கூடுகள்.

நோயுள்ள அக்கிழவிக்கு நீ என்ன மருந்தை அளிப்பாய்? அவளைப் பார்த்தவுடன், சரியான உணவும், சுகமான காற்றும், இல்லாததால் இரத்தக் குறைவு எனக் கூறிவிடுவாய்!

பாலும் தயிரும் புசிக்கவும்; காற்ளேட்டமான இடத்திற்குச் செல்லவும்; கிராம வாழ்க்கை வேண்டும்; சன்னலுள்ள படுக்கையறை வேண்டும் என நீ நீதியுடன் சொன்னால் அது அவர்களைக் கேலி செய்வதாகாதோ?

பாலும் தயிரும், காற்றும், வீடும் ஜன்னலுமிருந்தால் அவளுக்கேன் இந்த நோய்? அப்பொழுது உனது சிகிச்சையும் உபதேசமும் வேண்டாம்.

நேர்மையான நினைவும், கபடமற்ற சித்தமும், ஒழுக்க முகமுடன் நீ நிலவினால் அக்கம்பக்கத்திலுள்ளவர்களின் அதோகதியையும் நீ அறிவாய். லொக்கு லொக்கு என ஒருவன் இருமுகிறான். க்ஷயத்தால் அவன் இன்னம் இரண்டு தினங்களில் இறந்துவிடுவான்.

மருந்தினாலும் சிகிச்சையினாலும் உலகத்திற்கு ஏதோ நன்மை செய்யப்போகிறோமென்பதை மறந்துவிடவும்; மருந்தையெல்லாம் குப்பைத் தொட்டியில் வீழ்த்தவும்.

நல்ல காற்று, மித உணவு, சிறிய உழைப்பு இவைதான் மாந்தர்களுக்கு அவசியம். இவைகளன்னியில் தன்வந்திரி ஆயுர்வேதம் என்பதெல்லாம் பொய்யும், பித்தலாட்டத்தைத் தவிர வேறு இல்லை.

நோய் என்பது, அதை நீக்குவேன், சிகிச்சை சாலைகள் ஏற்படுத்துவேன், மருந்து நயமாய் விற்பேன், ஔஷதப் பிரசாரம், உணவு பிரசாரம், சுகாதார வழி, தேகவன்மை விருத்தி, குழந்தை வாரம், என காலத்தைக் கழித்து படாடோபஞ் செய்து இவையே பரோபகாரம் என்பதெல்லாம் மாரீசன், சீதையைப் பற்றச்செய்த பொன்மான் சூழ்ச்சியே யாகும்.

தன்வந்திரி நமஸ்காரம் புரிந்து நான் இராட்சதர்களுக்கு வாக்களித்துவிட்டேன். அவர்கள் உணவு உண்கிறேன். அதனால் நான் அவர்களுக்கு துரோகஞ் செய்ய முடியாது. நீ சொல்வது நியாயமே. ஆனால் என்னலாகாது

என்னை மன்னிக்கவும் என கல்கியினிடம் விடைபெற்றுக் கொண்டு துரிதமாய்ச் சென்றுவிட்டான்.

கல்கியே, மருந்து சாஸ்திரமும், வைத்திய ஞானமும் விபரீத எனச் சொல்லுகிறாய். வைத்தியத்தைப்பற்றி நீ சொல்வதில் ஒரு பாகம் நான் ஒப்புக்கொண்ட போதிலும், எல்லா சாஸ்திரங்களையும் விபரீத ஞானம் பெரும் விபத்து எனச் சொல்லிவிடமாட்டாய் என எண்ணுகிறேன்.

சாஸ்திரம் தத்துவ ஆராய்ச்சிகளைப்பற்றி கூறுவதாக உனக்கு சொல்லிருந்தேன். அவ்வாராய்ச்சிகளால் மனித கோடிகளுக்கு எத்தனையோ இலாபம் தோன்றும் என ஜனங்கள் எண்ணுகிறார்கள். ஆனால் உலகத்தில் இதைவிட மோசடியான கனவு வேறு இல்லை.

சாஸ்திர ஆராய்ச்சியே ஒரு சந்தோஷம். சித்தத்தை செம்மையாக்கி தேகத்திற்கும் சுகத்தையளிக்கும்.

சந்தோஷத்திற்காக சாஸ்திரத்திலே சாய்ந்தவன் சற்று இன்பமாயிருக்கவேண்டுமென மதுபானம் அளிப்பவனைவிட சிறந்தவன் எங்ஙனமாவன்? ஆனால் சாஸ்திரத்திலே சாய்ந்தவன் சாசுவத சிற்றின்ப சந்தோஷத்தை நாடுபவனாவன்.

எப்படியிருந்த போதிலும் தங்கள் சந்தோஷத்தையே நாடும் இருவர்களும் சுயநல வாதிகளே.

ஆனால் நான் சனங்களின் நன்மைக்காகவே சாஸ்திரம் கற்கிறேன். அவ்வாராய்ச்சியினால் புலனாகும் உண்மைகளை ஜன சமூகத்திற்கு தத்தம் அளிப்பேன்.

சாஸ்திரத்தை சனசமூகத்திற்காக பயன் செய்வாய் என்றால் அப்பணியைவிட புனிதத்தொண்டு வேறில்லை.

ஆனால் இதுவரை சாஸ்திரங்களால் சிறந்த ஆதாயங்களெல்லாம் சில வகுப்புக்களுக்கும், சில பிரபுக்களுக்குமே சகாயமாயிற்று. சாதாரண ஜனங்களுக்கு அதனால் இன்னம் பெரிய ஆதாயம் தோன்றவில்லை.

அத்வைதத்தின் அளவில்லாப் பெருமையையும், தர்க்கத்தின் திடமான திறமையையும் ஸ்ரீசங்கரர் ஆராய்ச்சியால் கண்டு மாந்தர்களுக்கு அறிவித்தார்.

ஆனால் முப்பது முக்கோடி ஜனங்களில் மூன்றில் ஒரு பங்காவது அதை அறிந்தார்களோ? இன்னம் கோடிக்கணக்கான ஜனங்கள் காரிருளிலே மூழ்கி கடவுள் சங்கரர் என ஏமாற்றும் சாதி என்னும் கள்ளர்களால் கொள்ளையடிக்கப் படுகிறார்கள்.

மனோவன்மையுடனாகி ஆரோக்கியமாய் வாழ்வதற்கு இந்த சாஸ்திரங்கள் இதுவரை நமக்கு அளித்த பயனென்னே?

ஆரோக்கியமாய் எங்ஙனம் வாழவேண்டும். கூட்டங்களில் எங்ஙனம் வசிக்கவேண்டும் என்னும் உண்மைகளை சாஸ்திரம் கண்டுபிடித்து வெகுகாலமாயிற்று. ஆனால் வாழ்க்கையில் நம்மில் நான்கில் ஒரு பங்காவது அங்ஙனம் வாழ முடியவில்லை. சாஸ்திரங்களெல்லாம் என்ன செய்கின்றன?

ஆதலால் சாஸ்திரம் எனப்படுவது சாதாரண ஜனங்களுக்கு உபயோகமாவதில்லை. கூலிவேலை செய்பவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் எவ்விதமான பயனையு மளிக்காமல், பொன் பொருளுள்ள சிறிய வகுப்புகளுக்கே அது பெருமையை அளிக்கின்றது. நூற்றிலே 90 ஜனங்களுக்கு உலகம் ஏற்பட்டதிலிருந்து அதனால் ஒரு இலாபமுமில்லை.

பறைச்சேரி, தொழிலாளர் வீடு, ஒட்டர் குடிசை ஆகிய எளியவர்கள் மனைகளுக்கு செல்லவும், புவியிலுள்ள துர்க்கந்தங்களை யெல்லாம் அங்கு காணலாம்.

இதுவரை அறிந்த உண்மைகளை பெரும் ஜனங்கள் அனுபவத்தில் கொண்டு வர முடியவில்லை. அதை எல்லா ஜனங்களும் அனுபவிக்கச் செய்த பிறகு புதிய சாஸ்திர

ஆராய்ச்சிகளையும், தத்துவ நுட்பங்களையும் காண முயல லாம். நாட்டிலுள்ள ஜனங்களில் பாதிக்கு அதிகமாயுள்ள வர்கள் இதுவரை கண்ட உண்மைகளை சீரணஞ் செய்யாம லிருக்கும்பொழுது சில ஜனங்களின் மேன்மைக்காக சாஸ் திர ஆராய்ச்சி செய்வது சுயநல இன்பத்திற்கே யாகும்.

எல்லா ஜனங்களும் இலாபம் பெற்றாலொழிய, சாஸ் திரங்களால் எந்தவித்மான முன்னேற்றமுமாகாது.

சகத்திலே சர்வேசனால் அளிக்கப்பட்ட நீர் நிலம், காற்று முதலியவைகளிலே சமபாகம் சமத்துவமாய் எல்லா ஜனங்களும் பெற்றுவிட்டால் சாஸ்திரங்களின் சிறப்பையும் செல்வத்தையும் அனுபவிக்க ஜனங்களுக்குச் சந்தர்ப்பம் ஏற் படும்.

அதுவரை சாஸ்திர ஆராய்ச்சி தத்துவ விசாரணையில் இறங்குவதெல்லாம் சிற்றின்பங்களில் சுயநலத்திற்காகச் சாயும் கல் நெஞ்சுள்ள கல்வியற்ற செயல் எனப் புகன்றிடவும்.

நான் சிற்ப, யந்திரக் கல்வியை மேன்மையாகக் கருது கிறேன். ஏழை பணக்காரன் வேற்றுமையன்னியில் அக் கல்வியின் இயந்திரம் பாமரர்களையும் காததூரம் எடுத்துச் செல்லும். எல்லா ஜனங்களுக்கும் அது உபகாரத்தை அளிக் கும்.

நீ சொல்வதில் உண்மை இல்லாமலில்லை. மலைகளை உடைத்து பள்ளங்களை நிரப்பி, நதிகளைக் கடந்து உலகமெல் லாம் இணைத்து பஞ்சகாலத்தில் உணவுப் பொருள்களை இங்குமங்கும் யனுப்பி மாந்தர்களை மயக்காமல் செய்வது சிற்ப இயந்திரக் கல்வியல்லவோ?

புத்தியினால் பெரிய திட்டங்கள் செய்த போதிலும், பாமரர்கள் ஆயிரந் தொல்லைகளின் நடுவே பெரும் நோய் களுக்குள்ளாகி வேறு விதியில்லையே என ஒருவேளை கஞ்சிக்

காக வேலை செய்து அவ் வேலைகளில் மரித்தவர்களோ எண்ணிக்கையிலில்லை. இத்தனை கஷ்டப்பட்டு புகைரதஞ் செல்ல வழியை ஏற்படுத்தினல் வன்மையற்றவர்களைக் கொலைபுரிய அத் தண்டவாளத்தில் பட்டாளங்கள் ஏற்றிக்கொண்டு வண்டித் தொடர்கள் செல்லும்.

நீ கண்விழித்து பெரிய இயந்திரத்தைக் கண்டுபிடிக்கலாம். நீ நினைப்பதற்கு அதிகமாய் அது பெருங்குணத்தை அளிக்கலாம். ஆனல் சில நாட்களில் ஆயிரக்கணக்கானவர்களை வேலையில்லாமல் செய்துவிடும். சிலரோ குபேரர்களாய் அதனல் கோடீஸ்வரர்களாகி விடுவார்கள்.

கல்கியே, நாட்டிலுள்ள தொழிலாளிகளுள் தங்கள் வேலைகளைச் செய்வதற்கு சிற்பக் கல்வி, பெரிய உதவியை அளித்து, பொன் பொருளை அதிகமாய் சம்பாதிக்க சந்தர்ப்பம் அளிக்கின்றதே?

தொழிலாளிகளைப்பற்றி நீ யொன்றுமே இன்னும் அறியவில்லை. தையல் மிஷின் தோன்றியதால் கந்தைத்துணி கனகத்திற்கு என்ன லாபம் குணமாயிற்று. ஒட்டர்கள் இன்னம் மண்ணை வெட்டி மெய்யுடல் இளைக்கிறார்கள். கொத்தனும் தொழிலாளியும் முன் போலவே கஷ்டதிற்குள்ளாகிறார்கள்.

சிற்பக் கல்வியால் தோன்றிய இயந்திரங்களால் அடிமைகள் வளர்ந்து வேலையும் கிடைக்காமல் மிருகங்களைக் காட்டிலும் கீழான நிலையை அடைந்து விட்டார்கள்.

இயந்திரம் அவசியமில்லை. சிற்பக் கல்வியும் வேண்டாம். இதுவரைத் தோன்றிய இயந்திரங்கள் தந்திரங்களால் தரணியில் உள்ளவர்களுக் கெல்லாம் ஆதாயம் புலனுவதற்கு வழியைத்தேடி பிறகு புதிய சூட்சமங்களைக்காண முயலவேண்டும்.

தரணியிலுள்ள பாதி ஜனங்கள் பிண்டத்திற்கு அலறுங் கால் கல்வியின் சூட்சம நுட்பங்களைக் காணமுயல்வது இராம நாமஞ் ஜபித்து மாரீசன் சீதையை அபகரிக்கச் செய்தது போலாகும்.

சாஸ்திரங்களை யெல்லாம் குப்பைத் தொட்டியிலே எறியவும். தத்துவங்களை யெல்லாம் நீ திருடனாக விரும்பினாலே யொழிய தினையளவிலும் கனவில் கருதாதே.

தரித்திரங்கள், பெரும் மோசடிகள், அநியாயம், அக்கிரமம், அட்டூழியம், பாதகச் செயல்கள், கொடுமை கொடூரங்களை யெல்லாம் சாஸ்திரங்கள் சுலபமாக்கி விட்டன. ஆயிரக் கணக்கான ஜனங்களை ஒரே வினாடியில் அழியச்செய்வது சாஸ்திரங்களால் விளையும் விபரீதமே.

சாஸ்திர ஆராய்ச்சியும் தத்துவ பரிசீலனை செய்பவர்களே! உங்களுக்கு தலையுண்டு என்பதை நான் அறிந்த போதிலும், இருதயம் இல்லை என்பதை நடுத்தெருவில் செல்லும் கோவிந்தனும் அறிவான்.

உங்கள் ஆராய்ச்சியின் உதவியைக் கொண்டு சிலர் உலகத்தையே அழிப்பார்கள். நீங்கள் கண்டுபிடிக்கும் தத்துவங்களெல்லாம் நாக சர்ப்பத்தின் கடும் நஞ்சு போலாகும்.

இதுவரைச் செய்த சாஸ்திர ஆராய்ச்சிகள் போதும்! இனியும் நீங்கள் அவசியமில்லை, எங்களுக் கெல்லாம் குடிக்கக் கஞ்சிகிடைத்த பிறகு சாஸ்திர ஆராய்ச்சி ஆரம்பிக்கவும் என ஏழைகளெல்லாம் ஒன்று சேர்ந்து நயவஞ்சகர்களான ஞானசோம்பேறிகளை அணுகி உரைத்து அவர்கள் செவியுறவில்லையேல் எந்த விதத்திலாவது தரணியிலேயே அவர்கள் தாழ்ந்த நிலையிலாகும் வண்ணஞ்செய்யவேண்டும்.

சாஸ்திரமறிந்தவர்களிடம் குழந்தைகள் கற்பதும் விபத்தையே விளைவிக்கும்.

குருநாதர்கள் வஞ்சகமுள்ளவர்களாகும். ஸ்ரீ இராமனைப்போல் கையில் அம்பும் நாவில் சத்தியமும் வேண்டுமெனக் கூறுவார்கள். ஆனால் அனுவசியமாய் சட்டத்தின் அதிகாரி ஒருவன் உதைத்தாலும் நீ மரியாதையுடனிருக்க வேண்டுமென மொழிவதற்கு அஞ்சுவதில்லை.

சுதந்திரத்திற்காகவும், சத்தியத்திற்காகவுமே கற்பிக்கிறேன், எனக் கூறுவார்கள். ஆனால் எளியவர்களை வற்புறுத்தி உதிரம் உறிஞ்சும் பெரும் உத்தியோக தலைமை பதவியும், ஏழைகளின் கூலியைக்குறைத்து அதனால் ஆதாயம் காண்பிக்கும் பெரும் நிலையுமே உங்கள் நோக்கமென அறியவேண்டு மென்பார்கள்.

ஆன்மாவிற்கு ஜன்மமில்லை சாவில்லை. அது நீரினாலும், கானலாலும், காற்றாலும், கெடாது. அது அழியாப் பொருள் எனக்கூறி தனக்கு பிழைக்கத் தெரியாமல் தன் தேகத்தை பலியளித்தான் என இலேசாய்ப் பேசுவார்கள்.

கல்கியே! நீ குறைகூறாதது ஒன்றுமேயில்லை. குறைகூறுவது சுலபம்! சாஸ்திரங்கள் சிற்றின்பமாகவும், ஆயுர்வேதம் அக்கிரமமாகவும், சட்டங்களெல்லாம் சீரழிப்பதாகவும், இயந்திரங்களெல்லாம் ஏழைகளைக் கொள்ளையடிக்கும் இராட்சதனாகவும், குருநாதர்களெல்லாம் வஞ்சகசிகாமணிகளாகவும் சொல்லிவிட்டால் ஜனங்களை என்ன செய்யவேண்டுமென விரும்புகிறாய்?

உனக்கு இருவழிகளேயுண்டு. மகாஜனங்கள் எல்லாம் அதோகதியாகட்டும். எனக்கு அதைப்பற்றி அக்கரை இல்லை. என் பிழைப்பே எனக்கு அதிகம். இது ஒரு வழியாகும். மற்றொன்று, அன்னியர்களும் மகாஜனங்களும் மேன்மையாவதே என் நோக்கம். ஒரு வேளை என் தேகத்தால் தேசம் தலையோங்குமானால் என் தேகத்தையுமளிக்க நான் தயாராயுளேன்.

உனக்கு எந்த வழியிலே பிரியமதிகம் ?

தொழிலாளிகள், வேலையில்லாதவர்கள், ஏழை எளிய வர்கள் அனாதை, பெண் பிள்ளைகள் எங்ஙனம் முன்னேறு வது என்னும் சதாகால சிந்தனைகளிலாகி சபைகள் கூட்டுவதி லும் வியர்வையினால் சம்பாதித்த பொருளை தொழிலாளர் சபைக்கு செலவு செய்வதிலும் பாமரர்கள் பெருமையுடனாக, அரை வயிறு கஞ்சிகுடித்து மிகுதியான பொருளால் பத்தி ரிகைகள் நடத்துவதிலும் தங்களைக் காட்டிலும் எளியவர் களாயுள்ளவர்களுக்கு உபகாரஞ்செய்வதிலும் பல கஷ்டங் களை அனுபவித்து எங்ஙனம் தலையோங்குவது என, வழி தெரியாமல் தத்தளித்து துக்கக் கடலில் மூழ்கி குய்யோ முறையோ எனக்கதறி தாய் தந்தையற்ற அனாதைகள் போலாகி, படித்தவர்களால் புறக்கணிக்கப்பட்டு பெரும் ஆபத்திலே பாழாகும் நிலையிலுளார்கள்.

நமது பொருள்களால் படித்த கலாசாலை மாணவர்கள் எங்கே? மூட்டை தூக்கி முதுகெலும்பு ஒடிந்து, பாதி வயிறு புசித்து அதனால் ஆதாயமான பொருள்களால் கட்டப் பட்ட கலாசாலைகளினின்று தோன்றும் படித்தவர்கள் நம்மை நாசஞ் செய்வதற்குத் துணை யளிக்கிறார்கள். எங்கள் படிப் பையும் கவனிக்காமல் அவர்கள் படிக்கட்டும் என அழகான நூல்களை அச்சடித்து நல்ல பைண்டுடன் அளித்தோமே? அதைப் படித்தவர்கள் எல்லாம் என்ன செய்துள்ளார்கள். ஒருவர் நீங்கலாக மற்ற கவிகளெல்லாம் எங்கே ? பண்டிதர் கள் எங்கே? இந்த கபட வஞ்சக கல்வியாபரணமணிந்த கள் ளர்களில் ஒருவரும் நமக்கு உதவி புரியவில்லையே என பாமர மக்கள் கதறுகிறார்கள்.

இந்த இனிய மிட்டாய்களைத் தின்னவும் என புசிப்ப தற்கு அளித்து ஏமாற்றி என்னை எவனோ பல வருடங்க

ளாய்க் கொள்ளை அடித்து, என் நிலம், பொன் பொருள், யாவற்றையும் அபகரித்து இப்பொழுது காட்டில் வழி தெரியாமலுள்ள புதர்களின் நடுவே என்னை விட்டுவிட்டது போல் நான் மனத்திலாகி இங்குமங்கும் கண்களை நன்முய் உற்று நோக்கினேன்.

கா! கா!! கா!!! வென்றுதான் என் செவியில் விழுந்தது. காக்கையுமில்லை. கல்கியையும் காணேம். இனி என்ன செய்வதெனக் கலங்கினேன்.

சரி ! வீடுபோய்ச் சேரலாம் என நான் சித்திரகூடம் அகன்று கிராமம் நோக்கினேன்,

கல்கி மறுபடியும் காண்பாணே எனக் கலங்கினேன்.

III

ஐந்தாறு மாணவர்கள். குளத்தங்கரை. புளியமரம். மாலை ஏழுமணி இருக்கலாம். கல்கி அங்கு உபதேசஞ் செய்வதைக்கண்டு நானும் வணங்கி அவர்களுடன் ஒன்று சேர்ந்தேன்.

குழந்தைகளே ! உங்கள் கருத்தையெல்லாம் பெரும் நோக்கத்திற்கு தத்தமளிக்கவும். குருட்டு நம்பிக்கை, கள்ளச் சித்தம்,முதலியவைகளைக் கழிக்க, உங்கள் புத்தியை எல்லாம் செலுத்தவும். சாஸ்திர ஆராய்ச்சிகளுக்கு வேண்டிய பொறுமைகளை எல்லாம் சமூகஞ் செம்மையாவதற்கே தத்தஞ் செய்யவும். ஒரு புழுவைக்காண உயிரை யளிப்பதை விட, பாமரர்கள் பெருமையாக தேகத்தையு மளிக்கவும்.

வைத்தியரே, சமூகம் சிறந்த நிலையிலிருந்தா லொழிய நீங்கள் சம்பாத்தியஞ் செய்வதும் கஷ்டம். பாமரர்கள் எல்லாம் படுகுழிகளில் புதையும் நிலையிலிருக்குங்கால் உங்கள் மருந்துகளின் பயனென்ன? நோய் வராமலிருப்பதற் கேற்ற உண்மைகளை அறிவித்து தரித்திரம் தொலைய வழியைக்

கண்டுபிடிக்கவும். கத்தியைக் கொண்டு அங்கமொன்றை அறுத்து விஷத்தை நீக்கி, வேண்டுமானால் தேகம் பிழைக்க, அங்கஹீனஞ் செய்வதுபோல், சமூகத்திலேயேயுள்ள சீரழிக்கும் வகுப்புக்களைச் சிதைத்து அவசியமானால் அகற்றி சமூகத்தைச் செம்மையாக்கவும்.

தத்துவ தரிசிகளே! நீங்கள் இதுவரை கண்டு பிடித்த நுட்பங்களெல்லாம் போதும்! இனிப் புதியவைகளுக்கு ஆசை வேண்டாம். இதுவரை அறிந்த உண்மைகளை பாமரர்களும் அறிந்து அனுபவத்திலாக்க முயற்சி செய்யவும்.

அறிஞர்களே! உங்கள் இலக்கணம் இலக்கியம் அவசியமில்லை. நாவல்களும் நாசத்தை விளைவிக்கும். உங்கள் வன்மை எல்லாம் இளைஞர்கள் புத்துணர்ச்சியுடனாக செல்லட்டும். ஜனங்களின் சுதந்திரத்திற்காக என் புருஷன் மரிக்கவேண்டும் என ஒவ்வொரு மனைவியும் மொழியட்டும்.

உங்கள் எளிமையை நீங்களே அறியவில்லை. இக்கேடு கெட்ட வாழ்வு மிருகங்களைக் காட்டிலும் தாழ்மையாயிற்றே. கேவலம் காயத்திலுள்ள சிறிய காற்றிற்காக பயந்து நிரந்தர துன்பங்களுக்கு என் ஆளாகவேண்டும் என ஏழுமலைக்கு உரைக்கவும், செட்டியாரிடம் சொல்லவும், திம்மப்பா ஒட்டனிடம் நினைப்பூட்டவும், வண்டி இழுப்பவனிடம் விளக்கவும். கால் வயிற்றுக்கு காதவழி ஓடும் ரிக்ஷா பொன்னனிடம் புகலவும். ஐயோ! நான் என்ன செய்வேன், இன்று ஒன்றும் கிடைக்கவில்லையே என திண்ணையில் சாய்ந்துள்ள முருகேசன் மனத்திலாக்கவும். சாக்கடையிலே காலணாவைக் காண நாளெல்லாம் தேடி அந்நீரையு மருந்தும் ஐயம்பெருமாளிடமும் உரைக்க ஒருபொழுதும் மறக்காதே. அந்திப் பொழுதில் விளக்கு வைத்தவுடன் வெள்ளைச் சேலையில் விளங்கி, மதியை மயங்கச் செய்யும் கனகாம்புஜத்திடமும் ஒருமொழியும் தவறாமல்கூறவும்.

வீட்டு வேலை செய்யும் வேப்பலை, சோறெடுத்துச் செல்லும் சொர்ணம், அப்பம் விற்று பிழைக்கும் செல்லம்மாள்,

இனி நமக்குத் துணை இல்லை என தவிக்கும் புருஷனிறந்த பாக்கியம், முதலியவர்களையும் நாடி நீங்கள் உழைத்தாலொழிய சமூகம் செம்மையாகாதேன அறைகூவி யழைத்து பெரும் ஊழியத்திற்கு அர்ப்பணஞ் செய்யவும் என அதி மதுரமா யுரைக்கவும்.

வீட்டு வேலை செய்யும் வேப்பலையும் சில நாட்கள் அழகுடனிருந்து, பார்ப்பவர்கள் மனத்தை கொள்ளை கொண்டிருந்தாள். பிழைப்பிற் கில்லையே! என்ன செய்வோம் என ஆவடியிலிருந்து சென்னைக்கு சில மாதங்கள் முன்னரே வந்தாள். சோறு கிடைப்பதே சுவர்கமாய்விட்டது. கஷ்டப்பட்டாவது சீவனஞ் செய்யலாமே எனக் கருதினாள். அவள்கதி என்னவாயிற்றென்பதை நீ அறியாயோ? ஐயர் மகன் தேன்மொழிபொழிந்து அவளைக் கவர்ந்தான். கையிலே பெண்குழந்தை யொன்றாயிற்று. அப்பால் ஐயர் மகன் சண்டைசெய்து வீட்டிற்கு வேண்டாமென அனுப்பிவிட்டான். பசியும் திண்டாட்டமும் அதிகரித்து நோயிலாகி வேப்பலை ஆஸ்பத்திரி சென்றாள். அவள் கதி என்னவாயிற்றோ? சொர்ணம், செல்லம்மாள், பாக்கியத்தம்மாள் கதைகளை நான் கூறவும் வேண்டுமோ? வேப்பலை உனக்கு கிடைக்காவிட்டாலும் மற்றவர்களிடம் சென்று நிரந்தரமாய் நீங்களும், வரும் வனிதைகளும் இங்ஙனம் வாழ விரும்புவீர்களா? சொர்ணமே நீ கிராமத்திலிருக்குங்கால் மிராசுதார் அய்யர் ஆசை வார்த்தை கூறி உன்னை கெடுத்து புருஷனிடமிருந்து பிரித்து விட்டான். சில நாட்களில் உன்னையும் கைவிட்டு விடவே, நீ முச்சந்தியிலே சென்னையில் திண்டாடுகிறாய். உன்னை இப்பொழுது பார்ப்பவர்களில்லை. உன்னைப் போல் ஆயிரமாயிரமான வனிதைகள் மிராசுதார்களால் கற்புழிக்கப்பட்டு கதிகலங்கியுள்ளார்கள். இனி அங்ஙனம் நமது பெண் மணிகள் சூறை ஆகாமலிருக்க ஒன்று சேர்ந்து இப்

பொழுது இலங்கும் வகுப்பு நிலேகளே நாசஞ் செய்ய விரும்ப வில்லேயா எனக் கூறவும்.

பெண்களுக்கெல்லாம் உபதேசஞ் செய்து தொழிலாளி யிடஞ் செல்லவும்.

தொழிலாளியே! காலேயில் சங்கு பிடிப்பதிலிருந்து சூரியன் மாலே மறையும் வரை உழைத்து பெருச் சாக்கடையி ஞேரமுள்ள வீட்டிற்கு செல்கிறுய். ஒரு அறையிலே தாய் தந்தை, ஆறுபிள்ளேகள், நான்கு நாட்டுப்பெண்கள். உள் செல்லவேண்டுமானல் பகலிலும் விளக்குவேண்டும். நீர் அமுதத்தை தவிர வேறு எதுவுமே உனக்குஇல்லே. கருந் தண்ணியாம் காபி எனக்குடிப்பாய். நாளேக்கு அரிசிச் செட்டியாருக்கு பணம் எங்கிருந்து அளிப்பேன் என ஏங்கு வாய்? வாடகைக்கு வந்து விடுவானே என திருடனேப்போல் விழிக்கிறுய். நீங்கள் 6 பெயர்கள் தினந்தோறும் சம்பாதித் தும் கையிலே அவசரச் செலவிற்குக் காலணவுமில்லே. திடீ ரென உங்களுக்கு வேலே போய் விட்டால் என்ன பாடுபடு வீர்கள்? உணவன்னியில் உங்கள் குழந்தைகள் உயிர் நீங்க லாம். பசி, பசி, பசிக்கிறதே! அம்மா என வேறு குழந்தை கண்ணீர் விட்டழும். உங்கள் மனேவிகள் மொழிய மனமின்றி கண்களே விழித்து நோக்குவார்கள். உங்கள் தந்தை வாழ் நாட்கலெல்லாம் உழைத்து இப்பொழுது உணவன்னியில்படு த்த படுக்கையிலிருக்கிறுர். எழுந்திருக்கவும் வன்மையில்லே.

கங்காணி வரலாம். சிங்கப்பூர் செல். சரி பிழைப்பிற்கு என்ன செய்வதென நீயும் செல்லலாம். உங்கள் குழந்தை களே பிரம்பால் அடிப்பான். இளம் பெண்களிருந்தால் விளே யாடுவான். நீங்கள் வாயைத் திறந்தாலோ பல நாட்கள் பட்டினி கிடக்கவேண்டும். நீங்கள் படும்பாட்டை ஈசனு மறியான்,

இக் கஷ்டங்களினின்று விடுதலையாக வேண்டாமோ எனப் புகன்று அதற்காக ஒன்று சேர்ந்து முன்னேறவும் என, மாணவர்களே! அவர்களுக்குரைக்க உங்களிடம் உணர்வு இல்லை என எண்ணவேண்டாம். எழுந்து கிளம்பினால் எல்லாம் புலனாகும் எனப்புகன்று, கல்கி எருமை மாட்டிலேறி ஊர் சுற்றலானார்.

௬. வாயாடி வீராசாமி

"நீங்கள் திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள திருவானைக்காவலைப் பார்த்ததுண்டா? அதே கொள்ளிடம், தென்னந்தோப்பு, வாழைத்தோட்டம், பூஞ்சோலை, மாஞ்சோலை, நந்தவனம், மதில் சுவர், செம்மண், சுண்ணாம்பு பட்டை, இவைகளையே மனதில் நினைத்து, ஆடு, மாடு மனிதன், குப்பை, கூரைவீடு, ஜட்காவண்டி முதலியவைகளை மறந்து, பஞ்சப்பிரகாரம் அமைந்த பெரிய நிலயம் பாலைவன நடுவிலிருந்தால் எப்படி யிருக்குமோ அப்படித்தான் என் கண்ணெதிரில் பரமபதம் தோன்றிற்று" என வாயாடி சொன்னான்.

"வாயாடி எப்படி பரமபதத்தை அடையமுடியும்" என நான் சொல்லியதற்கு, அவன் கையிலிருந்த பொடிடப்பியின் மேல் மூன்று தரம் ஆணை வைத்து, தான் அந்த சத்தியமாய் சென்றிருந்ததாக உறுதி கூறினான்.

நான், அவன் சொல்லுவதை நம்பவே இல்லை. "நான் எதற்காக அனாவசியமாய் பொய் சொல்ல வேண்டும். எனக்கு அதனால் என்ன லாபம்?" என்று சொன்னவுடன், எனக்கு அதுவும் நியாயந்தான் எனப்புலப்பட்டது.

அதை அவன் எப்படிச் சொன்னுனே அப்படியே எழுதுகிறேன். வாசகர்களும் இதைப்படித்து பிறகு இது பொய்யா, நிஜமா என அவர்களே அறிந்துகொள்ளட்டும். பொய்யாயிருந்தால் நஷ்ட மொன்றில்லை. ஒரு வேளை நிஜ மாக இருந்தாலோ? அதற்காகத்தான் இக்கதை.

அவன் சொல்லியதாவது :—

"கோவில்களில் துவஜஸ்தம்பத்திற்கு அப்பால் சாதாரணமாய் இரண்டு சிலைகளை கர்ப்பக்கிரகத்தின் இரு பக்கமும் நீங்கள் பார்த்திருக்கலாம்.

அதைப்போலவே—அவர்களைப் பார்த்துத்தான் இக் கோவிலில் செய்தார்களா அல்லது பரமனே இதைப்பார்த் துத்தான் அப்படி சிருஷ்டித்தாரோ—நான் அதைச்சொல் வதற்கில்லை. இரு துவாரபாலகர்கள்! உருவின கத்திகளுடன் சுமார் எட்டடி உயரமான இருவர் நின்றிருந்தார்கள்

நான் வேகமாய் அவர்களை நோக்கிச் சென்றேன். ஒரு வன் ஏற இறங்க என்னைப்பார்த்தான். மற்றவன் கண்களைத் தூக்கினுன். புருவம் நெறித்தான். இருவரும் சற்று நிமிர்ந்து என்னையே, ஆந்தைபோல் உற்றுநோக்கினுர்கள்.

பனங்காட்டு நரியான நானு, இச் சலசலப்பிற் அஞ்சு வேன். பிரிட்டிஷ் போலீஸிற்கு பயப்படாத நான், இவன் மிரட்டலுக்கு மருளுவேனு?

நான் ஏதோ ஒன்றும் நடக்காததுபோல் வெகு வேக மாய்ப் பாய்ந்து சென்றேன்.

"யார்—யார்—அங்கே நில்?"

"நான் தான் வீராசாமி—"

"தேவர்களும் இருஷிகளுமே இங்கு அனுமதிக்கப் படுவதில்லை. இது பரமபதமென அறியாயோ? நரனே! இங்கு நில்லாதே போ?" என்றுன்.

அதற்குள், வீ-ரா-சாமி என்று புருவத்தைத் தூக்கி, அலட்சியமாய் புன்சிரிப்படைந்தான் வேறொரு துவார பாலகன்.

" உங்கள் யோக்கியதை எனக்குத் தெரியும். இருஷிகள் தேவர்களைப்போல் என்னை மிரட்டவேண்டாம் " என்றேன்.

" உன்னை நான் கண்டதே இல்லை. என் முன் நிற்பதற்கும் நீ அருகனல்லன். நான் எப்படியிருந்தால் உனக்கென்ன " என்றான்.

பரமன் இரகசியமாய்ப் பேசுவதையெல்லாம் மறைந்து செவியுற்று, பிறகு ஒன்றுந் தெரியாதவர்கள்போல் வேஷமாகி இருஷிகளினிடமெல்லாம் பகிரங்கஞ் செய்த பாசாங்குக்காரர்களே! உங்களுடைய யோக்கியதைகளை அறிந்து இராவணன், ஹிரணியனுப் போக உங்களை சபிக்க வில்லையா? நீங்கள் பூவுலகில் தோன்றி, செய்யாத அநீதிகள் உண்டோ? நீங்கள் செய்த அக்கிரமங்களை உரைக்க ஆதிசேஷனுலுமாகாது. என்னுடைய வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே?

பரமன் இருக்கும் பொழுதே பொய்யுரைக்கும் பாதகர்களாய் விட்டதே நீங்கள்? நான் பொய்யே உரைக்காத ஹரிச்சந்திரன் என உங்களிடம் உரைக்கவில்லை. நான் பூலோகத்திலிருக்கும்பொழுது கோவில் சென்றவுடன் நான் செய்யும் தீமைகளைப் பற்றி எல்லாம் மறந்து விடுவேன். பொய் என்பதே உரைப்பதில்லை. நான் வீட்டிலோ, வேறு எங்கிருந்த போதிலும், தெருவில் உற்சவ காலத்தில் பரமனை வாகனங்களில் எடுத்து வருங் காலத்தில், ஒருவேளை ஏதோ பொய்யுரைத்துக் கொண்டிருந்த போதிலும், உடனே நிறுத்தி பரமனே! உனக்கு நமஸ்காரமென வாயினுல் மனதாரப் போற்றுவேன். உங்களைப் போல் பச்சைப் பொய்யை அவர்முன் நான் புகன்றதே இல்லை, என்றேன்.

" நீ இந்த இடத்தைவிட்டுச் செல்லுகிருயா ?" என்று பயமுறுத்தி, கழுத்தைப் பிடித்துத் தள்ளுவேன் என இருவரும் சேர்ந்து அதட்டினார்கள்.

" இந்த அதட்டலுக் கெல்லாம் நான் அஞ்சேன். நீங்கள் செய்த கொடுமையைப் பொறுக்க முடியாமல் பரமன் கோபமாகி நர சன்மமும் நரசிம்மனுமாய் வரச்செய்தவர்கள் நீங்களே ! பூவுலகில் தோன்றி எத்தனை கெட்ட பெயரை பரமன் எடுத்தார் என்பது சென்னையிலிருந்து வந்த எனக்கே தெரியும். ஆதலால் இது அவருக்குத் தெரிந்து விடுமேயானால் அவர் எனக்காக இங்கே ஓடிவந்து உங்கள் சிலையே சிதைத்து விடுவார்." முன் ஒரு தடவையே அவர், " இது தான் கடைசிமுறை ! இனி மன்னிக்கமாட்டேன். ஜாக்கிரதையாக இருக்கவும். சமயம்போல் ஆளுக்கேற்றவாறு மரியாதையாயிருக்கவும்" என பரமன் சொல்லிய வார்த்தை அவர்களுக்கு ஞாபகத்திற்கு வந்தது.

துவாரபாலகர்கள் என்ன செய்வார்கள் ! உடனே அவர்கள் இனி இவனிடம் சச்சரவு செய்து கொள்வதில் பயனில்லை. நாம் தேவேந்திரனிடஞ்சென்று அவனை அழைத்து வருவோம் எனச் சொல்லி, தேவேந்திரனை ஒரு காவலன் சென்று கூப்பிட்டு வந்தான்.

" இவனைத்தானு அழைத்து வந்தீர்கள் ?" என்று நான் கேட்டேன். தேவேந்திரனுக்கு இது சற்று காதில் விழுந்தவுடன் சாயமிரங்கி விட்டது, கோபம் கலக்கம், கடும் மொழி, வேகம் இச்சின்னங்களே ; தேவேந்திரன் பெரியம்மை வந்தவர்போல் தென்பட்டான். படபடப்பான மீசை, பாதிக் கண்களை மூடிக்கொண்டு அல்லது திறந்து தான் மொழிந்தானே நான் சொல்வதற்கில்லை. ஆனல் அர்த்த இராத்திரி

யில் எவன் இந்த உபத்திரவஞ் செய்கிறது என அவன் ஓங்கி உரைத்ததே என் காதில் விழுந்தது.

"உடனே என்னடா! திருவையாழ்த்தான்போல் உளறுகிறாய்! வந்தது யார் என உனக்குத் தெரிய வில்லையா?" தேவேந்திரன்—திகைத்து திகிலாகி "யாரோ நம்மை யெல்லா மறிந்தவன் போலிருக்கின்றது. நம்மை டா-டா-என்று பேசுபவன் எப்படி யிருக்கவேண்டும்? அது வும் சகஜமாகவும் துரும்பாகவும் நம்மை எண்ணுகிறானே? ஆனாலும் தீரத்தைக் கைவிடாமல் சற்று மிரட்டுவோம்" என எண்ணி

"நடு நிசியில் பரமன் உறங்கும் காலமென அறியாயோ? ஏன் இப்பொழுது இங்கு; காலையில் கண்டு கொள்ளலாம் போ" என்றான்.

"நீ கள்ளத்தனமாய் இரவில் பரமன் எங்கும் உளான் என சற்றும் சிந்தனை செய்யாமல் நீ செய்த அக்கிரமத்தைவிட நான் இங்கு என்ன செய்கிறேன். அந்தத் தழும்புகள் இன்னம் ஆற வில்லையே. உனக்கு வெட்க மில்லையா?" என்றேன்.

தேவேந்திரனுக்குப் கோபம் வந்து விட்டது. ஆனால் என்ன செய்வான்? "எப்படி இவனுக்கு இதெல்லாம் தெரிந் தது. கௌதமர் தனக்கு நேர்ந்த அவமானத்தை அவரே உலகமெல்லாம் உரைக்க மாட்டார் என்பது நிச்சயம். தான் பதிவிரதை இல்லை என சொல்லிக் கொள்ளும் ஸ்திரீகளு முண்டோ? அப்பொழுது வேறு ஒருவருமே இல்லை. இவன் எப்படி யறிந்தான். அதுவுமன்னியில் அவன் பேசும் அலட்சியத்தால் நம்மை ஒரு புல்போலவே கருதுவ தாகக் காண்கிறது. இதில் ஏதோ விசேஷ மிருக்க வேண்டும். பரமனிடத்தில் அதிகச் செல்வாக்குள்ளவனோ!" எனப் பல மாதிரியாகக் நினைத்துக் கொண்டு,

"நீ வேண்டுமானால் இங்கே படுத்து உறங்கவும்— உள்ளே அனுப்ப எனக்கதிகார மில்லை. மகாவிஷ்ணுவே கருடனில் உட்கார்ந்து கொண்டு இங்கு காவல் புரிந்து வருகிறார். நீ என்னுடன் வா, அவரிடம் அழைத்துச் செல்லுகிறேன். அவரிஷ்டப்பட்டால் நீ இங்கிருக்கலாம்" என அவனை மகாவிஷ்ணுவினிடம் அழைத்துச் சென்றான்.

மகாவிஷ்ணு என்னைப் பார்த்து, வீராசாமி, பூவுலகில் நான் சக்ரவர்த்தியாயிருந்த காலத்தில் என்னைப் பற்றி நீ தூஷித்ததற்காக உன்னை எத்தனையோ தடவை நான் ஜெயிலில் அடைத்திருக்கிறேன். நீ நடமாடும் இடங்களிலெல்லாம் சி.ஐ.டி. போலீஸை வைத்து நீ செய்யும் வேலைகளை யெல்லாம் கவனித்து உன்னை அடக்கி வைத்திருந்தேன். வாய்ப்பூட்டு சட்டமும் உனக்காக நான் எற்படுத்தினேன். நான் வேண்டாமென்று எதைச் சொன்னேனோ அதையே நீ செய்து வந்தாய்; நீ இங்கும் வந்துவிட்டாய். இங்கு உன் அராஜகச் செயலெல்லாம் செல்லாது. நீ திரும்பிப் போ" என்றார்.

எனக்குக் கோபம் அதிகமாய் விட்டது. இவன் சக்ரவர்த்தியாயிருந்து 70 கோடி ஜனங்களை ஆண்டது உண்மையே. இவனுக்கு ஜகத்தில் செல்வாக்கு இருந்த தென்றால் பரமபதத்திலும் இவ்வளவு பெரிய பதவியை எப்படி அடைந்தான் என பலவாறாக நினைத்து,

"உன் யோக்கியதையை எல்லாம் என்னிடஞ் சொல்லாதே; பாதி இராத்திரியில் பிறந்து, நீ ஒருபுரம் இருந்து வேறொரு இடத்தில் வந்ததாக பாசாங்கு செய்தவனல்லவா? நீ வையகத்தில் செய்த செயலெல்லாம் வஞ்சகந்தானே? கள்ளங் கபடத்துடன் அல்லவா நீ பலரைக் கொன்றாய். தர்ம புத்திரரையும் பொய்யுரைக்கச் செய்தவன் நீயேயாகும் பெரியவனாய் அறிஞனாயுள்ள ஏழை எளியவர்களிட மிராமல் நான் அரசன், சிங்கம், ஆலமரம் என வன்மை பெற்றவர்களிடமே நீ விளங்கினாய். உன் பெயரைச் சொல்லி இன்னம் எத்

தனை பெயர்கள் ஏழை மக்களின் மனதை கொள்ளை கொண்டு போய் தேவேந்திர போக மனுபவித்து சுகமாய் வாழ்கிறார்கள். அகத்தினழகு முகத்தில்போல், நீ கருமையாயுளாய். பூலோகத்தில் அரை வயிற்று பிண்டத்திற்கு உணவில்லாமல் யாவரும் கடல் கடந்து குழந்தைகளைவிட்டு நாடோடுகின்றார்கள். ஆனால் நீ சுகமாக ஜகத்திலே பட்டு,பீதாம்பரம், புளியோதிரை, சர்க்கரைப் பொங்கல்—நகை, வைரம், வைடூரியம், மாணிக்கங்களுடன் விளங்குகின்றாய். உனக்கு ஏதேனும் குறைந்து விட்டால், உடனே பிரிட்டிஷ் கோர்ட்டில் கேஸ் தாக்கல் செய்து, அவர்களிடம் உன் கஜானாவைக் கொடுத்து ஒரு வித மான கவலையன்னியில் நீ அங்கே அதிகாரஞ் செய்கிறாய்.''

என்று பலவாறாக வாசாமகோசரமாய் மொழிய ஆரம்பிக்கவே, விஷ்ணு, வெட்கமடைந்து அந்த இடத்திலேயே அந்தர்த்தியானமாய் விட்டார். இதற்குள் மணி மூன்றாய் விட்டது. இவற்றையெல்லாம் பரமன் தன் கர்ப்பக் கிருஹத்தினின்றும் கேட்டிருந்தார். உடனே அவர் ''வாயாடி வீராசாமி'' என வெளியே வந்து, 'என்னை உள் அழைத்துச் சென்றார்' என்று அவன் சொல்லி முடித்தான்.

அழுத குழந்தைக்குத்தான் பால், தாய், அளிப்பாள் என நான் கேட்டதுண்டு. ஆனால் சுவர்கத்திலும் பரமனும் வாயாடியைத் தான் அன்புடன் வரவேற்றார் என்பதை நான் கேட்டபொழுது என் சித்தம் திகில் அடைந்து விட்டது. வாயாடி பிறகு இனி சொல்லப் போவதையெல்லாம் நான் கேட்டு கண்டபிறகே இது ஒரு வேளை உண்மையாயிருக்கலாமெனஎனக்கு விளங்கிற்று.நீங்களும் அதைப் படிக்கும் வரை ஒருவித திட்டமான எண்ணத்தையு மடைய வேண்டாம். வாயாடி இதைப்பற்றி இன்னம் பூர்ணமாகச் சொல்லவில்லையாதலால் நானும் இதைப்பற்றி பிறகே எழுத முடியும்.

கய. மறுபடியும் வாயாடி!

பிரம முகூர்த்த மெனப்படும் விடியற்காலையில் பரமன் வாயாடியுடன் பேசிக்கொண்டே பரமபத மண்டபத்தை அடைந்தார்.

நீங்கள் சென்னையிலுள்ள கோகலே ஹாலைப் பார்த்த துண்டா? தலைவர் மேடை, சமுக்காளம், நிருபர் பெஞ்சு, பால்கனி இவைகள் அங்கு எப்படி யிருக்கின்றனவோ அப்படியே தான் அந்த மண்டபமும்.

ஆனால் பரமபதத்தில் தூண்கள் இல்லை. எல்லாம் தானாகவே ஆதாரவில்லாமல் திகழும்.

பெசண்டின் பிரமஞான சபைக்கூட்டங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என எண்ணுகிறேன். ஊதாத்துணி, நட்சத்திரக் குடுத்தா அணிந்து பயமுடன் பணிகளைச் செய்வது போலுள்ள அவரது சிஷ்யகோடிகளே அங்கிருப்பது போல் எனக்கு விளங்கிற்று. அவர்கள் தான் தேவர்கள். வருபவர்களை வரவேற்று, அவர்களை அந்தஸ்து நிலைக்கேற்றவாறு அமர்த்தி, பரமன், பரம புருஷர்களுக்குப் பணி செய்வதே அவர்கள் தொண்டு. சபை ஆரம்பிப்பதற்கு முன்னால் அவர்கள் பாடுவது வழக்கம். பாடிய பிறகு எல்லோரும் வெளியில் வந்து விடுவார்கள். மூலை முடுக்கில் சிலர் நின்றுகொண்டு நடவடிக்கைகளைக் கவனிப்பார். நாங்கள் சென்றதும் எங்கும் நிசப்தமாய் விட்டது. கூட்டத்திலுள்ளவர்கள் என்னை உற்று நோக்கினது, எனக்கு வருத்தத்தைக் கொடுத்தது.

ஆயினும் ஒன்றையும் லட்சியஞ் செய்யாமல் பரம னுடன் அவன் பக்கத்திலேயே அமர்ந்தேன். ஆச்சாரிய புருஷர்களெல்லாம் பத்திரிகை நிருபர்களின் ஸ்தானத்தில் வெகு கவனமுடன் தோன்றினார்கள். தத்துவ சாஸ்திரி ஞானி முதலியவர்கள் ஸ்கூல் பிள்ளைகளைப்போல் அங்கு சமுக்காளத்தி லுட்கார்ந்திருந்தார்கள். மேடையில் விக்கிர மாதித்தியன், பிருதிவி ராஜன், சிவாஜி, நெப்போலியன், பிஸ்மார்க்கு, சாணக்கியன், மார்க்ஸ், டிராட்ஸ்கி முதலியவர் கள் சகஜமாய்த் தோன்றினார்கள். ஜனக மகாராஜா பரமன் பக்கத்திலேயே இருந்தார்.

ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். சபைக்கு எல்லா ரும் அனுமதிக்கப்படுவதில்லை. எமன் வாசலில் நின்று கொண்டு ஒவ்வொருவரையும் உற்று நோக்கியே உள்விடு கிறான். வெளியில் கோடிக்கணக்கான ஜனங்கள் நின்று கொண்டு ஆரவாரஞ் செய்ததுதான் என் மனதில் பதிந்து விட்டது. ஏழை, அடிமை, சாது, பக்தன், புலவன் முதலிய வர்கள் எல்லாம் நின்றுகொண்டு தவிப்பதுதான் இன்னம் மறக்கவில்லை. சபை ஆரம்பித்ததும் இவர்களின் நினைவே எனக்கு.

இதற்குள் திடீரென அங்குள்ள ஒளி யெல்லாம் மறைந்துவிட்டது. இங்கும் ஏதாவது பயாஸ்கோப் நடக்கப் போகிறதோ என்று நினைத்தேன்.

அதற்குள் ‘ஏன் பலர் இங்கு அனுமதிக்கப்படுவதில்லை’ என நெருப்புக் கொழுந்தால் எழுதி சுடர் விட்டெரியும் ஜுவாலைபோல் என் கண்ணில் பட்டது. உடனே ஒன்றன் பின் ஒன்றாய் பலபல காட்சிகள் என்முன் தோன்றலாயின. அவைகளை நான் பார்த்தது போலவே புகலுகிறேன் :—

கோடிக் கணக்கான ஜனங்கள் ஓவென்று கத்தி கூச்ச லிட்டுக் ககனம் கட கட வென்றாகி ஐயோ ஐயோ என அலறி

கலக்கம் குழப்பம் கொடுங் கோபத்துடன் காரிருளிலே கரு மேகத்தின் நடுவில் புயல்காற்றுடன் கலந்து கோவென கத்தின வண்ணமானல் உன் கருத்தில் என்ன தோன்றுமோ அதையே தான் நான் கண்ணுல் கண்டேன்.

அத்தகைய ஜனங்களின் நடுவே தேள் மழை, விஷப்பூச்சி, வண்டு, பாம்பு முதலியவைகளை யெல்லாம் சரமாரியாகப் பொழிந்து ஒவ்வொருவரின் தேகத்திலும் ஒரே காலத்தில் தோய்ந்து கடித்த வண்ணமாகவே இருப்பதை நான் கண்டவுடன் அவர்கள் போடும் கூச்சலின் காரணம் எனக்கு விளங்கிற்று.

இக்கூட்டத்தில் சில குறிப்பிட்டவர்களை, வானத்தில் பறக்கும் சிலர் பிரத்தியேகமாக அணுகி வேடிக்கை பார்ப்பதுபோல் நானறிந்தேன்.

பிரபஞ்சத்திலுள்ள மகாபாதகர்கள், வஞ்சகர்கள், எப்படியும் தங்கள் காரியத்தை சாதித்துக்கொள்ளும் பாவிகளே இவர்கள். என கொழுந்து விட்டெரியும் சுவாலையான எழுத்துக்களை அறிந்தேன்.

"ஐயோ! நான் செய்த கொலைகளெல்லாம் பரனுமக்காக நான் மனப் பூர்வமாக செய்தேன். இவைகளைச் செய்வதில் தோஷமில்லை யென்றும், இதுவே தூய நெறியெனவும், உன்னிடமிருந்து தோன்றியதாகவும், என்னெதிரில் கடுங் கஷ்டங்களைப்படும் இவனுல்தான் நான் படுகுழியில் விழுந்தேன்—இனி நான் செய்யேன்—பட்டதெலாம் போதும்" என சிலர் கனைப்பதுபோல் உருப்படியில்லாமல் என் காதில் விழுந்தன.

கூட்டத்தின் நடுவே சிலரின் தேகத்திலே உப்பைத் தடவி, ஈரமாக்கி, தோலை உரித்து, அதில் வேறு ஏதோ காரமான மருந்தைப் பூசி அவர்கள் தவிக்குங் காலத்தில், இதுதான் தேங்காய் எண்ணெய் என ஒரு தைலம் அளிக்கப்பட்டது. அவர்

கள் அதை வாங்கி தேகத்திலே தடவுங் காலத்தில் தீச் சுடரின் திராவகமென உடம்பெல்லாம் சுட்டு, புண் கொப்பளமான பிறகே தைலமில்லை என அவர்களுக்குப் புலனாயிற்று.

இதுதான் 'பரமன்' 'என்மொழியே பரமன் மொழி பரமன் 'மொழியே என் மொழி' எனச் சொல்லிய பல்லாயிரக் கணக்கான பண்டிதர்களே—இவர்கள் என என் காதில் விழுந்தன.

கடந்த தாது வருஷப் பஞ்சத்தை நீங்கள் பார்த்ததுண்டா? உண்ண உணவு, பருக நீரில்லாமல் சப்பாத்திப் பழம் தின்று, முகம்வாடி, தேகந்தளர்ந்து, கண் சுழண்டு, நரம்பு சுருண்டு, தோல்வற்றி, நடுத்தெருவெல்லாம் என்பு கூடுகள் நடமாடினால் எப்படியிருக்குமோ அதைத்தான் தாது வருஷ பஞ்சமென்றுரைப்பது.

ஒரே மூச்சில் 4 கோடி 37 லட்சமான அத்தகைய உங்களைச் சிறிய படகொன்றில் வைத்து, மலைகள்போல் கிளம்பும் சமுத்திர நடுவில் இரவு பன்னிரண்டு மணிக்குப் பார்த்தால் எப்படியிருக்குமோ—அதுதான் நான் பார்த்தது. இருள், இருள், இருள், அலை, அலை, அலை, இடி முழக்கம், கருமேகம், நிசப்தம், அதிர்ச்சி, ஆவேசம், அதிபயம், ஐயோ! ஐயோ! அப்பா! அம்மா! ஹா, ஹா, ஹா! ஹூ, ஹூ, ஹூ! இதைத்தான் நான் கண்டது. கேட்டது. உடனே படகு ஏதோ ஒரு பாறையிலடிபட்டு துண்டு துண்டாய் சிதறி விட்டது.

ஜனங்கள் எல்லாம் ஜலத்தில்—ஆனால் ஒருவரும் சாகவில்லை. தத்தளிப்பு, எல்லாரும் ஏதோ ஒரு கட்டையைக் கண்டுபிடித்துப் பற்றலாமென முயன்றால், அது ஒரு சமுத்திர நுரையாகவே மாறும். உடனே கலக்கம், குழப்பம்.

அப்படித் தத்தளிக்கும் கடலில் கப்பல்போல் ஒரு உருவு தோன்றும். யாவர்களும் சமீபமாவார்கள். உடனே மேகக் கூட்டங்களான அவை மறைந்து விடும்.

உடனே வானத்தையும் பிளக்கும் இடிமுழக்கம் போலுள்ள ஓசை கிளம்பும். பயங்கரமாய் பரிதாபமே புலனாகும். பேரிரைச்சல் என் பொறிகளை யெல்லாம் பதுங்கும்படி செய்துவிடும்.

'நான் கடவுளைக் கண்டேன், நான் சித்தன், நான் யோகி, நான் ரிஷி, நான் அவதாரம், நான் அவன் மகன், நானே அவன்,அவன் நான்,எல்லாம் கனவு!' என்று சொல்லி தாங்கள் கெட்டது மன்னியில் அன்னியர்களைக் கெடுத்தது பிழையே. இனி செய்யோம். அவர் கனவில், வந்தாரென்றும், ஜோசியம் சொன்னாரென்றும், அற்புதம் செய்தார் என்றும், அவர் பெண்களை விரும்புகிறார் எனவும் நான் இனி சொல்லேன் என்று பலவாறாக ஜனங்கள் முறையிட்டதே என் காதில் விழுந்தன.

மொழியைக் கண்டு அதிலிருந்தே ஒருவனை பெரியவன் என நினைத்தேன். தர்மத்தை என்னுடைய குறிப்பிட்ட மொழியே என நான் அறைகூவினேன். இனி அந்த மாயையிலகப்படோம் என்று கூவினதும் என் காதில் விழுந்தது. சொட்டு ஜலமன்னியில் தவிக்கும் அவாகள் சமுத்திர ஜலத்தையாவது பருகலாமென, குடித்த வுடனேயே உருகி செந்நீராய்ப் பாயும், உடனேகாய்ச்சின இரும்புபோல அவர்கள் அனுபவித்தது எனக்குக் குணமாயிற்று.உணவு, உணவு, உணவு என வேறு யாரோ சொல்வதுபோல் ஒரு அசரீராயிற்று. எல்லோரும் திறந்து எங்கே என நோக்கினார்கள். உடனே உணவு உணவு என எழுதி ஒவ்வொருவர் கையிலும் விழுந்தது. இவ் வெழுத்தை வைத்து நாங்கள் என்ன செய்வதெனக் கதறினார்கள். ஆனால் அங்கு கேட்பாரோ இல்லை. என்னால் இதையெல்லாம் பார்க்க முடியவில்லை.

உற்று நொக்கினேன். நான் பூவுலகத்தில் பட்டு பீதாம்பரம், காஷாயம் சடை தாடி, முதலியவைகளுடன் கண்ணால் கண்ட பலர் என்முன்.

"நாங்கள் ஏதோ ஆத்திரத்தாலும், ஆவேசத்தாலும், இது தான் கடைசி மொழி, இதுவே நித்திய மொழி, இதுவே அவன் மொழி என உரைத்துவிட்டோம். இதைப் பல தலைமுறை களுக்குப் பிறகும் சத்தியமென ஜனங்கள் எண்ணினால் நாங்கள் என்ன செய்வோம்?" என பலவாறாக அவர்கள் முறையிட்டதே என் மனதைக் கொள்ளைகொண்டு போய்விட்டது.

உடனே அடுத்த வினாடியிலே வேறு காட்சி என்னை கைப்பற்றியது.

இவைகள் யெல்லாம் நான் எத்தனை காலம் கண்டேன் என்பது எனக்கே புரியவில்லை. நான் கணக்கற்ற குய்யோ முறைகளைக் கேட்டேன். ஆனால் அதனாலுண்டான அதிர்ச்சி என்னிடம் இருப்பதைவிட வேறு ஞாபகம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

கண்ணை ஒருவாறு நான் நன்றாய்க் கசக்கி மறுபடியும் விழித்த பொழுது சபை ஆரம்பித்து விட்டதாக எனக்கு விளங்கிற்று.

சபையை ஆரம்பிப்பதற்கு முன்னால் யாரோ முன்ன தாக ஏற்பாடு செய்து கலைக்க வந்திருப்பதாக என் அருகி லிருந்தவன் சொன்னான்.

குழப்பம், கூச்சம், கலக்கமே. பரமனுக்கும் கோபம் வந்து "வேண்டுபவர்கள் எழுந்து தாராளமாகப் பேசலாம் மறைவில் ஒன்றும் வேண்டாம்" என்றார்.

ஜமக்காளத்திநின்று யாரோ ஒருவன் எழுந்தான். நான் தூரமாக இருந்தபடியால் அவன் விபூதிதான் தரித் திருந்தானோ? அல்லது திருநாமமோ, அல்லது முத்திரையோ என எனக்கு நன்றாக விளங்க வில்லை. தாடியும் நீளம். சடை யும் இருந்ததெனவே அவன் தொப்பியால் ஊகித்தேன்.

ரிஷி, யோகி, பண்டிதன்--எல்லோரும் ஜமக்காளத்திலிருக்கவும்—ஆசாரி புருஷர்கள் பத்திரிகை நிரூப ஸ்தாபனத்திலிருக்க—வாயாடி, பிஷ்மார்க்கு, சாணக்கியன், நெப்போலியன் மாத்திரம்—என் மேடையில் அமரவேண்டும்! என சொன்னான். உடனே மற்றொருவன் எழுந்து, 'நான் புவியில் தான் அநியாயம் நடைபெறுமென நினைத்தேன். இங்குமா இது! கோடிக்கணக்கான ஜனங்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இங்குமா—ஏழை, பஞ்சமன், அடிமை, பேடி, சண்டாளன் முதலியவர்கள்' என உரக்கக்கூவினான். 'அழுத்தமாக இதைக் கண்டிப்போம்—கோபமுடன் கத்துவோம்; பரமபதமுமா இப்பாவத்தைச் செய்ய வேண்டும்' என இன்னம் பலவாறாக சப்தம் கிளம்பிற்று.

* * *

உடனே பிஷ்மார்க்கு என்பவன் எழுந்து பேசியதாவது:—

சத்தம், கூச்சல் பரமபதத்திற்கு அழகாகாது. நான் சொல்வதைக் கவனிக்கவும். அவரவர்களுக்கேற்ற ஸ்தானமே இங்கு அளிக்கப்பட்டுள. இதில் சந்தேகமில்லை. ஞானம், அறிவு, யோகம் முதலியவைகளைப்பற்றி தப்பபிப்பிராயம் இருப்பதாகத் தெரிகிறது. அதை அகற்றிவிட வேண்டும். புவியிலும், பரமபதத்திலும், பிரபஞ்சத்திலும் பெரிய பொருள் வன்மையே யாகும்.

வன்மையினாலே வானம் வையகமெல்லாம் நிலைத்துள. வன்மையினால் சூரியனின் பிரகாசம், பூமி பொருமையுடனிருப்பதும், பலமுடனிருப்பதும் வன்மையின் மகிமையே. இமயமலை வன்மை வடிவமே. நதிகளும் வன்மை யோட்டமே. ஏரி, குளங்கள் வன்மையின் விளக்கமே.

புல் பூண்டு, பறவை, மிருகங்களில் வன்மையுள்ளவைகளே பெருமை யுள்ளவைகளாகும். மாந்தர்களில் வன்மையுள்ளவனே

அரசன். அரசன் அறிஞர்களையெலலாம் அழிக்கலாம். அரசனன்னியில் அறிஞர் அருமையாவார்கள்.

அதிகமாக உண்பவன் எப்படி சாப்பாட்டு இராமன் எனப்படுவனோ, அப்படியே அதிகமாகப் படிப்பவனும் சாஸ்திர சோம்பேறியே! மதுவுண்டு; இனிமை பருகுபவன் மயக்கமடையும் குடிகாரன் எனப்படுவது போல், மொழி தின்று, பாக்கள் பருகி பெருமையடைபவனும் புலனேவேசமுள்ளவனே! நூல்களெல்லாம் கற்று, மனப்பாடஞ் செய்து, பாராமல் நினைத்தபொழுதெல்லாம் ஒப்பிப்பவன், கடையின் துணியெல்லாம் பெற்று அலங்காரமாய் வேஷமணிந்த டம்பாச்சாரியே. மதம், தர்மம், சத்தியமென அடிக்கடி உரைப்பது சென்னையிலே பேல் மூட்டைகள் தள்ளும் கூலி பாடும்பாட்டேயாகும். ஆதலால் இந்த பாமரப் பொருள்கள் பெருமையடைய வேண்டுமானல் வன்மை வேண்டும்.

'நான் அறிவு வேண்டாமென உரைக்கவில்லை. ஆனல் வன்மையே அறிவைவிட சிறந்தது. அறிவன்னியில் வன்மை விளங்கும்; வன்மையன்னியில் அறிவு விளங்காது. நான் இனி அதிகமுரைக்க வேண்டியதில்லை. நீங்கள் பரமபதத்தி லுள்ளபடியால் சூட்சமமாகவே அறிவித்தேன். இனி நீங்களே அறிந்துகொள்ளலா'மென அவன் முடித்து உட்கார்ந்தான்.

உடனே சாணக்கியன் எழுந்து பேசியதாவது.—

"ஏழை, பேடி, அடிமைக்கு ஏன் சுவர்கமில்லையென்பதே கேள்வி? 'குருடனுக்கு ஏன் காட்சியில்லை; செவிடனுக்கு ஏன் செவியில்லை; அறிவில்லை, என நீங்கள் கேட்கலாம். இகலோகத்திலுள்ள பொருளை சம்பாதிக்கத் திறனற்றவன சுவர்கப் பெருமையை யடைவான்! கைமேல் கிடைக்கும் களிப்பின் காரணமான காசை அவன் கவனமுடன் காப்பாற்றி குவிக்கக் கையாலாகவில்லையென்றல் காணுத கைவல்லியத்தை குணமாக்கும் வன்மை அவனுக்கு எப்படியாகுமோ? தன்னந்தானகவே தளர்ந்து அடிமையாயிருந்தும் அதிலிருந்து அகல முயலாத

வன் எப்படி அமுதத்தை அடைய அருகனுவன்? சந்திரன் ஏழையானுல் அன்று அமாவாசை, புலன்களின் பெருமை யகன்ருல் பஞ்சமனுவான். பாரில் மனிதன் மனமகன்ருல் அடிமை யாவான். இன்பம், சுகம், இச்சையகன்ருல் பேடியாவான். சுயலாபத்திற்காக தேசத்தை விற்பவன் சண்டாளனுவான். காணும், கேட்டும், அறியும், பரிசிக்கும், இன்பத்திலேயே பற்றிலாதவனுக்கு காணுத, கேட்காத, அறியாத, பரமபதம் அவனுக்கு யாது பயன்?''

'இகத்தை சம்பாதிப்பவர்களுக்கே பரம். இகத்தில் இழிந்தவர்களுக்கு பரமபதம் பாதகத்தையே விளைவிக்கும். மனிதனின் அடிமையாயிருப்பதே ஆனந்தமென எண்ணுபவனுக்கு பரமபதத்திலும் அடிமை பதவியை அவன் ஏன் அஞ்ச வேண்டும்? தரணியில் தீரபதவியை யடையாதவன் பரமபதத்தில் தூய்மையான தீர பதவியை எப்படி அடைவான்?' என பலவாருக மொழிந்து, 'இங்கு நடப்பதெல்லாம் நியாயமே' என சொல்லி ஆசனத்தில் அமர்ந்தார்.

உடனே நெப்போலியன் எழுந்து பேசியதாவது :—

'ஜனங்கள் நான் என் இங்கு. இருக்கவேண்டுமென சொல்லுகிருர்கள். நான் சகத்திலே பரமனின் பெரும் சூட்சமத்தை யறிந்திருந்தேன். அதற்காகவே என் வாழ்நாளைக் கழித்தேன். அதை நான் ஒரு மொழியில் சொல்வேனேயானுல் அது சண்டை என்னும் பதமேயாகும்.'

'சண்டை, சண்டை, சண்டை. இதுவே சகமாகும். ஒரு சிறிய விதையொன்றை பூமியில் புதைக்கவும், அது பூமியுடன் சண்டை செய்து தானே இறந்துவிடும். ஆனுல் அது அதற்குள் பூமியின் சத்தை யெல்லாம் கிரகித்து, அதைப் பிளந்து, ஆகாயம் நோக்கி பெரும் மரமாக வளர்ந்து காய்கனிகளை யளிக்கும்.'

'சமாதானத்தை ஸ்தாபித்து, கல்வி சாஸ்திரங்களை குணமாக்கி, நீதிநெறி வழங்கி, எல்லாவித சவுகரியங்களையும் ஜனங்

களுக்கு அளிக்கும் தலைவன் சண்டையில் சிறந்தவனாயிருக்க வேண்டும்.'

'விருத்திராசுரனைக் கொன்றதினாலல்லவா இந்திரனுக்குப் பெருமை! பரமனும், இராமன், வாமனன், நரசிம்மனாய்த் தோன்றி அரக்கர்களை அழிக்காவிடில் அவரைப் பூஜிப்பதற்கு எவர் விரும்புவார்? சண்டையே சிருட்டி, சண்டையே வளர்ச்சி, சண்டையே முடிவாகும். சண்டை யன்னியில் சகமில்லை. ஆகையால் எங்களைப் பற்றிய சந்தேகங்களை யெல்லாம் இங்ஙனம் நீக்கிக்கொள்ளலாம்' எனச் சொல்லி அமர்ந்தார். உடனே எங்கும் சமாதானமாய் விட்டது.

உடனே பரமன் எழுந்திருந்து ஏதோ உரைத்தார். அது எனக்குச் சரியாய்ப் புரியவில்லை. நான் அதை நன்ருய் அறிவிக்கும்படி கேட்டேன். அவர் நீ இன்னம் அருகதையாகவில்லை என சொல்லி வாயை மூடினரோ இல்லையோ பரமபதமும், பரமனும் அந்தர்தியானமானர்.

கண்களைத் திறந்தேன். சற்று சிந்தனையாகி அமைதியுடன் அமர்ந்தேன். 'எனது ஆப்த நண்பனான உனக்கே இதை உரைத்தேன். நீ இதை ஒருவரிடமும் சொல்லாதே. எல்லாம் சத்தியம் என மறுபடியும் மூன்று தடவை பொடிடப்பியில் அடித்து வாயாடி வீராசாமி இதோ வருகிறேன்' என மறைந்து விட்டான்.

என்க்கு இன்னம் சில சந்தேகங்களுண்டு. அவன் ஒரு வேளை திரும்பி வருவானேயானல் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென இருக்கிறேன்.

கக. அநாதி அசுரர்களின் அற்புத ஆனந்தம்

பாதாளத்தின்கண், அகாத ஆழத்திலுள்ள அநியாய புரியில் ஒரு பெருங் கூட்டம் கூடி, அசுரர்களெல்லாம் புதிய ஆபத்திலிருந்து மீண்டதற்கு ஆனந்த வைபவ உற்சாகமாடினார்கள். இருள் நிறைந்த அந்த நகரத்தில் தீவட்டியுடன் தூதர்கள் இங்குமங்கும் குதூகலத்துடன் "சபை ஆரம்பித்து விட்டது" என்று கூவிக்கொண்டே ஓடினார்கள். பூதம், பிரேதம், பிசாசு, அரக்கன், அசுரன், முதலிய யாவர்களும் அவரவர்களுக்கிட்ட ஆசனத்தில் அமர்ந்தார்கள். இரத்தத்தினால் வர்ணம் பூசப்பட்ட மேடையில் தலைவர்கள் ஒவ்வொருவரும் உட்கார்ந்தார்கள்.

கபடாசுரன் கத்தர் உடை தரித்துக் காந்தி குல்லா அணிந்து, அவனுக்கிட்ட ஆசனத்தில் அமர்ந்தான். சுயநலன் கந்தல் துணியைத் தரித்துப் பிச்சைக்காரனைப்போல் நுழைந்தான். புரட்டன் புலவன் வேடம் பூண்டும், சைதான் வீணையுடனும், அவரவர்களுக்கான ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

கடைசியாக அரக்கர்கள் அதிபதியான விரோசனன் நுழைந்து தலைமை ஆசனத்தில் அமர்ந்தான். விரோசனன் பிறகு எழுந்திருந்து அடியிற்கண்ட தீர்மானத்தைப் படித்து, கபடாசுரனைப் பேச வேண்டுமென்று கூறி உட்கார்ந்தார்.

தீர்மானம்

"பூலோகத்தின்கண் முக்கியமாய் பரதக் கண்டத்தில் பதினாயிர வருடங்களாய் அரசு புரிந்து வந்த நம்மை, அடியோடு அழிப்பதற்கு, ராஜாராம் மோகனராயர், ஸ்ரீ தயானந்தர், ஸ்ரீ

காந்தி, முதலியவர்களால் செய்யப்பட்ட ஆபத்துக்களிலிருந்து தப்பிப் பிழைத்தற்காக நம் ஆனந்தத்தை இக்கூட்டத்தின் மூல மாக கொண்டாடுகிறோம்.

கபடாசுரனின் போதனை

கரகோஷத்தின் நடுவே காந்தி குல்லா அணிந்தவன் எழுந்திருந்து பேசியதின் சாரமாவது :—நமக்கேற்பட்ட ஆபத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டுவதில்லை. ஞானம், கல்வி, அறிவு நாடெங்கும் பரவி நம்மை நாசமாகச் செய்யவே, "கஷ்டகாலம் வரும் பொழுதெல்லாம் அவதாரம் எடுப்பேன்" என்று விஷ்ணு சொன்னது போல் நாமும் செய்யவேண்டும் மென்பதை உணர்ந்து, இந்த யுகத்திற்கு எந்த அவதாரம் சிறந்தது என யோசித்து,

ஆங்கிலங்கற்று, நியாயவாதி தொழில் புரிந்தால், பேசுந் திறமை வரும் என்று எண்ணி, அதற்குள்ள பி. எல். பரிட்சை தேறி, பெரும்புகழைச் சம்பாதித்தேன்.

நாவன்மையை அடைந்தேன். அடுக்கடுக்காக அலங்கார வசனமொழிகளைக் கற்றேன். விதண்டா வாதம் அறிந்தேன். கத்தர் உடை அணிந்தேன். "பேசப் பிறந்தாயோ, சாகப் பிறந்தாயோ," என்னும் தத்துவத்தை விளம்பரஞ் செய்தேன். எனது நாவன்மையினால் சரஸ்வதி அவதாரமான உபன்னியாசகரென்று பெயர் பெற்றது மன்னியில் தேச பக்தனாகவும் மாறிவிட்டேன்.

சன்னியாசியாகிச் சீதையை அடைந்ததுபோல் பாரத தேவியையும் கொள்ளை கொண்டுவந்துவிட்டேன். கத்தர்உடை தரித்து எனது நாவன்மையினால் மடப்பயலான மனதை மனோ ராஜ்யமெனவும், முரட்டாட்ட உள்ளத்தைச், சண்டித்தன மெனவும், கடும் பாவியான சித்தத்தை பயனற்ற யோசனை யென்றும், மாயப் பயலான மனத்தை அறிய வொண்ணு

அகாதமெனவும்,ஜகத்தைப் புரட்டும் புத்தியை, மயங்தம் வழக் காளி யெனவும், நாடெங்கும் பரவச் செய்தவிட்டேன். பயங் கரவடிவை உடைய வலிமையை மிருகத்தனமென்றும், பிரேத சண்டாளனுன அன்னபானுதிகளை ஆன்ம உணர்வின் பகை யாளி எனவும், பெரும் ஆபத்தான ஞாபக சக்தியைப் பழைய புராணமெனவும், வஞ்சகச் சிறுக்கியான ஆசையை மாயா மோகினி எனவும், உலகத்தையே, நாசஞ் செய்யும் உயிரை ஆணவம், திமிர் என எங்கும் பரவச் செய்து விட்டேன். நான் என் தொழிலைச் செய்யும்வரை, இப்போது கிடைத்த ஜயத்தை எப்போழதும் சாசுவதமா யிருக்கச்செய்யு மென் பதில் சந்தேகமில்லை.

இந்த யுகம் சிறந்த யுகமாகும். இக்கொண்டாட்டமே, நமது சந்ததிகளுக்குத் தீபகற்பத்தைப் போல் விளங்கு மென்று கரகோஷத்தினிடையே சொல்லி உட்கார்ந்தார்.

சங்கீத சைதானின் சோற்பொழிவு

பிறகு வீணையுடன் கூடிய சைதான் எழுந்து பேசியதின் சாரமாவது:—என் உண்மை வடிவை அடைந்தால் பாரத மக்கள் வெறுப்பார்கள். பகையாளி குடியை எப்படி உறவா டிக் கெடுப்பதெனு எவ்வுருவம் அடைவதென்று தீர்க்கா லோசனை செய்தேன். மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எப்படிப் புகுவதென்று, ஆலோசனை செய்தேன். ஐம்புலன் களே சிறந்த வழியென்று அறிந்தேன். ரூபலாவண்ணிய அழகு வடிவத்தால், கண்கள் வழியாகச் சென்றதும், டம்பாச் சாரி, என என்னைத் துரத்தி விட்டார்கள். பெண் தேக வடிவமெடுத்துப் பரிசத்தின் மூலமாய்ச் சென்றதும், என்னை மாயை என்று மருட்டி விட்டார்கள். இரசத்தின் மூல மாகச் சென்ருலோ, பேரூணன் என்று பட்டமளிக்கப்பட் டேன். கந்தத்தின் மூலமாகச் சென்றேன், சிற்றின்ப இச்சை உள்ளவன் என என்னை சிதைத்துவிட்டார்கள். ஒசை

வேடம் அணிந்து சென்றதும், இராகம், தாளம், முதலியவைக
ளால் வரவேற்று, அவர்கள் சரஸ்வதி எனவே என்னை
நம்பி, அவர்கள் யாவரும் முழு அங்கங்களுடன் என் சரணு
கதியை அடைந்தார்கள்.

*நமக்கு முக்கியமான வேலைகளைச் செய்யத் தலைப்பட்டு
விட்டேன். இந்த ஓசையாகிய சங்கீதத்தின் மூலமாகவே நமது
பகையாளியாகிய, உயிர், அதனுல் உண்டாகும், வலிமை, புத்தி,
முதலியவைகளை நாசஞ் செய்து, அப்படிச் சற்று உயிர் இருந்த
போதிலும் அதை என் வயப்படுத்தி சிற்றின்பம், மயக்கம், முத
லியவைகளில் முழுகச் செய்து விட்டேன். கல்நெஞ்சை உரு
கச் செய்யும் சக்தியை உடைய நான், இளகும் நெஞ்சாயிருந்
தால் கேட்பானேன்! அதிக உணர்வுள்ளவனையும் உறங்கச்
செய்பவன் நான். உணர்வற்ற பாரதமக்களை நான் எதுதான்
செய்யமுடியாது? என்னை சற்று செவியுற்ருல் இன்னும் கேட்
கும்படி செய்வேன். அவனை மயக்கி விடுவேன். அவனில் உயிர்
உள்ளவரை என்மேல் மோகமடைவான். மிருக உணர்வை உடை
யவனின் குணத்தை மனிதனின் மெல்லிய குணமாகச்செய்வது
டன் முன்கோபியாகவுஞ் செய்து விடுவேன். அவன் சிற்றின்
பத்தில் ஐக்கியமாய் விடுவன். நான் நன்ருய் விளங்கும் ஒரு
வனிடத்தில் சன்மார்க்க மென்பதையே ஒழித்து விடுவேன்.
அமைதிகாலத்தில் 'ஆபத்து' 'ஆபத்து' என்னும் சப்தத்தைக்
கிளப்பி, யுத்த களத்தில் ஜனங்களை யமபுரத்திற்கு சங்கீதத்தால்
அழைத்து வருபவன் நானே. உரோமாபுரி எரியுங்கால் கரு
ணையை ஒழித்து மனிதத் தன்மையை நீரோவிடம் மறக்கச்
செய்த வீரன் நானல்லவா? (கரகோஷம்) ஆயிரக் கணக்கான
பெண்களை யமலோக மடைய, உடன்கட்டை ஏறுவதற்குச்
சாதகமா யிருந்து, ஜனக் கூட்டங்களின் உணர்வை உறங்கச்
செய்த உத்தம புருடனல்லவா நான்! (கரகோஷம்) இந்து அரச,
மொகலாய மன்னர்களின் முன்னிலையிலிருந்து கொண்டே
எனது மேன்மையினுல் அவர்களின் அரசாங்கத்தைக் கவிழ்த்*

தது நானல்லவா! (ஆம்! ஆம்! என கரகோஷம்) சுதந்திரத்தைச் சிதைக்க, இந்து முஸ்லிம்களைப் பிரித்து அடிதடியை உண்டு பண்ணும் புருஷனல்லவா நான்! தேவஸ்தானமான கடும்பாவி கடவுளின் கிருகத்தில், பரமபதமான, பரத்தையை நிறுத்தியது நானல்லவா! (நீண்ட கரகோஷம்) ஆதிகாலத்தில் சங்கீத வடிவந் தரித்து, பாம்பு, பசு, குழந்தை, கோபிகளையே, இழுத்தேன். இப்பொழுதோ, அந்தணன், அறிவாளி, கவி, பக்தன், விரக்தன் யாவரையும், வென்று விட்டேன்! நான் இருக்கும்வரை, காலனை காரணனும், பாவியான புத்தியும், மாயையான மனதும், சீரழிந்த சித்தமும், உயிரான உண்மையும் இல்லையென நீங்கள் அறிந்து கொள்ளலாம். நான் பேயர் புகழையும் அடைந்து அவர்களின் அன்யோன்ய நண்பனாகி விட்டேன். நான் சொல்வதை யெல்லாம் கேட்பார்கள். ஆகையால் நம்முடைய ஜயம் நித்திய ஜயம். எப்பொழுதும் அது சாசுவதமாயிருக்க ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று பலத்த கரகோஷத்தினிடையே தீர்மானத்தை ஆமோதித்து வீணையை மீட்டிக் கொண்டே அசைந்து ஆடுந் தலையுடன் உட்கார்ந்தார்.

சுய நலனின் கர்ச்சனை

கந்தைத் துணி அணிந்த சுயநலன் எழுந்து, தீர்மானத்தை ஆமோதித்துப் பேசியதின் சாரமாவது :—

உலகத்திலே முன் அடைய ஒரு வழிதான் உண்டு. எது வேண்டுமோ, அதைவேண்டாமென்றால் அப்பொழுது அது கட்டாயமாகக் கிடைத்துவிடும்.

சம்பவமொன்றைக் கேளுங்கள். சன்னியாசி ஒருவன் கிராமமொன்றை அடைந்து வீடு வீடாகப் போய்ப் பிச்சை கேட்டான். பசிக்கு வேண்டிய உணவு கிடைக்கவில்லை. பிறகு, கிராமத்தின் குளத்தினருகிலுட்கார்ந்து எனக்கு யாதொன்றும் தேவையில்லை யென்று பகிரங்கம் செய்தான். இதற்குச் சற்

றுப் பிறகு ஊர் ஜனங்களெல்லாம் இவர் ஏதோ மகான் என்று எண்ணி அன்ன ஆகாராதிகளுடன் ஏராளமாய் கொண்டு வந்து இவனுக் களித்தார்கள். இதை வெறுப்பவன் போல் கொஞ்சமளவே புசித்து வந்தான். பிறகு நாளடைவில் ஊர் ஜனங்கள் அவனுக்கு மடம் முதலியவைகளைக் கட்டுவித்தார்கள். பிறகு ஏராளமாய்ப் பணத்தையு மடைந்தான். எல்லாம் தன் சுவாதீனமடைந்தவுடன் தன்னிச்சைபோல் செய்பவனுகி, பேரும், புகழையும் அடைந்து யாவரையும் தன் வலையில் சிக்கச் செய்தான்.

பண மண்ணியிலிருப்பவன் பிணமென்று பழமொழியுண்டு. பாரத மக்களின் பணத்தைத் திரட்ட வழியென்னவென்று யோசித்து, கதையின் சூட்சமத்தைக் கையாடலானேன். கடவுளைக் கருவியாகக் கொண்டு, அங்கங்கு சென்று, உட்கார்ந்து, உலகத்தை வெறுத்தவன் என்று பகிரங்கம் செய்தேன். உண்மையாக நாளடைவில் நாட்டின் பணமெல்லாம் என்னிடஞ் சேர்ந்தது. எனக்கு மடங்களும், தேவாலயங்களும் நிர்மாணிக்கப்பட்டன. எனக்கு, இரதம், கஜம், குதிரை ஆட்களாகிய படைகள் ஏற்பட்டுவிட்டன. ஆயிரக் கணக்கான ஜனங்கள் அடிமையானுர்கள். அவர்களுக்கு அன்னத்தை அளித்து சிஷ்ராக்கிக் கொண்டேன். இவ்வளவு பதவிகளை அடைந்தபோதிலும் என் சூட்சமாகிய எளிய வேஷத்தை விடவில்லை. பாமரர்கள் பார்வையிலிருந்தே நிர்ணயஞ் செய்கிறுர்கள். இந்த கந்தலை அணிந்து கொண்டே இன்னுங் கொள்ளை கொண்டு வருகிறேன். எனக்குப் பகையாளியாகிற அகாலியரும், நான் வெறுக்கும் வரதராஜுலுவும் சற்று சிரமத்தைத் தருகிறுர்கள். ஆனுல் அது கவலையில்லை. நம்மிடம் செல்வம், முதலியவைகள் உண்டு. நம்மை நித்தியமாய் ஜயிக்க இவர்களால் முடியாது. (கரகோஷம்) புளியங் கொம்பைப் பிடி என்று பழமொழி உண்டு.

அப்படியே கடவுள் பெயரைச் சொல்லி எது வேண்டு மானாலும் செய்யலாம். சட்டத்தின் பெயர் சொல்லி அரசர்கள் தங்கள் காரியத்தைச் சாதிப்பதுபோல் தர்மத்தின் பெயரைக் கொண்டே அதர்மஞ் செய்யவேண்டும். அப்பொழுது நிச்சய மாகவே காரியங் கைகூடும் (கரகோஷம்). நான் இதையெல் லாம் அதிகமாக விரிக்கவேண்டியதில்லை. காலதாமதமாய் விட்டபடியால் ஒரே வார்த்தையுடன் உட்காருகிறேன். தர் மத்தை அழிக்க காலம் வருமே யானால், மாரீசன் மரிக்குங்கால் இலட்சுமணா என்று கூவியதுபோல் தர்மத்திற்கு "அபாயம்" "ஆபத்து" என்று கூக்குரல் இடவேண்டும். ஞானம் வராம லிருப்பதற்கு பக்தியை நாடெங்கும் பதியவைக்க வேண்டும். நாம் சேகரித்த உற்சவ உல்லாசங்களுக்காக ஏற்பட்ட பணத் தைக்கல்வி, அறிவின்விருத்திக்கு உபயோகப்படுத்தப்பட்டால் கடவுளுக்கு ஆபத்து என்று கூவவேண்டும் (கேளுங்கள், கேளுங்கள்). இந்த வைபவம் இவையெல்லாம் நம்முடைய ஞாப கத்தில் இருக்குமென்று எண்ணுகிறேன்.

இத் தீர்மானத்தை நீங்கள் முழுமனதுடன் ஆதரிக்க வெண்டுமென்று சொல்லி உட்கார்ந்தார்.

புரட்டன், அங்கு கூடியுள்ள யாவரின் மனதும் உரு கும்படி, பாடிக்கொண்டே எழுந்து சற்று வீணையை மீட் டின பிறகு தீர்மானத்தை ஆமோதிப்பதறகாகப் பேசியதின் சாராம்சமாவது:—

உலகத்திலே மெய்யை விட பொய்யிற்கே புகழ் அதி கம். பொய்யைக் கொண்டாடுவது ஜனங்களின் சுவாபவம, இயற்கைப் பொருள்களை ஜனங்கள் வெறுக்கிறார்கள். செயற்கையை சீருடன் வாழ்த்துகிறார்கள். காக்கையைக் கண்டால் கைதட்டி ஓட்டிவிடுவார்கள். களிமண்ணால் காக்கை யின் உருவை எவராவது செய்யும்பட்சத்தில் அதைக்கண்டு களிப்பார்கள். காக்கை கூவினால் கல்லெடுத் தடிப்பார்கள்.

கசடன் அதைப்போல் கூவினுல் கொண்டாடி வெகுமதி செய்வார்கள். இதுதான் பொய்யிற்கிருக்கும் அழியாப் புகழ்.

*　　*　　*　　*

உலகத்திலே எல்லாவற்றையும்விட மேன்மையாயிருப்பது மனித கோடிகள். அது எதனுல் என்ருல் ஐம்புலன்களுள் உண்டாகும் யாவற்றையும் விளங்கச் செய்யும் வலிமை படைத்தபடியால்தான். இதற்குக் கருவியாயிருப்பது நாம் உச்சரிக்கும் பதங்களே. பதம் அல்லது மொழிகளே உலகத்தினதிபதி. அது சர்வவல்லமை பெற்றது. தேசங்கள் சண்டையிட்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடிவது மொழிகளின் மாறுதலான சேர்க்கையினுல்தான். பெரியயுத்தங்கள் முடிவு பெறுவதும் மொழிகளின் வல்லமையால்தான். சிலமொழிகள் நம்மை மயக்கி பெரும் உற்சாகத்தில் சேர்த்துவிடுகிறது. சிலவைகள் நம்மை அழியாத் துக்கத்தில் அமிழ்த்து விடுகின்றன. சாகும்வரை சஞ்சலத்தைக் கொணர்ந்து உணர்வன்னியில் செய்வதும், அல்லது புத்துயிரை அளித்து, பெரும் நோக்கத்தைக் கொடுத்து ஜீவ நாடியை ஓடச்செய்வதும் அவ்வார்த்தைகளே. அரசர்போல் உணர்ச்சியை அளித்து, ஆண்டிபோல் துறக்கச்செய்வதும் அவ்வார்த்தைகளே ! இடிபோல் பேரிரைச்சலுடன் நம்மனதைக் கலக்கி, தென்றல் காற்றுபோல் இளஞ்சுகம் விளைவிப்பதும் இம்மொழிகளே. மின்னல்போல் தோன்றி மறையச்செய்து, கருங்கல் சிலைபோல் பதியச் செய்வதும் அப்பதங்களே. அணையும் புகைவிளக்குப் போலிருந்து சூரிய ஜோதிபோல் வாழ உதவியாயிருப்பதும் அம்மொழிகளே. இதன் மகிமையை அறிந்தேதான் தேவர்கள் உலகத்திலே பெரும் நூலென கருதப்படும் வேதத்தைச் சப்த (மொழி) வடிவமென்ருர்கள் போலும். ஒரு சமூகத்தின் வாழ்வும் மேன்மையும் அம்மொழிகளால்தான். இதனுல்தான் முதன் முதலில்

மொழியே உலகத்தின் ஆரம்பமென்கிறார்கள். மொழியின் வல்லமையினால்தான் அல்லவா அசுரர்களாகிய நமக்கு அறியா இகழ்வை வால்மீகரும், வியாசரும் தந்தார்? பொய் புரட்டு வடிவுடைய நான்,

* * * *

உலகத்தை ஆளவேண்டுமானால் மொழியின் வல்லமையை அறியவேண்டும். அதற்காக அவர்களின் இலக்கண இலக்கியம் படித்து பெரும்புலவனானேன். சொற்களின் உண்மைப் பொருளைக் கொலைசெய்து, சத்தியம்போல் விபரீத விளக்கஞ் செய்வதைத் தொழிலாகக் கொண்டேன். ஒன்றை கவனிக்கவும். பொய்யை மாத்திரமே சொல்லிவந்தால் யாவரும் இலட்சியஞ் செய்யார்கள். இனிப்பினால் மறைக்கப்பட்ட கசப்பை உட்கொள்வதுபோல் சத்தியமூடி அணிந்து நமது வேலையைச் செய்யவேண்டும். இந்த உத்தேசத்தை வைத்தே காவ்யங்கள் எழுதலானேன். பொய்யே கடைசியில் ஜெயமாகு மென்பதை எங்கும் நிரூபித்தேன். ஆனால் அதை நேரிடையாகச் சொன்னால் ஜனங்கள் என்னை மதியார்கள் என்று எண்ணி, சத்தியந்தான் ஜயித்தது என அசம்பவ விஷயத்தைச் சேர்த்துமுடித்து உண்மையில் பொய்யின் விளம்பரத்தையே விளக்கியுளேன். உதாரணம் ஹரிச்சந்திர புராண பாடலைக் கேட்டிருப்பீர்கள். சத்தியத்தைக் கைகொண்டதால் அவன் என்னபாடு பட்டான் என்பதைச் சிந்தித்து எப்படி மடிந்தான் என்பதையும் எண்ணுங்கள். ஆனால் அவர்களின் கண்களைத் துடைக்க உருவற்ற பகவான் வடிவத்துடன் வந்து அவரைக்காப்பாற்றினான் என்றவுடன் அவர்கள் புத்தியெல்லாம் புரண்டு சத்தியமே ஜயமென்பதைக் கனவுகாண்கிறார்கள். ஆனால் நாளடைவில் பகவான் வடிவெடுத்து வருவதும், ஒரு நரனுக்காகத் தோன்றுவதும் அசாத்திய மென்பதை அனுபவத்தில் அறிந்து, பொய்யிலேயே இறங்கி விடுகிறார்கள். இந்த உபதேசத்தைக் குறித்துத் தான் புராணங்களையும் இதிகாசங்களையும் செய்தேன். நான் ராமாயணம் கவனஞ் செய்த உத்தேசமும் இதுதான். சீதை

ஏகபதி விரதம் இருந்ததும் இராமனின் அவதூறைக் கேட்ப தற்கே! இப்படியே நளவெண்பாவிலும் அறிந்து கொள்ளலாம். காளிதாசனுக இருந்து நான் செய்து விளக்காத கலைகளும் உண்டோ? புலவத்தன்மையினுல் பாகவதத்தில் பகவத் லீலை களென எவ்வளவு விளையாட்டுகளை நுழைத்துளேன்! சிற்றின் பப்பாடல்களைக் கீதகோவிந்த ரூபமாக நாட்டில் பிரக்யாதி செய்வித்து நமது கோரிக்கையை நிறைவேற்றியது புலவத்திற மையினுல்லவா! ஆகையால் போய், புரட்டு, முதலியவைகள் நீடுழி காலம் வாழ்வதற்காக, இலக்கணம், இலக்கியம், கவன சக்தி முதலியவைகளைப் பயின்று நான் செய்வதுபோல் நீங்கள் வேண்டுமென்றும், அது தான் நித்தியமாயிருக்கும் வழி என்றும் கூறி முடித்தான்.

பிறகு குதூகல கரகோஷத்தின் நடுவில் விரோசனன் சில வார்த்தைகள் கூறி " அக்கிரம அநியாயத்திற்கு ஜே! " என்ற கூச்சலுடன் சபைகலைந்தது.

கஉ. கண்ணாடி!

வியாழன் இரவு. ஸ்கூல் வாத்தியார் மகள் கோமளம். கட்டழகுள்ளவள். சுவயமாகவே கருங்கண்களுண்டு. அவள் கண்ணாடி முன் சென்றுள்.

நாளை மணம் நிச்சயம். நான் மனைவியாவேன். சந்தேகமே இல்லை. என தன் பிம்பத்தைக் கண்டு கருங்கல் சிலைபோலானுள்.

உடனே, மண்டபம், வாழை மரம், பட்டுப்பாய், ஹோம குண்டம், தட்டு, பழம், வெத்தலை, சந்தனம், புரோகிதன், பிராமணன், தந்தை, தாய், உற்றுர், உறவினர், மேளம்,

தாளம், மந்திரம், பட்டுப் புடவை—இவைகளெல்லாம் அவள் கண்ணெதிரில். மந்திரங்கள் ஓதுவதும், நெருப்பு எரிவதும், சந்தனம் பூசுவதும், குங்குமம்,—அட்சதை—விழுவதும்—எல்லாம், நிசமாகவே கண்டாள்.

அசையாமல் கீழ் நோக்கிக் காணும் அவள் கண்கள் உறங்குவதுபோல் தோன்றினும் விழித்திருக்கிறாள் என்பதையே காட்டிற்று. புன்னகை. கண்ணசைத்தாள், புருவம் நெறித்தாள், விழி ஓடிற்று. ஏதோ நிழல். வடிவம் போல் விளங்கிற்று. பிறகு மஞ்சள் வேஷ்டி, பூணூல், சந்தனம், மூக்கு, கண்களாய் காணும், தான் வெகு நாளாய் அன்பும் ஆசையுடன் எதிர் பார்த்த பொருளைக் கண்டவள் போல் பிரமித்தாள். கோமளத்திற்கோ அப் பொருள் புவியிலுள்ள எதுவுமாகும். அவளின் ஜீவன், வாழ்க்கை, விதி, இன்னம் எல்லாமென்றே அதைச் சொல்ல வேண்டும். அவள் புன்னகை புரிவதிலிருந்தே அந்தப் பெரும் பொருளை அவள் அடைந்து அளவில்லா ஆனந்தம் பெற்று, அதைச் சொல்ல முடியாமல், தவிக்கும், கனவு காணும், ஊமையனைப் போல் தென்பட்டாள். அவனுடன் வாழ்வது போலவும், அவனுடன் ஒரே வீட்டில் வசிப்பது போலவும், அவனே அவள் எனவும் எண்ணிவிட்டாள். எல்லாம் ஒவ்வொரு அணுவும் நுட்பமாக நன்றாய் அவளுக்கு நிலவிற்று.

தினங்கள், வாரங்கள், மாதங்கள், வருஷங்களாய் விட்டன. பிரசவத்திற்கும் பிறந்த வீடு வந்தாள்.

‘அப்பா எங்கே அம்மா?’

அழுகையைத் தவிர ஒன்றுமே இல்லை. ‘ஏனம்மா அழுகிறாய்? அப்பா எங்கே அம்மா?’

‘எங்கேயோ ஊருக்குச் சென்றிருக்கார்’ ‘இல்லையம்மா, என்னிடமாவது சொல்லக் கூடாதா.’

'உனக்கொன்றுமில்லை. நீ கவலை கொள்ளாதே.'

'அம்மா! என்னால் பொருமையுடனிருக்க முடியாது.'

'அந்தக் கடன்காரி சுப்பலட்சுமி கல்லைத் தூக்கி போட்டாளா? நான் அப்பொழுதே சொன்னேனே. எனக்காக கடன் வாங்க வேண்டாம் என்றேன். என்னால் ஏன் இந்தக் கஷ்டம்?'

'கோமளம் நீ கதருதே! எல்லாம் அவன் செயல். எப்படி இருந்தபோதிலும் உன் கண்ணில் கண்ணீர் கூடாதென்பதே எங்கள் கருத்து.'

'அம்மா எத்தனை நாளாய் அப்பா சிறைச்சாலையில் உளார்.'

'ஒன்பது நாளாய்.'

'இன்னம் எத்தனை நாளில் அம்மா.'

'அந்தப் படுபாவி படி கட்டும்வரை.'

அதற்குள்ளே அரிசி விற்கும் பர்வதம் வந்தாள்.

'விதியில்லை யானால் ஏன் அரிசி கடனுக்கு வாங்க வேண்டும்?'

'நாளையதினம் பணமளிக்க வில்லையாகில்' 'பண்டம், பாத்திரங்களையாவது விற்று எனக்குப் பணம் கொடுக்க வேண்டும்' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அதற்குள்ளே வீட்டுக்காரன் வந்தான்.

'வாடகை! வாடகை! எத்தனை தடவை நான் கேட்பது.'

'நீங்கள் இருக்கும் நிலைக்கு பெண்ணையும் பிரசவிக்க ஏன் அழைத்துவரவேண்டும்?'

'நாளை வருவேன் தவறினால் உங்கள் ஓட்டை, உடைசலையும் நான் எடுத்துச் சென்று விடுவேன்.'

'விதியற்றவர்கள் ஏன் பெண்பிள்ளைகளை யடைந்து பெரியவர்கள் போல் இருக்க வேண்டுமோ புரியவில்லை?'

அம்மா புடவையை அடகு வைப்பது, பண்டம் பாத்திரங்களை தினமொன்றாக விற்பது, விறகுக்காக பழைய பெட்டி முதலியவைகளை உடைப்பது, தினமும் கடைக்குச் சென்று

அரைப்படி அரிசி வாங்குவது, எனக்குக் கஞ்சியைக் கொடுப்பது, தான் ஜலமருந்தி உபவாசமென நாலைந்து நாள் ஒன்றுமருந்தாமலிருப்பது, தான் பட்டினியுடன் பசியால் தவிக்குங்கால் ஒன்றுமில்லையென தள்ளாடி தள்ளாடித் தனக்குதவி செய்வதை எல்லாம், தான் அனுபவிப்பதாகவே புலனாயிற்று.

இன்னம் புசல் காற்று இடி முழக்கம் போல் அடியிற் கண்டவைகளை நிசமாகக் கண்டாள். சிறைச்சாலையினின்று தந்தை வருகிறார். வெட்க வடிவம். வெளியில் செல்ல பயம். பதுங்கி பரிதவிக்கிறார். கஞ்சிக்கு பல்லை இளிப்பார். மன மிளைத்தார். கண் சுருங்கினார். உடல் உலர்ந்து அறிவகன்றார். அகம் மறைந்தது, குணமில்லை. புத்தி சூன்யம், காது கும்மென்றாயிற்று. நா வறண்டு நாசி குழைந்தது. கைகால் துவண்டு மொழி மாறிற்று. மேனி கருத்து ரோமம் சிலிர்த்தது. சொன்னால், விழித்து விழித்துப் பார்ப்பார். அழுது அங்கு மிங்கும் கலங்குவார். தந்தை! இக்கதியோ உனக்கு! எனக் கலங்கினாள்.

அதற்குள்ளே தபால்காரன் வந்து ஒரு கார்டை யளித்தான். அதில் எழுதி இருந்ததாவது:—

சென்னை, 13-7-34

மாமனார் அவர்களுக்கு மாப்பிள்ளை எழுதியது. என் மனைவியை இந்த லெட்டர் கண்டவுடன் அனுப்பித்து விடவேண்டும். தீபாவளிக்கு நீங்கள் ஒன்றுமே செய்யவில்லை. அதற்காக ரொக்க பணம் சுமார் நூறு ரூபாயாவது கட்டாயமாகப் பெண்ணுடன் அனுப்பித்தாக வேண்டும்.

இப்படி, கே. ராமன்

லட்டரைப் படித்ததுதான் தாமதம், சீதையைப் பறிகொடுத்த இராமனைப் போலும், புலியைக் கண்ட மாட்டைப் போலவும், பொருளெல்லாம் இழந்தவன் போலவும் அவள் மனம் அலறிற்று.

அதற்குள் தாய் என்னம்மா கடிதம் என்றுள்.

'ஒன்று மில்லை.'

'அதைப் படியேன் அம்மா.'

கண்ணீர் சொரிந்தாள்; கதறினுள்; அலறினுள்; ஓலமிட்டாள். குய்யோ முறையோ எனக் கூக்குர லிட்டாள். பிறகு புருஷன் வீடு வருவது, அவன் திட்டுவது, உதைப்பது எல்லாம் —அவள் காயத்தில் நன்ருக கண்டாள்.

குழந்தைகளுக்கு ஜுரம், அம்மை, சளி, இருமல், தலைவலி ஐந்தாறு குழந்தைகளில் ஒன்று கட்டாயமாக இறந்து விடும்.

புருடன் தூங்குவதும், தின்பதும், திரிவதுமே—தென்படுவது.

ஒரு நாள் உறங்குங் காலத்தில் புருடன் சமீப மணுகி,

நீ ஏன் பணங் கொண்டுவரவில்லை. தீபாவளி என்பதையும் உங்களப்பன் மறந்து விட்டான்போலிருக்கிறது. மாப்பிள்ளை என்ருல் அவ்வளவு அலட்சியமா? ஒரு தடவை இரண்டு தடவை நான் எழுதினேன் என்று பலவாருகச் சொல்லி தன்னை அடிப்பதுபோல் கண்டாள்.

உடனே சற்று நேரத்திற்கெல்லாம் தன் வாயில் துணியை அடைத்து மண்ணெண்ணெயை தேகமெல்லாம் வார்ப்பதுபோலாயிற்று.

தொட்டுப் பார்த்தாள். துணியெல்லாம் மண்ணெண்ணெய், பேசவோ முடியவில்லை. புகை தோன்றிற்று. எங்கேயோ நெருப்புப் பற்றி எரிவதுபோலிருந்தது. உடனே தன் காயத்திலேயே, கனல்; ஐயோ! ஐயோ! வென்று கதறினுள்.

'நாம் கதறினுல் அயலார் கேட்பார்கள். என் புருஷன் என்னைக் கொளுத்தி விட்டான் எனத் தெரிந்தால் போலீஸ் அவனைப் பிடிப்பார்களே. அவன் ஜெயிலிலிருப்பானே! அவன் ஏன் அவஸ்தைப்படவேண்டுமென, தனக்குள்ளே நினைத்தாள்.

நீ கத்தாதே படுபாவி! நீ சாவது மன்னியில் என்னைச் சந்தியி லிழுக்காதே. நீ தொலைந்துவிட்டால் எனக்கு க்ஷேமம். எனக்கு மறுபடியும் ரூ. 1000 கொடுத்து பெண் அளிப்பவர்களுண்டு—எனச் சொல்லி தன்னை கம்பால் அடிப்பது போல கண்டாள்.

ஒரு தடவை புருஷனைப் பார்த்து மனம் பிளந்து, தான் சாம்பலாவதைக் கண்டு கோவென் றலறிக்கீழே விழுந்தாள்.

கண்ணாடியும் சுக்குத் தூளாயிற்று. எங்கும் சத்தமாகவே, கலியாணத்திற்கு வந்திருந்த யாவரும் அவளறையை நோக்கினார்கள்.

கோமளத்தை எவ்வளவு எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. கோமளம் இன்னம் எழுந்திருக்கவில்லை. எழுந்திருக்கவே யில்லை.

கரு. சும்மா இரு!

சென்னையிலே பிரபல தமிழ் பத்திரிகையின் நிருபரான, கே. வெங்கடேசன் தினந்தோறும் தாமதமாகவே வீட்டிற்கு வருவது வழக்கம். நம்மை திகைக்கச் செய்யும் தியானம், தூய்மையான மௌன நிலையுடனேயே அவன் தென்படுவான். யாரோ தன்னை போலீஸ் வாரண்டில் பிடித்து விடுவாரோ என்னும் பயத்தை அடைந்தவன் போல் புலனுவான். தற்கொலை தான் புரிந்துகொள்வானோ எனவும் தோன்றும், அவன் இங்குமங்கும் நடந்து தன் அறையிலே ஜன்னல் பக்கம் நின்று தலையை சொரிந்து தியானஞ் செய்வதானது,சீதையைப் பறிகொடுத்த ராமன், லட்சுமணனுடன் கதறுவது போலவே என் கண்ணில் இன்று தோன்றினான்.

"என்னால் முடியவில்லை. பஞ்சப் பிராணனும் பதுங்கி பறந்தோடுகிறது. துக்கம் என்னை சஞ்சலமடையும்படியான நிலைமையில் கொண்டுபோய் சேர்க்கின்றது. இப்பொழுது நான் உட்கார்ந்து எழுதியாக வேண்டும். இதுவே பிழைப் பாம். ஆசிரியர்கள் ஆபத்திற்குள்ளாகி அகிலத்திலுள்ள கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்குங்கால், உலகிலுள்ளவர் களை சிரிக்கச் செய்ய வேண்டும். நான் சிரித்து ஆனந்தமாக யிருக்குங்கால் உலகத்தையெல்லாம் கண்ணீர்விட்டுக் கதறும் படி செய்யவேண்டும்."

இந்த ஆசிரியர்களுடைய கஷ்டங்களை வர்ணித்து எழுதிய ஒரு ஆசிரியரையும் நான் பார்க்கவில்லையே! நான் கலங்கி குழப்ப மடைந்தாலும், ஹாஸ்யமாயும், அற்புதமாயும் எழுதி அனைவர் களையும் ஆனந்தத்தில் அமிழ்த்த வேண்டும்! என் குட்டி, குழந்தைகள் சாகலாம், என் மனைவி அவஸ்தையிலிருக்கலாம்— ஆனால் ஜனங்கள் பெரும் இன்பமான சுவையுடன் புசிப்பதற் கேற்ப பாதம் அல்வா, பூந்தியுடன், நான் எழுதவேண்டும்?

இப்படிப் பலவாறு தனக்குள்ளேயே வெங்கடேசன் பேசியபின், கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டு தான் படுக்கும் அறையை அடைந்து மனைவியை எழுப்பி,

"கமலம்! நான் எழுதப்போகிறேன். ஒருவரும் என்னை அணுகி தொந்தரவு செய்யாமலிருக்கட்டும். குழந்தை யழு தாலும், கிழவி குரட்டைவிட்டாலும், என்னால் எழுத முடி யாது. எனக்கு ஒரு கப்பு காப்பி மாத்திரம் செய்துகொடு. காப்பியன்னியில் என்னால் எழுதமுடியாதென்று உனக்குத் தெரியுமே; காப்பியே என்னைக் களைப்பினின்று கழற்றி என் காயத்திற்கு வன்மையை அளிப்பது" என்று கூறினான்.

பிறகு தன் மேஜையை யடைந்து, ஷர்ட்டு முதலியவை களையெல்லாம் கழற்றி, வெகு யோசனையுடன் மேல்துணியை

அணிந்து, குற்றமற்றவன் தண்டனையை அடைந்ததுபோல் குரிச்சியில் உட்கார்ந்தான்.

மகாத்மா காந்தி போட்டோ, ராமகிருஷ்ணர்படம், கட்டு கட்டாய் எழுதியுள்ள காகிதங்கள், பட்டணத்துப்பிள்ளை பாடல்கள், அரைடஜன் பென்சில், மூன்றுபேனுக்கள், தமிழ் அகராதி, தினசரிப்பத்திரிகை, ஒரு கூஜாவிலே தண்ணீர், கைகடியாரம், சிறிய கண்ணுடி—இதுவே அவன் மேஜை.

வெங்கடேசன் எழுத ஆரம்பித்தான். ஆனுல் ஒன்றுமே தோன்றவில்லை. சிந்தனையிலானுன். மனைவி நெருப்புக்குச்சி கிழிப்பதைக் கேட்டான். பற்றவைப்பதும் புலனுயிற்று. அவள் வெட்டுக்கத்தியை எடுப்பதும், விறகை சிராவாகச் செய்வதும், ஈரம் ஈரம் என முணுமுணுப்பதும், பண்டம்பாத்திரங்களை படேர் படேர் என வைப்பதும் அவன் செவியில் விழுந்தன. திகிலடைந்து வெங்கடேசன் கண்களை விழித்து கலக்கமாகி, சுவாசிப்பதில் ஏதோ சிரமமாகிறதென உணர்ந்தான்.

'பாழும் புகை! பரமசிவனே! எனத் திணறி முகம் கோணி கதறினுன்.' "பாழும் புகை! இந்தப் படுபாவி நான் மூச்சுத் திணறி சாக வேண்டுமென சபதஞ் செய்து கொண்டாளோ? நீதான் சொல்லேன் பரமசிவனே! நான் இந்த நிலையில் எப்படி எழுதுவது?"

உடனே சடேரென்று சமையல் அறையை அடைந்து வாயில் வந்ததையெல்லாம் பேசினுன். பிறகு சற்று நேரமானவுடன் தன் மனைவி குதிகாலில் நடந்து, கையில் தட்டு ஏந்தி காபி கொண்டு வருவதை தான் மறுபடியும் குரிச்சியிலிருந்து கண்டான். பேரிரைச்சல், இடி முழக்கம்தோன்றினுலும் கேட்க வன்மையற்றவன் போலுள்ள அவனுக்குக் காபியுடன் மனைவியைக் காண்பதானது கனவு போலவே

காட்சியாயிற்று. தண்டனையடைந்த துறவியின் முகம் போலவே அவன் தோன்றினன்.

ஏதாவது புதிய பொம்மையை குழந்தைகளுக்கு நீங்கள் அளித்ததுண்டா? அது பொம்மையை கீழே போடும். சற்று சும்மாயிருக்கும். பிறகு கொஞ்சம் தொட்டு மறுபடியும் சும்மாயிருக்கும். மறுபடியும் தொடும். இப்படிப் பல தடவை தொட்டுத் தொட்டு பொம்மையைக் கையிலெடுக்கும். அப்புறம் தலையிலிருந்து கால்வரை பார்க்கும். பிறகு சிரிக்கும். கடைசியாக அதைப்பற்றி விளையாடும்.

அப்படியே வெங்கடேசன், தான் குரிச்சியிலுட்கார்ந்து கைகளைத் தூக்கிப் பார்த்து கன்னங்களைப் பற்றுவான். கால்களைத் தூக்குவான். கண்களை மூடுவான். மெத்தையில் படுத்துள்ள நாயைப்போல் விழிப்பான். பிறகு வெறுப்புடன் பேனவை மறுபடியும் கையில் பிடிப்பான். சுற்றி உற்று நோக்குவான். கடைசியாக நோயாளி உயிலை எழுதுவது போல் வியாசத்தின் தலைப்பெயரை எழுதினன்.

'அம்மா ! அம்மா ! எனக்கு ஜலம் வேண்டும்' என ஒரு குழந்தை உறக்கம் கழன்று கேட்டது.

'சும்மா இரு! அப்பா எழுதுகிருர். சும்மா இரு!'

'கொசுக் கடிக்கிறது அம்மா!' என மணியன் கத்தினன்.

'சும்மா இரு! அப்பா எழுதுகிருர். சும்மா இரு !'

வெகுதுரிதமாய், பந்தயக் குதிரை பறப்பதுபோல், கொஞ்சமேனும் நிற்காமல் ஒரு மொழியையும் அடிக்காமல் பக்கங்களைத் திருப்பவும் காலமன்னியில் அப்பா ஒரே மூச்சாக எழுதிய வண்ணமாயுள்ளார். அங்குள்ள மகாத்மா காந்தி, இராமகிருஷ்ணர் முதலியவர்க ளெல்லாம்-இப்படித்தானப்பா! எழுதவேண்டும்—இதுவே தேசபக்தி, கைங்கரியம், என சொல்லிப் பார்ப்பது போலவே புலனயிற்று.

'சும்மா இரு' என்பதுபோல பேனுவும் கர கரவென ஓடிற்று.

கால்பட்டு மேஜை யசைந்து படங்கள் அசைந்தன. அதிலுள்ள புருஷர்கள், 'சும்மா இரு' என சொல்வது போலவே இருந்தது.

வெங்கடேசன் திடீரென நிமிர்ந்து பேனுவைக் கீழே வைத்து எதையோ ஒன்றை உற்று நோக்கிக் கவனமாய்க் கேட்டான். யாரோ முணுமுணுத்து மொழிவதுபோலிருந்தது. திருவேங்கடாச்சாரியார் அடுத்த அறையில் பகவத் கீதையை பாராயணஞ் செய்கிறுர் என அறிந்தான்.

'செய்யும் பாராயணத்தை ஏன் மெதுவாய்ச் செய்யலாகாது? உன் பகவத்கீதை நான் எழுதுவதையெல்லாம் பாழாகச் செய்கிறதே?' என்றுன்.

'எல்லாம் கிருஷ்ணுர்ப்பணம்' என அவர் மௌனமானுர்.

"சும்மா இரு!" என்றுகூறிவிட்டு ஆறுபக்கம் எழுதிய பின் கை கால்களை நீட்டி கடியாரத்தைப் பார்த்தான்.

"பரமசிவா! அதற்குள்ளா மணி மூன்று! என முனகினுன். ஜனங்களெல்லாம் உறங்க நான் ஒருவனு உழைக்க வேண்டும்!" என சிந்தித்தவனுய் கைகால் அசைந்து, களைப்பாகி, தலை சாய்ந்து, கண்ணிரண்டும் கலந்து படுக்கை யறையை அடைந்து மனைவியை எழுப்பினுன்.

'கமலம்! எனக்கு இன்னுமொரு கப் காபி. நான் களைப்பாகி விட்டேன்' என கலக்கமுடன் கூறினுன்.

அவன் நான்கு மணி வரை இன்னம் சொல்லப்போனுல் விடியும் வரை எழுத விரும்பினுன். ஆனுல் வியாசமோ முடிந்துவிட்டது. பேனு, பென்சில், காகிதம், படம் முத

வியவைகளை அவன் கடைசியில் காணுங்கால், வான் ஹிண்டன்பர்க் சண்டையில் ஜெயித்து துருப்புகளை பார்வையிடும் பொழுது புலனுன பெருமைப் பார்வைதானே எனவும் சந்தேகமாயிற்று. அத்தகைய பெருமை புகழையடைந்த நான் இப்பேதைகளான மனைவி மக்களிடம் எவ்வளவு சாதுவாய் இருக்கிறேன் என அவன் சொல்வதுபோல் அவன் முகம் எனக்குத் தோன்றிற்று.

நான் அதிக சிரமத்தையடைந்து விட்டேன். இனி எனக்கு உறக்கமில்லை எனசொல்லிக்கொண்டே படுக்கையையடைந்தான்.

நாளெல்லாம் கூலிவேலை செய்தாலும் குற்றமில்லை. மூளை வேலை நம்முடைய பிராணனையே பாழாக்குகிறது. இப்படி நம்மை எழுதும்படி சொல்வது கொடுமையினும் கொடுமையே.

அவன் தன்னை அறியாமல் நீக்கமற நிறையும் நித்திரையிலே ஆழ்ந்தான். நடுப்பகல் ஒருமணி வரை உறங்கினன். புகழ்பெற்ற ஆசிரியர் அல்லது நிருபராக அவனிருந்திருந்தால் எத்தனை நேரம் உறங்கி இருப்பானே, எத்தனை கனவுகள் தான் கண்டிருப்பானே?

அவன் இரவெல்லாம் எழுதினன் என அவன் மனைவி அச்சமுடன் முணுமுணுக்கினள்.

பேசவும் நடக்கவும் வீட்டில் ஒவ்வொருவரும் அஞ்சினர்கள். அவன் உறக்கமோ விலையில்லா மாணிக்கம். அதைத் தடுப்பதோ மகாபாதகம்.

'சும்மா இரு' எனவே வீடெல்லாம் முழக்கம். 'சும்மா இரு!'

கச. பாஞ்ச சன்னியம்

பாஞ்ச சன்னியம் பரமபதத்திலிருந்து புவியில் விழுந்த கதையாகும் இது.

பரமபதம் பரமபதமே! புகலவும் வேண்டுமோ! அநித்திய சீவன்கள் அங்கு நித்தியமான வாழ்க்கையை அனுபவித்தவண்ணமாகவே உள. பரமபதத்திலும் பொழுது புலர்வதும் போவதுமுண்டு. பருவங்களுமில்லாமலில்லை. போசனம் பேருழைப்பன்னியில் கிடைப்பதால் எங்கும் பேரானந்தமே! அங்கும் ஆண், பெண், குழந்தைகளுண்டு. குழந்தை குழந்தை தான் எங்கும். இங்கு ஓடுவதும், அங்கு நிற்பதும். சுற்றுவதும், கதறுவதும், களிப்புடன் கண்டவைகளையெல்லாம் கைப்பற்றிக் கூத்தாடுவதே அவர்கள் குணம்.

ஆனால் இக் குழந்தைகளுக்கும், பரக் குழந்தைகளுக்கும் ஒரே வேற்றுமையுண்டு. அவர்கள் கண்களில் கண்ணீரே காண்பதில்லை. விளையாட்டுப் பொம்மைகளுக்காக இங்குமங்கும் நாடி அவர்கள் எல்லாச் சிறுபொருள்களையும் பற்றுவது வழக்கம். அதற்காக மூலை முடுக்குகளெல்லாம் ஓடுவார்கள்.

அங்கு ஒரு பெரிய வெள்ளைச் சங்கொன்று இருந்தது. அதுவே விஷ்ணுவின் பாஞ்சசன்னியமாகும். தர்மம் மறைந்து அதர்மம் தோன்றி யுகங்கள் தோறும் அவதாரங்கள் எடுக்குங் காலத்திலேயே அச்சங்கைத் திருமால் பயன் செய்வார்.

மற்ற காலங்களில் அவர் திருப்பள்ளிச் திருச்சயனமாகின்றபடியால் அதை ஒரு மூலையில் ஒருவருமறியாமல் வைத்திருந்தார்.

குழந்தைகளுக்கு எங்கும் களிப்பு கூத்தாடுவதிலேயே கருத்தாகும். மூலையில் வெள்ளைச் சங்கொன்று சும்மாயிருப் பதைக் கண்டு, விஷ்ணு உறங்குவதை உற்றுநோக்கி மெது வாக ஒரு குழந்தை அதைக் கைப்பற்றி ஓடிவிட்டான்.

ஒருவருமறியாமல் ஒரு மூலையை அடைந்து அதை வாயில் வைத்து சங்கநாதம் செய்ய எண்ணினான். வாயில் வைத்தது தான் தாமதம்! என்னவாயிற்றோ? நானு மறியேன். குழந்தை யும் கலக்கத்தையடைந்தது. கண்களும் காட்சியற்று காணாமல் போய்விட்டான். அவன் எங்கு சென்றானோ நான் சொல்வ திற்கில்லை. ஆனால் அக்காலத்தில் சிறிய சோதியொன்று தோன்றி சிறிய இரைச்சலும் செவியுற்றதாம். சங்கு எங்கோ நரர்களின் சகத்தில் விழுந்த மாதிரி சத்தம் கிளம்பியதாம்.

* * * *

சென்னைக் கந்தசாமி கோவிலின் பிரமோற்சவத்தில் கைலாச வாகன தினமாகும். ஊரிலுள்ள கடைகளெல்லாம் குஜிலித் தெருவில் குவிந்துவிட்டன. அங்கு தேரடிக்கருகில் பழமையான ஓட்டை ஒடசல் சோழி, மணி முதலிய சில்ல ரைக் கடையொன்றுண்டு. செட்டியாரும் பழைய செட்டி யாரே! இப்பொழுதும் இந்தக் கடையைக் காணலாம். இச் சாமான்களைத் தவிர மூட்டை முடிச்சுகளில் வேறு பல பொருள்களும் அங்கு புலனாகும். அங்கு ஒரு மூலையில் அழுக்கடைந்து புழுதி பதிந்த சங்கொன்று கிடந்தது. உற் சவ தினத்தன்று மாலை இரு சிறுவர்கள் கடைமுன்தோன்றி னார்கள். அதில் ஒருவன்தான் உண்மையை உரைத்து சொன்னதைச் செய்வதோடு எல்லாமறிந்தவன் என்னும் எண்ணங்களை அடைந்தவனாகும்.

தனது நண்பனுடனே பேசிக்கொண்டிருக்குங்காலத்தி லேயே இங்குள்ள சாமான்களெல்லாம் பயன்படக்கூடிய தென்றும், தான் அதை நிரூபஞ்செய்யத் தவறினால் ரூபாய்

பத்து சபதங்கட்டுவதாக உறுதிமொழி கூறி கடைக்காரன் காதில் படும்வண்ணம் கூறினன்.

ஆனல் செட்டியார் இதற்கெல்லாம் மிரளுபவரில்லை. சாமான்களில் கை வைப்பதற்கும் அனுமதி யளிக்கவில்லை. குறைந்தது கால் அணுவாவது கொடுத்தால் ஒவ்வொரு பொருளையும் பரிசோதித்துப் பார்க்கலாமென்றுரைத்தார்.

இரங்கசாமி உடனே கால் அணுவைக் கொடுத்து ஒவ்வொன்ருக எடுத்துப் பரிசோதித்தான். முதலில் மணியொன்றை எடுத்தான். அதில் நாக்கு இல்லாததைக் கண்டு குப்பையைக் கிளறி சிறிய வெங்கலத் துண்டொன்றையெடுத்து, சிறிய கம்பியால் அதைச்சேர்த்து பிறகு மணியை அடித்துப் பார்த்து வைத்துவிட்டான். பிறகு யாவற்றையும் பரிசோதனை செய்து மூலையில் கிடந்த சங்கை எடுத்து எவ்வளவோ ஊதிப்பார்த்தும் முடியவில்லை. பிறகு அவன் அதை உற்றுநோக்கவே அதில் சிறிய எலிக் குஞ்சொன்றை கண்டு கீழே எறிந்து செட்டியாரிடம் அதைக்கொடுத்து மறுதினம் அதை சுத்தமாய் வைத்திருக்கும்படி போய்விட்டான்.

மறுதினம் சங்கை மறுபடியும் எடுத்து எவ்வளவு 'ஊதியும்' சப்திக்கவில்லையாதலால், அங்கே கன்னுனிடமுள்ள துருத்தியில் வைத்து ஊதினன். அப்பொழுதும் அது ஒலிக்காமல் போகவே, எடுத்து கண்களால் அதன் உட்புறத்தை உற்று நோக்கினன். அங்கு சிறிய துவாரமொன்று இருப்பதைக் கண்டு தன் சொக்காய் பையில் கையைவிட்டு பட்டாணிக்கடலை, காகிதம் முதலிய குப்பைகளின் நடுவேயுள்ள தேன்மொழுக்கைக் கொஞ்சம் எடுத்து அத்துவாரத்தை அடைத்துவிட்டு துருத்தியில் வைத்து ஊதினன்.

ஊதினது தான் தாமதம்; உலகம் இதுவரை கண்டிராத மின்னல் போல் ஒரு ஒளி தோன்றி இடி முழக்கம்போல் பேரி

ரைச்சலுண்டாகி உலகத்தையே நடுங்கச் செய்து விட்டது. சங்கினிடமிருந்ததுதான் ஒளி தோன்றிற்றோ? அல்லது புறத்திலிருந்து ஒளி பாய்ந்து சங்கில் சேர்ந்ததோ? அதை நாம் நிச்சயமாய் சொல்வதற் கில்லை. அடுத்த நிமிஷத்தில் சங்கைக் காண்பதற்கில்லை. கைகளால் அதை யாரோ பற்றியது போல் தெரிந்ததாக அருகிலிருந்தவர் ஒருவர் உரைத்தார்.

இச் சம்பவத்தில் வேறு விசேஷமும் உண்டு. அதைச் சொல்லவோ இயலாது. இமைப்பொழுதில் நடந்ததை காலமெல்லாம் மறக்க இயலாது. ஆனால் சுருங்கச் சொல்லில்—பூவுலகம் பூவுலகமாக இல்லை. அற்புதமொன்று நடைபெற்றதுபோலிருந்தது. இதைத் தான் ரங்கசாமி நண்பன் சின்ன மணியன் சொன்னது.

பரமபதமாகிய வைகுண்டமே வையகத்தில் ஒரு இமைப் பொழுது விளங்குவதுபோலிருந்ததென அங்கிருந்த ஒருவன் உரைத்தான்.

எமன் நின்றதுபோல் தோன்றுவதென வேறொருவன் சொன்னான்.

ஆனால் ஒருவரும் அதைப்பற்றி நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

அதுவு மன்னியில் புயல் காற்றொன்றடித்தது. பல நாட்கள் மப்பு மந்தாரமாக இருந்த வானத்தில் மழை பெருகியது. எங்கும் மழையே! வெள்ளம் பாய்ந்தது. சிந்து நதி உடைப்பெடுத்துவிட்டது. கங்கை கரை புரண்டோடிற்று. காவேரி பாலங்களை யெல்லாம் புரட்டி, கிராமங்களை அடித்துச் சென்றது. பூகம்பம், புவி சரிதல், மணல்மேடு, இடிவிழுதல், எங்கும் கலக்கமும் காரிருளாகவே இருந்தது. அப்பொழுது சிறிய மின்னல் ஒன்றுதோன்றி சங்கு சப்தம் போல் ஒன்று ஒலித்ததாக சிலர் சொல்லுகிறார்கள்.

இதுவரை எழுதிய தெல்லாம் புறமான விஷயங்களே யாகும்.

ஆனால்—அகமாய்நோக்கினால்இகத்தில் நடந்தவையெல் லாம் நேர்மாறானவைகளே. அது இமைப்பொழுதிலே இலங் கியபடியால் அதைச் சொல்வதற்கேற்ற சக்தியில்லை. சுருங் கச் சொல்லில் இச்சகத்திலே சோதியொன்று தோன்றி சீக்கி ரத்தில் மறைந்துவிட்டது. செத்தவர்களும் சீவனடைந்தது போல் சிறந்தார்கள். காரிருளில் மின்னல் தோன்றுவது போல் மானிலத்தை விளக்கி மறுபடியும் மறைந்துவிட்டது. இத்தகைய சம்பவங்கள் பல ஆன்மாக்களுக்கு தனித்தனியாய் தோன்றுவதையே நாம் கேட்கிறோம். பட்டினத்தாரும் சதா சிவ பிரமமும் கண்டு சகத்தில் சேராமல் சிறந்தார்களென சொல்வதுண்டு. ஆனால் அது எங்ஙனமிருந்தபோதிலும், அச் சோதி பொதுவாக பூவுலகமெல்லாம் பிரகாசமாகும் வண்ணம் தோன்றியது இச் சந்தர்ப்பம் ஒன்றிலேயே என லாம். இத்தகைய சோதியில் தலைவனை தரணியிலுள்ளோர் கண்டனர். இது சகஜமாக நடப்பதில்லை. "நான் கண்ணால் கண்டேன்," "என்னில் கலந்தார்" "அகில மெல்லாம் அவனைச் சரண் அடைந்துள" என பல பேர்வழிகள் புகல் வது சகஜமாய் விட்டன.

ரிஷிகள், யோகிகள், தேவர்கள், முதலியவர்களை யெல் லாம் நன்றாகக் கண்டு அதற்கு அறிகுறியான அகிலத்தி லுள்ளோர் ஆனந்தக் கூத்தாடினார்கள். எது எப்படி யிருந்த போதிலும், என்றும் தோன்றாத ஒரு அற்புதம் தோன் றிற்று எனலாம். அது அவரவர்களுக்கேற்ற எண்ணம், நினைவு முதலியவைகளை யளித்து மானிலத்தை இமைப் பொழுது இன்பத்தில் பாயச் செய்தது என்பது மிகை யாகாது. அச்சோதி சுந்திரமாயும், சிறப்பாயும், இச் சகத் தையே ஒரு மாயை என்னும்படி செய்து விட்டது. எப்படி கடைசியில் அது மறைந்தது?

ஜனங்களுடைய சிந்தனையில் இச்சந்தேகத்தையே சிறப்பித்து அது சென்று விட்டது.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலருகே, வெள்ளிக்கிழமை ஏகாதசி மாலையில் பிராமண விதவை யொருவள் குழந்தைக்கு ஸ்னோக்சோவைக் கொடுத்து, அதன் முகத்தையெல்லாம் நன்றாய்த் 'துடைத்து,' அதன் கையில் ஒரு பொம்மையொன்றை யளித்து அதை பக்கத்தில் அமர்த்தி, தானும் பூஜையெல்லாம் முடித்து பலகாரத்திற்காக உட்கார்ந்தாள். பாதி தோசையை எடுத்து வாயில் போட்டவுடன் மடமடவென்று சலம் குடிக்க சொம்பை எடுத்த தருணத்திலேயே இச் சோதி சிறிய இரைச்சலுடன் சிறந்தது.

உடனே குழந்தையை உற்று நோக்கினாள். அது சகஜமாக எப்பொழுதும் சிரிப்பது போலவே சிரித்தது. ஆனால் அது அவள் சஞ்சலத்தை சற்று நீக்கியது. பிறகு மிகுதியான பாதி தோசையை வாயிலே செலுத்தி சன்னலண்டை சென்றாள். மழை பொழிவதைத் தவிர வேறொன்றையும் அவள் காணவில்லை.

இது என்ன சகுனமோ எனக்குப் புரியவில்லை. இது ஏதோ துர்ச்சகுனம் என்று உரைத்த பிறகு மறுபடியும் போயுட்கார்ந்து பலகாரம் புசிக்க ஆரம்பித்தாள்.

இவ்வனிதா விதவையின் மூன்றாவது வீட்டிலே கீதை உபன்னியாசம் செய்யும் கிருஷ்ணமாசாரியார் உளார். ஸ்ரீ கண்ணன்பேரில் அவருக்கு அளவிலாத பக்தி. எந்த விஷயங்களைப்பற்றி அவர் உரைத்தபோதிலும் பக்தியைப் பற்றி பெருமையுடன் உரைப்பதே அவ்வரைப் பெரியவராக்கி விட்டது. சனிக்கிழமை தோறும் அவர் காலட்சேபத்தில் காமம், குரோதம், லோபம், மாச்சரியங்களைப்பற்றி விளக்கமாக யுரைத்து நவீனமாக நிலவும் தர்க்கம், சந்தேகம், விவாகம், முதலியவைகளைக் கண்டிப்பார். சாரதாவின் மசோதா

சட்டமானல் ஹிந்து சமூகமே சிதைந்துவிடு மென்பது அவரின் மனப்பூர்வமான எண்ணம். அவர் சகஜமான பேர் வழி. படாடோபமில்லை. பழைய மடிசஞ்சியே அவருக்குப் பிரியமதிகம். அவர் சுலோகஞ் சொல்லுங்கால் அவர் மொழியின் இனிமையே இனிமை! பட்டிணத்தில் தர்மம் அழியவில்லை என்றால் அதற்கு அவரே காரணம். எத்தனை சனங்களுக்கு பக்தியை யளித்து தீரத்தை யருளியுள்ளார் என்பது நம்மால் கணக்கிலிடமுடியாது.

வெள்ளிக்கிழமை மாலை சஹஸ்ரநாமத்தை சபித்துவிட்டு குத்துவிளக்கின் கொழுஞ்சுடர் வெளிச்சத்தில் சனிக்கிழமை உபந்நியாசஞ் செய்வதற்கு ஸ்ரீ இராமனுசரின் கீதா பாஷியத்தைப் பார்த்த வண்ணமாகவே யோசனையில் அமர்ந்திருந்தார். யார் என்ன உரைத்த போதிலும் சற்று இங்கிலீஷ் படித்தவர் சிரித்தாலும் நாராயணன் நேர்முகமாகத் தோன்றி தரிசனமளிப்பார் என்னும் திடமான நம்பிக்கை எனக்குண்டு என்னுஞ் சிந்தனையி லிருக்குங்கால் இச் சோதி தோன்றி சிறிய இரைச்சலுமாயிற்று.

இவ்விமைப் பொழுதின் அணுக்காலத்தில் சாதாரண சனங்களுக்கே இச்சோதி விளக்கமாயிருக்குங்கால் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியருக்கு எவ்வளவு சூட்சமமாயும், சிறப்பாயும் அது செம்மையாயிற்று என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. பகவத்கீதையின் பதினேழாவது அத்தியாயத்தின் 7-வது சுலோகமான ஸ்ரீ கிருஷ்ணனின் அடியிற்கண்ட மொழிகளைப் பற்றி மனனஞ்செய்து கொண்டிருந்தார்.

அர்ச்சுனனே! "பிரபஞ்சம் அண்டம் சராசரம் யாவற்றையும் என்னில் பார்க்கவும்! நிலைகள் யாவும் நானேவென்."

நாராயணன் எங்குதானில்லை. எங்கும் நிறைந்துள்ளார். என்னருகிலுளார்: இக்காட்சியில் யுளார். செவியில் யுளார் அவர் தோன்றாத தருணமேயில்லை. அவர் இங்கு உடலில்

உளார். என் மனதில் உளார் என சிந்தனை செய்யுங் காலத்திலேயே, இச்சோதி தோன்றி இடிமுழக்கமாயிற்று.

கீதை கீழே விழுந்தது, கை கால்கள் பதறின. கண் சிவந்தன. கண்ணனைப் பற்றிக் கருத்தில் குணமாக்குங்கால் கடவுளே கலக்க மன்னியில் விளங்கினார்!

ஆனால் இமைப் பொழுதில் மறைந்து விட்டது. திரை மறுபடியும் விழுந்தது. ஆனால் சித்தத்திலே அச்சோதி சித்திரமாய் விட்டது. இப்பொழுது சங்கு, சக்கிரம், பட்டு, பீதாம்பரம், கருடன், லட்சுமி, முதலியவர்களுடன் அவர் முன் நின்று அவருக்கு வழி காட்டியாயிருப்பதுபோல் விளங்கிற்று. தலைவனருகில் மாணவன், பயபக்தியுடன் புலனுவது போல், என்றும் காணாத ஒரு பயம் பணிவு முதலியவைகளுடன் எங்கும் அவனிருப்பதையே அவர் கண்டார். தன்னிடமுள்ள எப்பொருளிலும், தன் பொடி டப்பியைப் பார்த்தபோதிலும் அந்த விஷ்ணுவே விளங்கினார்.

பிறகு தன்னைச் சற்று தேற்றிக்கொண்டு அமைதியையடைந்தார். மறுபடியும் அந்த சுலோகத்தின் அடைமொழியான "யச்சான்ய திருஷ்டி மிச்சஸி" "வேறு எதைத் தான் நீ பார்க்க விரும்புவாய்" என்பதைக் கடைசியாக ஒரு தடவை படித்துக் கீழே வைத்தார். கைகால்கள் அசைவற்றுயிற்று. கண்களை விழித்தார். சென்ற சனிக்கிழமை உபந்நியாச நினைவு நேர்மையாயிற்று. அலங்காரமான படம், பூமாலை, பழம், பால், தூபம், தீபம் எல்லாம் அவர் முன்! பக்தகோடிகள் எதிரில் பரவசத்துடன் உளார்கள். சிறு வயதில் புருடனை இழந்து, பொருள் படைத்த விதவை சுப்பலட்சுமி, சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு தலையாட்டுவதை கவனித்தார். ஆயிரக் கணக்கான தான தருமஞ் செய்து மக்கட் செல்வமில்லையென மன மீளாத்த தைலம்மாள் அங்கு கைவல்லிய நூலை கையில் ஏந்தினவளாய் உட்கார்ந்து வெகு

கவனத்துடன் கேட்பதும், அவர் முன்தோன்றின. அங்கு பட்டாடைகள் வைத்துத் தைத்திருந்த ரவிவர்மாவின் மோகினி படமும் அவருக்கு விளங்கிற்று. ஆதித்தியமய்ய ரும், நடராஜ செட்டியாரும் நினைவுடன் கேட்பது அவருக்கு இன்பக்காட்சியாயிற்று. பயபக்தியுடன் அவர்கள் உட் கார்ந்திருப்பது, மெதுவாக கண்ணை மூடிக்கொண்டு உபந்நி யாசம் ஆரம்பிப்பது, பிறகு படிப்படியாக உயர்த்தி மொழி களை யுரைப்பது என நினைத்துக்கொண்டே சற்று உரத்த குரலுடன் "பத்மநாபம் சுரேசம்" என்று கூறினார். உடனே சுப்பலட்சுமி சாந்தமாகி, தைலம்மாளுக்கு கை காட்டி தலையை முன்நோக்கி மனனமாய் மலர்ந்தாள்—

எல்லா பக்தகோடிகளும் பரவசமடைந்து பகிரங்கமாய் இவரைப் பார்ப்பது புலனாயிற்று. கிருஷ்ணமாச்சாரியரைப் பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவதில்லை. வாசாமகோசர மாய் பேசும் வன்மையை அடைந்தவராகும். வானமாமலை ஜீயரே இவர் உபந்நியாசத்தை வந்து செவியுற்றுளார் என் றால் இவர் பெருமைதான் என்னே!

அவர் எதிரில் எல்லா மக்களும் தோன்றினார்கள். நாட்டு அரசன், மந்திரி முதலியவர்களும் அங்கு பிரசன்ன மாவர்கள் என்பதே அவர் எண்ணம். ஆனால் உபந்நியாசஞ் செய்யும் சமயத்தில் சபையின் பின்னே ஜகத்தின் தலைவனும் மறைந்து செவியுறுகிறான் என்பதே அவர் சித்தம்.

அத் திசையில் அவர் வெகு கவனமாய் உற்றுநோக் கினார். உற்று நோக்கினது தான் தாமதம். கலக்கம் கிளம்பி கிருஷ்ணமாச்சாரியரைக் கைப்பற்றி விட்டது. ஆனால் மறு படியும் தீரமாய் எழுந்தார். இனி அச்சம் வேண்டாமென்று தோன்றிற்று.

"நான் அறியவில்லை" என உடனே அழுத்தமாகக் கூறி னார்.

அதற்குள் காலடிச் சத்தங் கேட்டது. திரும்பி தன் மகன் சடகோபனைப் பார்த்தார். உடனே மகனை உற்று நோக்கினர். சடகோபன் அஞ்சினவனாய், "இன்னம் சாப்பாட்டிற்கு நேரமாகவில்லையோ?" எனச் சொன்னான்.

"சடகோபா!"

"சுவர்கவாசல் திறந்தாய் விட்டதே."

மகன் சற்று பிரமையடைந்து, திகைத்து நிற்கவே,

"அன்னமா! ஆகாரமா!! இச்சகத்தின் யுகம் முடியப் போகின்றதே?"

அதற்குள் பையன் சற்று சந்தேகமுற்று கண்களை மறுபடியும் பரிசித்துக்கொண்டு அப்பாவை உற்று நோக்கினன்.

"நீ எதையாவது பார்த்தையோ?

நிச்சயம்! நிச்சயம்!! நாராயணன்!!!

"நம்மை அவர் உற்று நோக்குகிறார். நீ, நான், இச்சடலம், நரகப் பொருள்களை யெல்லாம் அவர் பார்க்கின்றார்" என சத்தமிடவே மகன் பயந்து ஓட ஆரம்பித்தான். உடனே தந்தை அவன் பின் ஓடி சமையலறையை அடைந்தார்.

அங்கு அவர் மனைவி ருக்மணி அடுப்பிலே அப்பளம் பொரித்துக்கொண்டிருந்தாள்.

"இருப்பச் சட்டியைக் கீழே இறக்கவும் அப்பளமா! வடாமா!! உனக்கு ஆன்மா இல்லையா? சுவர்கக் கதவு திறந்தாய் விட்டதே!—இனி யாவற்றையும் துறந்து எம்பெருமான் படியை மிதிக்கவும்" எனக் கூவினர்.

வியாபாரஞ் செய்யும் ஒரு செட்டியார் என நம்மை சற்று எண்ணிக்கொள்வோம். நூறு மிளகாய்மூட்டைகளை விலைகூறி விற்க முயலுங்கால் ஒருவன் அவசரமாக வந்து, பிரபஞ்சமே முழுகிப் போகும் ஒரு விஷயத்தைச் சொல்ல வந்தால் நாம் பொருமைக்குணம் வாய்ந்தவரானல், நான் வியாபாரத்தை முடிக்கட்டும்; பிறகு அதை யோசிப்போம் என்போம். அவன் அதற்கும் "கேளாமல்" அத்தியாவசியமென மறுபடி

யும் வந்தால் " உனக்குக் கொஞ்சமேனும் உலகம் தெரிய வில்லையே" என்போம் ; அல்லது சுவாமியை மனதார பார்க்கும் ஒருவன் தோன்றி பிரபஞ்சமே பிரளயத்தில் பேரழிவை யடையப்போகிறது என உரைத்தால், " உனக்கும் வேலை யில்லை உமது ஸ்வாமிக்கும் வேலையில்லை " என்போம்.

கிருஷ்ணமாச்சாரியார் இதே அவஸ்தையை, ஒரு செட்டியாரை அடைந்து அனுபவித்தார். அச்செட்டி யார் வீட்டைக் கடந்து தெருத்தெருவாக கிருஷ்ணமாச்சாரி யார் சென்றார்.

அங்கு சில்லரைக் கடையில் தேங்காய் விற்பவன், தேங்காய் ஒன்றை உடைத்து அதைக் கீறித் துண்டம் துண்டமாக செய்யுங்கால் அவனிடஞ் சென்று,

" உலகம் முடியப் போகின்றதே!" "சுவர்க வாசல் திறந்தாய் விட்டது ! இன்னம் என் இவ்வினைகளில் நாம் அமிழ வேண்டும் ! நாராயணன் நம்மை பார்த்த வண்ணமாகவே இருக்கிறார் ! அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துளார் ! கின்னரர் கிம்புருடர் முதலியவர்களுடன் இங்கு விளங்குகின்றார் ! எனக்கு அவர் சிந்தனையானார். எனக்கு மாத்திரமே யில்லை ! நாமெல்லோரும் வைகுண்டத்திலேயே உள்ளோம் உனக்கு ஒன்றும் விளங்கவில்லையா ? சோதி !—இடி !! சங்க நாதம் ! ! !

தேங்காயை அவன் துண்டம் துண்டமாகச் செய்த பிறகே அவன் "ஆமாம்" என்றான்.

கடைக்காரனின் மனைவியும், நானும் பார்த்தேன் என்றாள்.

'ஏதோ விசேஷ மில்லாமல் இல்லை' என்றான் கடைக் காரன்.

கிருஷ்ணமாச்சாரியாருக்குச் சற்று சில்லென்றாய் விட் டது. "அவர் நாராயணனை நன்றாக தான் கண்டதில் இன்

னம் சந்தேகமில்லை. அவர் மனதிலே நன்ருய் பதிந்துள்ளார். யாமரர்களுக்குச் சொல்வதில் பயன் யாது? திடிரென்று அருகதையில்லாதவர்களுக்கு எங்ஙனம் உரைப்பது? வானமாமலை ஜீயரைப் பிடித்தால் சகமெல்லாம் அறிந்துவிடும். அவரே மடாதிபதி; எனக்கேது யோக்கியதை! ஆச்சாரியினிடம் போய் உரைக்கலாம்'' என எண்ணி வண்டி யொன்றைப் பிடித்து தற்காலிகமாய் 'ஏளிருக்கும்' ஜீயரை உடனே அடைந்தார்.

இதுவும் சங்கடமான சந்திப்பாகவே ஆய்விட்டது. ஆச்சாரியர் இதை யொன்றையும் செவியுறவே இல்லை. கிருஷ்ணமாச்சாரிக்கு இப்பொழுதுதான் தன் வன்மை வளர்ச்சி அறிவு முதலியவைகளில் ஆச்சாரியருக்கும் எவ்வளவு பொருமை எனக் கண்டார். அவர் சரியாய்ப் பேசவேயில்லை என சொல்லி விடலாம்.

எவனை முட்டலாம் எனக்காத்திருந்த மாட்டின்முன்னே தான் சென்றதுபோலவே கிருஷ்ணமாச்சாரிக்குக் காட்சி யாயிற்று.

" அதிகப் படிப்பு, அறிவு, யோகாப்பியாசம், முதலியவைகளே இதற்குக் காரணமென்பதில் சந்தேகமே இல்லை. என்னிடம் வரவேண்டுமென்னும் அறிவாவது உனக்கு விளங்கிற்றே! இக் கனவு பயம், ஆவேசம், பிரமை இவைகளையெல்லாம் தொலைத்து உன்னைத் தன்னந் தனிமையாக இத் தரணியில் வேறு பிரத்தியேகமான நிலையத்திற்கனுப்ப வேண்டும்,'' என்ருர் ஆச்சாரியார்.

கிருஷ்ணமாச்சாரி மறுபடியும் திணறி—" நான் நிச்சயமாகவே நாராயணனைக் கண்டேன். நாம் இப்பொழுது உம்மை நேரில் பார்ப்பதைவிட அவரை நிச்சயமாகக் கண்டேன்."

"நிஜந்தான்! பூவுலகில் பல சமயங்கள் தோன்றுவதற்கும் இதே காரணம். பல சமயங்கள் பாழடைவதும் இதனுலேயே! மனேவன்மை வேண்டும்."

கிருஷ்ணமாச்சாரியார் கண்களில் கண்ணீர் பெருகிற்று. துக்கத்துடன் "நாராயணன் இங்கே யுள்ளார். நான் காண்கிறேன். நான் அறிகிறேன்"

"முட்டாள்தனமாகப் பேசாதே! உன்னையும், என்னையும் தவிர வேறு யாரும் இங்கு இல்லை."

கிருணமாச்சாரி, "விஷ்ணு என்ருல் எங்கும் நிறைந்தவர் என பொருளாகுமே."

ஜீயருக்குக் கோபம் கிளம்பியும் அதை பொருமையாக யடக்கிக் கொண்டார்.

"நீ தர்மத்தையும் தரணியையும் இன்னம் அறியவில்லை. கவனம்! மடம், கோவில், சம்ரோட்சணை, வழக்கம் இவைகளை இன்னம் அதிகமாக அறியவேண்டும். இவைகள் திடீரெனத் தோன்றிவிடாது. எதையாவது நன்ருக அத்தியயனம் செய்யவும்; பரிக்கலாழ்வார் கதையை நன்ருகப் படிக்கவும்" என அனுப்பி விட்டார்.

கிருஷ்ணமாச்சாரி அங்கிருந்து அமைதியற்று வெளிக்கிளம்பி வேறு எங்கு போகலாமென திரியலானுர்.

கடைசியில் பக்த விதவையான சுப்பலட்சுமி ஞாபகம் வந்துவிட்டது. உடனே அங்கு சென்ருர். சுப்பலட்சுமி பூஜை பலகாரமெல்லா முடித்து 'உருத்துகிறதென' புதுநார்மடியை அவிழ்த்து வேறு சாதாரண புடவையை கட்டிக் கொள்வதற்காக முன்வாயிலை அடைத்துவிட்டு உடையணியும் பொழுதே, கதவை கடகட வென்று இடித்தார்.

யாரோ அவசரமாக இடிக்கிருர் என ஒரு துண்டு வஸ்திரத்தை கட்டிக் கொண்டு கதவைத் திறந்தாள். கிருஷ்ணமாச்சாரியாரைக் கண்டு ஆச்சரிய மடைந்து, அவர் களைப்புற்றிருப்

பதைக் கண்டு, அவருக்குடனே ஆசனமளித்து, அந்த துண்டுப் புடவையுடன் பலகாரத்தைக் கொண்டுவந்து அவர் முன் வைத்து புசிக்கவும் என்றாள்.

உடனே அவர் முகத்தை பார்த்தாள். "ஓகோ! நமக்கு இன்று ஜோதி தோன்றி மறைந்ததே! அப்படியே இவருக்கும் தோன்றிருக்கலாம்."

"யார் யறிவார்? சென்ற ஜென்மத்தில் நம்மிருவர்களுக்கும் ஏதோ சம்பந்தமிருந்திருக்கலாம். ஐயோ! அவர் கண்களில் நீர் ததும்புகின்றதே; மாயா உலகத்தில் நீர் இருப்பதற்கே சரியில்லை" என பலவாராகச் சொல்லி அவர் மறுபடியும் அப்படியே விழித்த வண்ணமா யிருப்பதைக் கண்டு, அவர் அருகில் அமர்ந்து பலகாரத்தில் ஒரு தோசை துண்டை தானே அவர் வாயில் செலுத்தி சற்று ஆதரவுடன் அவரை அணைந்து ஆனந்தம் அளிக்கலாமெனவும் அவளை யறியாமல் தோன்றிற்று.

அதைப்பற்றி எப்படியுரைப்பது! என்ன இன்பமோ!——"

இதற்குள் இரவு பத்தாய் விட்டது. கிருஷ்ணமாச்சாரியார் வீடு நோக்கினார். சடகோபனும், அவன் மனைவியும் சந்தோஷமானார்கள். "எனக்குப் பால் மாத்திரம்போதும்" என வாங்கிப் பருகிவிட்டு, மறுதினம் உபந்நியாசத்தைப் பற்றிச் சற்று சிந்தனை செய்துவிட்டு நித்திரையை யடைந்தார்.

கிருஷ்ணமாச்சாரி, சடகோபன், செட்டியார், வானமாமலை ஜீயர் முதலியவர்களுடன் எக் கதியை யடைந்தாரோ அக் கதியை புதிய உபதேசஞ் செய்பவர்கள் யடைவார்கள்.

ஈசனே தோன்றலாம், சத்தியமே சிறக்கலாம், சுவர்கம் இறங்கலாம், இராமனும் இலங்கலாம். ஆனால் ஜனங்கள் இவைகளை கவனியார்கள். வழக்கம், சட்டம், சாதி, முதலியவைகளிலேயே உழன்று வருவார்கள். மூட்டைப் பூச்சிக்கும், மனித

னுக்கும் வேற்றுமையே இல்லை. அவைகளும் உண்டு, உறங்கி, உல்லாசமாகி, இசைந்து இன்பமுருகின்றன. வேப்பம் விளங்கும் நாட்களிலேயே யதிகரிக்கின்றன. அங்ஙனமே மானிட மூட்டைகளும் காலம், வழக்கம், சாதியால் விளங்குகின்றூர்கள். இத்தகைய மூட்டைகளா— அல்லது மனிதர்களா? மாநிலத்தில்!

கரு. எமன் கதை

உங்கள் எதிர்கால ராஜாவைப்பற்றிய கதையே இது. இவன் பெயர் எமன். எமனைக்கண்டு அஞ்சாதவர்களே இல்லை. ஏனெனில் இவன் ஒருவனே கலக்கத்தை யளிப்பவன்.

ஆனால் இந்த எமன் வீட்டில் எனது நண்பர் இருவர்கள் சென்று இந்த பயங்கரப்பேர்வழியைப் பார்க்கலாமென அவனை நோக்கினார்கள். எமன் அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்தான்.

என்னடா எமனே! உனக்கேன் இப்பொழுது தூக்கம்? பீகார் பூகம்பத்தில் நன்றாய் மானிடர்களை வயிர்புடைக்கத் தின்னதினால் சிரமமோ? என என் நண்பர்கள் கேட்டதும்,

எமன் அச்சமன்னியில் நமது வீட்டை அடைந்தவர்களுக்கு இனி எங்கும் ஜயம் தோன்றும் எனக்கூறி அவர்களுக்கு வாழ்க்கையின் சில இரகசியங்களை அறிவித்தான். அந்நண்பர்கள் அவைகளைச் செவியுற்று இரகசியம் என எனக்குரைத்ததையே நான் அனைவருக்கும் பகிரங்கஞ் செய்கிறேன்.

உங்களுக்கு ஒரு வார்த்தை. வையகத்தில் நீங்கள் தலைவர்களாவது நிச்சயம். பெரிய பதவியை யடைவீர்கள்.

சிலர் ரிஷிகளாகலாம். பலர் ஸ்ரீராமரைப்போல் புவியை அரசு புரியலாம். துரோணுச்சாரிகள் உங்களில் தோன்று வார்கள் என்பதில் சந்தேகமில்லை. சிலர் பீமசேனனைப்போல் இடும்பனைக்கொன்று அவன் தங்கையைப் மணஞ் செய்து கொள்வீர்கள். ஒருவேளை சந்திரகுப்தன் தோன்றி சாணக் கியனை சிநேகம் பிடித்து கிரீக் நங்கையை விவாகஞ் செய்து பிதுருக்களுக்கு திருப்தியை யளிக்கலாம். சுக்கிர நீதியைப் போல் காலத்திற்குகந்த சாஸ்திரம் செய்யும் வன்மை உங்க ளிடம் புலனுகி, சகமெல்லாம் உங்களின் பாத கமலங்களில் விழும்; அல்லியரசாணி மறுபடியும் தோன்ற முடியாது என எவன் சொல்லமுடியும்? எமனுடன் சகஜமாய் சண்டை போடும் சாவித்ரி தோன்றி, செத்துவிட்ட சத்தியத்தை மறுபடியும் தாண்டவமாடச் செய்வாள். "திரிமூர்த்திகளா யிருந்தால் எனக்கென்ன? சத்தியத்திற்கு விரோதமானுல், எனது வன்மையால் அவர்களைக் குழந்தைகளாக்கி விடு வேன்" என்னும் அருந்ததிகள் உங்கள் நாட்டில் தோன்று வார்கள்.

இப் பெரிய நிலைகளை அடைய ஒரு நிபந்தனையையே நீங்கள் பற்றவேண்டுமென ஈசன் எங்கும் கர்ச்சனை செய் கிருர். அந்த நிபந்தனையான சட்டத்தை யறிந்தால் சூரியன் காலையில் உதிப்பது எப்படி நிச்சயமோ அதுபோலவே, நீங் கள் ஜயம் பெறுவதும் நிச்சயமாகும். நாள் முழுவதும் கஷ்டமுடன் வேலை செய்தால் உங்களை அறியாமல் நித்திரை தேவியானவள் ஆனந்தமளித்து இன்பசாகரத்தில் மூழ்கச் செய்வதுபோல், ஜயமென்பது பேரிகை யடித்து உங்களைச் சந்தோஷத்திலாக்கும். இந் நிபந்தனையான சூட்சமத்தை நீங்கள் அறிந்தால் பசி என்னும் வேதனையறியாமல் நாளெல் லாம் உற்சாகத்துடன் வேலைசெய்யும் வீரர்களாவீர்கள். உஷ்ண காலத்தில் திண்டாடும் சீவராசிகள், ஐப்பசி மாதத்

தில் நிச்சயமாய் அமுதமான மழையை அடைந்து எங்கும் பசுமையையும், புன்னகையும் பார்ப்பதுபோல் நீங்களும் எங்கும் எப்பொழுதும் காணுத ஒரு அற்புதத் தோற்றத் தைக் காண்பது நிச்சயம்.

நான் சொல்லும் நிபந்தனை ஒரு சட்டமாகும். அது உலகத்தைப் பாதுகாக்கும் ஒழுக்கமாகும். இயல்பைக் கொல் லாமலிருக்கும் ஒரு சக்தியாகும். காடு முட்புதர்களை அழிக் கும் அது ஒரு அனலாகும். அது இருளைப் போக்கும் சூரியனைப்போலாகும். நன்மைகளை நிலைக்கச் செய்வதும் அதுவே. புன்மைகளை ஓடச் சொல்வதும் அதுவே. அதால் அறிவிலி அலறுவான் ; அட்டகாசம் நடுங்கும் ; அநி யாயங் கலங்கும் ; அநீதி அழியும் ; பொய் பதுங்கும் ; பித்த லாட்டம் ஓட்டம் பிடிக்கும் ; வஞ்சகன் கீழே வீழ்வான் ; கபடன் காணுமலாய்விடுவான் ; சுருங்கச் சொல்லில் அந்த நிபந்தனை செய்யாத செயலில்லை. அதுவே உலகத்தைச் சிருஷ்டித்தது. அதை எப்பெயர் கொண்டும் அழைக்கலாம். அதைப் பாதுகாப்பவன் எம்பெருமான் அவனே யாகும். புதிய சிருஷ்டிக்காக அவனே அதை அழிப்பான்.

இந்த அபூர்வமான அரிதான நிபந்தனையைப்பெரியோர் கள் ஆதியில் சுலபமாய்ச் சொல்வதில்லை. வெயிலில் அவஸ் தைப் படுபவனுக்கே நிழல் அருமை தெரிவதுபோல், உண் மைக்கு விடாமுயற்சியுடன் உழைப்பவர்களுக்கே இதன் உயர்வு புலனுகும் என அவர்கள் மற்றவர்களுக்கு அறிவிப்ப தில்லை. கட்டாந்தரையில் விதைகளை விதைக்க அவர்கள் விரும்பவில்லை. முட் புதரிலும், வழி நடுவிலும், நீரிலும், ஆற்றிலும் அவர்கள் தான்யத்தை விதைப்பதில்லை. குழந்தை கையில் அவர்கள் கத்தியைக்கொடுக்க விரும்பவில்லை. இதைப் பரம ரகசியமாய்ச் வைத்து அருகதர்களுக்கே இதை அளிப் பார்கள். இல்லையேல் இதனல் ஆதாயமழிந்து ஆபத்தாகு

மென எண்ணினார்கள். இதை உத்தேசித்தே அவர்கள் பரம ரகசியமெனச் சொல்வது வழக்கம். இந்தப் பரம ரகசியத்தையே நான் சொல்ல விரும்புகிறேன்.

சில மொழிகளிலே இம்மர்மத்தை மொழிந்தால் நீங்கள் ருத்திர வடிவமாக வேண்டுமென்னும் சொற்களாகவே யாகும். ருத்திர வடிவமென்றால் மற்றவர்களுக்கு பயமளிக்கும்வடிவமாகும். இது உலகத்தை நடுங்கச் செய்யும். இது சீவராசிகளைக் கலங்கச் செய்யும். இது தெய்வீக குணங்களில் சிறந்ததாகும். இது தேவாம்சமான குணமாகும். பரம புனிதமான பரப்பிரமமும் ருத்திர வடிவமாகும்.

பகவான் ருத்திர பயத்தினாலேயே காற்று அசையும்; அனல் எரியும் என கடோபநிஷதம் கூறும். நான் அசையவில்லையேல் பகவான் என்னை அழித்து விடுவார் எனப் பயந்தே காற்றுக் ககனமெல்லாம் அசைந்து திரிவான். எந்த இடத்திலாவது காற்று சற்று சூன்யமாகி அமைதியானால் கோர வடிவமான பகவான் புயல் காற்றாகி எங்கும் காற்றை நடுநடுங்கச் செய்து ஓட்ட ஓட்டமாய் ஓடச்செய்து புவியெல்லாம் நிறையச் செய்வான். மரங்கள திகரித்து உல்லாசமாய்க் காற்றுச் செல்ல முடியவில்லையானால் அனலாய்த் தோன்றி, காட்டை யழித்து விடுவான். காட்டை இப்படி யழித்து நடுங்கும் காற்றுக்குச் சரணமுமளிப்பான். இப்படியே அவன் பயத்தால் அனலை எரியச்செய்து, அழிக்கவும் செய்வான். கோரமான சூரியனாகி ஜலத்தைக் குடிப்பான். கரும் மேகமாகி சூரியனை மறைத்து ஜலத்தைப் பாதுகாப்பான். புவியிலே செயற்கை மண்டப மதிகரித்தால் பூகம்பமாகி அதை அழிப்பான். கோரமான பெரும் வெள்ளமாகி உலகமெல்லாம் சத்து நீங்கிய மண்ணுக்கு உறமளிப்பான். பெருங் கடலாகி கலங்கும்] காலனாய் பூகோளத்தைப் புனிதஞ் செய்

வான். இக்கொடுமையான கோர வடிவத்தாலேயே இயல்பின் சட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவான்.

இக் கொடுமையான சுபாவம் அவனுக்கில்லையேல் இயல்பு சட்டம் நிறைவேருதது ஒருபுறமிருக்க, ஈசனையும் ஒருவரும் உபாசிக்கப் போவதில்லை. ஆதியில் தர்மங்கள் தோன்றியதற்கும் அவன் பயமே காரணமாகும். இதை எண்ணித்தான் 'ஈஸ்வர பயம் தர்மத்தி ஞரம்பம்' எனச் சொல்வது. ஈசனின் பயங்கரப் பொருளையும் ஈசன் என உபாசிப்பது இதனுலேயாகும். இமயமலை உயரத்தில் பயங்கரமாகும். கங்கை குளிர்ச்சியில் கலக்கமளிப்பாள். யமுனை பார்ப்பதற்குக் கருமையாகி கலங்கிடச் செய்வாள். காவேரி ஆடி பதினெட்டில் பெருகிப் பயமளிப்பாள். இக்கோர ஸ்வபாவத்தைக் கண்டு இச்சடப் பொருள்களைச் சனங்கள் உபாசிப்பது யாவரு மறிந்த விஷயம்.

அவன் சாவு என்னும் எமனுகி, நோய்கள் என்னும் அவன் தூதர்கள் உலகத்தில் சஞ்சாரஞ்செய்து அவன் கொடுமையான பசி என்னும் புலி ஒவ்வொருவனையும் சதாகாலமும் கொல்லவில்லையேல் உலகம் என ஒன்றிருக்குமா எனச் சிந்தனை செய்யவும். நாம் இப்படி எந்தவகையில் பார்த்தபோதிலும் மற்றவர்களுக்கு பயமளிக்கவும் என்னும் ஸ்வபாவமே அவனுக்குப் பரமன் என்னும் புனித நாமத்தை அளித்தது.

பகவத் கீதையைப் புனித நூல் என நீ எண்ணுகிருய். அர்ச்சுனனும் அறிஞன் எனச் சொல்வது வழக்கம். ஆனுல் அவன் கிருஷ்ணன் சொற்களை எப்பொழுது மதித்தான் என கவனித்தால், கொடூரமான விசுவ ரூபத்தைக் கண்ட பிறகே நெஞ்சு கலங்கி அவன் சொற்படி நடக்க விரும்பினுன். "எனக்கு ரோமம் சிலிர்க்கின்றதே! உன்னை வணங்குகின்றேன். கையில் கதை சக்கரத்தைக் காண்கிறேன். நீ கோர வடிவமுள்ளவன். உன் பயமுள்ள பற்களைக் கண்டு புவி நடுங்கும். உன்னைப் பார்த்து அந்தராத்மா அலருகின்றது. என் திடம் தளர்கிறது. உன் கோரமான

பற்களின் நடுவே புவியெல்லாம் அகப்பட்டு பொடி பொடியா கின்றது. சுடர் விட்டெரியும் உன் திருவாயில் புவியிலுள்ள வர்கள் யாவரும் வீழ்கின்றார்கள். நெருப்பிலே ஈசல் விழுந்து அழிவதுபோல் விழுந்து அழிவதற்கு யாவும் உனது முகத் தில் சாயும். எல்லாப் பக்கங்களிலும் வாயைத்திறந்து கரும் நாவுடன் மனித சமூகத்தை உறிஞ்சி எதையும் புசித்து உனது தேஜஸானது தரணியெல்லாம் நிறைந்து உனது சுடர் ஒளியால் புவியெல்லாம் எரியும். நீ நன்கு புலனானால் உன் கோரமே கோரம்" என அவர் பயங்கர ரூபத்தைக் கண்டு, 'கிருஷ்ணா! ராட்சதர்கள் உன்னைக் கண்டு கலங்கு கிறார்கள். சித்தர்கள் சிதறுகிறார்கள். இக்கோர வடிவப் பெருங் குணத்தை அறியாமல் அன்பினால் அலட்சியமா யிருந்து விட்டேன்" எனக் கதறினான்.

உடனே ஸ்ரீ கிருஷ்ணன், "நான் மனிதர்களை யழிக்க வந்துள்ள காலனாகும். ஒருவரையும் விடாமல் நான் அழித்து விடுவேன். உன்னைத் தவிர வேறு எவரும் இக்கோர வடி வத்தைக்காணவில்லை. யக்ஞம், வேதம், தானம், கிரியை, உக்ர தவம், ஆழ்ந்த கல்வியானாலும் என்னைக்காண முடியாது. புனிதமாயுள்ளவர்களே இதைக் காண முடியும்" எனச் சொல்லி தெய்வாம்சத்தின் நிபந்தனையை புலனாக்கும் இக் கொடுமையான உண்மையைப் புலனாக்கினார். அர்ச்சுனனும் பணிந்தான்.

தெய்வத்தை தினந்தோறும் பூஜை புரியும் நீங்கள், இந்த தெய்வ குணமான அச்சத்தை விளைவிக்கும் ஸ்வரூபத்தை அடைய வேண்டும். நெஞ்சுதிடுக்கிட எதையும் செய்ய வேண்டும். உங்கள் செயலைக் கண்டால் உலகம் அலற வேண்டும். புவி கலங்கி பரிதவிக்க வேண்டும். நடந்தால் புவி யதிர வேண்டும். பேசினால் சனங்கள் கலங்கவேண்டும். செவி யுற்றால் 'இந்த நாசகாரி என்ன செய்யப்போகிறானோ' என

ஜனங்கள் அச்சமாக வேண்டும். பார்த்தால் பரமசிவனைப் போல் மன்மதனை எரித்துவிட வேண்டும். காயம் நோக்கினால் 'காலன் வந்துவிட்டான்' என எங்கும் கலக்கமாக வேண்டும். கொடுமை கொடுமை கொடுமை என இருள் தன் கர்ப்பத்துடன் கலங்க வேண்டும். புசிப்பதற்கு இல்லையே என வாயைப் பிளப்பதற்குள் பூமண்டலத்தை எல்லாம் சுகமாய்ப் போஜனஞ் செய்ய வேண்டும். பெண் எனவும், பிள்ளை எனவும், தாய் எனவும், தந்தை எனவும், புருஷன் எனவும், மனைவி எனவும், பெரியார் எனவும், சிறியார் எனவும், கடவுள் எனவும், சைதான் எனவும், புஸ்தகம் எனவும், புனிதம் எனவும், சத்தியம் எனவும், அசத்தியம் எனவும், ஒழுக்கம் எனவும், ஒழுக்க மில்லை எனவும் எண்ணாமல் உருத்திர வடிவமாகி புவியை நடுக்கமுடனாக்க வேண்டும். அப்பொழுதுதான் தெய்வ அம்சமான குணங்களைப் பெறலாம்.

கொடுமையான குழந்தைக்கே தாய், பால் அளிப்பாள். கொடுமையுள்ளவனாகி, தாய் தந்தை, சகோதர சகோதரி, கோபிகைகளை யெல்லாம் சதாகாலம் நடுங்கச் செய்தவனே ஸ்ரீ கிருஷ்ணனான். அவர்களால் மரியாதையு மடைந்தான். கொடுமையான ஆச்சாரியனே கல்வியை யளிக்க முடியும். காலிப்பயல்களே பெருங் கல்விமான்களாக முடியும். ஏனெனில் அவர்களுக்கே குருநாதர்களும் நன்றாகக் கற்பிப்பார்கள். கொடுமை யளிக்கும் மனைவிகளே பெண்பிள்ளைகளைச் சுகமாய்ப் பாதுகாத்து பிச்சை எடுக்காமல் கடைக் காலத்தில் வாழமுடியும். கோரமான புருஷர்களே பெண்மணிகளைக் காக்கமுடியும். அதனால்தான் அவர்களையே அபலைகள் விரும்புவது. அச்சத்தை யளிக்கும் தாய் தந்தைகளே குணக் குழந்தைகளைத் தோற்றுவிப்பார்கள். கொடுமை செய்து அச்சத்தை அனவரதமும் அளிக்கும் குழந்தைகளையே பெற்றோர்கள் அந்தி காலத்தில் விரும்புவார்கள். இன்னம் சுருங்கச் சொல்லில் உலகத்தில் நடைபெறுவதெல்லாம் அன்

னியர்களுக்கு அச்சமளிக்கும் ஸ்திரீ புருடர்களின் சரிதை களாகவே யாகும். லண்டன் மகா சனங்களுக்கு அச்சத்தை அடிக்கடி அளித்த கிளைவ் என்பவனே ஐரோப்பியர்களுக்கு பாரத பூமி என்னும் லட்சுமியை யளித்தான். அலெக்ஸாந்தர் தந்தையையும் அச்சத்தால் கீழே விழச்செய்தான். நிழலைக் காட்டி யம வடிவமெடுத்த குதிரையையும் பயமுறுத்தி வசமாக்கினன். புவியை அலறச் செய்து அதற்குத் தலைவனுமானன். ஜூலியஸ் ஸீசர் என்பவன் எதிரிகளை எப்படியாவது பயமுறுத்தவேண்டும். ஆனல் அவர்கள் மரணத்திற்கு அஞ்சுவதில்லை. அழகான முகம் கோர வடிவமுடனுவதைக் கண்டு கலங்குகிறுர்கள். அதனல் ஈட்டியினல் முகங்களைக் குத்தி சித்திர வதை செய்யுங்கள் என்றுன். ஏராளமான எதிரிகள் இக்கோரச் செயலுக்கஞ்சி ஓட்டமெடுத்தார்கள். ஜூலியஸ் ஸீசர் ஏகச் சக்கிராதிபதியானன். ஆதியில் டார்டார்கள் இந்தியாவில் ஒரே நிமிஷத்தில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொலைபுரிந்து அச்சமுண்டாக்கிய பிறகே அழிக்க முடிந்தது. நெஞ்சு திடுக்கிடும் வேலைகளைச் செய்து இரண்டு கால் சிங்கங்களைக் குரு கோவிந்த சிங்கன் சிருட்டித்தான். சிவாஜி எங்கும் கலக்கத்தை யுண்டுபண்ணி பட்டாபிஷேகம் செய்துகொண்டான். திப்பு சுல்தானின் பயமளித்த செயல்களே ஸ்ரீ சங்கராச்சாரியரை அவருக்கு ஸ்ரீமுகமும் ஆசீர்வாதமும் செய்யச்செய்தது. அச்சமளித்தால் சனுதனம் உங்களுக்குப் பூர்ண கும்பமுடன் அபிஷேகஞ் செய்யும். பகவானும் அப்பொழுதே உங்களுக்குத் தன் புனிதமான சொரூபத்தைப் புலனுக்குவான். புவியிலுள்ள எல்லா இன்பங்களையும் பெறலாம். அத்தகைய அச்சமளிக்கும் அஞ்சா நெஞ்சு வேண்டுமெனத் இளஞ் சிங்கங்களான வாலிபர்களின் இருதய நிலயத்திலிருக்கும் பகவானை நானும் துதி செய்கிறேன். நீங்களும் என்னுடன் சேர்ந்து அந்த உருத்

திரனை உபாசனை செய்யவும். இதுவே நான் உங்களுக்குச் சொல்லும் ஒரு வார்த்தையாகும்.

கடைசியாக நான் பீகாரில் பூகம்பமாய்த் தோன்றி குழந்தைகுட்டி தாய்தந்தைகளைக் கொலைசெய்த எச்சரிக்கையை ஒருபொழுதும் மறக்காதே. சாந்தம் சாந்தமென சொல்லித்திரியும் நீங்கள் இனியாவது உங்கள் காரியம் நிறைவேற எந்த வழிகளையும் நாடலாமென இக்கோரச் செயல் மூலமாய் அறிவித்தேன். கெட்டவழி என எண்ணாதே. காரியத்தை சாதிக்க எந்த வழியும் கனிந்த வழியாகும். இது தான் நான் சொல்லும் ரகசியமென உரைத்து இனி நீங்கள் போகவும், என அனுப்பிவிட்டார்.

கசா. டபீர்சிங் ரகசியம்

ஓரே ஒரு ஊர். அந்த ஊரிலே டபீர்சிங் என ஒருவன் இருந்தான். அவன் சாகுங்காலத்தில் பெரிய சக்கரவர்த்தியானான். ஆனால், இனி வாழப் போவதில்லை என அறிந்து தனது மகனை பக்கத்தில் அழைத்து ரகசியமாய் சில விஷயங்களைச் சொன்னான். அந்த ரகசியங்களை ஒரு எலி சாவதானமாய்க் கேட்டு என்னிடம் சொல்லிற்று. அதுவே இக்கதை.

"குழந்தையே நான் சீக்கிரத்தில் இறந்து விடுவேன். உனக்கு சில விஷயங்களைச் சொல்லுகிறேன். அப்படியிருந்தால் நீ சர்வாதிகாரியாகி ராஜனாகி வாழ்வாய்; இல்லையேல், அடிமையாகி அதோ கதியாவாய். மதம் மதம் எனச் சொல்லி ஏதோ நான் உனக்கு சொல்லியிருக்கிறேன். அவைகளை யெல்லாம் இப்பொழுது மறந்து விடு. அதனால் மகா

ஜனங்களை ஏமாற்றலாம் என நான் அறிந்திருக்கிறேன். நான் 36 ரகசியங்களைச் சொல்லுகிறேன். இவைதான் நான் உனக்கு கடைசியாய்ச் சொல்லும் மொழிகள்.

(1) மனச் செல்வம் எவனுக்குண்டோ அவனுக்கே பூமியும் பரமனும் சொந்தமாகும். (2) அழாமல் அன்னியர்களை அழச் செய்பவனே ஆனந்த மடைவான். (3) கர்வம் உண்டானால் இப் பூமிக்கு அரசனாவாய். (4) பூமிக்கும் பணத்திற்கும் சதா கால பசிதாகமுள்ளவனே அவைகளை அடைவான். (5) சமயத்திற்குத் தகுந்த மாதிரி சொல்லி தன் வேலையை சாதித்துக் கொள்பவனே சிறந்தவன். (6) சண்டை செய்பவர்கள் சிரேஷ்ட புருஷர்கள். அவர்களையே சர்வேசனின் அவதாரம் எனச் சொல்வார்கள். (7) அன்னியர்களுக்கு தண்டனையளிப்பவனே சுவர்கத்திற்கு அருகனாவான். (8) உலகத்திலுள்ளவர்களை எத்தனை நிந்திக்க வேண்டுமோ அத்தனை நிந்திக்கவும். அப்பொழுதே நீ பெரியவனாவாய். (9) உலகத்திலுள்ளவர்கள் எல்லாம் உனக்கு உணவாகும். உணவில்லாமல் நீ எப்படி வசிக்க முடியும்? (10) உலகமெல்லாம் பெட்ரோலானால் நீ நெருப்புக் குச்சியாகும்.

(11) எழுந்திருந்து உலகத்தை யழிக்கவும். (12) பெண், ஆனாலும் பிள்ளை ஆனாலும் பந்துவானாலும் சரி, நீ புவிக்கு அதிபதியாவதை தடை செய்தால் அவர்களை துவம்சம் புரியவும். (13) புவியிலுள்ள எல்லா சுகங்களையும் நாடவும். (14) பயம் அஹிம்சை என்னும் எண்ணம் மனதில் தோன்றினால் கத்தியை எடுத்து அவைகளைக் குத்தி விடவும். (15) தினம் பதினாயிரம் தடவை சாமிபெயரைச் சொல்லி சத்தியஞ் செய்யவும். அப்பொழுது தான் நீ நல்லவனெனப் பெயர் வாங்கி உன்னிஷ்டம் போல் எல்லா வேலைகளையும் செய்ய முடியும் (16) வாயினால் ஒருவன் உன்னை திட்டினால் அவன் பல்லை உடைத்து கையிலே கொடுக்கவும். (17) வலது கன்

னத்தில் ஒருவன் உன்னை அடித்தால் அவன் இரு கை இரு கால்களையும் துண்டித்துவிடவும். (18) உன்னை ஒருவன் அதிகாரம் செய்தால் பளீரென அவன் கன்னங்களில் கை வலிக்கும் வரை அடிக்கவும். (19) கொடூரமுள்ளவனுயிரு! ஆனால் குண மலை எனப் பெயர் வாங்கவும். (20) கடன் வாங்கவும். திருப்பிக் கேட்டால் தடியால் அடிக்கவும்.

(21) கடுகளவும் நன்மை செய்தாலும் இமயமலை போல் படாடோபம் செய்யவும். (22) கடவுளை தியானம் செய்கிறேன் என எங்கும் பகிரங்கம் செய்யவும் (23) ஜபம் செய்தால் மகா ஜனங்கள் எல்லாரும் பார்க்கும்படி வேஷமாய் நடிக்கவும். (24) ஜாக்கிரதை! ஜபம் என்பது ஆண்மைத் தனத்தை குறைக்குமாதலால், உன் விரோதிகளை ஜபம் செய்யச் சொல்லவும். (25) மனிதன், இருவர்களுக்கு (பரமாத்மா, ஜீவாத்மா) ஊழியம் செய்ய முடியாது. ஆதலால் ஜீவாத்மாவே உன்னுடைய தெய்வமாகும், (26) 10 வழுஷத்திற்கப்பால் கிரகணம் பிடிக்க ராகு இப்பொழுதே வேலை செய்து வருகிறான். மழைகாலத்தில் நீர் கொட்ட வெயில் காலமெல்லாம் வருணன் வேலை செய்கிறான். அப்படியே நீயும் சதா காலமும் வேலை செய்யவும். (27) அந்நியர்களிடம் எத்தனை குற்றங்களுண்டோ அதற்கு அதிகமாகச் சொல்லி அவர்களை யொழிக்கவும். (28) உதைத்தாலொழிய நீ உத்தமனாக மாட்டாய். அடித்து வாங்குபவனுக்கே எல்லாம் கிடைக்கும். (29) நேர் வழி செல்லாதே— எப்படியாவது குறுக்கு நெடுக்குமாய்ச் சென்றாலன்னியில் உன் காரியம் ஜயமாகாது. (30) வேதாந்திகளை யெல்லாம் சரி சரி எனச் சொல்லி கையிலே போட்டுக் கொள்ளவும்; இல்லையேல் ஆபத்து.

(31) கவைக்குதவாதவனைப்பிடித்து பட்டம் பதவி யளிக்கவும். பூத்துப் பழ மளிக்கும் மரங்களை யெல்லாம் கீழே சாய்க்கவும். (32) ஏமாறுபவர்களை ஏமாற்றுவதே பெரிய தர்மமாகும். (33) நான் சாந்தமளிக்க வரவில்லை.

கத்திக்காகவே இவ்வுலகம் வந்தேன். (34) நீ சொன்னதனே சரி. பிடிவாதத்தை மாத்திரம் விடாதே. (35) ஏழை வேஷம் போட்டால் கோடி கோடியாய் கொள்ளை யடிக்கலாம். (36) ஆலகால விஷத்தை மனத்திலே வைத்துக்கொள்ளவும். சீதள சந்தனம்போல் பேசி ஜகத்தை ஏமாற்றவும். இதுதானப்பா உலகம்" எனச் சொல்லிக்கொண்டே டபீர்சிங் இறந்தான்.

கஎ. பொடி டப்பி

"காலணக்கூட இனி கொடுக்கப்போவதில்லை, கந்தசாமி! இனி ஒரு காலணாவு மில்லை."

"இல்லை அப்பா ஒன்று—"

"ஒன்றுமில்லை இரண்டு மில்லை. மாதந்தோறும் அளிக்கும் ரூ. 200-க்குமேல் காலணாவும் உனக்குக்கிடையாது. வேண்டுமானல் ஜவுளிக் கடைக்குச்சென்று துணிமணிகளை வாங்கிக்கொள்ளவும். காபிஹோட்டலிலும் சென்று நீ இஷ்டம் போல் சாப்பிடவும். சரியான செலவுகளெல்லாம் நான் கொடுக்கத் தயார். ஆனல் உன்னைப்போல் அதிகம் செலவழிப்பது தீமையிலும் தீமையாகும். இத்தகைய தீமைகளுக்கு உதவியாய் நான் ஒருபோதும் இரேன்."

அ. ர. வ. மு. ச. இராமனதஞ் செட்டியார் மொட்டைத் தலையை அசைத்து, பெருமூச்சுவிட்டு, இடது கையை இடுப்பில் செலுத்தி எல்லாமியோ இழந்தவர்போல் திகைத்து, மறுபடியும் பெருமூச்சுவிட்டு, கணக்குப் புஸ்தகத்தில் கருத்தாகி புஸ்கத்திலேயே கலந்து குணமான குன்றுபோல் நிலையான காலத்தில்,

'எனக்கு ரூபாய் இருநூறுதான் வேண்டும்'' என மறு படியும் கந்தசாமி முறையிட்டான்.

கணக்கு புஸ்தகத்தை பார்த்துக்கொண்டே ஏதோ வட்டி கணக்கை கருத்திலேயே கூட்டிய வண்ணமாப், குரலை கொஞ்சமும் மாற்ருமல் கூறியதாவது :—

"கந்தசாமி! என் பொறுப்பையோ நீ உணர்வதில்லை. நான் அதிகம் கூறவேண்டாம். என்னுடைய நிலைமையை நீ அறியலாம். நான் பல தேவஸ்தானங்களின் தர்மகர்த்தாவாக திகழ்வதும், பல மடங்களின் டிரஸ்டியாக பணி செய்வதும், தர்ம ஸ்தாபனங்களின் அதிகாரியாயிருப்பதும், பஞ்சாயத்துக் காரர்களின் பொக்கிஷதாரனுயிருப்பதும், அனுதை விதவை முதலியவர்களின் பொருள்களெல்லாம் என்னிடமிருப்பதும், எந்த அந்தஸ்தில் நான் இருக்கிறேன் என்பதும், நீஅறிந்த விஷயம். உன் சுபாவம், சகவாசம் முதலியவைகளைப் பற்றிய புகாரோ பெரிதாய்விட்டது. இந்தப் புகாருக்கெல்லாம் நான் புணையாக வேண்டும். ஆனுல் இத்தகைய அனுவசியப் புகாருக் கெல்லாம் நான் ஒரு எள்ளளவும் இடம் கொடுக்கப் போவ தில்லை என்பது நீ அறிந்த விஷயம்.''

"அதை நான் அறிவேன்.''

"சரி; எனக்கு வேலையோ அதிகமாயிருக்கு, இனி நீ போகலாம்.''

இனி பேசுவதில் பயனில்லை. மு. சு. இ. கந்தசாமி செட்டியார் கண்களைக் கீழ்நோக்கி இனி என்ன செய்வதென கவலையாகி, இனி சாவுகார் பேட்டையிலுள்ள, பன்சிலால், ஹீக்கம்சண்டு தாகர்சி தான் நமக்கு கதி என எண்ணி, பணத் தைக் காக்கும் பூதம்போல் இவன் இருக்கிருன் என எண்ணி வெளியேறினுன்.

கருமியின் பொருள் எல்லாம் கடைசியில் பாழாய்ப் போகுமென்பதில் சந்தேகமில்லை. பொருள் உள்ளவன் பர

மனை அடைவது ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதைவிட கஷ்டமே. ஆனால் கருமியாயுள்ளவன் படாத கஷ்டங்களை படுவான் என பெரியார்கள் சொல்லியிருக்கிறார்களே. இதற்கு என்ன உபாயஞ் செய்ய வேண்டுமென பலவாறாக எண்ணிக் கொண்டு அவன் தன்னை அறியாமல் ஏதோ ஒரு பாதையின் வழியாக சென்றான்.

மகன் அகன்றவுடனே செட்டியார் பழனி யென்னும் கையாளைக் கூவி, "பழனி! என் பொடி டப்பியைக் காணோம். எங்கேயாவது கீழே விழுந்திருக்க வேண்டும். தேடிப் பார்க்கவும்" என அவர் இடுப்பில் கையைத் தடவின வண்ணமாகவே உரைத்தார்.

*　　　*　　　*　　　*

கந்தசாமியின் அதிர்ஷ்டம், பத்மம் பேரானந்தமாய் வீணையில் புதிய தந்தியை இணைத்துக் கொண்டிருந்தாள். இவன் அங்கு சென்றதும்—

"கந்தா! நீ ஏன் கவலையுடனிருக்கிறாய்? நான் சந்தோஷத்திலிருப்பது உண்மையே! எனது அன்பன் ஒருவன் நேற்று ஏராளமான நகைகளை எனக்கு அளித்துவிட்டுச் சென்றான். என் வாழ்நாட்கள் வரை எனக்கு விசாரம் இல்லை; உன் சமாச்சாரமென்ன சொல்லவும்?"

களிப்பு ஒரு பக்கம், பத்மத்திற்கு நகைகள் கிடைத்து பேரானந்தமாகி புன்னகை தவழ இவனுடன் பேசுவது இவன் புலன்களுக்கெல்லாம் என்றும் காணாத ஒரு உணர்ச்சியாகி விட்டது. ஆனால் தந்தை இந்த அற்பத் தொகைக்கு இவ்வளவு அட்டகாசஞ் செய்தது, இன்னம் அவன் மனதை விட்டு நீங்கவில்லை. அதனாலேயே அவனுக்கு பதில் கூற முடியவில்லை.

பத்மம் உட்கார்ந்திருந்த அறையை எல்லாம் உற்றுநோக்கினான். சில ஜனங்களுக்கு புதியதாக ஒரு இடத்திற்குச் சென்

ருல் அங்கு ஒவ்வொன்றையும் உற்று நோக்குவது வழக்கம். எதையோ இழந்தவன்போல் புலனுனன். புஸ்தகங்களை வீட்டில் வைத்து பள்ளிக்கூடம் சென்று விழிக்கும் மாணவன் போலவே கந்தசாமி தோன்றினுன், திடீரென கந்தசாமி எதையோ கண்டு பிரமித்து சற்று உற்றுநோக்கி கவனிக்கலானுன். உடனே பத்மத்தைப் பார்த்து, உலகத்திலே காரண காரியத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை யென்றும், புவியில் நடக்கும் ஒவ்வொன்றுக்கும் ஏதாவது ஆதாரம் இருக்க வேண்டுமெனவும், வெயில் அடிப்பது மழைக்கு என்றும், மழை அதிகமாவது வெயிலுக்கே என்றும், ஆனுல் இந்த காரண காரியங்களைப்பற்றி அவனுக்கு அவ்வளவு அற்புதமாகத் தோன்றவில்லையாயினும், பத்மத்திற் கேற்றவாறு நகைகள் அமைந்து, அவள் உடலுக்கேற்றவாறு ஒய்யார மிருப்பது தான் தன்னைக் கவருகிறதென்றும், பத்மம் மாதிரி வனிதைகள் மூக்குத்தி அணிவதற்காகவே மூக்கையும், கம்மலுக்காகவே காதையும், வளையல்களுக்காகவே கைகளையும் ஈசன் படைத்தது தான் யாவற்றிலும் சிரேஷ்டமென முகஸ்துதி செய்து அவள், கவனத்தைச் சற்று மாற்றி, தான் மெதுவாகச் சென்று தன் கண்ணைக் கவர்ந்த பொருள் ஒன்றைப் பற்றினுன்.

பத்மம் கண்களைத் திறந்தாள். 'நீ அதைப்பற்ருதே.'

'அதைக்கீழே வைத்துவிடு—அது ஒன்றுமில்லை.'

'ஒன்று மில்லை தான்' என்ருன் கந்தன். இது பொடிடப்பியாகும். இது எங்கிருந்து உனக்குக் கிடைத்தது? என அவளைப் புகழ்ந்து பேசினுன்.

இம்முகஸ்துதியை கந்தன் கூருமலிருந்திருந்தால் அவள் கோபமடைந்து அவன் கையிலிருந்து பிடுங்கி அவனைப்போகும்படி செய்திருப்பாள். அப்படி அவளைக் கேட்பது பெருங் குற்றமாகும். இவ்வினுக்களை எல்லாம் அவள் சகியாள்.

ஆனுல் அன்று அவன் அதிர்ஷ்டம் அவள் கோபமன்றியிலிருந்தாள். அவளழகைப்பற்றி சற்று வர்ணித்தபடியால்

அவனுடன் கோபிக்கவும் அவளுக்கு மனம் வரவில்லை. அதற்குள்ளே சூசனையை அறிந்த கந்தன்,

'இப் பொடி டப்பியை நாளைக்காலைவரை என்னிடம் அளித்தால் ரூபாய் 200-ருடன் 50 ரூபாயை அதிகமாய் சந்தேகமன்னியில் அளிப்பேன் என்றான்.

'இதைக் கடனாகத்தான் நீ எடுத்துச் செல்லுகிறாய் என்பதை மறந்துவிடாதே.'

'ஆமாம் கடனே! நான் இதற்காகவா இனி பொடி போடப்போகிறேன் ?'

கந்தன் முகஸ்துதியால் தான் அவள் கலங்கினளோ அல்லது அவன் கூறிய காரணம்தான் கருத்திலாயிற்றோ அதை நான் சொல்வதிற்கில்லை. ஆனால் அரைமணி நேரங் கழித்து கந்தன் பொடி டப்பியைப்பற்றி செல்வதைக் கண்டேன்.

*　　*　　*　　*

ராமனாதன் செட்டியாரின் மனைவி இலட்சிமியோ பதிவிருதை; படித்தவள்; நற்குணம் வாய்ந்தவள்; தேவாரம், திருப்புகழ், எல்லாம் அவளுக்கு மனப்பாடம். பூஜை செய்வதில் ஒருபொழுதும் அவள் தயங்குவதில்லை. செட்டியாருக்கும் அவளைக் கண்டால் பிரியமதிகம். செட்டியார் தர்ம சிந்தனையுடனிருந்து தைப்பூசம் முதலிய உற்சவங்களை படாடோபமாக செய்கிறார் என்றால், இப் பதிவிருதையின் மகிமையென்றே உரைக்கவேண்டும். செட்டியார் புரோகிதனுக்களிப்பது, கோவிலுக்குச் செல்வது, தியானிப்பது, 'பொன்னார் மேனியனே'— என்னும் பாட்டைப் பாடுவது எல்லாம் மனைவியின் கற்பனையாலேயாகும். ஆதலால் மனைவியை பெரும் நிலையில் கருதி அவள் சொல்வது போலவே தான் சீர்திருத்த மடைந்து வருவதாக கௌரவமாய்க் கூறுவார்.

அத்தகைய மனைவி, உணவை புருஷனுக்கு அளிக்குங் காலத்திலேயே, கந்தன், தானும் உண்ணுவதற்கு உட்கார்ந்

தான். கந்தசாமியை அப்பொழுது காண்பதுபோல் நான் எப்பொழுதுமே கண்டதில்லை. ஏதோ புத்துயிரை அடைந்து, பெரும் பாக்கியத்தை திடீரென அடைந்த எளியவனைப் போல் குதூகலமாய் காணப்பட்டான்.

மனைவியானவள் உணவை எல்லாம் அளித்து சற்று சமைய லறைக்கு எதையோ கொண்டுவர சென்ற காலத்தில்—

'நீ ஏதோ குஷியாக இருக்கிறாய்' என்றார் தந்தை. இதில் மெய் இல்லாமலில்லை. ஏனென்றால் இவர்கள் இருவர் களும் வெகு கோபத்துடன் பிரிந்து கலக்கமாகவே கலைந்தபடி யால் தந்தைக்கு மகனைப்பார்த்ததும் விந்தையாகவே இருந்தது.

ஆமாம் அதற்கென்ன?

ஏனப்பா இவ்வளவு குஷி!

நீங்கள் சொன்ன உபதேசத்தை நான்பற்றியுளேன். பயன் விளையும் பணியிலேயே நான் இப்பொழுது பதிந்துள்ளேன். நான் சின்ன வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டேன்.

'வியாபாரமா!' என்ன வியாபாரம்?

"ஆமாம் நான் எல்லாப் பொருள்களையும் விற்பவன். ஒழுக் கம், குணங்களையும் நான் விற்பவனாவேன்'

'நீ என்ன விகடமா பேசுகிறாய்?'

'நான் சொல்வ தெல்லாம் நிசம். உங்களுக்கு வேண்டு மானால் உங்களிடமும் ஒன்றை விற்பேன்.'

'எதை?'

'பொடி டப்பியை,'

செட்டியார் சிரித்தார்.

'நீ தானா என் பொடி டப்பியை எடுத்து மறைத்துவைத்து என்னை பிரமிக்கும்படிசெய்கிறாய். இப் போக்கிரித்தனம் வேண் டாம்'

பையன் தலையை அசைத்தான்.

'இப்படி சுலபமாய் நான் பொடி டப்பியை அளிக்க முடி யாது. இப்பொடி டப்பிக்கு ஒரு புராண முண்டு. இது ஒரு

பெரிய இடத்தில் எனக்குப் புலனாயிற்று. செங்கான்கடை ஆறு முகம் தெருவு மேல்மாடியிலே நான் இதைக் கண்டேன்.'

சற்று பல்லை இளித்து, தந்தை முகம் நோக்கி—

'இந்த அற்புத பொக்கிஷத்திற்கு நீ எவ்வளவு பொருள் அளிப்பாய்,?

'நீ காலையில் கேட்ட ரூபாய் இருநூறு'. என வெகு பொருமையுடன் சாந்தமே அவதாரம் எடுத்தவர்போல் பதிலுரைத்தார்.

"போதாது"

"முந்நூறு—நானூறு" எனத் திணறினார் தந்தை.

"என்ன ஆபத்து வெளியில் தெரிந்தால்"

அதற்குள் மகன் எழுந்திருந்து, என் தாயினிடஞ் சென்று இதன் புராணத்தைப் புகன்று அவள் என்ன அளிக்கிறாள் என பார்க்கிறேன்" என புகன்றான்.

"கந்தா உட்கார். நான்சொன்னதைக்கேள். இனியொன்றையும் பேசாதே—இதோ பணத்தை எடுத்துக் கொள்ளவும்"

பிறகு பத்மத்தினிடம் பொடி டப்பியை எப்படி கந்தன் கொடுத்தான் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பிறகு கந்தன் சொல்வது போலவே அ. ர. வ. மு. ச. இராமநாதஞ் செட்டியார் நடக்கிறார் என்பதே நன்றாய் எனக்கு விளங்கிற்று.

கஅ. பழஞ் செருப்பு

சுமார் 7 வருடங்களுக்கு முன் சென்னை ராஜியக் கிளர்ச்சியில் தலைமை ஸ்தானம் வகித்தவர்களில் மாணிக்க முதலியார் ஒருவராகும். கோக்கலே மண்டபம், 'திலகர் கட்ட' மெனப் படும் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறும் ஒவ்வொரு

சபையிலும் இவரைக்காணலாம். ஒன்று தலைமை வகிப்பார். இல்லையேல் முதல் உபந்நியாசம். அதுவும் தவறினால் கட்டாயமாகக் கடைசி வந்தனம் அவராலேயே அளிக்கப்படும். அதாவது சுருங்கச் சொல்லில் அவரன்னியிலுள்ள சபையே இல்லை.

சென்னையிலே உண்மையாக அத்தகைய பெயர் பூண்டவர் ஒருவரும் அப்பொழுது இல்லை. நான் கதைக்காக ஏதாவது ஒரு பெயர் வேண்டுமென வைக்கிறேன். ஆனால் சில தேச பக்தர்களுக்குப் புனைப்பெயர் கொடுத்து நான் ஏதோ எழுதுவதாக எண்ணவேண்டாம். ஒருவேளை நான் எழுதும் சம்பவம் தலைவர்கள் விஷயத்தில் நடந்துமிருக்கலாம் ஆனால் அதைத்தான் நான் எழுதுகிறதாக எண்ணவேண்டாம். அப்படி ஒருவேளை இக்கதை சிலர் விஷயத்தில் உண்மையானால் அதற்கு நான் பொருப்பாளியாகேன். அது தெய்வ சம்பந்தம். நாமறியாத சூட்சமங்களில் இச்சேர்க்கையு மொன்றாகும். ஆதலால் அவர்கள் வருத்தமுற வேண்டாம்.

ஆனால் மாணிக்க முதலியார் ராஜீய விஷயத்தில் சேர்வதற்கு முன், ஏதோ பெரிய சர்க்கார் உத்தியோகஸ்திலிருந்தாராம். அக்காலத்தில் ஏராளமான பணம். ஆனால் அதெல்லாம் எப்படியோ தொலைந்து விட்டது. இருப்பது ஒரு வீடு. அது மைலாப்பூர் குளத்தங்கரை அருகே. ஏதோ பாங்கியில் கொஞ்சம் பணமுண்டு. அதன் வட்டியில் காலட்சேபஞ் செய்து வந்தார்.

மைலாப்பூரில் குளத்தங் கரையின் வடபுறமாய் நீங்கள் அப்பொழுது, எக்காலையிலாவது அத்தெருவு பக்கம் போயிருந்தீர்களானால் அவரைக் கட்டாயம் திண்ணைப்புறம் பார்த்திருக்கலாம். சாதாரணமாக ‘ ஹிந்து ’ பத்திரிகையை காலையில் வெகு கவனமாய் படிப்பார். ஒருவருடனும் அவர் அதிகமாய்ப் பேசுவதில்லை. கண்ணியமான கிழவர் என அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் கூறுவதையும் கேட்டிருக்கலாம். பெரியதான தருமஞ் செய்ய அவரிடஞ் செல்வமில்லாம

லிருந்தபோதிலும், வாயினுல் இல்லை யென்றுரையாமல் கையினுல் எதையாவது அளிப்பார்.

அவர் தினந்தோறும் குளத்தைச்சுற்றி மாலையில் ஒரு மணிநேரம் நடப்பார். அவர் நடக்கும்பொழுது மாலையில் வெயில் இல்லையானுலும் ஒரு குடையைத் திறந்து தன் முகத்தில் அதைச் சாய்து கோபக்குறியுடன் கொக்குபோல் ஒரு பக்கமாகவே நடந்துபோவார். இவர் பென்னத்தூர் சுப்பிரமணியன் ஸ்கூல் வழியாகச் செல்லும்பொழுது சிறு பையன்களெல்லாம், இவர் காலில் பல வருடங்களும் அணிந்திருந்தகாது அருந்த செருப்பைப் பார்த்து இவருக்கு 'பழஞ் செருப்பு' என்று பெயரும் கொடுத்திருந்தார்கள்.

இவர் வெளியில் போகும் காலத்திலேயே இவரது ஒரே பெண், சுத்தமான வஸ்திரத்தை அணிந்து கொண்டு கோவிலுக்கு கையில் தட்டுடன் புறப்படுவது வழக்கம். 18 வயது மங்கையான அவள் தந்தையுடன் இத்திடமான பக்திப்பணியுடனிருப்பதே எல்லாருடைய மனதையும் கவர்ந்து விட்டன. ஆனுல் இத்தகைத் கட்டழகுள்ள கன்னிகையை இன்னம் கலியாணம் செய்விக்க தந்தை மறுப்பது தான் யாவருக்கும் கலக்கம். இரண்டு மூன்று தடவை விவாகம் நிச்சயமாய் விட்டது என்றுவிடலாம். ஆனுல் தந்தையின் குருட்டுக்குயுக்திக் கருத்துக்களால் கலியாணம் நடைபெருமல் நின்று விட்டது. இதற்குப் பிறகே இவரைக் கண்டபொழுதெல்லாம் ஜனங்கள் கெட்ட எண்ணமுடன் நோக்கினுர்கள்.

மைலாப்பூரில் பேராசை, பொருமை என்னும் மொழி தோன்றும் போதெல்லாம் மாணிக்க முதலியாரின் ஞாபகம் யாவருக்கும் வந்துவிடும். அவர் வீட்டில் தனது மங்கைப் பெண்ணைத் தவிர வேறு யாவரும் வீட்டில் கிடையாது. பெண்ணை விவாகஞ் செய்து கொடுத்து அவள் சுகமாயிருக்க வேண்டுமென்பது அவர் மனப்பூர்வமான எண்ணமாயிருந்த

போதிலும், அவள் சிஷுரகைஷயின்று தான் எப்படி நீங்கி யிருப்பது என்னும் தவிப்பினலேயே அவளைக் கலியாணம் செய்து கொடுக்கத் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

புரசைவாக்கத்தில் கெங்காதீசுவரர் கோவிலுக்கெதிரில் ஏழுமலை என்னும் ஒரு இளைஞன் இருந்தான். தாய் தந்தை இல்லை. தன்னந் தனியாய் ஹோட்டலில் உண்டு காலத்தைக் கழித்து வந்தான். அவனுக்கு பின்னி அண்டு கம்பெனியில் உத்தியோகம். ரூபாய் நாற்பது சம்பளம். 15 ரூ. ஹோட்டல், 5 ரூ. வீட்டுவாடகை, மேற் சிலவு 10 ரூ. மிகுதியாயுள்ள பத்து ரூபாயை, காலர், ஷர்டு, டை வாங்குவதிலேயே சிலவழித்து விடுவான். உற்சாகமும், உடல் உயிர் பெருக்கமுமடைந்த அவனுக்குக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென ஆசை. ஆனல் திக்குத் துணையில்லை. கையிலும் காசு சூன்யம். வீடு வாசல் கிடையாது. நண்பர்களிடமே அடிக்கடி, நினைவு வந்து கூறுவான். ஆனல் எதிலும் பயனில்லை.

வீட்டிலே பொழுது போகிறது கஷ்டமென அவன், நகரத்தில் நடைபெறும் எல்லா சபைகளிலும் பிரசன்னமாவான். ஊரிலுள்ள எல்லாத் தலைவர்களையும் தெரியும். தலைவர்கள் எல்லாரும் அரிச்சந்திரன்போல் திகழும் பூமான்கள் என்பதே அவன் எண்ணம்.

இந்த எண்ணத்தையே மனதில் வைத்துக்கொண்டு மாணிக்க முதலியாரின் மங்கையை நாம் ஏன் கேட்கக் கூடாதென எண்ணி மைலாப்பூருக்கு அடிக்கடி செல்வான். வீட்டினருகில் போனதும் வெட்கமதி கரித்துவிடும். வீட்டில் திடீரெனச்சென்றால் நான் அவருக்கு அறிந்தவரில்லை யாதலால் எப்படிப்பேசுவது ? பேசினபோதிலும் விவாகத்தைப் பற்றி வாய் கூசாமல் கூறுவது எங்ஙனம் ? இப்படியே பலதடவைகள் நினைத்து அவன் மைலாப்பூர் சென்று சஞ்சலமாய் சாலையோரங்களெல்லாம் சோம்பேரிபோல் சுற்றுவான். நண்பர்

கள் எதிரில் தோன்றினால் என்ன பதிலளிப்பது என்பதே அவன் கவலை.

ஒருநாள் மாலை. அதிர்ஷ்ட வசமாக அவர் குளத்தங் கரையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அருகில் அணுகி நமஸ்காரமளித்தவுடன் அவர் நீ யார்? உனக்கென்ன சம் பளம்? என்றார்.

நான் ஏழுமலை. எனக்கு 40 ரூபாய் சம்பளம் என்றால், பெண்ணை அளிக்கமாட்டானோ—ஏழை என நம்மை உதறிவிடு வானோ—நாம் அதிகம் சம்பளமென உரைத்தால் பின்னி அண்டு கம்பெனியில் போய் விசாரிப்பானோ, ஒருவேளை விவா கமே ஆய்விட்டால் என் மனைவி மாதச் சம்பளமான ரூ. 70— எங்கே என்று கேட்டு, நான் ரூ. 40-ஐக் கொடுத்து புது மனைவி யிடத்தில் பொய்யனானால் என் கதி என்னவாகும் என்னும் எண் ணங்கள் ஒருபுறமிருக்க—தைரியமாக 70 ரூ. சம்பளமென பதி லுரைத்தான்.

" இப் பட்டணத்திலே 70 ரூ. சம்பளம் எந்த மூலை? வரு டம் குறைந்தது ஒருவன் ரூ. 2,000 மிகுதியாக்க வேண்டும். அப்பொழுதுதான் 20 வருடத்திலாவது 40,000 ஆகும். பிறகு ஒரு வீடும் குடும்பமாக இருக்க யோக்கியதை. இதன்னியில் மனிதவில்லை. இன்னம் கஷ்டமே யதிகமாகும். ஆதலால் இளைஞர் ஜாக்கிரதையா யிருக்வேண்டும்" என்று கிழவன் கூறினான்.

ஏழுமலைக்கு இடி விழுந்தது போலாய் விட்டது. இந்த பழங் கோட்டான் பணத்திற்காக யலைகிறதுபோல் புலனா யிற்று. இவனிடம் சகஜமாய்ப் பேசி ஒரு காரியமு மாய்விடாது. ஏதாவது தந்திரஞ் செய்ய வேண்டுமென எண்ணினான்.

இது நடந்து 6 மாதமாய் விட்டது. தையும் பிறந்தது. பொங்கல் தினம்; ஏழுமலை ஒரு கூடை பழம் முதலியவை களுடன் மாணிக்க முதலியார் வீட்டை அடைந்தான்.

பழங்களை யெல்லாம் முதலியார் பார்த்து பிரமித்து "உனக்கு இங்கு என்ன வேலை? நீ இனி என் பெண்ணை கனவிலும் எண்ணாதே" என்று பெருங் குரலுடன் உரைத்துவிட்டு, வந்தவனை கண்ணெடுத்தும் காணாமல் தன்னுடைய ஹிந்து பத்திரிகையையே படித்த வண்ணமா யிருந்தார். மகள், பழம் வெத்திலை கொண்டுவந்த இளைஞனை, பொங்கலான நல்ல தினத்தில் ஏன் இப்படி அவமரியாதையாய் செய்ய வேண்டுமென்பதைக் காண்பிக்க, கோபக் கண்களுடன் தந்தையை நோக்கிய வண்ணமா யிருந்தாள்.

அதற்குள் வாசல் கதவை யாரோ படபட வென இடித்தது, எல்லார் மனதையும் கலங்கச் செய்தது.

உடனே இரு போலீஸ் சேவகர்களும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இவர்கள் அறையில் நுழைந்தார்கள்.

முதலியாரை இன்ஸ்பெக்டர் சலாஞ்செய்து, "உம்மை செக்ஷன் 121-ஏ. பிரிவில் அரெஸ்டு செய்யும்படியாக எனக்கு அதிகாரம். நீங்கள் திருவல்லிக்கேணி கடற் கரையில் சத்தியாக்கிரக தினத்தில் பேசியதே இவ் வுத்தரவிற்குக் காரணம். எழுந்திருந்து என்னுடன் வரவும்" என்றான்.

முதலியார் கண்களில் ஜலம்; தேகம் நடுக்கம்; பேசவோ முடியவில்லை. நாவை எவ்வளவு தடவை முயன்றும் எழுச்சியாக வில்லை.

கடைசியில் "நான் எதற்கும் அஞ்சவில்லை. என் பெண்ணிற்கு நான் என்ன செய்வேன்? அதைக் காப்பாற்ற ஒருவருமில்லையே" என்று ஓவென்று கதறினார்.

உடனே எழுமலை, "மாமா, நீங்கள் அஞ்சாதீர்கள்! நான் காப்பாற்றுவேன்" என்றான்.

அதற்குள் பெண்ணும் அப்பாவினிடஞ் சென்று நமஸ்கரித்து, "என்னைப்பற்றி இனி கவலைப்படாதே" எனச் சொல்லி எழுமலையைத் தழுவினாள்.

"தம்பதிகளை ஆசிர்வதிக்கவும்" என்றான் ஏழுமலை. தந்தையும் மனமில்லாமல் செய்தார். அடுத்த வினாடியில் போலீஸ் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபில்கள், கொல்லென சிரித்தார்கள். அவர்கள் ஏன் சிரித்தார்கள்? என எனக்கு இன்னம் விளங்கவில்லை.

கசு. நாராயணி

மலையாளத்தில் மாப்பிள்ளை கலகம் ஒருவாறு முடிந்து எங்கும் சமாதானம். இனித் தலைவர்கள் நாட்டில் நுழையலாம் என உத்தரவாய்விட்டது. கள்ளிக்கோட்டை, மலைப்புரம், திரூர் முதலிய இடங்களில் தலைவர்கள் சென்று கழிந்தவற்றை கனவுபோல் கருதி இனி ஹிந்து மகம்மதியர்கள் அண்ணன் தம்பிபோல் வாழ வேண்டுமென பிரசாரஞ்செய்து சாந்த செங்கோலுடன் சஞ்சாரம் செய்தார்கள். சபை, கூட்டம், களிப்பு, மாலை, புஷ்பம், பழம், தோரணம், கத்தர், தீண்டாமை, சுயராஜ்யம் முதலியவைகளே முதன்மையாக மறுபடியும் தாண்டவமாடின. ஐரோப்பியன் நடுவிலிருப்பதனாலேயே இக்கலகம் தோன்றுகிறதென சிலரும், மாப்பிள்ளைகள் இயல்பிலேயே முரடர்களென வேறு சிலர் சொல்வதும் சகஜமாய் விட்டது. பெட்ரோல்போல் பாமரராகவுள்ள இச்சமூகத்தில், செந்தீயை மூட்டியவர்கள் சான்றோர் எனப்படும் தலைவர் என தயங்காமலும் சில நண்பர்கள் உரைத்தார்கள். "எல்லா ஏழை மக்கட்கள். நம்பூதிரிகளான நிலச்சுவான்தார்கள் துன்பம் பொறுக்க மாட்டாமலே மாப்பிள்ளைகள் இங்ஙனம் கிளம்பினார்கள்" என ஆராய்ச்சியாளர்கள் உரைத்தார்கள். இவற்றில் எது உண்மை என்று சொல்லும் சக்தி என்னிடமில்லை. நானும் அக்காலத்தில் அங்கு சென்றிருந்தேன். அதனால் மேற்சொன்ன காரணங்களைப் பொய் என உரைக்கவும் என்னிடம் போதுமான ஆதார

மில்லை. ஆனால் அதைக் குறித்து நேர்முகமாய் நானறிந்த ஒரு சம்பவமே என் சிந்தனையிலாய் விட்டது. அதை நான் பொய் என்று எவ்வளவு தடவை மறக்க முயன்றாலும் அவ்வளவிற்கதிக மாகவே மெய்யென என் மனதில் அது மலருகின்றது. இதில் இன்னமொரு விசேஷமுண்டு. நமது தலைவர்களும் இதைக் கண்காட்சியாகக் கண்டு செவியிலேயே நேர்முகமாகக் கேட்டார்களாம். ஆனால் அவர்கள் அதை இன்னம் உங்களிடம் சரிவரச் சொல்லவில்லை. நான் மாத்திரம் எப்படி அறிந்தேன் எனக் கேட்கலாம். அந்தத் தலைவரில் ஒருவர் இனி உலக விஷயத்தில் கலக்கப்போவதில்லை யென்றும், தான் நேர்முகமாகக் கண்டு கேட்டதாகவும், தனக்கு இனி என்ன செய்வதென்று தெளிவாகவில்லை என்றும், அப்படி ஒருவேளை அதற்குத் தீரமிருந்தாலும் ஜனங்கள் எல்லாம் தன்னை இகழ ஆரம்பித்து விடுவார்கள் எனறும், அப்படியே எதற்கும் துணிந்த போதிலும் தன் சமூகமே தொலைந்துவிடுமென்றும் மிகக் கவலையுடனுரைத்தார்.

அதைத் தான் நான் இங்கு எழுதுகிறேன். 'யாருக்காவது வேண்டுமானால் இப்பவும் இதில் தலையாய் விளங்குமவர்களை நான் காண்பிப்பேன்' என்றார். 'ஆனால் அது உசிதமாகாது. நான் காட்டுவது நன்மையை விளைவிக்காது. வற்புறுத்தினால் நான் ஒருவேளை காட்டலாம்'. என்கிறார். எனக்கோ ஒன்றுந் தோன்றவில்லை. அதைப் பற்றி அப்பால் சொல்லுகிறேன்' என சொல்லி விட்டேன்.

அந்தப்பெரியவர் எப்படி உரைத்தாரோ அப்படியே நான் எழுதுகிறேன். வாசகர்கள் அவரவர் இஷ்டம்போல் அதைப்பற்றி சிந்தனை செய்து அப்படி அவசியமாக இதைப் பற்றி அதிகம் அறிய வேண்டுமானால் அவர்களே எனக்கு அறிவிக்காமல் மலையாளஞ் சென்று, சற்று பேசும் சக்தியை அவர்கள் அடைந்திருந்தால் நேர்முகமாகவே இதன் நிலைகளைக் கண்டு தெளிவடையலாம்.

"மலைப்புரத்தில் ஹிந்து மகமதிய தலைப்பெயர் வழிகளை யெல்லாம் பார்த்து ஒருவாறு சமாதானம் ஏற்படுத்தி சந்தோஷமாகி, மாகாண சபையின் அந்தரங்கக் கூட்டம் நடைபெறும் பொழுது, "அங்காடிப்புரத்திலிருந்து" உதிரம் பெருகும் உடலுடன் தொண்டன் ஒருவன் ஓடி வந்து, எங்கும் சமாதானத்தை நிலை நிறுத்தி விட்டோம். எல்லா அலிம்சாக்கள், மூசாலிகள், சரி என சாந்தமானார்கள். எல்லா மாப்பிள்ளைகளும் முன்போலவே சம்மதித்து விட்டார்கள்."

"ஆனால் ஆமத் கோயா என்னும் 18-வயதுள்ள இளைஞன் கத்தியும் கையுமாக இன்னம் நம்பூரி, பட்டர், நாயர்களை காயஞ் செய்து கொலைபுரிந்த வண்ணவாகவே யுளான். நான் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. இதுவரை நானறிந்து 22 - ஹிந்துக்களை அவன் ஒருவனே கொன்றிருக்கிறான்."

"நான் அதிகம் சொல்லப் போனதால் என்னையே காயப் படுத்தி விட்டான். ஆனால் ஹிந்துக்கள் அவன் ஒருவனுக்காக நாட்டை விட்டே ஓடுகின்றார்கள். அலிம்சாக்கள் மூசாலியர்கள் மொழிந்தும் அவன் கேட்பதில்லை."

"பையனோ சாத்வீகனாகவே தோன்றுகிறான். அதிக வன்மையும் அவனிடமில்லை. படித்தவனாகவே புலனாகிறான். ஆதலால் நீங்களே நேராக வந்து அவனைச் சமாதானமாக்கவும்" என சிந்தை துடித்துச் சொன்னான்.

உடனே நானும் எனது நண்பராய் கிலாபத் வீரரான கமாலும் அங்கு சென்றோம். நாங்கள் அங்கு செல்வதற்குள் பல இஸ்லாம் சகோதரர்கள் அவன் கைகால்களைக்கட்டி பிடித்து வைத்திருந்தார்கள். நான் ஒரு கொலை பாதகன், குடியன், வெறியனைப் பார்க்கப் போகிறேன் என எண்ணியிருந்தேன். ஆனால் சாந்த மமைந்து, கல்வித் தோற்றமுள்ள இன்னம் பால் மணம் மாறாத இளைஞனையே கண்டேன்.

"குழந்தாய்! நீ என் ஹிந்துக்களை வதைக்க வேண்டும்?"

இது அவன் செவியிலேயே ஏறவில்லை. நீ யார் கேட்பது என்பதுபோல் அவன் கண்கள் என்னைக் கண்டன.

உடனே இப்ராஹிம் அவனை நோக்கி உருதுவில் ஏதோ பேசினர். அவன் உடனே, "நான் அப்பாஷையை அறியும் பாக்கியத்தை அடையவில்லை" என்ருன். ஆனல் இப்ராஹிமிற்கு மலையாளம் தெரியாது. ஆதலால் ஒருவாறு அவனுக்குப் புரியும் வண்ணம் தமிழில் உரைத்தார்.

"நமது குரான் ஷரீபான நூல் ஹிந்துக்களை கொலைபுரிய வேண்டுமென சொல்லவில்லை."

"மத விஷயத்திற்காக ஒருவரையும் நிர்ப்பந்தஞ் செய்யாதே என்றிருக்க, நீ ஏன் அவர்களை வதைக்கவேண்டும்" என்ருர்.

"என் கட்டை நீங்கள் அவிழ்த்துவிட்டீர்கள், நீங்கள் சென்றவுடன் மறுபடியும் நான் ஹிந்துக்களை வெட்டுவேன்; இது என் கடமையாகும்" என்ருன்.

"குழந்தை! நீ ஒன்றையுமறியவில்லை. நமது மசஹப்பிற்கு மாருன செயல்களை நீ செய்யாதே! சந்தேகமுண்டானல் நீ கேட்கவும்?"

"எனக்கு சந்தேகமில்லை. நான் குரான் ஷரிபை கற்கும் பாக்கியம் இன்னம் அடையவில்லை. தர்மத்தை திட்டமாக நான் இன்னும் அறியவில்லை."

"பிறகு நீ ஏன் இக்கொலைகளை புரியவேண்டும்?"

"எனக்கு ஒன்றும் தெரியாது, என் தாயின் கட்டளையினலேயே இதெல்லாம் செய்கிறேன்."

"அவள் எனக்குக் கடவுள் கட்டளையென இதை ஆக்ஞாபித்தாள்." "சரி, நாங்கள் உன் தாயைப் பார்க்கலாமோ?"

"என்னல் அதற்குப் பதிலுரைக்க முடியாது. ஆனல் என்னுடன் என் பரம்பிற்கு வரலாம். தாயை நான் கேட்கிறேன்" என்ருன்.

* * * *

ஒரு பெண்மணி எங்கள் முன் தோன்றி "நீங்கள் இவ்வளவு தூரம் வந்ததற்கு வந்தனம். நானும் ஏதோ பேச கடமைப்பட்டிருக்கிறேன்." அவள் முக்கியமாக என்பக்கம் பார்த்து—நான் ஹிந்துக்களுடன் பேசுவதே இல்லை. அவர்களை இனி கண்ணாலும் காணேன் என விருதம் அடைந்துளேன். ஆனால் தேசத்திலேயே தலைவன் என உங்களைப் போற்றுகிறார்கள். நீங்கள் யோக புருடராம். புனித புருடர் ஒருவர் புவியில் உண்டென்றால் நீர் ஒருவர் தானும். சமூகத்திற்கு நீர் செய்யாத தொண்டில்லை. உடல் பொருள் ஆவியை அளித்த சீமான் என உம்மைப் போற்றுகிறார்கள். ஆனால் அந்த சாதியைப் பார்க்கப் கூடாதென விருதம் தரித்த நான், உங்களைப் பார்த்துப் பேசுவதால் தோஷமில்லை என தோன்றுகிறது. ஆதலால்—என்று தன் புர்க்காவை எடுத்து நேராகவே—நான் சொல்லும் மொழிகளை கவனமாய்க் கேட்கவும் என்றாள்.

"நான் கோழிக்கூடில் பிறந்த பிராமணப் பெண். என் பெயர் நாராயணியாயிருந்தது. என் பெற்றோருக்கு நான் ஒரு பெண்ணும், பிள்ளையும். அவர் செல்வம் நிறைந்த கருமி. என்னை இளைஞனை ஒருவனுக்கு அளித்தால் பரிசம் கொடுக்கவேண்டுமென இம்மலையாளத்திலே அங்காடிப் புரத்திலுள்ள பட்டர் ஒருவனுக்கு அளித்தார். என் வயது 13. என் புருடனும் 52. அவனிடம் ரூ. 2,000 பெற்றுக் கொண்டு என் தந்தை யகன்றான்."

நான் இங்குவந்த 15-வது தினத்தில் என் புருடன் இறந்தான். என் தந்தை என்னை எட்டியும் பார்க்கவில்லை: என் தலையிலெழுத்தென்று என் புருடன் சகோதரனுள்ள வீட்டிலேயே என் காலத்தைக் கழிக்க எண்ணினேன். பல வருடங்களாய்விட்டன. நான் கர்ப்பவதியாயிருப்பதைக் கண்டு கலங்கினேன். புருடனின் சகோதரனைப் பார்த்து, இனி மோசம்.

நீயே என்னை நேராக விவாகஞ் செய்துகொள்ளவும். அயல் அண்டை வீடுகள் இனி என்னை சும்மாவிடப் போவதில்லை. என் கதி அதோ கதியாய் விடும் என்று பலவாறு கதறினேன். அவன் செவியில் ஒன்றுமேறவில்லை. மாதமும் 9. ஊரார்கள் என்னை ஏசுவது எனக்கு அச்சத்தை அளித்தது. இனி என்ன செய்வதென்று சஞ்சலமாயிருக்குங்கால் என் பழைய புருடனின் சகோதரன் என்னை, "நீ வீட்டை விட்டு ஓடப்போகிருயா?" என்ருன்.

"என்"

"விதவையாயிருக்கும் நீ கர்ப்பவதியானதை உலகம் எங்ஙனம் ஏற்கும்?"

"உனக்கு இனி என்மேல் பிரிய மில்லையாயினும் உன் குழந்தைக்காகவாவது என்னை ஏன் மணஞ்செய்தல் கூடாது? நாம் இருவரும் ஏன் வாழக்கூடாது?

"எனக்கு உன்னிடம் இச்சை இல்லை."

"அப்படியானுல் எனக்கு பல வாக்குறுதிகள் செய்து என்னை ஏன் கெடுக்கவேண்டும்" என்றேன்.

"அதைப்பற்றி இனி பேசாதே. நானே உலகத்தாரிடஞ் சேர்ந்துகொண்டு நீ கெட்டழிந்தவளென நாடுகோடெல்லாம் பறையறிவிப்பேன்."

"ஆனுல் நானும் அவர்களிடம் நீ தான் என்னைக் கெடுத்த தென்றும், உன்னையும் சாதியைவிட்டு அகற்ற வேண்டுமென வும் உரைப்பேன்."

"நீ என்மேல் என்னபழியைச் சுமத்தியபோதிலும் என்னை அவதூறு ஒருவரும் உரையார்கள்."

"நீ இரவு இங்கிருந்தாயானுல் நானே கிரிசினையல் ஊற்றி உன்னை எரித்துவிட்டு, தற்கொலை என பகிரங்கம் செய்துவிடுவேன்" என்ருன்.

* * * *

“ இரவு 11-மணி நிலா : கர்ப்பவதியான நான் வீட்டை விட்டகன்றேன். இனி என்ன செய்வதென எனக்கே புரிய வில்லை. எவனாவது ஹிந்து என்னைப் பார்த்திருந்தால் தடி யால் அடித்து என்னைத் தொலைத்திருப்பான். அதற்காக துலுக்கத்தெருவு வழியாய் நான் தன்னந்தனிமையாய் சென்று கொண்டிருந்தேன்.”

“ திக்கற்று, துணையற்று, கேட்பாரற்றுள்ள எனக்கு உயிரை விடவோ இஷ்டம். ஆனால் கர்ப்பத்திலுள்ள குழந் தையைக் கொல்ல நான் துணியவில்லை. கண்ணீர், கலக்கம், குழப்பம், நடுக்கம், மயிர் கூச்சல், மயக்கம், இது தான் நான் அறிந்தது. எங்கும் ஒரு நிலா. ஆனால் எனக்கு இருளாகவே இலங்கிற்று. சித்தஞ் சிதைந்து, மனம் மருண்டு, மதிமயங்கி, உடல் நலிந்து, கண்கலங்கி, தலை சோர்ந்து திகைத்துத் தடு மாறி, கண்ணீர் பெருகி விக்கி, நெஞ்சு புண்ணாகி, நினைவெல் லாம் நாண நஞ்சுபோல் என்னிதயம் நையமாகி நான் என்னை அறியாமலே நடுநிசியில் எங்கேயோ போகும் பொழுது தடி யும் கையுமாய் நாயர் தலையாரி யார் என்று கூச்சலிடவும் நான் கதி கலங்கி இனி என்ன செய்வேனெனக் குளறி, உடனே அருகிலிருந்த மசூதிப் படியிலேறி நான் தான் ‘மூசாலியார்’ மகள் என உள்ளே நுழைந்து விட்டேன்.

* * *

பளிங்குபோலுள்ள குளம், பிரகாசமான குளோப்விளக்கு, வெண்மையாய் விளங்கும் மண்டபம்—சாந்தம், சாந்தம், சாந் தம்—அங்கு வெண்மை தாடி—சிறிய விளக்கினருகில் பெரியார் ஒருவர்—ஏதோ நூலொன்றை வைத்துக்கொண்டு தலையை அசைத்தவண்ணமாகவே ஏதோ புனித மொழிகளை மொழிந்து கொண்டு அதிலேயே மெய்மறந்து மகிழ்வுடன் துதிசெய்வதை கண்டேன்.

"இனி அவர்தான் கதி என அவர் பாதங்களில் விழுந்து என் கதையை உரைத்தேன். உடனே அவர், மகளே! அஞ்சாதே! என்னகம் உன் வீடே! நீயும் என் மகளே" என்றார்.

"நான் அங்கேயே சுகப் பிரசவம் பெற்றேன். என் எதிரில் தோன்றும் குழந்தை பிறந்தான். பிறகு பலநாட்கள் கழித்து வேறு கலியாணம் செய்துகொண்டேன். இக்குழந்தை பதினெட்டு வயதடைந்தால் இதன் கைகளாலேயே இந்துக்களுக்கு சில கொடூரச் செயல்கள் செய்ய வேண்டுமென எண்ணினேன். நான் எண்ணினது மாத்திரமன்னியில் அதை அவனின் கடமை என கற்பித்தேன். இல்லை, அதுவே அவன் அறமெனவும் உரைத்தேன். அவனின் உயிரிலும் உயிராய் அதைக்கருத வேண்டுமென அவனறியும்படி செய்தேன்."

"எனது பழைய இந்து கயவன் வேறு விவாகஞ் செய்து, மக்கட்களைப் பெற்று பெரும் வியாபாரியாகி, தனவந்தனாகி, கோவில் குளம் கட்டி, ஊரின் நாயகனாகி இந்துக்களெல்லாம் அவனை நாயகனாக எண்ணிப் போற்றி இவ்வூரிலியே அவன் குடியேறி யதைக் கண்டு என் மனம் என்ன பாடு பட்டது! பட்டப் பகலிலேயே பெரிய அநியாயஞ் செய்யும் இந்தப் பாவிகள் புவியில் பெருமையுடனிருக்க வேண்டுமா? எனது "இல்லாம் மூசாலியார் இல்லாமலிருந்தால் என் குழந்தையும் இறந்திருக்கும்; நானும் மறைந்திருப்பேன்."

"என் மாதிரி எத்தனை பெண்களை அச்சமூகம் இக்கொலை செய்திருக்கும். எத்தனை புருடர்கள் பரிதபிக்க எங்களை ஏமாற்றி இருப்பார்கள். இவர்கள் சிறந்தவர்களாம்! பிராமணர்களாம்! சாஸ்திர மறிந்தவர்களாம்! வேத மோதுபவர்களாம்! சாதுக்க்ளாம்."

"என் உயிரையும், என் மகன் உயிரையும் கொல்வதற்குத் தயாராயிருந்த எனது பழைய இந்துவையும், அச்சமூகத்தை

யும் பாழ்படுத்தி இனி அபலைகள் இவ்வவஸ்தையையே படக் கூடாது. எனவே இவர்களைப் பழிக்குப்பழி வாங்கி குறைந்தது 99 இந்துக்களின் தலையைத்துண்டித்து தனியாய் முண்டங்களை என் கண்ணால் காண்பதற்கு மகன் செய்ய வேண்டுமென வற் புறுத்தினேன். அப்பொழுது தான் என் சித்தஞ் சாந்தமடை யும், என் வாழ்நாட்களின் நோக்கம் சாபல்யமாகுமென என் மகனுக்கு உரைத்திருந்தேன்."

"அவன் உடல், கண், காது, நா, மெய், மனம்—எல்லாம் அம் மகமதியப் பெரியார் இல்லையானால் இப்புவியில் அவை பெருமையாகி பிரகாசமாயிருக்குமோ? அப் பெரியாரில்லை யானால் என் மொழி, மனம், புத்தி, சரீரம், சீவன் உங்களிடம் இப்பொழுது பேசுமோ? ஆதலால் என் மகன் ஒருவாறு இங் ஙனம் கடமையைச் செய்தது எனக்குக் களிப்பாயிற்று. உங்களை இனி பார்க்க வெறுக்கிறேன். உங்களிடம் தெய்வ பக்தி என்ப தில்லை. வேஷதாரிகள். உங்களை எவ்வளவுக் கெவ்வளவு நாட் டிலிருந்து நாசஞ் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு எமக்கு க்ஷேமம்."

"இனி நீர் இத்தகைய பணியில் ஈடுபடாமல் உங்கள் வீட்டிலுள்ள என் மாதிரி பெண்கள் இந்நிலையை யடையாம லிருக்க நீங்கள் முயலவேண்டுமே யன்னியில் என்னைப்பற்றி சிந்தனை செய்யவேண்டா"மென—ஒரு தடவை காரித்துப்பி மறைந்துவிட்டாள்.

Kesari Printing Works, Madras.

விஷய சூசனை

இவ்விஷய சூசனைகளின்று கதைகளின் நோக்
காணலாம். இங்குள்ள நம்பர்கள் கதைகளின் எண்
குறிக்கும்.

க. சீர்கெட்ட பொருளாதார நிலை. உ. நிகழும் செ
நம்பாதே. ௩. உண்மையான தர்மம். ௪. புரோகிதன்
வம். ௫. நவீன கேப்மாரி. ௬. சோம்பேறிப் பேச்சு. எ
மறிந்தவன் சூட்சமம். அ. கல்கி.—ஞானி, வக்கீல்,
யன், சாஸ்திரி, முதலியவர்களின் அட்டகாசம். ௯. எங்கு
முடன் செல்லவேண்டும். க0. யார் பெரியவன்? கக.
அவதாரங்கள். கஉ. கன்னிகைகள் துயரம். க௩. ச
யர்களின் கஷ்டம். க௪. பிராணிகள் பேச்சு. க௫.
ரகசியம். க௬. பெரியவனுகக் குறுக்கு வழி. கஎ. பணக்
யோக்கியதை. கஅ. கிழவர் ஏமாறும் விதம். க௯. இந்து
மழிய காரணம்.

மாஜினி சரித்திரமும் மனிதர் கடமைகளும்.

308 - பக்கங்கள். அங்கீகரித்த லைப்ரரி நூல்.

நூல் அடக்கம். வாலிபப் பருவம், கலசாலை மாணவன்—1857-ம் வருஷப் புரட்சி, இரகசிய சங்கங்கள்—புரோகிதர்களே—வால்டைர்,—புகையிலைப்போர் — தொழிலாளிகளே—பூமி கனவல்ல — சர்வசன சம்மதம்—சனசமூகம் — தேசக் கடமை — குடும்பமும் கடமையும் — சுதந்திரம் — இறைவனே தலைவன்—போலிகளை நம்பாதீர்கள்—விடுதலை. இதுவரை தமிழில் வராத நூல். விலை ரூ. 1—0—0.

வீர சந்நியாசி சிரத்தானந்த சரித்திரம்.

பூமண்டல ஆர்ய சமாஜங்களின் தலைவரான மகாத்மா ஸ்ரீ நாராயணசுவாமி அவர்களின் முகவுரையுடன் கூடியது. நூல் அடக்கம். ஜன்மமும் குழந்தைப் பருவமும்—நானக் சந்தர்—காசி வாழ்க்கை—பிரம போஜனம்—கோசாயிலீலை—சிற்றின்ப வாழ்க்கை—ஆரிய சமாஜி யாகுதல்—ஸ்ரீ தயானந்த தரிசனம்—குருகுலம் ஸ்தாபித்தல்—இராஜத் துரோகம்—காங்கிரஸ்—தீண்டாமை—பெண்கள் முன்னேற்றம்—ஆசிரம தர்மம்—இந்துக்கள் நாசமாகிறுர்களே—வேதம் புராதனம்—சமாஜ சேவை—கடைக் காலம்—தமிழர் துக்கம். 220 பக்கம்.
விலை ரூ. 0—8—0.

உபநிஷதக் கதைகள்.

தசோபநிஷத சாரங்களை கதைகளாக எழுதப்பட்ட நூல். சுமார் 130 பக்கங்கள். 89 கதைகள். விலை ரு. 0—8—0.

யஜுர் வேத கதைகள்.

யஜுர் வேதத்திலுள்ள சாரங்களை கதை ரூபமாய் எழுதப்பட்ட நூல். யஜுர் வேதமறிய இந்நூலைப் படிக்கலாம். ஹரிஜனங்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட புஸ்தகம்.
விலை ரு. 0—9—0.

ஜம்புநாதன் புஸ்தகசாலை, பள்ளியப்பன் தெரு, மதராஸ்.

திரிமூர்த்தி உண்மை

அல்லது

தேவ இரகசியம்.

அடக்கம் :—பிரம்ம நாமம்—பிரம்ம ரகசியம்—ருத்விக் யார்—பிரம்மாவிற்கு நான்கு முகங்கள்—காயத்ரீ சாவித்ரி—சாவித்ரி கலியாணம்—பிரம்மாவும் சாவித்ரியும்—சரஸ்வதியுண்மை—பிரம்மாவின் வாகனம்—பிரம்மாவிற்கு என் பூஜையில்லை?—பிரம்மா என்னும் ரிஷி.

விஷ்ணு யார்?—விஷ்ணு வாகனம் கருடனு?—கருடன் திருட்டு உண்மையா?—விஷ்ணு சயனம்—பாற்கடலில் உறங்குவது உண்மையா ?—பாம்பு விஷ்ணு படுக்கையாகுமா?—எட்டு பத்து கைகளுள்ள விஷ்ணு—வெண்மையான விஷ்ணு—கருமையான விஷ்ணு—ஆலகால விஷம்—விஷ்ணு லீலை உண்மையா? —வாமனவதாரம்—ஜலந்தரன் மனைவிமோசம்—சாலிகிராமம் விஷ்ணுவா ?

சிவன் யார் ?—சிவன் மின்னலா?—வேத சிவன்—விஷப் பாம்பா சிவாபரணம்—மாடா சிவன் வாகனம் ?—சிவனின் முக்கண்கள்—சிவனும் கலச பூசையும் முதலிய இரகசியங்கள்.

விலை ரூ. 0—8—0.

கடோபநிஷதம்.

நாகர சுலோகம். தமிழிலும் மூலம் எழுதப்பட்டு சுலபமான தமிழ் உரையுடன் யமன் யார் என்னும் இரகசியத்தை அறிவித்து ஸ்ரீ அரவிந்தர், டாக்டர் தாகூர், மகாத்மா முதலியவர்கள் எழுதிய மரண இரகசியங்கள் சேர்ந்தது விலை ரூ. 0-4-0.

ரோஜாத் தோட்டம்.

நீதியை கற்பிக்கும் நூற்றுக் கணக்கான சிறு கதைகள் அடங்கிய நூல். விலை ரூ. 0—4—0.

வேதசந்திரிகை.

நான்கு வேதங்களின் சாரமடங்கிய நூல். விலை ரூ. 0-8-0.

ஜம்புநாதன் புஸ்தகசாலை பள்ளியப்பன் தெரு, மதராஸ்.

ஜம்புநாதன் தமிழ் நூல்கள்.

வேத சந்திரிகையைப்பற்றி "ஹிந்து" பத்திரிகை எழுதுவதாவது:—

The writer is, so far as one knows, the first to come forward to meet a long-felt want. The scriptures in their original along with the growing body of literature about them by the orientalists are now made accessible in a small and compact form to our people who do not know Sanskrit or English. It is divided into 19 sections and deals clearly and briefly with almost every point worth knowing about the Vedas. The reader is also furnished with valuable information about later works on the Vedic literature in the shape of Vedangas, Upangas, Prati Sakhyas, Kosas, Vedic recitals, and the like. It is a valuable handbook.

"லோகோபகாரி" கூறுவதாவது:—

வடமொழி வேதம் நான்கிலும் கூறப்படும் முக்கிய விஷயங்கள் இதில் ரத்னச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. தமிழ் மாது புதுவாழ்வுபெற வேண்டுமென்ற உண்மை ஆர்வத்துடன் இத்தகைய நூல் அணிகளைப் புனைந்து அவளுக்கு அணிந்துவரும் அன்பர் ஜம்புநாதனின் அரிய திருப்பணி பெரிதும் போற்றத்தக்கது.

யஜுர்வேத கதைகளைப்பற்றி "இந்தியன் எக்ஸ்ப்ரஸ்" பத்திரிகை கூறுவதாவது:—

This book is a collection of the aphorisms and sayings of the Yajurveda. This book reveals to a remarkable degree as to why one should read the Vedas and how by reading them one would get wealth, happiness, freedom, liberty, knowledge and life. Surely such a book needs no recommendation at our hands and it is our wish that the ordinary Tamilian from whose standpoint it has been written should read and get the benefit of such reading. Some of the puranic mythologists are beautifully explained on the eternal Vedic point of view. It is a book which should be read by all and we would congratulate Mr. Jambunathan on his work.

ஜம்புநாதன் புஸ்தகசாலை,
14, பள்ளியப்பன் தெருவு, சாவுகார்பேட்டை, மதராஸ்.